# பல்லவ பீடம்



## சாண்டில்யன்

zeevaa

# பல்லவ பீடம்

சாண்டில்யன்

SCAN & EDIT
ZEEVAA
zeevaa99@gmail.com

பாரதி பதிப்பகம்

பாரதி பதிப்பகம்
126 /108, உஸ்மான் சாலை,
தியாகராயநகர், சென்னை - 600 017.
த.பெ.எண்.4984. போன் : 24340205
Email : bharathipathippagam@gmail.com

zeevaa

# ஆசிரியரின் பிற நூல்கள்

நீலரதி

மண் மலர்

கடல்வேந்தன்

மாதவியின் மணம்

விஜய மகாதேவி (3 பகுதிகள் – 2 புத்தகங்கள்)

அலை அரசி


மேலும் பல நூல்களுக்கு

http://thamizhthenee.blogspot.in

zeevaa

# பல்லவ பீடம்



சாண்டில்யன்

zeevaa

# பல்லவ பீடம்

## 1. சந்திர கிரகணம்

"இகபர செல்வங்களுக்கெல்லாம் இருப்பிடமான கச்சியம்பதி இன்னும் எத்தனை தூரந்தான் இருக்கும்?" என்று நீண்ட பயணத்தினால் அலுத்துக் கொண்ட அந்த வாலிபன், அடர்ந்த கானகத்துக்குள்ளும் நுழைந்த அந்திக் கதிரவனை, மரக்கிளைகளின் ஊடே தெரிந்த இடைவெளி மூலமாகப் பார்க்கப் பிரயாசைப்பட்டான். ஆனாலும் முழுக்கதிரவனும் தெரியாததால் கதிரவனிடமும் சிறிது சீற்றங்கொண்டான். "காட்டை அழித்து நாட்டைப் படைத்ததால் காடவர் என்று பிரசித்து பெற்ற ஆதி பல்லவர் இந்தக் காட்டை மட்டும் ஏன் அழிக்கவில்லை?" என்று மறைந்துவிட்ட அந்தப் பழைய குடிகளையும் நிந்தித்தான். "தேரோடும் வீதிகளும் பழங்குடிகளும் மதிலும் கொண்டு பழைமையும் சிறப்பும் பெற்று விளங்கும் நகரங்களுக்குள் தலைமையானது என்று உருத்திரங் கண்ணனாரின் பெரும்பாணாற்றுப் படை புகழ்பாடும் அந்த மாநகரத்தை அடைய இதுபோன்ற அடர்ந்த அடவிகள் தேவையா?" என்றும் இதயத்துக்குள் வினவிக் கொண்டான். "நகர்ப்புறக் காடுகளிலும் நாகரிகம் இருக்குமென்று பழைய நூல்களில் படித்தேனே, அந்த நாகரிகம் இங்கு ஏன் காணப்படவில்லை? சில குடிசைகளாவது இருக்கலாமல்லவா?" என்றும் கேட்டுக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

zeevaa



zeevaa

ஆனால் அந்த அடர்ந்த காடுகூட அந்தி வேளையில் மனத்தைப் பறிக்கும் அழகுடன் விளங்கியதைக் கவனித்த அந்த வாலிபன் சற்றே திருப்தியும் அடைந்தான். ஆங்காங்கு காற்றின் அசைவினால் நானாவித மலர்கள் உதிரத் தொடங்கின. அவை உதிர்ந்தபோதே அவற்றைத் தாக்கிய அந்திவேளை தங்கக் கிரணங்கள் அவற்றின் நிறங்களை லேசாக மாற்றியது ஏதோ இந்திரஜால வித்தை நடப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. மரக்கிளைகளின் ஊடே நுழைந்த அந்தி சூரியக் கிரணங்களில் சில அந்த வாலிபனின் நீண்ட வாளின் பிடியிலும் படவே அந்த எதிரொளி இன்னொரு சின்னஞ்சிறு சூரியனைப் படைத்தது. அவன் அமர்ந்திருந்த வெள்ளையும், பழுப்பும் திட்டு திட்டாகக் கலந்த புரவியின் நெற்றி உலோகப் பட்டயம் பெரிதாகப் பளபளத்து அதை தெய்வலோகப் புரவியாக்கியது.

மாலைவேளை முற்றிக் கொண்டிருந்ததால் பட்சி ஜாலங்கள் எங்கும் இன்பமாகக் கூவத் தொடங்கின. மரப் பொந்துகளுக்குள் புக எண்ணிய அணில்களின் கீச் கீச்சென்ற ஒலியும், எங்கிருந்தோ கேட்ட குயிலின் இனிய குரலும், ஏன்-ஆந்தையின் கரகரத்த அப சப்தமும்கூட இயற்கையின் அந்தச் சூழ்நிலையில் இன்பமாகவே இருந்தன. பத்தொன்பது வயதையே தாண்டியிருந்த அந்த வாலிபன் இந்தச் சூழ்நிலைக்கு மனத்தைப் பறிகொடுத்தான். ஆனாலும் அதை முற்றும் அனுபவிக்கும் உற்சாகமில்லாததாலும் பயணக் களைப்பாலும் ஆசுவாசப் பெருமூச்சை விட்டுத் தனது புரவியின் வயிற்றில் லேசாக உதைத்து அதைச் செலுத்த முற்பட்டான்.

தலைவன் குறிப்பறிந்த அந்தப் புரவியும் மெதுவாகவும் கம்பீரமாகவும் அடவியின் ஒற்றையடிப்பாதையில் நடந்தது. மேலும் இரண்டு நாழிகைப் பயணம் செய்தும் நகர்ப்புறக் குடில்கள் கூடத் தெரியாததால், "தந்தை ஏன் இப்படி என் கண்ணைக் கட்டிக்

zeevaa

காட்டில் தவிக்க விட்டார்?'' என்று தந்தையையும் கடிந்து கொண்டான். அவர் சொன்னது அப்பொழுதும் நினைவிலிருந்தது அவனுக்கு. 'மகனே! நீ செல்லுமிடம் நாகரிகத்துக்கு உலகப் பிரசித்தி பெற்றது. ஆனால் அந்த நாகரிகத்துக்கே இழுக்கு வரும் காரியங்கள் அங்கு நடப்பதாகக் கேள்விப்படுகிறேன். பசுக்கள் கூட்டம் கூட்டமாக மறைவதாகக் கேள்விப்படுகிறேன். காடுகளில் மேய்ச்சலுக்குப் போகும் பசுக்கள் திரும்புவதில்லையென்ற செய்தி அடிக்கடி வருகிறது. 'ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூல்மறப்பர் காவலன் காவான் எனின்' என்று குறள் சொல்கிறது. 'மாட்டின் மடியில் பால் வற்றினாலும், படித்தவர் படிப்பை மறந்தாலும் அங்கு அராஜகம் நடக்கிறது' என்ற பொருள் உள்ள அந்தக் குறளுக்கு எடுத்துக் காட்டாக இப்பொழுது காஞ்சி இருப்பதாகக் கேள்வி. நீ போய் நிலைமையை ஆராய்ந்து வா. நமது ஆட்சியிலிருக்கும் நாட்டில் இந்தக் குறைகள் கூடாது' என்று தந்தை அப்பொழுதும் சொல்வதைப் போலிருந்தது அவனுக்கு.

ஆகையால் நகர்ப்புறக் காட்டின் அரவமற்ற அமைதியைக் கண்ட அந்த வாலிபன், ''தந்தை ஏதோ பழைய கற்பனையி லிருக்கிறார். அஞ்சா நெஞ்சம் படைத்த மறக்குடி வீரர்கள் பசுக்களைப் பகைப்புலத்திலிருந்து ஓட்டி வந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாக விற்று, தோப்பில் கள்ளைப்பருகிக் கூத்தாடுவார்கள் என்ற பெரும்பாணாற்றுப் படையின் பழைய நாகரிகத்தை இக்காலத்துக்குப் பொருத்திக் கனவு காண்கிறார். சமணம் ஓங்கியுள்ள இக்காலத்தில், அதுவும் காஞ்சியில் இத்தகைய நிலைமை எப்படி நிலவ முடியும்?'' என்று தந்தையையும் கண்டித்த வண்ணம் இன்னும் சிறிது தூரம் பயணம் செய்வதற்குள் காட்டில் நல்ல இருள் சூழ்ந்தது. அந்த இருளையும் எட்டாம்பிறை வளர்மதி லேசாசக் கிழித்தாலும் பயணம் மிகக் கடுமையாகவே இருந்தது.

zeevaa

எந்தக் கடுமையையும் சுகமென நினைக்கும் அந்த வாலிப வீரன் கஷ்டத்தை அதிகமாகப் பொருட்படுத்தாமலும் புரவியை இஷ்டப்படி நடக்கவிட்டும் அடுத்த அரைநாழிகை பயணம் செய்த போதுதான் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி விளைந்தது.

அடர்ந்த அந்த அடவியின் அமைதியை திடீரெனக் கிழித்தது ஒரு அலறல்! அதைத் தொடர்ந்து பல கால் நடைகள் ஓடும் பேரரவம். அடுத்து விர்விர்ரென்று பறந்து வந்த வாளிகள் நான்கு பக்கமும் மரங்களில் தைத்து இறகுகள் ஆடி நின்ற காட்சி! இவை யனைத்தையும் கேட்டும் பார்த்தும் சட்டென்று நிமிர்ந்த அந்த வாலிபன் தனது புரவியின் கடிவாளத்தை இழுத்து அதன் கழுத்தில் ஒரு தட்டு தட்ட புரவி வெகு வேகமாகப் பறந்தது. அலறலும் மாடுகள் ஓடும் அரவமும் வந்த திசையை நோக்கிப் புரவியைச் செலுத்திய வாலிப வீரன் கண்களுக்குச் சற்று எட்டஒரு விளக்கு வெளிச்சம் தெரியவே அங்கு விரைந்தான். தூரத்தில் ஒரு மாட்டுக் கூட்டம் ஓடுவது கண்ணில் புலப்படவே அவற்றைச் சுற்றி வளைக்கத் தனது புரவியைச் சக்கிரவட்டமாக வளைத்து ஓட்டினான். புரவி ஆங்காங்கு சென்று வளைத்ததால் மாட்டுக் கூட்டம் ஒன்றாகக் கூடி திரண்டு நிற்கவே புரவியை அவற்றின் ஊடே செலுத்தி சில மாடுகளைத் தட்டிக் கொடுத்தான். சிலவற்றின் மூக்கைத் தடவிக் கொடுத்தான். இப்படி அந்த மாட்டுக் கூட்டத்தில் கைகளைத் துழாவிச் சென்ற வாலிபன் மீண்டும் புரவியைச் செலுத்தி மாடுகளை ஒன்றாக வளைத்து எட்ட இருந்த குடிசையை நோக்கிப் புரவியைச் செலுத்தினான்.

குடிசையை அணுகியதும் எதிரே விரிந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சியுற்று புரவியிலிருந்து கீழே குதித்து, மேட்டிலிருந்த குடிசைக்கு முன்னிருந்த சரிவில் உருண்டு கிடந்த ஒரு மனிதனைப்

zeevaa

பார்த்தான். அவன் உடலிருந்த நிலையாலும், மார்பில் தைத்திருந்த வாளியாலும் அவன் இறந்து விட்டானென்பதைப் புரிந்து கொண்டு, 'இந்தக் கொலையைச் செய்தது யாராயிருக்கும்?' என்று வினா வொன்றைத் தனக்குள் எழுப்பிய சமயத்தில் குடிசைக் குள்ளிருந்து கைவிளக்கு ஒன்றை ஏந்தி ஒரு பெண் வந்தாள். விளக்குடன் வாயிற்படியைத் தாண்ட முயன்ற அவள், எதிரே குனிந்து மாண்டவனை நோக்கிக் கொண்டிருந்த வாலிபனையும் அவனது பெரும் புரவியையும் கண்டதும் குடிசைக் கதவுக் கருகிலேயே நின்று விட்டாள்.

கொலையுண்ட மனிதனை விட்டுக் குடிசைக் கதவுக்கருகில் நின்ற பெண்ணைப் பார்த்ததும், "பெண்ணே இப்படி வா. இவனை யார் கொலை செய்தார்கள்?" என்று வினவினான்.

அந்த வாலிபன் குரலில் பிரதிபலித்த அதிகாரத்தையும் விசாரணை செய்த தோரணையையும் கண்ட அந்தக் காரிகை இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. இருந்த இடத்திலிருந்தே "நீ யார்? எங்கு வந்தாய்?" என்று வாலிபனை நோக்கி வினவினாள்.

"நான் யாரென்பதைப் பற்றி அக்கறையில்லை. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்" என்றான் வாலிபன்.

அப்பொழுதும் அவள் மசியவில்லை. "விபரம் கேட்க நீ யார்?" என்று வினவினாள் அந்தப் பெண்.

"மரணம் ஒன்று ஏற்படும்போது, அதுவும் வாளியால் கொலை நடக்கும்போது, அதை விசாரிக்க யாருக்கும் உரிமையுண்டு. கேள்விக்குப் பதில் சொல்" என்ற வாலிபன் குரலில் கடுமை ஒலித்தது.

zeevaa

''நான்தான் கொன்றேன். கொல்ல உத்தேசமில்லை. காயப்படுத்த கையை நோக்கிக் கணை எய்தேன். அவன் திடீரெனத் திரும்பியதால் கணை மார்பில் பாய்ந்து விட்டது'' என்று விளக்கிய அந்தப் பெண், ''உனக்குத் தெரியவேண்டியது தெரிந்துவிட்டதல்லவா? இனி உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ'' என்று சீறினாள்.

அந்தப் பெண்ணை அப்பொழுதுதான் முழுதும் ஏறெடுத்து அவன் நோக்கினான். அவள் பருவத்தால் மலர்ந்திருந்தாள். அவள் அழகு, கவிகள் வர்ணிக்கவே ஏற்பட்டது போல தோன்றியது. கதவில் சாய்ந்து ஒடித்து நின்ற அவள் சாயல் மயிலைப் போலிருந்தது. சந்திரவதனத்தில் செண்பகமொட்டு நாசிக்கு இருபுறத்திலும் இருந்த கண்கள், வேல்களை வீசிக்கொண்டிருந்தன. கோபத்தால் துடித்த செம்பருத்தி உதடு விளக்கின் வெளிச்சத்தில் மாணிக்க ஆபரணமாக மாறி இருந்தது. இடை இருக்கிறதா என்று புரியவில்லை. மற்ற எழுச்சிகள் இடையின் சிறுமையைப் பெரிதும் ஈடு செய்தன.

மிகவும் அழகாயிருந்த பெண், அந்த வாலிபன் தன்னைப் பார்த்து மலைப்பதைக் கண்டு, ''ஏன் நிற்கிறாய்?'' என்று கோபத்தைக் குரலில் காட்டினாலும், வந்திருக்கும் வாலிபன் சாதாரணமானவனல்ல என்பதை உணர்ந்திருந்தாள். அவன் வலிய கைகளும், முகத்தில் படர்ந்த குறுநகையும், நின்ற உறுதியும், அவன் எந்த மிரட்டலுக்கும் பணியாதவன் என்பதைப் பறைசாற்றுவதைப் புரிந்து கொண்டாள். அதன் விளைவாக உள்ளே செல்லவும் திரும்பினாள். ''சற்று நில் பெண்ணே'' என்ற அவன் சொற்கள் அவளை மீண்டும் திரும்ப வைத்தன.

''உன் பெயரை நான் அறியலாமா?'' என்று வினவினான் அவன்.

zeevaa

சற்று சிந்தித்தாள் அவள். ''அறியலாம். என் பெயர் தாமரைச் செல்வி'' என்று கூறினாள்.

''உன் தந்தை எங்கே?''

''கடைக்குப் போயிருக்கிறார்.''

''என்ன கடை?''

பதிலால் அவன் அதிர்ச்சியடைந்தான். சங்கடம் நிலவிய குரலில் அவள் சொன்னாள், ''கள்ளுக்கடை'' என்று.

''கள்ளுக்கடையா!'' என்று வியப்புடன் வினவிய வாலிபன் தான் வந்த அலுவலுக்கும் இந்த குடிசைக்கும் பெரும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டான். விதிதான் தங்களை இணைத்திருக்கிறது என்றும் சந்தேகமற உணர்ந்து கொண்டான். உணர்ந்ததன் விளைவாக தாமரைச்செல்வியை மீண்டும் ஏறெடுத்து நோக்கினான். அவள் செந்தாமரை வதனத்தில் துன்பம் மிகவும் படர்ந்து கிடந்தது. சந்திரகிரணம் என்றால் கிட்டத்தட்ட இப்படித் தானிருக்கும் என்று நினைத்தான் அந்த வாலிப வீரன்.

zeevaa

## 2. அழைத்த விழிகள்

**கை**யிலேந்திய விளக்கின் ஒளியில் அந்தக் காரிகையின் வதனத்தில் துன்பச்சாயை பெரிதும் படர்ந்து விட்டதை தூரத்தி லிருந்தே கவனித்த அந்த வாலிபன் அவள் வாழ்க்கையில் சந்துஷ்டி ஏதுமில்லை என்பதை சந்தேகமறப் புரிந்து கொண்டான். ஆதலால் அவளை நோக்கி, ''பெண்ணே! நீ மறக்குடி மகள்தானே?'' என்று மிகவும் மெதுவான குரலில் வினவினான்.

அவன் கேள்வியைக் காதில் வாங்கிய அந்தப் பெண்ணின் முகத்திலிருந்த துன்பச்சாயை மறைந்து அந்த இடத்தை சினம் ஆக்கிரமித்துக் கொள்ளவே ''நான் எந்தக் குலமகளாயிருந்தால் உனக்கென்ன?'' என்று கடுமையான குரலில் வினவினாள்.

வாலிபன் முகத்தில், அவள் கேள்வியினாலும் கேள்வியில் ஒலித்த கடுமையாலும் சிறிதளவேனும் சினம் துளிர்ப்பதற்குப் பதில் அனுதாபமே துளிர்த்தது. அப்படி அனுதாபம் துளிர்த்த குரலில் வினவினான். ''நான் கேட்பதற்குக் காரணமிருக்கிறது. இங்கு நீ தன்னந்தனியாக இருக்கிறாய். என் காலடியில் கிடக்கும் சடலத்திலிருந்து இங்கு உன்னை தொந்தரவு செய்ய அடிக்கடி கள்வர்கள் வரலாம், அவர்களை எதிர்க்கும் சக்தியும் வீரமும் துணிவும் உனக்கிருக்கிறது. மறக்குடிப் பெண்களைத் தவிர வேறு யாருக்கும் இத்தகைய துணிவிருக்கக் காரணமில்லை. உங்கள் இனத்தை மறக்குடிவீரர்கள் என்று பழைய நூல்கள் பலவும் அழைக்கின்றன'' என்றான்.

zeevaa



zeevaa

அவள் சிறிது சிந்தித்தாள். ''ஆம்; நான் மறவர் பெண்தான். மேலும் உனக்கு என்ன தெரிய வேண்டுமோ? அதைக் கேட்டுவிட்டுச் சென்றுவிடு'' என்று அவள் கூறினாள்.

அவன் அடுத்த கேள்வி அவளை பிரமிக்கச் செய்தது. ''இந்தப் பசுக்களை எங்கிருந்து உன் தந்தை திருடினார்?'' என்று வினவிய வாலிபன் அவளைக் கூர்ந்து நோக்கினான்.

அவன் கேள்விக் கணை அவள் இதயத்தில் பாய்ந்திருக்க வேண்டும். ''இதை நாங்கள் திருடியதாக யார் சொன்னது உனக்கு?'' என்று அவள் கேட்டாள், சினமும் தயக்கமும், ஏன்-அச்சமும் கூடக் கலந்த குரலில்.

வாலிபன் அவள் முகத்தில் படர்ந்த அச்சத்தைக் கவனிக்கவே செய்தான். ''சங்க இலக்கியம் கூறுகிறது'' என்றான் நிதானமாக.

''பெரும்பாணாற்றுப் படையைச் சொல்கிறீர்களா? அதெல்லாம் பழைய கதை. இப்பொழுது காலம் மாறி விட்டது'' என்றாள் தாமரைச் செல்வி.

அவள் பதில் அந்த வாலிபனுக்குப் பேரதிர்ச்சியை அளிக்கவே, ''இந்தக் காட்டில் வசிக்கும் நீ எப்படிப் பழைய இலக்கியம் கற்றாய்?'' என்று வினவினான்.

அவள் லேசாகப் புன்முறுவல் செய்தாள் முதன்முதலாக. ''முன்பெல்லாம் காட்டிலிருப்பவர்கள்தான் படித்தார்கள். காட்டிலிருக்கும் முனிவர்கள்தான் வேதங்களை இயற்றினார்கள். தவம் செய்ய காட்டைத்தான் தேடிச் சென்றார்கள். காட்டில் இயற்கைச் சூழ்நிலையும் அமைதியும் இருக்கிறது. அங்குதானே இலக்கியம், தத்துவம் எல்லாம் விளையமுடியும்?'' என்றாள் தாமரைச் செல்வி, புன்முறுவலின் ஊடே.

zeevaa

அவள் பேசப்பேச வாலிபன் வியப்பு எல்லை மீறியது. ‘இந்தக் கானகத்தில் யாருமில்லாத இடத்தில், கள்ளுக்குடிக்கும் தந்தையுடன் வசித்துவரும் இவளுக்கு இத்தனை இலக்கிய அறிவு எப்படி ஏற்பட்டது?’ என்று தன்னைத் தானே வினவிக் கொண்டாலும், அதை வெளிப்படையாகச் சொல்லாமல், ''தாமரைச் செல்வி!'' என்று பெயர் கொண்டு அழைத்தான், முதன் முதலாக.

''என்ன?'' என்று அவள் கேட்டாள், அலட்சியமான குரலில்.

''இங்கு நீ ஒரு மனிதனைக் கொன்று விட்டாய்'' என்று கூறித் தனது காலடியில் கிடந்த சடலத்தை சுட்டிக் காட்டினான்.

''அதை நானே ஒப்புக்கொண்டாகி விட்டது'' என்றாள் அவள்.

''இதற்கெல்லாம் இங்கு விசாரணை கிடையாதா?'' என்று அவன் கேட்டான்.

''கிடையாது...'' -அவள் திட்டவட்டமாகப் பதில் சொன்னாள்.

''ஏன்? இங்கு ராஜ்யம், நீதி ஸ்தலம் ஏதும் கிடையாதா?''

''காஞ்சியில் இருக்கிறது. அங்கிருந்து இங்கு யாரும் வருவதில்லை.

அதோ! எட்ட இவன் வந்த குதிரை நிற்கிறது. அதன் முதுகில் பிணைத்து அதை விரட்டினால் அது அவன் இல்லத்துக்குப் போய்ச் சேரும். அவன் உறவினர்கள் அவனைப் புதைத்து விடுவார்கள்.''

''இதுதான் இந்த ஊர் முறையா?''

''ஆம்.''

''விசித்திரமாக இருக்கிறதே!''

zeevaa

''விசித்திரம் ஏதுமில்லை. தினசரி இந்த மாதிரிக் கொலைகள் நடப்பதால் விசாரணை செய்வதற்கு அதிகாரிகளுக்கு அவகாசமில்லை.''

தாமரைச் செல்வியை அந்த வாலிபன் ஏறெடுத்து நோக்கினான். ''பெண்ணே! இது அநீதி. இங்கு அராஜகம் நடக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்'' என்றான் உறுதியான குரலில்.

தாமரைச்செல்வியின் வதனத்தில் மீண்டும் துயரத்தின் சாயை படர்ந்தது. ''வீணாக உங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிடாதீர்கள். இங்கு நீதியை நிலைநிறுத்துவது வீண் கனவு. அதற்கு முயன்றவர்கள் கடுமையாகக் கொலை செய்யப்பட்டார்கள். உங்களுக்கு உயிரின் மீது ஆசையிருந்தால் நீங்கள் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு செல்வது நல்லது'' என்று துன்பம் மிகுந்த குரலில் சொன்னாள். ''தவிர நீங்கள் வாலிபன், சாகும் வயதல்ல இது'' என்றும் தொடர்ந்து கூறினாள்.

வாலிபன் மேற்கொண்டு அவளுடன் விவாதத்தில் இறங்கவில்லை. சற்ற தூரத்தில் நின்றிருந்த செத்தவன் புரவியைக் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து வந்து அதன் முதுகில் அவன் சடலத்தைத் தூக்கிக் குறுக்கே படுக்க வைத்தான். பிறகு அந்தச் சேணக் கயிற்றினாலேயே அவனைப் புரவியின் முதுகில் இறுகப்பிணைத்து புரவியின் முதுகில் வேகமாக அறைந்தான். புரவி பெரும் பாய்ச்சலில் சென்றது, எஜமான் சடலத்தைத் தாங்கி. அந்த அலுவலை முடித்த பின்பு கூட்டமாகத் தான் திரட்டிய மாடுகளையும் அவற்றின் பின்புறத்திலிருந்த சூடுகளையும் கவனித்தான். பிறகு ஒரு நிச்சயத்துக்கு வந்து தாமரைச் செல்வி நின்றிருந்த குடிசையை நோக்கி நடந்து அதன் வாசலில் வந்து நின்றான்.

zeevaa

அப்போதும் தாமரைச் செல்வி குடிசைக் கதவில் சாய்ந்த வண்ணம் விளக்கை ஏந்தியபடியே நின்றிருந்தாள். அவளை அதிகமாக நெருங்காமல் சற்று எட்டவே நின்று அவளை அளவெடுத்த வாலிபன் அவள் அழகு ஈடு இணையற்றது என்ற முடிவுக்கு வந்தான். தூரத்திலிருந்து முதலில் கவனித்ததைவிட அருகில் வந்ததும் அவள் அழகுகளின் விவரம் அதிகமாகத் தெரியவே, 'இந்தக் காட்டில் இத்தனை பெரிய ஒரு அழகியா!' என்று பிரமித்தான்.

அவள் நல்ல உயரத்துடன் கிட்டத்தட்ட அவன் தோளுக்கு வந்தாள். அவள் தலைக் குழல் மேகத்தைத் தோற்கடித்தது. அதிக உருண்டையாக இல்லாமலும் அதிகமாக நீளமில்லாமலும் அளவோடு இருந்த முகம் செந்தாமரை மொட்டைப் போலிருந்தது. கண்களில் சதா ஒரு வீரஒளி துளிர்த்துக் கொண்டிருந்தாலும் அவன் அருகில் வந்ததும் அந்த ஒளி சாந்தத்தின் இருப்பிடமாக மாறி அழகுடன் சலனமும் அடைந்தது. நாசியும் அதை அடுத்த செவ்விய உதடுகளும் வலிய முத்திரைகளை ஏற்க சித்தமாயிருந்தாலும் அதை வெளிக் காட்டாத ஒரு உறுதியும் இருந்தன. பொய்யோ எனும் இடை, பருத்த மார்புகள், சரிந்த வயிறு, அதற்குக் கீழே பருத்த இரு வாழைத் தண்டுகள், அவற்றின் இடையே மறைந்த சொர்க்கபூமி, இவையனைத்தையும் சேலை மறைத்தாலும் ஊகிக்கும்படியாக ஆங்காங்கு சேலை உட்புகுந்தும் மேலே தாவியும் காட்சியளித்தன.

இந்த அழகில் நீண்ட நேரம் மலைத்து நின்ற வாலிபனை அவள் குரல் சுயநிலைக்குக் கொண்டு வந்தது. ''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கு போகிறீர்கள்?'' என்ற கேள்விகள் அவன் கனவைக் கத்தரிக்கவே அவன் மெதுவாகப் பதில் சொன்னான், ''ஆந்திரப் பாகத்திலிருந்து வருகிறேன். காஞ்சிக்குப் போகிறேன்'' என்று.

zeevaa

சிறிதே சிந்தித்தாள் தாமரைச்செல்வி. "இரவு ஏறிவிட்டது. இனி நீங்கள் காஞ்சியை அடைவது கஷ்டம். இங்கிருந்து திருவேஃகாவே ஒரு காதம் இருக்கிறது" என்று சொன்னாள்.

"அதனால் பாதகமில்லை. இருட்டில் பயணம் செய்து பழக்கமுண்டு."

"வழியில் ஆபத்தும் இருக்கிறது."

"என்ன ஆபத்து?"

"மறவர் இருக்கிறார்கள். குடித்துவிட்டு வருவார்கள். உங்களை என்ன செய்வார்களென்று சொல்ல முடியாது?"

"எனக்கும் பயத்துக்கும் வெகுதூரம் பெண்ணே!"

தாமரைச்செல்வி கையிலிருந்த விளக்கைக் குடிசை வாயிலில் வைத்துவிட்டு வெளியே வந்து "நீங்கள் வீரரென்பதை உங்கள் நடையிலிருந்தும் உங்கள் பெருவாளிலிருந்தும் புரிந்து கொண்டேன். இருப்பினும். உங்களை வளைக்கும் மறவர்களை சமாளிக்க முடியாது. வெறி பிடித்தவர்கள். நேரிலும் தாக்குவார்கள், மறைவிலிருந்தும் தாக்குவார்கள்" என்று எச்சரித்த அவள் குரலில் அனுதாபம் மிதமிஞ்சி ஒலித்தது.

வாலிபன் புன்முறுவல் செய்து, "என்னிடம் உனக்கு இவ்வளவு பரிவுவரக் காரணம்?" என்று வினவினான்.

"இங்கு வந்து உட்காருங்கள் சொல்கிறேன்" என்று கூறிய தாமரைச் செல்வி குடிசை வாயிலில் தான் உட்கார்ந்து, அவன் உட்காரவும் தன் பக்கத்தில் இடம் காட்டினாள்.

அங்கு உட்காரச் சிறிது சங்கடப்பட்டான் அந்த வாலிபன். "தாமரைச்செல்வி! உன்னருகில் நான் உட்காருவதை உன் தந்தை பார்த்தால் என்ன நடக்கும்?" என்று வினவினான்.

zeevaa

தாமரைச்செல்வி நகைத்தாள் மதுரமாக, ''ஏதும் நினைக்கமாட்டார். முதலில் அவர் இன்றிரவு இங்கு வருவதே கஷ்டம். குடிமயக்கத்தில் கள்ளுக்கடை முன்பே கிடப்பார். இங்கு வந்தாலும் தள்ளாடி வந்து இந்தக் குடிசை வாயிலில் காலை வைத்து விழுவார். அந்தச் சமயத்தில் அவருக்கு யாரையும் தெரியாது. ஆகையால் பேசாமல் உட்காருங்கள்'' என்றாள் இன்பமான குரலில்.

அதற்குமேல் ஆட்சேபணை கிளப்பாமல் உட்கார்ந்தான் அந்த வாலிபன். அவன் உட்கார்ந்ததும், தூரத்திலிருந்து அவனது புரவியும் அவனருகே வந்து நின்று அவன் தோளில் கழுத்தை வைத்து கன்னத்தை அவன் கன்னத்துடன் உராய்ந்தது. அதன் காதில் வாலிபன் ஏதோ முணுமுணுக்க, அந்தப் புரவி தாமரைச்செல்வி யிடம் சென்று அவள் கன்னத்தில் உராய்ந்து தனது வாயால் முத்தமும் கொடுத்தது. புரவியின் செயலைக் கண்ட தாமரைச் செல்வி பெரிதும் வியப்படைந்தாள். ''புரவியை நன்றாகப் பழக்கியிருக்கிறீர்கள்!'' என்றும் சொல்லி வெட்கப் புன்முறுவல் செய்தாள்.

''தாமரைச் செல்வி! அது புரவியல்ல. எனது ஆருயிர் நண்பன். குறிப்பறிந்து நடக்கக் கூடியவன். என்னை எத்தனையோ முறை காப்பாற்றியிருக்கிறான். அவனை உனக்கும் நண்பனாக்கி விட்டேன். இனி உன் இஷ்டத்திற்கு விரோதமாக உன்னை யாரும் நெருங்க முடியாது. நெருங்கினால் உயிருடனிருக்கவும் முடியாது!'' என்றும் கூறினான்.

தாமரைச்செல்வி புரவியின் கழுத்தைத் தனது இருகைகளாலும் அணைத்து இழுத்து அதன் கன்னத்தில் முத்தமிட்டாள். புரவி லேசாகக் கனைத்தது. பற்களை நன்றாகத் திறந்து காட்டியது. அதைக் கண்டு ஆசை முகத்தில் விரிய தாமரைச்செல்வி கேட்டாள். ''இந்தப் புரவியை எனக்குத் தருவீர்களா?'' என்றாள்.

zeevaa

''தரலாம், ஆனால் தனியாக அதைத் தரமுடியாது'' என்றான் வாலிபன்.

''நீங்கள் சொல்வது புரியவில்லை?'' என்றாள் அவள்.

''என்னைவிட்டு அது பிரியாது. அதை வாங்க வேண்டுமென்றால் என்னையும் சேர்த்துத்தான் வாங்கிக் கொள்ள வேண்டும்'' என்ற அவன், புன்முறுவல் செய்தான்.

தாமரைச்செல்வி சங்கடத்தால் அசைந்தாள். ''என் தனிமையை நினைத்துத் துணிவு கொண்டீர்கள். சற்று முன்பு கொன்றவனைப் போல் உங்களையும் கொல்ல வாளிகள் குடிசைக்குள் இருக்கின்றன'' என்று சீறினாள்.

வாலிபன் நகைத்தான். ''அடிபைத்தியமே! என்னைக் கொல்ல அந்த வாளிகள் எதற்கு? உன் கண்களே கொல்லுமே'' என்று கூறியவன் எழுந்தான்.

அவன் சொற்களால் அவள் உணர்ச்சிகள் அவளைத் திக்குமுக்காடச் செய்தன. நீண்டநாள் தனிமையும், துன்ப வாழ்க்கையும் அவள் இதயத்தில் மாறுதலை விளைவித்தன. வாலிபனை ஒருமுறை உற்று நோக்கினாள். அவன் நெறியுள்ளவன் என்பது அவன் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தது. ஆனால், அவன் முன்னிலையில் அதிக நேரம் நிற்கப் பயந்து குடிசைக்குள்ளே சென்றாள். சென்றபோது குடிசை வாயிலில் நின்று அவனை நோக்கி ஒருமுறை தனது கண்களை அவன்மீது வீசினாள். அவள் கண் வீச்சில் அழைப்பும் இருந்தது.

zeevaa

## 3. முறைப்பிள்ளை

**வ**ந்த வாலிபனின் வீரமும் அழகும் கலந்த வதனத்தாலும், புரவியுடன் தன்னையும் சேர்த்துத்தான் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று பேசிய வேடிக்கைப் பேச்சினாலும் சற்றே அச்சங்கொண்ட தாமரைச்செல்வி குடிசை வாயிலில் விளக்கை வைத்துவிட்டுச் சென்ற போது, அந்த விழிகளில் அழைப்பு இருந்தாலும் அதை ஏற்கவில்லை அந்த வாலிப வீரன். அவள் உள்ளே சென்று நீண்ட நேரமாகியுங்கூட இருந்த இடத்தை விட்டு நகராமல் தரையிலேயே உட்கார்ந்து ஆகாயத்தையும் சுற்றுப்புறத்தையும் நோக்கினான். குடிசைக்கு எதிரே மரங்கள் அடர்த்தியாயில்லாத காரணத்தினால் எட்டாம் பிறைமதியின் பால்நிலவு எங்கும் பரந்து காட்டின் இந்தப் பகுதியை மிகக் கவர்ச்சியாகக் காண்பித்தது. அத்தகைய பால்நிலவில் குடிசை வாயில் விளக்கு அர்த்தமற்றதாயிருந்தாலும், குடிசைக்கு உள்ளிருந்த இருளை நோக்கிய வாலிபன் உலகத்தில் எதற்கும் ஒரு சம்பந்த மிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டதால் சற்று புன்முறுவலும் கொண்டான். உள்ளே இருந்த இருளின் விளைவாகத் தாமரைச் செல்வியை அவன் பார்க்க முடியாவிட்டாலும், அவள் அவனை நன்றாகவே பார்க்க முடிந்ததால் அவன் அழகையும் தோரணையையும், ஏன், அறிவையுங்கூட அவள் உள்ளிருந்தே ரசித்துக்கொண்டிருந்தாள். விண்ணை நோக்கி விநாடிகளை எடை போட்ட அவன் வீரக் கண்களின் ஒளியும், பிறகு அவன் செய்த மந்தகாசமும் தாமரைச் செல்வியின் மனத்தை மிகவும் ஈர்த்தன. இருந்தபோதிலும் உள்ளே பானைகளுக்கிடையில் நின்றிருந்த அவள் வெளியே வராமல் அவன் மேற்கொண்டு என்ன செய்கிறான்? என்பதைப் பார்க்கலானாள்.

zeevaa



zeevaa

விண்ணைக் கவனித்த அவன் விழிகள் மண்ணையும் கவனிக்கத் தொடங்கி சற்று முன்பு அவனால் வளைக்கப்பட்ட ஆவினங்கள் மீது பதிந்ததைக் கண்ட தாமரைச்செல்வி, அவன் வதனத்திலும் திடீரென ஏதோ சிந்தனை படர்ந்துவிட்டதைக் கவனித்தாள். அந்தச் சிந்தனையின் விளைவாகவோ என்னவோ அவன் திடீரெனக் குடிசை வாயிலில் அவள் வைத்துவிட்டுப் போயிருந்த விளக்கை ஊதி அணைத்தான். விளக்கை அவன் அணைத்ததுமே அவன் குடிசைக்குள் வருவான் என்று எண்ணமிட்ட அந்த ஏந்திழை அவன் வந்தால் வரவேற்க ஒரு கூரிய வாளியையும் கையிலெடுத்துக் கொண்டாள். உள்ளே வரும் நினைப்பு அந்த வாலிபனுக்கு லவலேசமுமில்லாததால் வாளியை ஏந்திப் பிடித்த கை வாளியைப் பிடித்த வண்ணமே நின்றுவிட்டது. நேரம் ஓடியதே தவிர அவன் முதலில் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராததால் அவன் எத்தனை கண்ணியமுடையவன் என்று உள்ளூர நினைத்து, உவகை கொண்ட தாமரைச்செல்வி 'உண்மையில் இவன் கண்ணியமுள்ளவன் தானா? எனது விழிகளின் அழைப்பு அவனுக்குப் புரிய வில்லையா? புரிந்துதான் ஏமாற அவனுக்கு இஷ்டமில்லையா? இல்லை அவன் எனது விழி அழைப்பு போலியென்று புரிந்து கொண்டு விட்டானா?' என்று பல கேள்விகளைத் தன்னுள் எழுப்பிக் கொண்டாள்.

இத்தனைக்கும் அவள் விடையேதும் காணவில்லை. வாலிபன் மிகுந்த அசட்டையுடன் நடந்து கொண்ட காரணத்தால் நீண்ட நேரத்திற்குப் பிறகு தாமரைச் செல்வி தனது அம்பை இடையில் செருகி மேல்தலைப்பை நன்றாகப் போர்த்தி உடலுடன் அம்பையும் மறைத்துக் கொண்டு வெளியே வந்தபோது விசித்திரமான காட்சி யொன்றைக் கண்டாள். அவன் புரவி புல்தரையில் ஒருக்களித்து அவன் மடியில் தலையை வைத்துப்படுத்திருந்தது. அதன் பிடரிமயிரை அவன் பதம் பார்த்துப் பிரித்துச் சிக்கெடுத்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்து அவள் லேசாக நகைத்த ஒலி

இரவின் அமைதியில் இசைக்கப்பட்ட ஸ்வர ஜாலங்களைப்போல் ஒலித்ததால் தலையைத் தூக்கி அவளை நோக்கினான் அவன்.

குடிசையின் கதவுக்கருகில் முன்னைப் போலவே இடையை ஒடித்துச் சாய்ந்து ஓவியப் பாவையென நின்றிருந்தாள் அவள். மெதுவாகப் பேச்சும் கொடுத்தாள். "உலக வழக்குக்கு விரோதமாக இருக்கிறதே" என்று.

அவன் அவள் முகத்தைச் சில விநாடிகளே ஆராய்ந்து விட்டு, "இதில் எது உலக வழக்குக்கு விரோதம்?" என்று வினவினான், ஏளனம் லேசாக ஒலித்த குரலில்.

அவன் குரலிலிருந்த ஏளனத்தைக் கவனித்தாலும் கவனிக்காதது போலவே நடித்த தாமரைச்செல்வி, "மிருகம் உங்கள் மடியில் படுத்திருப்பதும் அதன் பிடரி மயிர்களை நீங்கள் பிரித்து சிக்கெடுப்பதும் உலக வழக்கத்துக்கு விரோதமல்லவா?" என்று கேட்டாள்.

"இல்லை. நாய், பூனை முதலியவற்றை மனிதன் வளர்ப்பதும், கொஞ்சுவதும், அவன் அவற்றை மடியில் கிடத்திக் கொள்வதும் தான் உலக வழக்கு. மிருகத்தின் மடியில் மனிதன் தலை வைத்துப் படுப்பதுதான் உலக வழக்குக்கு முரணானது, காணமுடியாத விசித்திரம்" என்று விளக்கிய அந்த வாலிபன், "மனிதன் படுக்கும் மடிகளும் உண்டு" என்று சொன்னான்.

"அது எதுவோ?" -அவன் எண்ணம் ஓடும் திக்கைப் புரிந்து கொண்டு வினவினாள் அவள்.

இதற்கு அவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சொன்னபோது அவன் குரலில் தயக்கம் இருந்தது. "பெண்ணின் மடி" என்றான் மெதுவாக.

தாமரைச் செல்வியின் விழிகளில் சீற்றம் தோன்றியது. "என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டாள் சீற்றம் குரலிலும் ஒலிக்க.

zeevaa

''இயற்கையின் நியதியைச் சொன்னேன்.''

''எது இயற்கையின் நியதி?''

''பெண்ணின் மடியில் படுப்பது. அது....!''

''அது?''

''சொர்க்கம்''

''என்ன உளறுகிறீர்கள்?''

''உளறவில்லை தாமரைச்செல்வி. உண்மையைச் சொல்கிறேன். பிள்ளைப் பருவத்தில் தாயின் மடி. வாலிபத்தில் மனையாள் அல்லது...?''

''அல்லது?''

''மனையாளாகக் கூடியவளின், அதாவது தான் காதலிக்கும் பெண்ணின் மடி. இது இயற்கையின் நியதி'' என்ற வாலிபன், ''பெண்ணே! வீணாக என் வாயைக் கிண்டாதே. பிறகு தவறாகப் பொருள் கொள்ளாதே'' என்றும் கூறினான்.

பிறகு தாமரைச்செல்வியை அவன் ஏறெடுத்தும் பார்க்காமல் புரவியின் பிடரியிலேயே தனது கவனத்தைச் செலுத்தி மயிர்களைப் பிரித்து சிக்கெடுப்பதில் முனைந்தான். அவன் தன்னை எச்சரித்த சொற்களாலும், தன்னை அசட்டை செய்து கவனத்தைப் புரவியின் மீது செலுத்துவதைக் கண்டதாலும் அவள் சினத்தின் வசப்பட்டு, ''இந்த மாதிரி சிக்கு எடுப்பதுதான் உங்கள் வேலையா?'' என்று குரலில் சினத்தைக் காட்டி கேட்டாள்.

அவன் அவளை ஏறெடுத்துப் பார்க்காமலே, ''ஆம்'' என்றான்.

''என்ன ஆம்?'' என்று கேட்டாள் தாமரைச்செல்வி கோபத்துடன்.

''இங்கு நான் வந்ததே சிக்கு எடுக்கத்தான்'' என்றான் அவன்.

zeevaa

அவள் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டாள். அவன் தன்னைப் பற்றித்தான் ஏதோ சொல்வதாக நினைத்து மடியிலிருந்த அம்பை எடுத்து அவன் கையை நோக்கி முனைதிருப்பி எறிந்தாள். அடுத்த விநாடி பிரமிக்கத்தக்க துரித நிகழ்ச்சிகள் துவங்கின. வேகமாக எறியப்பட்ட அம்பு அவன் கையைத் தீண்டுமுன்பே தனது கையை வளைத்து அதன் இறக்கைப் பகுதியைப் பிடித்து முனையின் குறியைத் திருப்பி அம்பை தூர எறிந்தான் அந்த வாலிபன். அடுத்து கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் கையை அவன் பலவந்தமாகப் பிடித்து இழுத்து தனது புரவியின் தலைமீது அவளை உட்கார வைத்து அவள் குழலைப் பிரித்தான். அவள் புரவியின் தலைமீதிருந்து எழுந்திருக்க முயன்றபோது அவனது ஒருகை அவள் இடையை இரும்பெனப் பிடித்தது. அவன் ஏதோ சைகை செய்யவே புரவி மீண்டும் அவள் மடியில் தலையைவைத்து இறுக்கவே, அவள் நகர முடியாத நிலைக்கு வந்தாள்.

அதற்குமேல் அவள் கையை விடுவித்து, பிரித்து அவள் தலைக்குழலைச் சிக்கெடுக்க முற்பட்டான். அவள் செய்வதறியாது திகைத்தாள். ''என்ன செய்கிறீர்கள்?'' என்று நகர முடியாத நிலையில் கேட்டாள்.

''புரவிக்குச் செய்ததை உனக்குச் செய்கிறேன்'' என்ற அவன், அவள் குழலை சிக்கெடுப்பதில் முனைந்து ''அப்பா... என்ன அடர்த்தியான கரிய குழல்'' என்றும் சிலாகித்தான்.

''நான் புரவியல்ல'' என்றாள் தாமரைச்செல்வி.

''தெரிகிறது.''

''என்ன தெரிகிறது?'' -என்றாள்.

''நீ புரவியல்லவென்று.''

''மகிழ்ச்சி!''

zeevaa

''இதில் மகிழ்ச்சிக்கு ஏதுமில்லை. புரவி என் உயிரைப் பல சமயங்களில் காப்பாற்றியிருக்கிறது. நீ சற்று முன்பு என்னைக் கொல்ல முயன்றாய்'' என்ற அவன் வார்த்தைகளை முடிக்க விட வில்லை அவள்.

''தவறு தவறு. உங்களை நான் கொல்ல நினைக்க வில்லை. கையில் காயப்படுத்தத்தான் எத்தனித்தேன்'' என்று பதட்டத்துடன் பேசினாள்.

''என் புரவி என் கையைக் கூட காயப்படுத்த முயன்றதில்லை. புரவியை விட நீ எந்த விதத்திலும் உயர்ந்தவளல்ல. அதற்கு இருக்கும் நன்றி உனக்குக் கிடையாது.'' இதைத் திட்டமாகச் சொன்னான் வாலிபன்.

''உங்களிடம் எனக்கு எதற்காக நன்றி இருக்க வேண்டும்?'' என்று அவள் சீற்றத்துடன் கேட்டாள்.

வாலிபன் சில விநாடிகள் பதில் சொல்லாமலேயே குழலை சிக்கெடுத்து சீர்செய்து கொண்டிருந்தான். ''என் தனிமையை நான் பயன்படுத்திக் கொள்ளவில்லை. உன் கண்கள் என்னை உள்ளே அழைத்தபோது நான் தொடரவில்லை. தொடர்ந்து உன்னை நான் கெடுத்திருக்க முடியும். நீ இப்பொழுது எறிந்த வாளியைப் போல் ஆயிரம் வாளிகள் இருந்தாலும் என்னை எதுவும் செய்து விட முடியாது. என் உடலில் ஓடும் சுத்தமான ரத்தம், நான் பிறந்த குலம், இவைதான் உன்னைக் காத்தன'' என்று சொன்னான் அவள் குழலை சீர்செய்த வண்ணம்.

அவள் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. ''உன் குலமா? அதென்ன அப்பேர்ப்பட்ட குலம்?'' என்று அவள் விசாரித்தாள். அவள் குரலில் அதுவரை காணப்படாத பயம் இருந்தது. அதன் விளைவாக லேசான நடுக்கமும் தெரிந்தது.

zeevaa

''வீரர் குலம், எதையும் சீர் செய்யும் குலம்'' என்றான் அவன் பதிலுக்கு.

''எல்லாவற்றையும் சீர் செய்வதற்கு ஒரு தனிக்குலமா?'' -அவள் விசாரித்தாள்.

''ஆம், காட்டைக் கூட நாடாக்குவோம். அதில் ஒரு நீதியை நிலை நிறுத்துவோம்'' என்ற அந்த வாலிபன் அவள் குழலை சிக்கெடுப்பதை நிறுத்தி. ''இப்பொழுது உன் குழல் சீராகிவிட்டது'' என்று கூறி அதை எடுத்துச் சுழற்றி முடிச்சுப்போட்டான். முடிச்சுப் போட்டதும் குழலால் மறைக்கப்படாத அவள் பின்கழுத்து தங்கம் போல் பளபளத்தது. அதன் அழகை ரசித்தான். பிறகு லேசாக அதில் கையும் வைத்தான். அவன் கையை அவள் அகற்ற முயலவில்லை. மடியை மட்டும் சிறிது அசக்கினாள். புரவியின் தலை அசைந்ததால் வலி எடுத்தன் விளைவாக அவள் வலியைப் புரிந்துகொண்ட வாலிபன் அவள் இடை மீது தனது கையைத் தவழவிட்டுப் புரவியின் கன்னத்தை தட்டவே அது தலையைத் தூக்கி அவளை விடுவித்து எழுந்து நின்றது. அவளும் எழுந்திருக்க முயன்று முடியாததால் காலின் மேற்புறத்தைப் பிடித்துக்கொண்டாள். அவள் நிலையைப் புரிந்துகொண்ட அந்த வாலிபன் ''அவன் சற்று பலமாகப் படுத்து விட்டான் போலிருக்கிறது!'' என்று சொல்லிவிட்டு ''டேய்! மடையா! போ அப்புறம்'' என்று மிரட்ட, புரவி நகர்ந்து மேட்டுச் சரிவில் இறங்கிச் சென்றது. பத்தடி சென்று திரும்பிப் பார்த்துக் கனைத்தது. அந்த வாலிபன் நிற்கமுடியாத அவள் காலின் பணைத்த பகுதியின் தசையை வருடினான் இரு கைகளாலும். ''உள்ளே சென்று படுத்துக் கொள்'' என்று அன்புடன் கூறி அவளை குடிசைவாயிலுக்கு அழைத்துச் சென்றான், அவள் தோளைப் பற்றிய வண்ணம். கால் நடக்க முடியாததால் சற்று அவன்மீது சாய்ந்தே அவள் நடந்தாள். இரவின் மனோகரச் சூழ்நிலை, மதியின் மயக்கமான ஒளி, இரண்டும் அவளையும் உணர்ச்சிக்குள்ளாக்கி

zeevaa

இருக்கவேண்டும். அதன் விளைவாக அவன் மீது சற்று அதிகமாகவே சாய்ந்தாள்.

அவள் அழகிய உடலை தன்மீது சாய்த்தபடி குடிசை வாயிலுக்கு அவளை அழைத்துச் சென்ற சமயம் அந்தப் பயங்கரச் சிரிப்பு கேட்டது. குடிசைமேட்டில் தாமரைச்செல்வியை நோக்கி ஒரு வாலிபன் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட தாமரைச்செல்வி பதறினாள். ''ஏனடி தாமரைச் செல்வி! உனக்கு ஒரு ஆசை நாயகனும் ஏற்பட்டு விட்டானா? அவனை இப்பொழுதே யமனிடம் அனுப்பி வைக்கிறேன்'' என்று சீறியவண்ணம் இடையிலிருந்த குறுவாளை எடுத்து வாலிபன் மார்புக்குக் குறி வைத்தான். வாலிபன் வாழ்வு முடிந்ததென்றே நினைத்த தாமரைச்செல்வி, ''பொறுங்கள். இவர் இந்த ஊருக்கே புதிது'' என்று அலறினாள். அடுத்தமுறை அலறியது அவளல்ல. புதிதாக வந்து குறுவாளை ஏந்தியவன் அலறினான்.

அவன் அலறிய காரணத்தை அறிய தாமரைச்செல்வி தனது கண்களை அவன் மீது செலுத்தினாள். அப்போது அவன் நின்ற நிலையில் இல்லை. தரையில் கிடந்தான் மல்லாந்து. அவன் மீது தனது இரு கால்களையும் வைத்து நின்றிருந்த வாலிபனின் புரவி வாயைத் திறந்து பற்களால் அவன் முகத்தைக் கவ்வவும் முயன்றது.

''ஐயோ! அவரைக் காப்பாற்றுங்கள் புரவியிடமிருந்து'' என்று கெஞ்சினாள் தாமரைச்செல்வி.

''அவனிடம் உனக்கென்ன அத்தனை அக்கறை?'' என்று கேட்டான் வாலிபன்.

''அவன் என் மாமன். என்னை மணக்கும் உரிமை பெற்றவன். முறைப்பிள்ளை'' என்ற தாமரைச்செல்வி தனது தலையைக் குனிந்து நிலத்தை நோக்கினாள்.

zeevaa

# 4. பப்பகுமாரன்

**பு**திதாக வந்தவன் புரவியால் முட்டித் தள்ளப்பட்டுக் குடிசைச் சரிவின் புல்தரையில் விழுந்து அலறியவன் தாமரைச் செல்வியின் தாய்மாமனென்பதையும், அவளை மணக்கும் உரிமை பெற்ற முறைப்பிள்ளையென்பதையும் தாமரைச்செல்வியே சொல்லிக் கேட்டதால், ''டேய் அவனை விட்டுவிடு'' என்று குடிசை வாயிலிலிருந்தே வாலிபன் கூறியதும், புதிதாக வந்தவன் முகத்தைக் கடிக்கப் போன புரவி தனது வாயை மூடியது. கால்களையும் அவனது மார்பின் மீதிருந்து எடுத்து விட்டது. அதனால் விடுதலையடைந்து ''அப்பாடா!'' என்று முனகி எழுந்திருந்த அந்தப் புதிய வாலிபன் தனது கையிலிருந்த குறுவாளை மீண்டும் கச்சையில் செருகிக் கொண்டு குடிசை வாயிலைக் கவனிக்கவே, அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் துவங்கியதன்றி பழைய வேகமும் மறுபடியும் திரும்பவே, ''டேய்! அவள் தோளிலிருந்து உன் கையை எடு'' என்று முதலில் வந்த வாலிபனை நோக்கிக் கூவினான்.

ஆனால் தாமரைச்செல்வியின் தோளில் கையை ஆதரவாக வைத்துப் பிடித்துக் கொண்டிருந்த அந்தப் பழைய வாலிபன் தனது கையை எடுப்பதற்குப் பதிலாக அவள் தோளைக் கையினால் அதிகமாக அழுத்தவே செய்தான். அந்த அழுத்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தாமரைச்செல்வி முயன்றும் முடியாமற் போகவே, ''அந்த மூர்க்கனிடம் வம்பு வைத்துக் கொள்ளாதீர்கள். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்'' என்று ரகசியமாக வேண்டினாள்.

zeevaa



zeevaa

அப்பொழுதும் அவள் தோளை விடாத அந்த வாலிபன், "உன் முறைப் பிள்ளை பற்றி நீ பேசும் முறை சரியாக இல்லையே" என்று சுட்டிக் காட்டினான்.

தாமரைச்செல்வி தனது தாமரை நயனங்களைப் பக்கத்தில் நின்ற வாலிபனை நோக்கித் திருப்பி, "உள்ளதைச் சொன்னேன். மகா மூர்க்கன். சகல துர்க்குணங்களுக்கும் இருப்பிடம். எனது தந்தையைக் கெடுத்தவனே இவன்தான்" என்று சொன்னாள். அவள் குரலில் துன்பம் தோய்ந்து கிடந்ததன்றி, கண்களிலும் அதன் சாயை விரிந்திருந்தது.

"இப்பேர்ப்பட்டவனையா மணக்கப் போகிறாய்?" என்று வினவிய வாலிபன் அவள் உடலைத் தன்மீது நன்றாகச் சாய்த்தான்.

"ஐயோ வேண்டாம் விடுங்கள் என்னை, அடுத்து அவன் என்ன செய்வானென்று சொல்ல முடியாது?" என்று கெஞ்சினாள் தாமரைச் செல்வி.

"எனக்குத் தெரியும் பெண்ணே. நாமிருக்கும் நிலை கண்டதும் அவன் வாளை எடுத்துக்கொண்டு என்னிடம் சண்டைக்கு வருவான். நான் அவனைக் கொன்று விடுவேன். உன்னைப் பிடித்த பீடை விட்டுவிடும்" என்று தனது உத்தேசத்தை விளக்கிய வாலிபனைத் துயரம் மிகுந்த கண்களால் நோக்கிய தாமரைச்செல்வி, "வேண்டாம். என்னால் உங்கள் பெயருக்கு மாசு வர வேண்டாம். உங்கள் வாளால் இறப்பதற்கு இவன் தகுதியற்றவன்" என்று சொன்னாள்.

புரவியிடமிருந்து விடுபட்ட முறைப்பிள்ளை குடிசைக்கருகே நின்று, இருவரும் தொடர்ந்து நெருங்கி அந்நியோன்னியமாக இருப்பதையும், தன்னைக் கண்ட பின்பும் விலகி நிற்காததையும் கண்டதால் உள்ளூர சினம் கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டினானில்லை. மெதுவாகக் குடிசை மேட்டில் ஏறி அவர்களை

zeevaa

அணுக முயன்றவன் தள்ளாடித் தள்ளாடி ஏறினான். இருமுறை தரையில் விழுந்து எழுந்து கஷ்டப்பட்டே நடந்தான். ஆனால் ஒவ்வொரு முறை எழுந்த போதும் தனது ஆடைகளை சீர் திருத்திக் கொண்டும், ஆடையில் ஒட்டிய மண்ணைத் தட்டி விட்டுக் கொண்டும், அடிக்கடி குடிசை வாயிலை ஏறிட்டு வெறிப் பார்வையாகப் பார்த்துக் கொண்டும் வந்தவன், குடிசை வாயிலை அடைந்ததும் அங்கிருந்த இருவர் மீதும் தனது பார்வையைச் செலுத்தி விட்டுக் கீழே உட்கார்ந்ததன்றி, "நீங்களும் உட்காரலாம், அனுமதி அளித்து விட்டேன்" என்று கூறிப் பெரிதாகச் சிரித்தான். அவன் சொற்கள் குழம்பி உளறலாக வெளி வந்தன. சிரிப்பில் கள்வெறி நன்றாகப் புலனாகியது.

முறைப்பிள்ளையை மிகுந்த வெறுப்புடன் நோக்கிய வாலிபன் "தாமரைச்செல்வி! உன்னிடம் அனுதாபப்படுகிறேன். இவனா உன் மணாளனாகப் போகிறவன்?" என்று வினவவும் செய்தான்.

"அவளைக் கேட்க வேண்டாம். என்னைக் கேள் சொல்கிறேன். இவள் எனது முறைப் பெண்" என்றான் முறைப்பிள்ளை.

அதுவரை பேசாதிருந்த தாமரைச்செல்வி, "முறைப் பிள்ளையைத்தான் மணக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை" என்றாள் சினத்துடன்.

முறைப்பிள்ளை வெளிக்கண்ணால் அவளை நோக்கி "நம் விஷயத்தில் இருக்கிறது, நீ என்னைத் தவிர வேற யாரையும் மணக்க முடியாதபடி செல்வி" என்றான், நகைத்தான்.

"ஏன் முடியாது? யார் என்னைத் தடுக்க முடியும்?" என்று வினவினாள் தாமரைச்செல்வி.

முறைப்பிள்ளை இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. வட்ட வட்டமாக நின்றிருந்த பசுக்கூட்டத்தின் மீது தனது கண்களை ஓடவிட்டான். பிறகு சொன்னான், "நான் தடுக்க முடியும் செல்வி.

zeevaa

வேறு யார் உன் மீது நாட்டம் வைத்தாலும் அவனை அழிக்கும் வழி எனக்குத் தெரியும். அது மட்டுமல்ல, அவனுடன் சேர்த்து உன் தந்தையையும் ஒழித்துவிட என்னால் முடியும். அதோ அந்தப் பசுக் கூட்டத்தின் கதையைக் காஞ்சி அதிகாரிகளிடம் சொன்னால் நாளையே உன் தந்தை பல்லவர் சிறையில் உருண்டு கிடப்பார்'' என்று.

முறைப்பிள்ளையின் போதை தலைக்கேறியிருந்தாலும் அவன் தொடர்ச்சியாகப் பேச முடிந்ததைக் கண்ட வாலிபன் அவன் வாயை மேலும் கிண்ட முயன்று ''பசுக் கூட்டத்துக்குக் கதை வேறு உண்டா மாப்பிள்ளை?'' என்று வினவினான்.

'மாப்பிள்ளை' என்று தன்னை வாலிபன் அழைத்ததும் பெரு மகிழ்ச்சி அடைந்த முறைப்பிள்ளை, ''டேய்! நீ புத்திசாலி. என்னைச் சரியான பெயர் கொண்டு அழைக்கிறாய். ஆனால் நான் உனக்கு எப்படி மாப்பிள்ளையாக முடியும்? இவள் உனக்குப் பெண் முறையா?'' என்று கேட்டான்.

''அவ்வளவு வயது எனக்கு ஆகவில்லையே!'' என்று விசனப்பட்டான் வாலிபன்.

''பின் எப்படி நான் மாப்பிள்ளையாக முடியும்?''

''சகோதரி புருஷனும் மாப்பிள்ளைதானே?''

''ஓ! புரிந்தது, புரிந்தது!''

''என்ன புரிந்தது?''

''உனக்கு இவள் சகோதரி என்பது. இல்லாவிட்டால் இவளை எப்படி நீ கட்டிக்கொண்டு நிற்க முடியும்?''

இப்படிச் சமாளித்துக் கொண்ட முறைப்பிள்ளை குடிசைக்குள்ளே சென்று ஒரு சிறு கலயத்துடன் வந்து அதிலிருந்த

zeevaa

பழைய கள்ளை இரண்டு வாய் உறிஞ்சினான். பிறகு கலயத்தைத் தரையில் வைத்து வாலிபனை நோக்கி ''நீ ஏன் அவளுடன் நிற்கிறாய்? உட்கார்ந்து கொள். இதை ருசி பார்'' என்று கலயத்தைச் சுட்டிக் காட்டினான்.

''பழக்கமில்லை'' என்று மறுத்தான் வாலிபன்.

''மச்சான்! பழக்கப்படுத்திக் கொள். மது, மாது இரண்டுக்கும் கால் ஒன்றுதான் வித்தியாசம். ஆனால் இரண்டின் குணமும் ஒன்றுதான். இரண்டும் ஆளை மயக்கும்'' என்று உவமை காட்டிப் பேசினான் முறைப்பிள்ளை.

அவன் தன்னை உறவு கொண்டாடியதை நினைத்துப் புன்முறுவல் கொண்ட வாலிபன் கலயத்தை எடுத்து, ''இன்னும் கொஞ்சம் அருந்துங்கள்'' என்று உபசாரம் செய்தான். முறைப்பிள்ளை இம்முறை சிறிது அதிகமாகவே கள்ளை அருந்தியதும், ''மாப்பிள்ளை'' என்று அவனை அழைத்தான் வாலிபன்.

போதை அதிகமாக ஏறி இருந்ததால் ''மாப்பிள்ளை! மாப்பிள்ளை! அதாவது பெரிய பிள்ளை. இந்த வீட்டுக்கு நான் பெரிய பிள்ளையானால் இவளுக்கு சகோதரன் முறை. அப்படியானால் இவளை மணக்க முடியாதே'' என்று விமர்சனம் செய்து நகைத்தான், களுக் களுக்கென்று இடைவெளியிட்டு.

வந்த வாலிபன் மறுபடியும் பேச்சுக் கொடுக்கத் துவங்கி, ''மாப்பிள்ளை! இவளில்லாவிட்டால் உலகத்தில் வேறு பெண்களே கிடையாதா நீங்கள் மணப்பதற்கு?'' என்று தூண்டினான்.

''ஏன் இல்லை? எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். என்னை மணக்கத் துடிக்கிறார்கள்'' என்ற முறைப்பிள்ளை ''மச்சான்! எனக்கு நீயே ஒரு பெண்ணைப் பார்க்கிறாயா?'' என்று வினவினான்.

zeevaa

"ஆஹா! பார்க்கிறேன்."

"அவளிடம் பணம் நிறைய இருக்க வேண்டும்."

"குணம்?"

"அது எதற்குப் பிரயோசனம் பணந்தான் வேண்டும்!"

"காதல்?"

"காதல் ஒரு சனியன். அதில் சிக்கியவர்கள் செத்துத்தான் போனார்கள். சாக எனக்கு இஷ்டமில்லை."

குடிவெறியிலும் பற்பல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டுபோன முறைப்பிள்ளையை நோக்கிய வாலிபன் 'குடிவெறியிலும் இவனுக்குச் சில திட்டமான கருத்துக்கள் இருக்கின்றன. குடியால் பல பயன்கள் இருக்கின்றன. உண்மைக் குணங்களை, ஒருவன் தனது ரகசியங்களை வெளிப்படுத்தும் சக்தி குடிக்கு இருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இத்தனைக்கும் தாமரைச்செல்வி எதுவும் பேசவில்லை. தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள். வெட்கத்தையும் மீறிய நிலையில் அவள் உணர்ச்சிகள் உறைந்து கிடந்தன. அவள் மௌனத்தை முறைப்பிள்ளையின் கேள்வி உடைத்தது. "மச்சான்! இத்தனைக்கும் உனது பெயரை நீ சொல்லவில்லையே?" என்று கேட்டவன், தாமரைச்செல்வியை நோக்கி "மச்சான்தான் சொல்லவில்லை, நீயும் ஏன் சொல்லவில்லை?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது" என்றாள் அவள் நிலத்தைப் பார்த்த வண்ணம்.

"ஏன்?" - முறைப்பிள்ளை கேட்டான். அவளை முறைத்தான்.

"சற்று முன்புதான் அவர் ஊரிலிருந்து வந்தார்" என்றாள் தாமரைச்செல்வி.

zeevaa

''எந்த ஊரிலிருந்து?''-சொற்கள் தடுமாறி வந்தன.

''அதுவும் தெரியாது''-தாமரைச்செல்வி இதைச் சொல்லிவிட்டு எழுந்திருக்க முயன்றாள்.

''அப்படியானால் இவன் உன் அண்ணனல்ல. ஊர் பேர் தெரியாதவனை நீ எப்படிக் கட்டிக்கொண்டு நின்றாய்? இவன் உன் கள்ளக்காதலன்; இவனையும் வெட்டி உன்னையும் வெட்டி விடுகிறேன்'' என்று எழுந்தான் முறைப்பிள்ளை.

அவன் கையை வாலிபனின் இரும்புக் கை பிடித்து உட்கார வைத்து. ''மாப்பிள்ளை, எதிலும் ஆத்திரம் கூடாது'' என்றான்.

''கூடாது. எனக்கு ஆத்திரமில்லை.''

''நிதானத்துடன் எதையும் ஆராய வேண்டும்.''

''நிதானத்துடன் இருக்கிறேன். ஆராய்வோம்.'' - இதைச் சொல்லி எழுந்த முறைப்பிள்ளை சட்டென்று தரையில் விழுந்தான்.

அவன் விழுந்ததைப் பற்றி தாமரைச்செல்வி எந்த அக்கறையும் காட்டவில்லை. ''இப்படிக் குடித்து விழுவது இவருக்கு சகஜம்'' என்று கூறிவிட்டு, ''ஆமாம்! நானும் மறந்து விட்டேன்; உங்கள் பெயரைச் சொல்லவில்லையே நீங்கள்?'' என்று கேட்டாள்.

சிறிது நேரம் சிந்தனையில் இறங்கிய வாலிபன், ''என் பெயர் பப்பகுமாரன். சுருக்கமாக என்னை குமாரன் என்று அழைக்கலாம்'' என்றான் சிந்தனைக்குப் பிறகு.

அவன் தன்னைப் பற்றிய முழு உண்மையையும் சொல்ல இஷ்டப்படவில்லை என்பதைப் புரிந்து கொண்ட தாமரைச்செல்வி அவனை மேற்கொண்டு எதுவும் கேட்காவிட்டாலும், மயங்கிக் கிடந்த முறைப்பிள்ளை சிறிது மயக்கம் நீங்கவே, வாலிபன் சொன்னதை அரைகுறையாகக் காதில் வாங்கிக்கொண்டு, ''பாப்பா

zeevaa

குமாரன், நீ சொல்வது சரி. நீ பாப்பாவல்ல. குமாரன் தான். சரி. பாப்பாவாயிருந்து அவளைக் கட்டிக் கொண்டால் நான் எதிர்க்கமாட்டேன். குமாரனாயிருந்து கட்டிக்கொண்டதுதான் தவறு'' என்று உளறினான்.

அந்தச் சமயத்தில் திரண்டு நின்ற பசுக்களிடையே அரவம் உண்டாயிற்று. பசுக்கள் சில 'அம்மா'வென்று கத்தின. அந்தப் பசுக்கூட்டத்திற்குள் புகுந்து ஆஜானுபாகுவான ஒரு மறவன் குடிசைமேட்டில் ஏறி வந்தான். அவன் பின்னால் மற்றும் நான்கு மறவர்கள் வேல்களைத் தாங்கி வந்தார்கள். அவர்களிடம் குமாரனைக் காட்டிய பெரிய மறவன், ''அவனைப் பிடித்து மரத்தில் கட்டுங்கள். உண்மையைக் கக்க வைப்போம்'' என்று உத்தரவிட்டான்.

''யார் அவன்?'' - மறவரில் ஒருவன் கேட்டான்.

''அவன் மன்னரின் ஒற்றன். நம்மை வேவு பார்க்க வந்திருக்கிறான்'' என்றான் பெரிய மறவன்.

அதற்குப் பிறகு மற்ற மறவர்கள் காத்திருக்கவில்லை. ஈட்டிகளை குமாரனை நோக்கிப் பிடித்த வண்ணம் மேட்டில் ஏறலானார்கள்.



zeevaa

# 5. பெரிய மறவன் ரகசியம்

**ப**சுக்கூட்டத்தினிடையே அரவம் கேட்டதுமே உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நின்றுவிட்ட பப்பகுமாரன், அந்தக் கூட்டத்திற்குள்ளிருந்து வெளியே வந்த ஆஜானுபாகுவான பெரிய மறவனையும் கண்டான். அவன் இட்ட கட்டளையையும் கேட்டான். அதைத் தொடர்ந்து வேல்களைத் தாங்கித் தன்னை நோக்கி வந்த மற்ற நான்கு மறவர்களையும் பார்த்தான். இத்தனைக்கும் அவன் அச்சத்தையும் காட்டவில்லை. இருந்த இடத்தை விட்டு நகரவுமில்லை, பேச்சுக் கொடுக்கவுமில்லை. ஆனால் கள்ளைக் குடித்து அரைமயக்கத்திலிருந்த முறைப்பிள்ளை மட்டும் தள்ளாடி எழுந்து, வந்தவர்களை நோக்கி, ''இவன் ஒற்றனல்ல'' என்று உளறினான்.

இதைக் கேட்டதும் மேட்டில் ஏறி வந்த நால்வரும் பாதி வழியில் நின்றுவிடவே பெரிய மறவன் மட்டும் முன்னால் வந்து, ''இவரை உனக்கு ஏற்கனவே தெரியுமா?'' என்று வினவினான்.

சிறிது தள்ளாடி நின்ற முறைப்பிள்ளை தன்னைத் திடப்படுத்திக் கொள்ள பப்பகுமாரன் தோளைப் பிடித்துக் கொண்டு, ''தெரியும்'' என்றான்.

''யார்?'' என்று எழுந்தது பெரிய மறவன் அதிகாரக் குரல்.

''காதலன், கள்ளக்காதலன்'' என்று தடுமாறிச் சொன்னான் முறைப்பிள்ளை.

''என்ன உளறுகிறாய்?'' என்று சீறினான் பெரிய மறவன்.

zeevaa



zeevaa

அப்பொழுது முறைப்பிள்ளைக்குக் குடி தலைக்கு ஏறிவிடவே, ''மாப்பிள்ளையை... உளகிறாய் என்று கேட்பது மரியாதை அல்ல'' என்று நிதானித்து நிதானித்துப் பேசினான்.

''மாப்பிள்ளையின் முகத்தைப் பார். இந்தப் பைத்தியத்தையும் பிடித்துக் கட்டுங்கள் மரத்தில்'' என்றான் பெரிய மறவன்.

''கட்டுங்கள் கட்டுங்கள்... யார் யாரைக் கட்டுவது? இவன்தான் அவளைக் கட்டினான், நான் பார்த்தேன்'' என்று உளறிய முறைப்பிள்ளை நான்கு அடிகள் முன்னால் வைத்து, ''மாமா! நானே பார்த்தேன் மாமா, இவன் செல்வியைக் கட்டிக்கொண்டான்..'' என்று கூறி, மாமாவின் மார்பில் சாய்ந்து கொள்ள, பெரிய மறவன் அவனைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, மற்ற மறவர்களை நோக்கி ''உம். ஏன் தாமதிக்கிறீர்கள்? பிடித்துக் கட்டுங்கள் அவனை'' என்று கூறி, பின்னால் நின்ற நான்கு மறவர்களை நோக்கித் திரும்பினான்.

அந்தச் சமயத்தில் வெகு வேகமாகச் செயல்பட்ட பப்பகுமாரன் தனது நீண்ட வாளை மின்னல் வேகத்தில் உருவிப் பெரியமறவன் கழுத்தைத் தடவினான். ''அவர்களை வேல்களை கீழே போடச் சொல். இன்று இங்கு ஒரு கொலை நடந்தது போதும், மேலும் கொலை வேண்டாம்'' என்று கூறித் தனது வாளின் நுனியைச் சற்று பெரிய மறவன் கழுத்தில் அழுத்தினான்.

ஆனால் பெரிய மறவன் அதைப்பற்றிச் சிறதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ''மறக்குலத்தவர் சாவுக்குப் பயப்படுவதில்லை. உன் கத்தியை வேண்டுமானால் பாய்ச்சி விடு. அதனால் நீ தப்பிவிட முடியாது. இந்த நான்கு மறவர்களும் உன்னைக் கொல்லாமல் விட மாட்டார்கள்'' என்றான்.

அப்பொழுது மாமாவின் காலில் கிடந்த முறைப் பிள்ளை கண்விழித்து, ''மாமா! இவனைக் கொல்ல முடியாது. இவன்

zeevaa

பாப்பாவல்ல, குமாரன்'' என்று கூவினான். காலின் அடியிலிருந்து எழுந்திருக்காமலே.

''டேய்! வாயை மூடு'' என்று முறைப்பிள்ளையை எச்சரித்த பெரிய மறவன், ''இவனைப் பிடியுங்கள்'' என்று மற்ற மறவர்களுக்கு உத்தரவிட, மற்றவர்கள் வேல்களுடன் பப்பகுமாரனை வளைக்க முயன்றார்கள்.

பப்பகுமாரன் தனக்கு இருபுறத்திலும் நெருங்கி வந்த வேல் மறவர்களை ஒரு கணமே நோக்கினான். அடுத்து தனது வாளை இடது கைக்கு மாற்றிக்கொண்டு பெரிய மறவன் கழுத்தில் வலது கையின் முஷ்டியால் குத்தவே பெரிய மறவன் வெட்டுண்ட காட்டுமரம் போல் தரையில் விழுந்தான். அடுத்து குமாரன் இரு பக்கத்திலும் வேல்களைப் பாய்ச்ச முயன்றவர்கள் மீது பாய்ந்து ஒருவன் கையில் தனது இடது கையிலிருந்த வாளைப் பாய்ச்சி வலது கையால் அவன் ஈட்டியை இழுத்துக் கொண்டான். சற்று பின்னால் நகர்ந்து வாளை தாமரைச் செல்வியின் கையில் கொடுத்து விட்டு, வேலை மட்டும் கொண்டு மீதியிருந்த மூவரையும் சமாளிக்க முற்பட்டான். அவன் வேல் வீச்சில் ஒருவன் வேல் கையிலிருந்து பறந்தது. இன்னொருவன் வேல் அவன் வேலால் அடிபட்டு மண் தரையில் பதிந்தது. நான்காமவன் கழுத்தை அவன்வேல் தடவ,வேல் மறவரிடையே திக்பிரமை நிலவியது. கீழே கிடந்த வேல்களைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்ட குமாரன் கையிலிருந்த வேலைக் குடிசைக்கு அப்பால் எறிந்து விட்டுப் பின்னால் நகர்ந்து தாமரைச்செல்வியின் கையிலிருந்த வாளை மீண்டும் பெற்றுக் கொண்டான். அந்த வாளைக் கையில் பிடித்த வண்ணம் அதிகாரத் தோரணையில் பேச முற்பட்டு, ''உங்களுக்கு உயிரின் மீது ஆசை இருந்தால் நீங்கள் திரும்ப உங்கள் இல்லங்களுக்குச் செல்லலாம்'' என்று அறிவித்தான்.

zeevaa

''எங்கள் தலைவர்'' என்று ஒரு மறவன் முனகினான்.

''அவனுக்கு எந்த ஆபத்துமில்லை. நீங்கள் போகலாம்'' என்று வாலிபன் உத்தரவிட அந்த நான்கு மறவர்களும் ஒருவரையொருவர் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டார்கள். ''நாங்கள் இங்கு வரும்போது ஒருவன் சடலம் புரவி மீத பிணைக்கப்பட்டு ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அவனைக் கொன்றது யார்?'' என்று வினவினான் நால்வரில் ஒருவன்.

சற்று சிந்தித்த பப்பகுமாரன், ''உங்கள் தலைவரின் மகள் அம்பெய்து கொன்றாள். என்னிடம் வில்லுமில்லை, அம்புமில்லை'' என்று விளக்கினான்.

அவன் கூறியதில் உண்மையிருந்ததைக் கவனித்த மறவர்களில் இன்னொருவன் பெரிய மறவனை நோக்கி, ''தலைவரே நாங்கள் போகட்டுமா?'' என்று வினவினான்.

பப்பகுமாரனின் குத்து கழுத்தில் விழுந்ததால் நிலை குலைந்து தரையில் சாய்ந்துவிட்ட பெரிய மறவன் அப்பொழுதுதான் சற்றுத் தெளிவடைந்து எழுந்து உட்கார்ந்திருந்தான். அந்தக் குத்தின் வேகம் அவனுக்குத் தலைசுற்றல் உண்டாக்கி விடவே, வந்திருப்பவன் கை இரும்பை விடக் கடினமானதென்பதையும், குத்திய முறையிலும் ஒரு லாகவமிருந்ததையும் உணர்ந்ததால், பிரமை பிடித்து ஏதும் புரியாத நிலையிலும் இருந்ததால், மறவர்களைக் குழப்பத் துடனேயே நோக்கினான். பிறகு பக்கங்களில் சிதறிக்கிடந்த வேல்களை நோக்கினான். மறவனொருவன் கைக்காயத்திலிருந்து ஒழுகிக் கொண்டிருந்த குருதியையும் பார்த்தான். அதன் விளைவாக வெறுப்பு நிறைந்த குரலில், ''போய் வாருங்கள். நீங்கள் இருந்து தான் என்ன பயன்? நான்கு மறவர்கள் ஒருவனால் முறியடிக்கப்பட்டது புதிய சரித்திரம்'' என்று துன்பம் தோய்ந்த குரலில் கூறினான்.

zeevaa

அப்பொழுது மாப்பிள்ளை குறுக்கிட்டு, ''மாமா! தவறு'' என்று சொல்லிக்கொண்டு படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

''என்ன தவறு?'' என்று கேட்டான் பெரிய மறவன்.

''சரித்திரத்தை நீங்கள் சரியாகச் சொல்லவில்லை.''

''நீ தான் சொல்லேன், மகா புத்திசாலி.''

''மாமா!''

''என்னடா?''

''இவரால் முறியடிக்கப்பட்டது நான்கு பேரல்ல.''

''பின் என்ன?''

''உங்களையும் சேர்த்து ஐந்து பேர்'' என்று திருத்தியதும் உக்கிரமான கோபத்துக்கு இலக்கான பெரிய மறவன் அவனை உட்கார்ந்த நிலையிலிருந்து மீண்டும் கீழே தள்ளினான். ''திரும்பவும் எழுந்திருந்து உளறினாயோ உன்னைக் கொன்று விடுவேன்'' என்றும் சீற்றத்துடன் சொற்களை உதிர்த்தாலும் 'மாப்பிள்ளையின் சொற்களில் உண்மை இருக்கிறது' என்று முணுமுணுத்தான்.

அப்பொழுதும் நகராமல் நின்ற மறவர்கள் நால்வரையும் நோக்கி, ''சரி போய் வாருங்கள், நாளைக்குக் கடையில் சந்திப்போம்'' என்று கூற, நான்கு மறவர்களும் நகர்ந்தார்கள். அவர்கள் தங்கள் வேல்களைப் பொறுக்கிக் கொண்டு நடையைக் கட்டியதும் பெரிய மறவன், அப்பொழுது குடிசைவாயிலில் சிலையென நின்ற தனது மகளைக் கவனித்தான்.

முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் நின்றிருந்தாள் தாமரைச்செல்வி. அப்படி உணர்ச்சியைக் காட்டியபோது அந்த உணர்ச்சி வியப்பினால் விளைந்ததாக அமைந்திருந்தது. அதற்குக்

zeevaa

காரணத்தைப் பெரிய மறவன் உணர்ந்து கொண்டதால் சற்று தலையையும் குனிந்து தரையை நோக்கிய வண்ணம், ''இன்று கடையில் குடிக்கக் கள்ளில்லை செல்வி. அதனால் உன் அப்பன் சுரணையுடனிருக்கிறான்'' என்று கூறினான்.

அப்பொழுது மாப்பிள்ளை தனது சுபாவத்தை மறுபடியும் காட்டினான். மாமனார் அடித்துக் கீழே சாய்த்த நிலையிலிருந்து சற்றுப் புரண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''கடையில் கள் இல்லையா?'' என்று வினவினான்.

பெரிய மறவன் முகத்தில் கோபம் தாண்டவமாடியது ''இருந்தால் உனக்கென்ன? இல்லாவிட்டால் உனக்கென்ன?'' என்று கோபம் குரலிலும் ஒலிக்கக் கேட்டான்.

மாப்பிள்ளை விடவில்லை. ''இருந்தால் குடிப்பேன். இல்லாவிட்டால் நீங்கள் இன்றிருப்பதுபோல் இருப்பேன்'' என்று சொன்னான்.

பெரிய மறவன் மாப்பிள்ளையை உக்கிரமாகப் பார்த்தான். ''இரவில் உன்னை யார் இங்கு வரச்சொன்னது?'' என்று வினவினான் கடும் சொற்களால்.

''மாலையே புறப்பட்டேன். நடுவில் எங்கள் கடையில் சிறிது நேரமாகிவிட்டது. ஆமாம் மாமா! எங்கள் கடையில் கள்ளிருந்ததே, அங்கு வந்தால் உங்களைக் கள்ளில் மூழ்க வைத்திருப்பேனே?'' என்று சொன்னான்.

அதைப் பெரிய மறவன் ரசித்ததாகத் தெரியவில்லை. ''கள்ளுக்குப் பிச்சை கேட்கும் நிலைக்கு நான் வரவில்லை'' என்றான்.

''பிச்சை கேட்கச் சொல்லவில்லையே! மாமாவுக்கு மரியாதையுடன் கலயத்தை இரு கைகளாலும் தூக்கிக் கொடுக்க

zeevaa

மாட்டேனா?'' என்ற மாப்பிள்ளை, ''மாமா!'' என்று ரகசியமாக அழைத்தான்.

''என்ன?'' என்று விசாரித்தார் மாமா.

''கல்யாணத்தை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?'' என்று வினவினான் மாப்பிள்ளை.

''எந்தக் கல்யாணம்?'' என்று கேட்டார் மாமா.

''எனக்கும் தாமரைச்செல்விக்கும்.''

''அதற்கு என்ன அவசரம் இப்பொழுது?''

''நீங்கள் இல்லாதபோது அவள் இங்கு துணையில்லாமல் இருக்கிறாள்.''

''இருந்தாலென்ன?''

''பப்பகுமாரன் மாதிரி, அதுதான் இவர் மாதிரி, யாராவது வந்தால்...!''

''வந்தால்?''

''அவளைக் கட்டிக் கொள்கிறார்கள்.''

பெரிய மறவன் குரல் பயங்கரமாக ஒலித்தது. ''என் மகளைப் பற்றி என்ன சொன்னாய்?'' என்று கேட்டான்.

மாப்பிள்ளை பதில் சொல்லவில்லை. தாமரைச்செல்வியை நோக்கி, ''செல்வி! எனக்கு இன்னும் ஒரு மொந்தை கொண்டு வா'' என்று கூறி, அவள் கொண்டு வந்த மொந்தைக் கள்ளைச் சிறிது பருகினான். அதனால் வேகம் கொண்டு ''மாமா! ரொம்பவும் மிரட்ட வேண்டாம் என்னை'' என்றான்.

''மிரட்டினால் என்னடா செய்வாய்?'' என்று பெரிய மறவன் எழுந்து நின்று கொண்டான்.

zeevaa

மாப்பிள்ளையும் தள்ளாடித் தள்ளாடி எழுந்து நின்றான். பெரிய மறவனை அணுகி அவன் தோளில் சாய்ந்து, ''உன் குட்டை உடைத்து விடுவேன்'' என்று காதோடு காதாகச் சொன்னான். அந்த ரகசியமும் குடியின் விளைவாக ரகசியமாக இல்லாததால் அது தெளிவாக பப்பகுமாரன் காதிலும் விழுந்தது.

மாப்பிள்ளை உரைத்த ரகசியம் எதுவாயிருக்கும்? என்று பப்பகுமாரன் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே பெரிய மறவன் பெரிதும் அடங்கி விட்டான். மகாவீரனான அவன் உடலும் சிறிது ஆட்டம் கண்டது. ஆகவே முறைப்பிள்ளையை சாந்தப்படுத்த முயன்று, ''மாப்பிள்ளை! வீணாகக் கலங்காதீர். வெகு சீக்கிரம் கல்யாணத்தை நடத்தி விடுவோம்'' என்றான்.

அதற்குள் குடிவெறி அதிகமாகி விடவே, ''அப்படி வா வழிக்கு. உன் மகளிடமும் சொல்லி வை, குமாரன் வந்தால் அவனை விரட்டி விடும்படி, அடுத்து நீ மாட்டு வேட்டைக்குப் போகும்போது நானும் வருகிறேன்'' என்று கூறிவிட்டு தாமரைச்செல்வியை நோக்கித் தலையசைத்து விட்டு குடிசை மேட்டுச் சரிவில் இறங்கி நடந்து சென்றான். சில விநாடிகளில் மாட்டுக் கூட்டத்துக்குள் மறைந்தும் விட்டான்.

அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த பெரிய மறவ்ன் முகத்தில் கவலை நிறைந்து கிடந்தது. மாப்பிள்ளை சென்றதும் திரும்பி பப்பகுமாரனை நோக்கிய பெரிய மறவன், ''ஐயா! உங்களைப் பார்த்தால் பெரிய வீரராகத் தெரிகிறது. நீங்கள் யார்?'' என்று வினவினான்.

பப்பகுமாரன் இதழ்களில் முறுவல் விரிந்தது. ''நீங்கள்தான் சொன்னீர்களே மன்னர் ஒற்றனென்று? தெரிந்ததைக் கேட்பானேன்?'' என்று வினவினான் அந்த வாலிபன் முறுவலின் ஊடே.

zeevaa

''நான் செய்த தவறு அது. மன்னர் ஒரு ஒற்றனை அனுப்பியிருப்பதாகவும், அவர் இன்றோ நாளையோ காஞ்சி வரலாமென்றும் காஞ்சியில் பேசிக் கொண்டார்கள். உங்களைப் பார்த்ததும், உங்கள் தோரணையைக் கண்டதும் நீங்கள் அந்த ஒற்றராயிருக்கலாமென்று நினைத்தேன். அது தவறென்பது இப்பொழுது புரிந்து விட்டது'' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் பேசிய பெரிய மறவன் சட்டென்று ஒரு கேள்வியையும் வீசினான்; ''அந்தப் பைத்தியம் சொன்னதை நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று.

''என்ன சொன்னார் மாப்பிள்ளை?'' என்று வினவினான் பப்பகுமாரன்.

''ஏதோ மாட்டு வேட்டை என்று உளறினானே?'' என்றான் பெரிய மறவன்.

''அப்படியா? அப்படியொன்றும் என் காதில் விழவில்லையே'' என்று ஒரே அடியாக சாதித்தான் பப்பகுமாரன்.

பெரிய மறவன் முகத்தில் சிறிது தெளிவு ஏற்பட்டதை வாலிபன் கவனிக்கத் தவறவில்லை. அடுத்து நடந்த உபசாரங்களிலும் அவன் ஏமாறவில்லை. அன்றிரவில் நடந்த இன்னொரு நிகழ்ச்சி அவன் ஊகத்தை உறுதிப்படுத்தியது.

சிறிது உணவு அருந்திப் புல்தரையிலேயே படுத்திருந்த பப்பகுமாரன் நள்ளிரவில் குடிசைக்குள் பெரிய மறவன் மகளுக்குச் செய்த உபதேசம் காதில் விழுந்தது. ''மகளே! இவனை ஒழித்தால்தான் நாம் பிழைத்தோம்'' என்று தாமரைச்செல்வியிடம் பெரிய மறவன் ரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

zeevaa

# 6. கன்றல்ல, காளை!

நள்ளிரவில் நங்கை தாமரைச்செல்வியிடம் தன்னை ஒழித்துவிடும் அவசியத்தைப் பற்றி பெரியமறவன் ரகசியமாய்ச் சொன்னதைக் காதில் வாங்கிய பப்பகுமாரன் சிந்தையில் பல எண்ணங்கள் எழுந்து உலாவின. தாமரைச்செல்வியை மணக்கும் உரிமை பெற்ற முறைப்பிள்ளை கடைசியாக பெரிய மறவன் காதில் 'உன் குட்டை உடைத்து விடுவேன்' என்று ரகசியம் சொன்னதுமே பெரிய மறவன் போக்கு அடியோடு மாறிவிட்டதையும் மாப்பிள்ளையிடம் அவன் மிகவும் அடக்கத்தையும் பரிவையும் காட்டியதையும், மாட்டு வேட்டையைப் பற்றி மாப்பிள்ளை குறிப்பிட்டபோது பெரிய மறவன் திகிலுற்றதையும், பிறகு தன்னை சமாதானப்படுத்த முயன்றதையும் எண்ணிப்பார்த்த குமாரன், தான் வந்த காரியத்திற்கு வித்து இருக்கும் இடம் பெரிய மறவன் வசிக்கும் அந்தக் குடிசைதானென்று ஒரளவு முடிவுசெய்து கொண்டான்.

அப்படி அவன் சிந்தனையில் திளைத்திருந்த சமயத்தில் உள்ளேயிருந்து மேலும் பேச்சுக் குரல் கேட்கவே மறுபடியும் காதுகளைத் தீட்டிக் கொண்டான் குமாரன். குடிசைக்குள்ளேயிருந்த தாமரைச்செல்வி கேட்டாள்; ''இவரை எதற்காக ஒழிக்க வேண்டும்?'' என்று.

''இவன்தான் மன்னன் ஒற்றன். சந்தேகமில்லை'' என்றான் பெரிய மறவன் திட்டமாக.

''யாராயிருந்தால் நமக்கென்ன? மன்னன் ஒற்றர்களுக்குக் குற்றவாளிகளல்லவா அஞ்ச வேண்டும்?'' என்றாள் தாமரைச் செல்வி.

zeevaa





zeevaa

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை பெரிய மறவன். சிறிது சிந்தித்துவிட்டு, ''உனக்குத் தெரியாத பல விஷயங்கள் இருக்கின்றன மகளே'' என்று கூறினான்.

''நான் தெரிந்து கொள்ளாத அளவுக்கு அப்படி என்ன குற்றம் புரிந்து விட்டீர்கள்?'' என்று தாமரைச் செல்வி வினவினாள்.

''இவன் போகட்டும். காலையில் சொல்கிறேன்'' என்றான் பெரிய மறவன்.

''அவர்தான் உறங்கிக் கொண்டிருக்கிறாரே?'' என்றாள் தாமரைச் செல்வி.

''அது உண்மை உறக்கமா, பொய்த் துயிலா என்று சொல்ல முடியாது. ஒற்றன் செவிகள் எப்பொழுதும் பாம்புச் செவிகள்'' என்ற பெரிய மறவன் ''உறங்கு மகளே, காலையில் பேசிக் கொள்வோம்'' என்றும் சொன்னான்.

அடுத்து அவன் நன்றாகப்படுத்துப் பெருமூச்சு விட்டு அசையும் அரவம் கேட்டது. ஆனால் தாமரைச்செல்வி படுத்ததாகவோ படுக்க முயன்றதாகவோ தெரியவில்லையாகையால், அன்றைய இரவு நாடகம் முற்றுப் பெற வில்லையென்பதை உணர்ந்து கொண்ட குமாரன் நிலவு, வெளிச்சத்தில் மல்லாந்து படுத்துக் கிடந்தவன், தனது கையைப் பக்கத்திலிருந்த வாளின் பிடியின் மேலும் வைத்திருந்தான்.

உள்ளே மீண்டும் தாமரைச்செல்வியின் குரல் மெதுவாக ஒலித்தது; ''அப்பா! உறக்கம் வராவிட்டால் சிறிது மது அருந்திப் படுப்பதுதானே?'' என்று கேட்டாள்.

''கடையில் கள் இல்லையென்று நான் சொன்னது பொய் மகளே. கள் இருந்தும் குடிக்கவில்லை, இந்த ஒற்றனைப் பற்றிய செய்தி

zeevaa

எட்டியதால். அதனால்தான் வழக்கத்துக்க மாறாகக் குடிக்காமல் வந்தேன்'' என்றான் பெரிய மறவன்.

''அந்தக் கெடுபிடிதான் முடிந்து விட்டதே. இப்பொழுது அருந்துங்கள். அனாவசியமாகக் கண் விழிக்க வேண்டாம்'' என்று கூறிய தாமரைச்செல்வி குடிசையின் ஓரத்துக்குச் சென்று ஒரு மொந்தையை எடுத்து வந்து தந்தையிடம் நீட்டினாள். பெரிய மறவன் அதை வாங்கிக் களகளவென்ற சத்தத்துடன் குடித்துவிட்டு, ''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் நன்றாக உறங்கி விட்டதை உள்ளிருந்து கேட்ட 'உர் உர்' ரென்ற அவனது பயங்கரக் குறட்டை வெளிப்படுத்தியது. அப்பொழுதும் சிந்தை வசப்பட்ட குமாரன், தாமரைச் செல்வி எதற்காக வலுக்கட்டாயமாக அவனுக்குக் கள்ளைக் கொடுத்து உறங்க வைத்தாள்?' என்று வினவிக் கொண்டான்.

நேரம் ஓடியது. அந்தக் காட்டுப் பகுதியில் எங்கும் அமைதி நிலவியது. பறவைகள் கூட எந்தவித சத்தமும் செய்யாமல் கூண்டுகளில் உறங்க முற்பட்டன. குடிசை மேட்டுச் சரிவை அடுத்த சமதரையில் நின்ற மாடுகளில் சில படுத்து அசைபோடத் துவங்கின. சில மாடுகள் மேட்டிலும் ஏறிவந்து படுத்துக்கொண்டன. அந்தப் பசுக் கூட்டத்தில் பெரும்பாலும் பெரியமாடுகளே இருந்தாலும் இரண்டொரு சின்னஞ்சிறு காளைக் கன்றுகளும் இருந்தபடியால் அவை துள்ளி வந்து குமாரன் பக்கத்தில் நின்று குடிசைக்குள் பார்த்தன. அப்பொழுது குடிசைக்குள் இருந்து எட்டிப் பார்த்த தாமரைச்செல்வி அந்தக் கன்றுகள் இரண்டையும் கழுத்தில் அணைத்துப் பிடித்து, ''டேய் போங்கடா அப்பா தூங்குகிறார்'' என்று அவற்றைத் தட்டிக் கொடுக்கவே, அவை போக மறுத்து அவளுக்கு இருபக்கத்திலும் நின்று உராயத் தொடங்கின.

zeevaa

தாமரைச்செல்வி அந்த இரண்டு கன்றுகளையும் ஒட்டும் பாவனையில் அவற்றைக் கழுத்தைப் பிடித்து அணைத்து இழுத்த வண்ணம் மேட்டுச் சரிவில் இறங்க முயன்றவள் மெல்லத் தனது காலால் குமாரன் காலைத் தட்டிவிட்டுச் சென்றாள். அவள் சரிவில் நடந்து சென்றதைக் கவனித்த குமாரன் அவளது அழைப்பைப் புரிந்து கொண்டதால் எழுந்து மெதுவாக அவளைத் தொடர்ந்து சென்றான்.

சரிவில் இறங்கி மாட்டுக் கூட்டத்தை அணுகியதும் கன்றுகளை அந்தக் கூட்டத்துக்குள் ஓட்டிவிட்டுத் தானும் அந்தக் கூட்டத்தில் மறைந்தாள். அவளைத் தொடர்ந்த குமாரன் மாட்டுக் கூட்டத்தை ஆராய்ந்து, சற்று எட்ட தாமரைச்செல்வியின் தலை தெரிவதைக் கண்டு மாடுகளை விலக்கிக்கொண்டு அவள் இருந்த இடத்தை அணுகினான் அவனை தன்னைத் தொடரும்படி சைகை செய்த தாமரைச்செல்வி மாட்டுக் கூட்டத்துக்குள் மேலும் நடந்து அவற்றைக் கடந்து காட்டின் அடர்ந்த பகுதிக்கு வந்து ஒரு பெரிய மரத்தின் கீழ் நின்றாள்.

அவளை அணுகிய குமாரன், ''செல்வி! என்னை எதற்காக அழைத்தாய்?'' என்று வினவினான்.

''நீங்கள் உடனடியாக இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும். நீங்கள் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் உங்களை ஆபத்து எதிர் நோக்குகிறது'' என்று மெதுவாக சொன்னாள் தாமரைச்செல்வி.

''அப்படி என்ன ஆபத்து எனக்கு ஏற்பட்டுவிட முடியும்?'' என்று வினவினான் குமாரன்.

தாமரைச்செல்வியின் தாமரைக் கண்கள் குமாரனை நன்றாக ஏறெடுத்து நோக்கின. ''உயிர் போவது ஆபத்தல்லவா?'' என்று கேட்டாள்.

zeevaa

குமாரன் மெல்ல நகைத்து, ''தாமரைச்செல்வி! என் உயிரை அத்தனை சுலபமாக யாரும் வாங்கி விட முடியாது. உன் தந்தையும் நான்கு மறுவர்களும் இன்று முயன்றதை நீ பார்க்கவில்லையா?'' என்று கேட்டான்.

''அது நேர்ச்சண்டை. தூங்கும்போது உங்கள் மார்பில் குத்தினால் என்ன செய்வீர்கள்?'' என்று அவள் வினவினாள். அவள் குரலில் துன்பம் தோய்ந்துகிடந்தது.

''அப்படிச் செய்வது அதர்மமல்லவா?'' என்று கேட்டான் குமாரன்.

''குடிகாரனுக்கு தர்மம், அதர்மம் எல்லாம் ஒன்றுதான். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாத நிலைமையைக் குடி விளைவிக்கிறது'' என்ற தாமரைச்செல்வி ''பேச்சை வளர்த்துக் காலம் கடத்தாதீர்கள். போய் விடுங்கள். அதோ உங்கள் புரவி நிற்கிறது'' என்று தூர இருந்த அவன் புரவியையும் சுட்டிக்காட்டினாள்.

குமாரன் தாமரைச் செல்வியின் கண்களை சந்திக்க முயன்றும் முடியவில்லை, அவள் நிலத்தில் கண்களை நிலைக்க விட்டிருந்த காரணத்தால். ஆகவே, அவளை நன்றாக நெருங்கி அவள் தாமரைவதனத்தை நிமிர்த்திக் கண்களைச் சந்தித்தான். அந்த மரத்தடியில் இலைகளில் புகுந்து விழ முயன்ற இரண்டு சிறிய சந்திர கிரணங்கள் அவள் முகத்தில் விழுந்ததால் கண்களிரண்டும் ஒளி வீசின. அந்தக் கண்களின் அழகை நீண்ட நேரம் பருகிய குமாரன் திடீரென்று அவற்றில் தனது இதழ்களைப் பொருத்தி மீண்டான். அவள் தடையேதும் செய்யவில்லை. ஆனால் ஆர்வத்தையும் காட்டவில்லை. அவன் இடது கை அவள் இடையை வளைத்துத் தன்னை நோக்கி இழுத்தது. வலது கை தலையை லேசாகப் பின்னுக்குச் சாய்க்க அவன் உதடுகள் அவள் கழுத்தில் புதைந்தன.

zeevaa

அப்பொழுதும் அவள் மரக்கட்டையென உணர்ச்சியற்று நின்றாள். அடுத்து அவள் உடலை முழுதுமே அணைத்த குமாரன் அவள் இதழ்களை நாடினான். தனது இதழ்களுடன் இணைத்தான். இம்முறை அவள் மரக்கட்டை நிலையிலிருந்து மீண்டு விட்டாள். உணர்ச்சிகள் துள்ளியதால் தனது இதழ்களால் அவன் இதழ்களை எதிர்கொண்டாள்.

குமாரன் சொர்க்கத்திலிருந்தான். சதா சிந்திக்கும் திறன் வாய்ந்த அவன் மூளை சிந்திக்க மறுத்தது. இன்னொருவன் முறைப் பெண்ணைத் தான் தீண்டுவது முறையா? என்பதை அவன் மனம் எண்ணிப் பார்க்க மறுத்தது. ஒருநாள் பழக்கத்தில் தனக்கும் தாமரைச் செல்விக்கும் இத்தனை நெருக்கம் எப்படி ஏற்பட்டது? இது இயற்கையா? இல்லை அவள் நடிக்கிறாளா? சாதாரணமாக எழக்கூடிய கேள்வி எதையும் அவன் புத்தி எழுப்பவில்லை.

அவள் மலர் உடலின் மென்மை அவன் மனத்தை, மனத்தின் வலுவை, உரத்தைச் சிதறடித்தது. அவன் கைக்கு அகப்பட்ட வழவழத்த அவள் உடற்பகுதிகளை அவன் வலதுகை இறுகப் பிடித்தது. பிறகு திடீரென அவன் விலகி நின்றான்.

அதன் காரணத்தை அறியாத தாமரைச்செல்வி வினாதொடுத்த கண்களை அவன்மீது நிலைக்கவிட்டாள். அவள் வினா புரிந்தே இருந்தது குமாரனுக்கு. ''செல்வி! நான் எதைத் தேடி வந்தாலும் உன்னைப் போன்ற மாசில்லா மாணிக்கத்தைத் தேடி வரவில்லை. சண்டையைத் தேடி வந்தேன். அதில் ஒரு சாந்தியும் கலந்திருக்கும் என்பதை நான் உணரவில்லை. திருட்டைக் கண்டுபிடிக்க வந்தேன். நானே ஒரு பெண்ணின் உள்ளத்தைத் திருடுவேன் என்று நினைக்கவில்லை. நான் வருகிறேன். எதற்கும் கவலைப்படாதே. நான் எப்போதும் உனக்கு அருகிலிருப்பதாக எண்ணிக்கொள்'' என்று கூறிவிட்டுத் தனது புரவியை விளித்துத் தன்னை தொடரும்படி சைகை செய்து காஞ்சியை நோக்கி நடக்கலானான்.

zeevaa

புரவி ஒருமுறை தாமரைச்செல்வியையும் பார்த்து குமாரனையும் பார்த்தது. பிறகு குமாரனைப் பின்பற்றி நடந்தது. எசமானும் புரவியும் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற தாமரைச்செல்வி மீண்டும் குடிசையை நோக்கி நடந்தாள். அவள் மனத்தில் ஆயிரம் எண்ணங்கள் எழுந்து அவளை உலுக்கிக் கொண்டிருந்தன. அதன் விளைவாக மெதுவாக மேட்டில் ஏறிக் குடிசைக்கு வந்தவளை வாயிலில் முழந்தாள்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த பெரிய மறவன், ''வா மகளே'' என்று வரவேற்றான்.

தந்தையைக் கண்டதும் அதிர்ச்சியுற்ற தாமரைச்செல்வி, ''அப்பா'' என்று அழைத்தாள்.

''என்னம்மா?''

''நான்...!''

''உம்?''

''நமது கன்றுகளைப் பார்க்கப் போயிருந்தேன்.''

பெரிய மறவன் உதடுகளில் பயங்கரப் புன்முறுவல் விரிந்தது. ''அது க்ன்றல்லம்மா'' என்ற அவன் சொற்களிலும் பயங்கரம் இருந்தது.

''வேறு என்னப்பா?'' என்று கேட்டாள் தாமரைச் செல்வி அச்சம் துளிர்த்த குரலில்

''காளை'' என்ற பெரிய மறவன் குரல், பயங்கரமாய் ஒலித்தது.

zeevaa

# 7. விராட பர்வம்

மதுவைக் குடித்துவிட்டு மயங்கிக்கிடப்பதாகத் தான் நினைத்த தந்தை குடிசைவாயிலில் முழந்தாள்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்த தாமரைச் செல்வியின் மனம் திடுக்குற்றாலும் அதைச் சமாளித்துக் கொண்ட அவள், தான் கன்றுகளைப் பார்க்கப் போனதாகச் சொல்லியும் அந்தப் பொய்யில் விழுந்து விடாத பெரிய மறவன், அவள் பார்க்கப் போனது கன்றல்ல, காளை என்பதைச் சொன்னதும் அவள் அதிர்ச்சியும் அச்சமும் அதிகப்பட்டதால் குடிசைக்குளே செல்ல முயன்றாள். ஆனால், பெரியமறவன் அவளை உள்ளே செல்ல விடாமல் அவள் கையை இறுகப் பிடித்து நிறுத்தி "உள்ளே பிறகு போகலாம். உண்மையைச் சொல்" என்று மேலும் கேட்டான்.

அதைக்கேட்டு அவன் முகத்திலிருந்த சீற்றத்தையும் சொற்களில் ஒலித்த பயங்கரத்தையும் கண்ட தாமரைச்செல்வி, "எந்த உண்மையை என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள்? எதைச் சொல்லச் சொல்கிறீர்கள்?" என்று அலட்சியமாகவே கேட்டாள் தந்தையை நோக்கி. அவன் இறுகப் பிடித்திருந்த கையையும் உதறி விடுவிடுத்துக் கொண்டாள்.

பெரிய மறவன் கண்கள் அவள் அலட்சியத்தையும் துணிவையும் காணவே செய்ததால், தனது ஆத்திரத்தைச் சிறிது துறந்து, "நீ மறக்குல மகள். எதற்கும் அஞ்சாத இனம். அதனால்தான் துணிவுடன் பேசுகிறாய்" என்று சிலாகித்தான்: "சரி சொல். அவன் யார்? அவனை அழைத்துக்கொண்டு எதற்காக மாட்டுக் கூட்டத்தில் புகுந்தாய், மறைந்தாய்?" என்றும் கேட்டான்.

zeevaa

''அவர் யாரென்பது தெரியாது எனக்கு. இரவு ஆரம்பத்தில்தான் வந்தார். இரவு ஏறிவிட்டதால் இங்கு தங்கினார். அதற்குள் நீங்கள் வந்து நாடகம் துவங்கினீர்கள்'' என்றாள் தாமரைச்செல்வி. தந்தை துவங்கிய நாடகத்தின் விளைவை நினைத்து இகழ்ச்சிக் குறியையும் வதனத்தில் படரவிட்டாள்.

பெரியமறவன் நிலத்தை நோக்கியவண்ணம் ''தாமரைச்செல்வி! வந்தவனுக்கும் உனக்கும் இத்தனை சீக்கிரம் எப்படிப் பாசமும் பந்தமும் ஏற்பட்டது?'' என்று வினவினான் சந்தேகக் குரலில்.

தாமரைச்செல்வியின் வதனத்தில் விரவி நின்ற இகழ்ச்சி அதிகமாயிற்று. ''எந்த மறக்குல மகளுக்கும் அனாதரவான ஒரு மனிதனிடம் ஏற்படும்பாசபந்தந்தான் எனக்கும் ஏற்பட்டது. நமது வீரத்தால் வெல்ல முடியாத ஒரு வீரனை வஞ்சத்தால் அழிக்க நான் விரும்பவில்லை. உங்கள் மனத்தில் உதயமாகியிருக்கும் எந்தவித முறையற்ற பாசமோ பந்தமோ ஏற்படவில்லை எனக்கு. போதாக்குறைக்கு நீங்கள் எனக்காகத் தேர்ந்தெடுத்துள்ள மாப்பிள்ளையும் உடனிருந்திருக்கிறார்'' என்று மட்மடவெனச் சொற்களை உதிர்த்த தாமரைச்செல்வி, ''விடுங்கள் வழியை'' என்றாள் உள்ளே செல்ல.

''ஆனால் பெரிய மறவன் வழியை விடாமல் இடித்த புளியைப் போல் இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான். ''மகளே! அந்த மக்கு மாப்பிள்ளையை சாக்குக் காட்டி என்னை ஏமாற்றி விடலாமென்று நினைக்காதே. இந்த ஒற்றனை நீ தப்புவித்ததற்குக் காரணம் உன்னுடைய கருணையாக மட்டும் இருக்க முடியாது'' என்ற பெரிய மறவன், ''அப்படியிருந்தால் நான் கள் குடிக்கும் போதெல்லாம் தடுத்து வந்த நீ இன்று வலுக்கட்டாயமாகக் கள்ளைக் குடிக்கத் தூண்டியிருக்க மாட்டாய். ஆனால் அதிலும் உன் அப்பனை

zeevaa

நீ புரிந்து கொள்ளவில்லை. ஒரு மொந்தையில் உறங்கும் அப்பனல்ல உன் தந்தை. நீண்ட நாளாகக் குடிக்கிறேன். ஐந்து மொந்தை உள்ளே போனாலொழிய மயக்கமோ உறக்கமோ வராது'' என்று தனது குடி சாமர்த்தியத்தையும் சுட்டிக்காட்டினான். ''நான் உறங்கியதும், குறட்டை விட்டதும் உன்னைச் சோதிக்கத்தான். கச்சி பெரிய மறவனை அவன் மகள் கூட ஏமாற்ற முடியாது'' என்றும் சொன்னான்.

தாமரைச்செல்வியின் இதயத்தில் தந்தையின் பேச்சைக் கேட்டதால் முதலிலிருந்த அருவருப்பு அதிகமாகவே, ''அப்பா! குடியைத் தவிர வேறு எதிலாவது உங்கள் வீரதீர பராக்கிரமம் உண்டா?'' என்று கேட்டாள், வெறுப்பு துலங்கிய குரலில்.

பெரிய மறவன் அதைக்கேட்டு சீற்றம் கொண்டானில்லை. ''உண்மை மகளே! இதோ இந்த மாட்டுக் கூட்டம் உன் அப்பன் திறமையால் திரட்டப்பட்டது'' என்றான்.

''திரட்டப்பட்டதா? திருடப்பட்டதா?'' என்று கேட்டாள் தாமரைச் செல்வி.

பெரிய மறவன் முகத்தில் மீண்டும் சினம் தாண்டவமாடியது. ''மகளே! சொற்களை அளந்து பேசு. இல்லாவிட்டால் உன்னை வெட்டி இங்கேயே புதைத்து விடுவேன்'' என்றான் சுடு சொற்களால்.

''சினத்தால் பயனில்லை தந்தையே. மாடு பிடிப்பதைப் பற்றி மாப்பிள்ளை சொன்னதும் நீங்கள் பணிந்து விட்டதைப் பார்த்தேன். திடீர் திடீரென்று எங்கிருந்தோ மாடுகளை ஓட்டி வருகிறீர்கள். மன்னன் ஒற்றனை அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டதும் அச்சமடைகிறீர்கள். இதையெல்லாம் பார்த்தால் இந்த மாடுகள் நமக்குச் சொந்தமா என்று சந்தேகம் ஏற்படுகிறது'' என்றாள்

zeevaa

கடுமையான குரலில். ''என்னை வெட்டி விடுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீங்கள் கொடுத்த உயிரை நீங்கள் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள். அவ்வளவுதானே? தந்தையே! மறக்குல மகள் மரணத்துக்கு அஞ்சமாட்டாள் என்பது கூடவா உங்களுக்குப் புரியவில்லை?'' என்றும் வினவினாள்.

பெரிய மறவன் அதற்கு மேல் பேசவில்லை. அவள் உள்ளே சென்றதைத் தடுக்கவும் இல்லை. தாமரைச் செல்வி உள்ளே சென்று படுத்துக்கொண்டு கண்களை மூடினாள். அவள் கண்கள் முன்பு பப்பகுமாரனின் வீர உருவம் தோன்றியது. அவன் கைகள் தனது உடலைப் பிடித்த இடங்களை நினைத்து இன்ப வேதனைப் பட்டாள், தாமரைச்செல்வி. அதனால் சிறிது முனகவும் செய்தாள். 'இவள் திருமணத்தை சீக்கிரம் நடத்த வேண்டும், வயது வந்த பெண்' என்று அவள் முனகலுக்கு வியாக்கியானம் செய்தான் பெரியமறவன். குடிசைவாயிலில் உட்கார்ந்திருந்தவன் குடிசையின் பக்கவாட்டுத் தட்டியில் சாய்ந்தபடியே உறங்கலானான்.

தாமரைச்செல்விக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. 'அந்த வாலிபன் என்ன அழகாக எனது குழலை வாரினான். சிக்கெடுத்தான்!' என்று சிந்தித்துக்கொண்டே இருந்தாள். 'இங்கும் ஏதோ சிக்கலை எடுக்க வந்திருப்பதாகச் சொன்னானே அது எதுவாயிருக்கும்? பொருள் பொதிந்த வார்த்தைகளைப் பேசினானே. அவன் பெரிய ஆசாமியாகத்தான் இருக்கவேண்டும். தந்தை சொல்கிறபடி ஒற்றனாயிருந்தாலும் சரியான ஒற்றன்தான்' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டாள்.

**தா**மரைச்செல்வி குடிசையில் குமாரனைப் பற்றி நினைத்திருந்தது போலவே அவனும் அவளை நினைத்த வண்ணமே காஞ்சி நகரத்தை நோக்கிச்சென்றான். சிறிது நேரம்

zeevaa

புரவியில் ஏறாமல் நடந்தே சென்ற குமாரன், 'பெரிய மறவன், என்னைப்பற்றி சந்தேகப்படுகிறான், நான் வந்தபிறகு மகள்மீது சந்தேகப்பட்டு அவளைத் துன்புறுத்தினால் என்ன செய்வது?' என்று சிந்தித்தான். தாமரைச்செல்வியின் அழகிய வதனமும் கருவிழிகளும் உடலமைப்பும் எத்தனை அழகு என்று நினைத்துப் பெருமூச்செறிந்தான். மாடுகளுக்கிடையில் தன்னை அவள் அழைத்துவந்த தந்திரத்தையும் பிறகு மரத்தடியில் தான் அணைத்தபோது எதிர்ப்புக் காட்டாததையும் நினைத்து, 'நான் அவள் இடையைப் பிடித்தபோது எப்படி வளைந்தாள்! அந்த வளைவின் விளைவாக அவள் அங்க லாவண்யங்கள், எழுச்சிகள் எப்படி என் மீது உராய்ந்தன! அப்பா அதில்தான் என்ன இன்பம்!' என்று நினைத்து நினைத்து உணர்ச்சிவசப் பட்டான். இந்த எண்ணங்களுடன் காஞ்சியின் புறக்காட்டைத் தாண்டி நகரின் எல்லைக்குள் நுழைந்தபோது விடியற்காலம் நெருங்கிக் கொண்டிருந்ததால் நகரம் துரிதமாக விழிக்க முற்பட்டது. மக்கள் நடமாட்டம் எங்கும் ஏற்பட்டது.

குறுக்கே வந்த வேகவதி நதியின் வாய்க்காலொன்றைத் தாண்டிச் சென்ற குமாரன் எட்ட இருந்த திருவெஃகாவைக் கண்டான். வேகவதி ஆற்றில் அணைபோட தானே குறுக்கே படுத்துவிட்ட திருமாலின் அந்தக் கோட்டத்திலிருந்து மறையவர் மறைஓதும் கம்பீர ஒலி நாதவெள்ளமாகப் பாய்ந்தது, குமாரன் செவிகளில். கொற்றக்காவலர் புரவிகள் மீது ஆங்காங்கு விரைந்து கொண்டிருந்தார்கள். காஞ்சியின் பிரதான வாசலிலிருந்து கறவை மாடுகளும் கன்றுகளும் மேய்ச்சலுக்குச் சென்று கொண்டிருந்தன. அந்த மாடுகளின் அமைப்பிலிருந்து அவை தொண்டை மண்டல மாடுகள் அல்லவென்பதைப் புரிந்துகொண்ட குமாரன் தனது

zeevaa

புரவிமீது ஏறி அவற்றைத் தொடர முற்பட்டான். ஆனால் அவற்றை ஓட்டி வந்த வீரர் இருவர் அவனை நோக்கிக் கம்புகளும் கையுமாக வந்து- "என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டார்கள்.

"மாட்டைப் பார்க்கிறேன்" என்றான் குமாரன்.

"இதுவரை மாட்டைப் பார்த்ததில்லையா நீ?" என்று இருமறவர் களும் அவனை நெருங்கினார்கள்.

"மாடுகளைப் பார்த்திருக்கிறேன். இந்தச் சாதியைப் பார்த்ததில்லை" என்றான் குமாரன்.

"இதிலும் சாதி உண்டா?" என்று ஒருவன் கேட்டுக் கையிலிருந்த கம்பையும் சற்று உயர்த்தினான்.

"உண்டு; இவை தொண்டை மண்டல சாதியல்ல" என்றான் குமாரன்.

"வேறு எந்த மண்டல சாதி?" என்று கேட்டான் ஒருவன்.

"வடக்கத்தி சாதி" என்றான் குமாரன்.

அடுத்த மறவன் தனது கம்பை ஓங்கினான் தலைக்கு மேலே. அடுத்த விநாடி அவன் கம்பு திடீரெனப் பறிக்கப்பட்டது அவன் கைகளிலிருந்து. அந்த மறவனும் மேலே தூக்கப்பட்டான். வலிய இரு கைகளால் தூக்கி மாட்டுக் கூட்டத்தின் மீது வீசவும் பட்டான் வேகமாக.

திடீரென ஒரு மனிதன் தங்கள் மீது விழுந்ததால் மாடுகள் சிதறின. கூட்டத்திலிருந்து தாறுமாறாக ஓடி இன்னொரு மறவனை முட்டித் தள்ளிக் கால்களால் இடறின. இரு மறவர்களும் சமாளித்து எழுந்திருப்பதற்குள் குமாரன் தனது புரவி மீது தாவி மாடுகளை மறுபடியும் வளைத்தான் ஒரு கூட்டமாக.

zeevaa

அப்பொழுது தூரத்திலிருந்த ஒரு பெரிய வீட்டிலிருந்து நாகரிக உடை அணிந்த ஒரு மனிதன் குமாரனை உற்று கவனித்துக் கொண்டிருந்தான். மாடுகள் ஒரு கட்டுக்குள் வந்து மறவர்கள் அவற்றை ஓட்டிச்சென்றதும் அந்த மனிதன் கையைத் தட்டி குமாரனை அழைத்தான். குமாரனும் புரவியை நடத்திக் கொண்டு அந்த மனிதனை அணுகியதும், ''ஐயா! உங்களைப் பார்த்தால் இந்த ஊராகத் தெரியவில்லை?'' என்றான் அந்த மனிதன்.

''இல்லை.'' -குமாரன் ஒற்றைச் சொல்லில் பதில் சொன்னான்.

''எந்த ஊரோ?''

''வடக்கு தேசம்.''

''இங்கு எங்கு வந்தீர்?''

''வேலை பார்க்க.''

''என்ன வேலை?''

''எந்த வேலையாயிருந்தாலும் பாதகமில்லை''

அந்த மனிதன் சிறிது சிந்தித்தான். பிறகு அன்புடன் பேசத்துவங்கி, ''அப்பா! உன்னைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளையாகத் தெரிகிறதே'' என்றான்.

''பெரிய இடத்துப் பிள்ளைகள் வேலை பார்க்கக் கூடாதா?'' என்று குமாரன் கேட்டான்.

''பார்க்கலாம். ஆனால் உனக்குத் தகுந்த வேலை கொடுக்க வேண்டுமல்லவா? உன்னைப் பார்த்தால் மாட்டை ஓட்டுபவனாகத் தெரியவில்லை. வீரனாகத் தெரிகிறது. வீரனுக்குரிய வேலை பார்க்கிறாயா?'' என்று கேட்டான் அந்த மனிதன்.

zeevaa

''எதுவும் இடத்தையும் ஊதியத்தையும் பொறுத்தது'' என்றான் குமாரன்.

''இடம் இதுதான். ஊதியத்தைப் பற்றிக் கவலைப் படாதே. ஆனால் நான் அளிக்கும் பணி அபாயமானது'' என்றான் அந்த மனிதன்.

ஒரு விநாடிதான் சிந்தித்தான் குமாரன். ''அபாயத்தைப் பற்றிக் கவலை இல்லை'' என்று சொன்னதும் அந்த மனிதன் பப்பகுமாரனை உள்ளே அழைத்துச் சென்றான்.

வீடு விசாலமாயிருந்த்து. உள்ளே சென்றதும் அந்த மனிதன் வேகமாகத் திரும்பினான் குமாரனை நோக்கி, ''வீரனே! நான் கொடுக்கப் போவது அரசாங்க அலுவல் வேலை. எந்த விநாடியிலும் உன் உயிர் போகலாம். சம்மதிக்கிறாயா?'' என்று கேட்டான்.

''சம்மதிக்கிறேன்'' என்றான் குமாரன்.

அந்த மனிதன் சற்று நிதானித்தான். ''காஞ்சியின் மீது எந்த நிமிடத்திலும் படையெடுப்பு ஏற்படலாம். அதைத் தடுக்காவிட்டால் காஞ்சி அழியும்'' என்றான் அந்த மனிதன்.

''அதை நான் எப்படித் தடுக்க முடியும்?'' என்று வினவினான் குமாரன்.

''மாட்டுத் திருட்டை நிறுத்தினால் தடுத்துவிடலாம். அதைத் தடுப்பது உன் முதல் வேலை'' என்று கூறினான் அந்த மனிதன்.

''ஒரு கூட்டத்தைத் தடுத்தால் மாட்டுத் திருட்டு நிற்கும். மாட்டுத் திருட்டு நின்றால் காஞ்சி பிழைக்கும். அந்த விவரங்களை நீ உணவருந்திய பிறகு சொல்கிறேன். முதலில் நீராடிவிட்டு வா.''

zeevaa

இதைச் சொன்ன அந்த மனிதன் வீட்டுக்குப் பின்னாலிருந்த குளத்தைக் காட்டினான். குமாரன் நீராடி உணவருந்திய பிறகு காஞ்சியின் நிலையையும், காரணத்தையும் சொன்னான் அந்த மனிதன். நிலைமை மிகப் பயங்கரமாயிருந்தது.

''பஞ்சபாண்டவர் காலம் முதல் இதே கதைதான்'' என்றான் அந்த மனிதன் முடிவில்.

''அதற்கும் காஞ்சி நிலைக்கும் என்ன சம்பந்தம்?'' என்று குமாரன் கேட்டான்.

''விராட பர்வத்தைப் படித்துப் பார்'' என்றான் அந்த மனிதன்.



zeevaa

## 8. மது மண்டபம்

'வீராட பர்வத்தைப் படித்துப் பார்' என்று அந்த மனிதன் சொன்னதும் அதன் அடிப்படையைப் புரிந்து கொண்ட பப்பகுமாரன், உண்மையில் காஞ்சியின் ஆபத்து அதிகந்தா னென்பதை உணர்ந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமலும், அந்த மனிதன் வாய் மூலமாகவே உள்ள நிலையை அறியவும் முடிவு செய்து ''விராடபர்வம் படித்திருக்கிறேன். மகாபாரத்தைப் படிக்காதவன் பாரதத்தில் யார் இருக்க முடியும்?'' என்று கேட்டான்.

காஞ்சியின் பெரிய மனிதர், ''நல்லது. அதே நிலைதான் இன்று காஞ்சிக்கும். அந்த மாடு பிடிச் சண்டையைப் போலவே இங்கும் நிகழலாம்'' என்று சொன்னார்.

''அங்கு கௌரவர்கள் பாண்டவர்களின் அஞ்ஞாத வாசத்தை, அதற்காகப் பாண்டவர்கள் போட்ட வேஷத்தைக் கலைக்க விராடன் மாடுகளைக் கைப்பற்றினார்கள். அதனால் ஏற்பட்டது இரண்டு அரசுகளின் மோதல். இங்கு அப்படி என்ன இருக்கிறது? எந்த இரண்டு அரசுகள் மோத இருக்கின்றன? இங்கு மறைவில் பதுங்கி இருப்பவர்கள் யார்?'' என்று வினாக்களைத் தொடுத்தான் குமாரன்.

அந்த மாளிகைக் கூடத்தின் அலங்கார ஆசனத்தில் உட்கார்ந்திருந்த அந்த மனிதர் பப்பகுமாரனை உற்று நோக்கினாரே தவிர அவன் கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை. பதில் சொன்னபோதும் சில விஷயங்களைத் தெளிவுபடுத்தவே முயன்றார். ''வீரனே! நீ கேட்ட கேள்விகள் உன் கூர்மையான

zeevaa



zeevaa

புத்தியைக் காட்டுக்கின்றன. நீ யார்? காஞ்சிக்கு ஏன் வந்தாய்? எங்கிருந்து வந்தாய் என்ற விவரங்களைச் சொல்'' என்று கேட்டார்.

சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னான் பப்பகுமாரன். ''ஐயா, நான் ஆந்திர நாட்டிலிருந்து வருகிறேன். இங்கு ஏதோ திருட்டுகளும் கலவரங்களும் நடப்பதாகக் கேள்விப்பட்டதால் என் வாளுக்கு இங்கு வேலை கிடைக்கும் என்று வந்தேன்?'' என்று கூறியவன், ''எனக்கும் ஒரு சந்தேகம் இருக்கிறது'' என்றான்.

''என்ன சந்தேகம்? எதுவாயிருந்தாலும் தைரியமாகக் கேள்'' என்றார் அந்த மனிதர்.

''தாங்கள் யார்? முன்பின் தெரியாத என்னை எப்படி வேலைக்கு அமர்த்திக்கொள்ள முயன்றீர்கள்?'' என்று வினவினான் குமாரன்.

இதைக் கேட்ட அந்தப் பெரிய மனிதன் புன்முறுவல் கொண்டார். ''வீரனே! இந்தக் காஞ்சி மாநகரின் பெரிய தனக்காரர் நான். இந்த மாநகரின் சமூகப் பூசல்களைத் தீர்க்கும் அதிகாரம் பெற்றவன். என் பெயர் நிருபவர்மர்'' என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்தப் பெரிய மனிதர், ''சற்று முன்பு நீ மறவர்களை அநாயசமாகச் சமாளித்ததைப் பார்த்தேன். மாடுகளை வளைத்துப் பழையபடி கட்டுக்குள் கொண்டு வந்ததையும் பார்த்தேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். உன்னைப் பார்த்ததும், உன் செயலைக் கண்டதும் காஞ்சிக்கு உன் பணி தேவை என்று தீர்மானித்தேன். அதனால் உன்னை அமர்த்திக் கொள்ள முடிவு செய்தேன். தவிர எந்த மனிதனையும் பார்த்த மாத்திரத்தில் என்னால் எடைபோட முடியும்'' என்று கூறினார்.

பப்பகுமாரன் சிறிது சிந்தனையில் இறங்கினான். 'நிருபவர்மர்! எங்கோ கேட்ட பெயராகத் தெரிகிறது' என்று உள்ளூர சொல்லிக்

zeevaa

கொண்ட குமாரன், ''நிருபவர்மர் என்று பெயர் இருப்பதால் தாங்கள் பல்லவ ராஜ குலமாக இருக்கவேண்டும்'' என்று வெளிப்படையாகப் பேசினான்.

''ஆம் வீரனே! நான் பல்லவர் குலந்தான். ஆனால் ஏதோ தூரத்து உறவு. அதை உறவு கொண்டாடுவதில் பயன் ஏதுமில்லை. பல்லவன் என்று சொன்னதும் ஓடும் எதிரிகள் யாரும் இந்தப் பகுதியில் கிடையாது'' என்ற பெரிய தனக்காரர், ''உன் பெயரென்ன?'' என்று விசாரித்தார்.

''குமாரன்'' என்றான் பப்பகுமாரன்.

''வெறும் குமாரனா?'' என்று கேட்டார் நிருபவர்மர்.

''ஆம்.''

''எப்படியிருந்தாலென்ன? நீ வீரன். காஞ்சிக்கு உதவ முடியும். இன்றே நீ வேலையை ஒப்புக்கொள்ளலாம். நான் ஒரு ஓலை கொடுக்கிறேன். காஞ்சி அரண்மனையில் அதைக் கொண்டுபோய்க் கொடு. உன்னைக் காவற்படையில் சேர்த்துக் கொள்வார்கள்.''

இதைக் கேட்டதும் குமாரன் மீண்டும் சிந்தனையில் இறங்கினான். ''நிருபவர்மரே! முதலில் இங்கு, வேலை கொடுப்பதாகச் சொன்னீர்கள். இப்பொழுது அரசாங்க வேலைக்கு ஓலை கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். இரண்டுக்கும் வித்தியாசம் அதிகமில்லையா?'' என்று கேட்டான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''இரண்டு வேலைகளுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் அந்த வேலையில் உனக்கு உதவி இருக்கும். சில வீரர்களுக்குத் தலைவனாயிருக்கலாம்'' என்று வேலை வித்தியாசத்தைச் சுட்டிக் காட்டினார்.

zeevaa

குமாரன் பதில் தயக்கமின்றி வந்தது. ''எனக்கு எந்த உதவியும் தேவையில்லை'' என்றான் அவன். ''தவிர அரசாங்க வேலைக்கும் எனக்கும் வெகு தூரம்!'' என்றும் கூறினான்.

''வாலிபனே! உன் வயது உன்னை இப்படிப் பேசச் செய்கிறது. தனி வீரனாக இந்தக் காஞ்சியில் யாரும் இப்பொழுது இயங்க முடியாது. இங்கு சட்ட திட்டங்கள் எதுவும் கிடையாது. இந்த ஊரில் தடியெடுத்தவன் தண்டல்காரன். இங்குள்ள அரசின் உதவி உனக்குப் பயனளிக்கும். தனிப்பட இயங்கினால் நீ இரண்டுநாள் கூடப் பிழைத்திருக்க முடியாது'' என்ற நிருபவர்மர் காஞ்சியின் நிலையைத் தெளிவாக எடுத்து விவரிக்க முற்பட்டார்.

''இப்பொழுது காஞ்சியின் உண்மையான மன்னர், பப்பதேவர். அவர் பல்லவபுரியில் (பல்லாரியில்) இருக்கிறார். அங்கிருந்து இந்தப் பகுதியை, காஞ்சி மண்டலத்தை ஆள அவரால் முடியவில்லை. இங்குள்ள அவர் படைத்தலைவன் அடிக்கும் கொள்ளையை யாரும் தடுக்க முடியவில்லை. மறவர்கள் புறப் பகுதியிலுள்ள கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் பசுக்களைத் திருடி வருகிறார்கள். அவர்களைத் தடுக்கவில்லை அந்தப் படைத் தலைவன். அவர்கள் திருட்டில் தானும் ஒரு பகுதியைப் பெறுகிறான்'' என்று சொன்ன நிருபவர்மர் சிறிது நிதானித்துவிட்டு, ''இவர்கள் யாரிடமிருந்து பசுக்களைத் திருடுகிறார்களோ அவர்களும் கள்வர்கள். ஆனால் பெரும் கூட்டாமாகக் கிட்டத்தட்ட ஒரு சேனையைப் போல்செயல் படுகிறார்கள். அந்தக் கூட்டத்தார் அடிக்கடி காஞ்சியைத் தாக்குகிறார்கள் அவர்கள் எப்பொழுது வருகிறார்கள், எப்பொழுது போகிறார்கள், எந்த எல்லையைத் தாக்குகிறார்கள் என்பதும் புலப்படவில்லை. அதனால் காஞ்சியில் அமைதி கிடையாது. சதா பயத்தில் வாழ்கிறது இந்த மாநகர்'' என்றும் விளக்கினார்.

zeevaa

குமாரன் முகத்தில் லேசாகச் சினம் துளிர்த்தது. ''காஞ்சியின் காவலனே கொள்ளையில் ஈடுபட்டால் வேலியே பயிரை மேய்வது போலல்லவா இருக்கும்?'' என்று வினவினான் சினத்துடனேயே.

''பப்ப தேவர் இங்கு போட்டது வேலி அல்ல. திருடனைக் காவலனாக அனுப்பியிருக்கிறார்'' என்றார் நிருபவர்மர்.

''காஞ்சிக் காவலனை எங்கு பார்க்கலாம்?'' என்று குமாரன் கேட்டான்.

''காஞ்சியின் அரண்மனையில் அல்லது இந்த நகரின் தென்கோடியிலிருக்கும் மதுமண்டபத்தில்'' என்றார் நிருபவர்மர்.

''மது மண்டபம் என்றால் கள்ளுக் கடையைச் சொல்கிறீர்களா?'' -குமாரன் வினாவில் வியப்பு இருந்தது.

''கள் அங்கு விற்கப்பட்டாலும் அது பழைய காலத்து மண்டபம். அங்கு கொண்டு வரும் பசுக்களையும் உழவு மாடுகளையும் பெருமளவில் வளைத்திருக்கிறார்கள். பார்க்க மிக ரம்மிய மாயிருக்கும். அந்த இடத்துக்கு ஒவ்வொரு காலையிலும் காஞ்சிக் காவலன் வருகிறான், கொள்ளையில் பங்கு கொள்ள. மதுமண்டபம் மிகப் பெரியது. அழகானது. அதன் சொந்தக்காரர்கள் மறவர்கள். யாரும் அங்கு தலை நீட்டி விசாரணை செய்து மீள முடியாது. இதுவரையிலும் அந்தக் கொள்ளையை விசாரிக்க முயன்ற பெரிய வீரர்கள் மூவர், வெட்டி மயானத்தில் போடப்பட்டார்கள். அவர்கள் சடலங்கள் கழுகுக்கு இரையாயின'' என்று நடந்ததை விளக்கினார்.

அப்பொழுது குமாரனுக்கு ஒரு சந்தேகம் வரவே, ''காஞ்சியின் தலைவன் உங்களை மட்டும் எப்படி இவ்வளவு சொத்தை வைத்துக் கொண்டு வாழவிடுகிறான்?'' என்று வினவினான்.

zeevaa

''நான் பல்லவ மன்னனுக்கு உறவு என்பது ஒரு காரணம். என்னிடம் விற்கப்படும் திருட்டு மாடுகளுக்கு நான் உடனடியாகப் பணம் கொடுத்துவிடுவது இரண்டாவது காரணம். என்னிடமும் திறமையான வாள்வீரர்கள் இருக்கின்றார்கள் என்பது மூன்றாவது காரணம். நான் இந்தக் காஞ்சி மண்டலத்தன் நீதிபதியாக, அவர்கள் சொல்கிறபடி நீதி வழங்குவது முக்கியமான நான்காவது காரணம்'' என்று விளக்கிய நிருபவர்மர், ''எனது நீதி நிர்வாகம் முடிவுகள் மன்னருக்கு அடிக்கடி அனுப்பப்படுவதால் மன்னர் இங்கு தலையிடாதிருக்கிறார். பப்பதேவர் நீதி நிர்வாகத்தில் மிகவும் அக்கறையுள்ளவர். இங்கு நடக்கும் விஷயம் ஏதாவது அவர் காதுக்கு எட்டினால் அங்கிருந்து படைவரும் என்ற அச்சம் இங்குள்ள தலைவனுக்கு இருக்கிறது. ஆகவே, எல்லாம் நீதிப்படி நடப்பதாகக் காட்ட எனது தீர்ப்புகள் பல்லவபுரிக்கு எழுதி அனுப்பப் படுகின்றன'' என்று நிலைமையை மிகவும் தெளிவுபடுத்தினார் நிருபவர்மர். அத்துடன் சொன்னார், ''உனக்கு அரசாங்க வேலை வேண்டாமென்றால் எனது வீரர்களுக்குத் தலைவனாயிரு. இங்கு பெரும்படை ஏது மில்லை'' என்று.

பப்பகுமாரன் முறுவல் கொண்டான்: ''நிருபவர்மரே என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் ஒருவனே ஒரு படைக்குச் சமானம். இன்று முதல் உங்கள் பண்ணையைக் காக்கும் பொறுப்பு என்னுடையது. எதற்கும் ஊரைச் சுற்றிப் பார்த்து வருகிறேன்'' என்று கூறினான்.

''எங்கு போனாலும் மது மண்டபத்துக்குப் போகாதே'' என்று எச்சரித்தார், நிருபவர்மர்.

ஆனால் நிருபவர்மர் பேச்சை குமாரன் கேட்கவில்லை. காஞ்சியைச் சுற்றிப் பார்க்கப் புரவியில் கிளம்பியவன் அதன்

zeevaa

தேரோடும் வீதிகளையும், கடைவீதியையும், பொற்கொல்லர் வீதியையும் பார்த்தான். கடைசியாக ராஜவீதியில் புகுந்து அரண்மனையைப் பார்த்தான், அன்று மாலை நிருபவர்மர் எச்சரிக்கையைப் புறக்கணித்து மண்டபத்துக்கும் சென்றான். மதுமண்டபம் அரண்மனையை விடப் பெரிதாகக் காட்சியளித்தது. ஆங்காங்கு பசுக் கூட்டங்கள் திரிந்து கொண்டிருந்தன. கள்ளைக் குடித்த மறவர்கள் பெரிதாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள்.

அப்பொழுது விளக்கு வைக்கும் நேரம். ஆங்காங்கு விளக்குகள் ஏற்றப்பட்டதால் குடிகாரரும் பசுக்களுமாகச் சேர்ந்து விசித்திரமான சூழ்நிலையை சிருஷ்டித்திருந்தது மாலைநேரம். அந்த சமயத்தில் பெரிதாக மண்டபத்துள் யாரோ அலறும் ஒலி கேட்டது. அடுத்த இரண்டு நிமிடங்களில் ஒரு பெண் தலைவிரிகோலமாக வெளியே ஓடி வந்தாள். விரைந்து வந்து அவள் தலைமயிரைப் பிடித்து இழுத்தான் ஒரு வீரன். அப்படி இழுத்து அவன் அவளைத் திருப்பிய போது மதுமண்டபத்தின் வாயில் விளக்கொளி அவள் முகத்தில் விழவே பேரதிர்ச்சியடைந்தான் குமாரன். அவள் தாமரைச்செல்வி. அவள் சேலை பல இடங்களில் கிழிக்கப்பட்டிருந்தது. முகத்தில் நகக்கீறல் ஒன்றும் தெரிந்தது.

zeevaa

# 9. தாமரை மது

அழகுக்கும் ஆபத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. அழகான மதுமண்டபம் அந்தவிதிக்கு அத்தாட்சியாக விளங்கியது. அந்த மண்டபத்தில்தான் விபரீத சண்டைகளும் கொலைகளும் நடந்திருக்கின்றன என்பது காஞ்சியில் மட்டுமின்றி வெளி ஊர்களிலும் மிகப் பிரசித்தம். அந்த இடத்தில் கா.ஞ்சியின் தலைவனைப் பார்க்கலாமென்று நிருபவர்மர் சொன்னதிலிருந்து அவனே இந்தப் பூசல்களுக்கும் கொலைகளுக்கும் காரணமாயிருக் கலாமென்று பப்பகுமாரன் தீர்மானித்ததால் நிருபவர்மரின் எச்சரிக்கையையும் மீறி அந்த மது மண்டபத்துக்கு வந்தான். அதன் சூழ்நிலையிலும் அழகிலும் அவன் மனதைப் பறிகொடுத்திருந்த சமயத்தில்தான் தாமரைச்செல்வி அலறிக்கொண்டு மண்டபத்தி லிருந்து தலைவிரிகோலமாக வெளியே ஓடிவந்தாள். அப்படி வந்தவள் சேலை பல இடங்களில் கிழிந்திருந்ததையும் அவள் முகத்திலும் நகக் கீறல் ஒன்று தெரிந்ததையும் கண்ட குமாரன், அவள் குழலைப் பிடித்து வீரனொருவன் இழுக்க முற்பட்டதுமே வேகமாகச் செயலில் இறங்கினான். தாமரைச்செல்வியின் குழலைப் பற்றி இழுத்தவன் மீது தனது புரவியைப் பாயவிட்ட பப்பகுமாரன், புரவி அவனை ஒரே தாண்டில் அடைந்ததும் புரவியிலிருந்தபடியே அவனைக் காலால் பலமாக உதைத்தான். அந்த உதையால் கீழே விழுந்த அந்த வீரன் மீது புரவிலியிருந்து குதித்தான் குமாரன் பின் அவனைத் தூக்கி நிறுத்தித் தனது முஷ்டியால் அவன் முகத்திலும் மார்பிலும் வேகமாகக் குத்தினான். முதல் குத்து அந்த வீரனின் மூக்கில் விழவே, அவன் உள்ளிமூக்கு உடைந்து மூக்கின் வழியாக

zeevaa



zeevaa

ரத்தம் மளமள வென்று வழியத் தொடங்கியதால், மார்பிலும் வயிற்றிலும் பாய்ந்த குத்துகள் அவன் மூச்சைத் திணற அடித்து அவனைப் பின்னடையச் செய்யவே, அவன் பின் பக்கமாகத்தள்ளாடி ஓடி மதுமண்டப வாயில் தூணொன்றில் பின்தலை மோத, திடீரென அந்தத் தூணுக்கடியில் உட்கார்ந்து மயக்கத்தால் கண்களை மூடினான்.

அந்தச் சண்டையில் அங்கிருந்த யாரும் அதுவரை தலையிடாததால் தாமரைச்செல்வியைத் தனது இடது கையால் பிடித்து இழுத்துக்கொண்ட குமாரன், "டேய் யாரங்கே! இவளுக்கு ஒரு புரவி கொண்டுவா" என்று காவலனொருவனுக்கு உத்தர விட்டான்.

ஆனால், காவலன் அதைக் காதில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. மண்டப முகப்புத் தூணில் சாய்ந்த வண்ணம் குடுவையிலிருந்த கள்ளை அருந்திக்கொண்டிருந்தான்.

பப்பகுமாரன் அவனுக்கு அடுத்தபடி ஏதும் உத்தரவு இடவில்லை. அவனிருந்த இடத்தை அணுகி அவன் கையிலிருந்த குடுவையைப் பிடுங்கித் தூர எறிந்தான். பிறகு அவன் கையைப் பிடித்துத் திருகி "நான் சொல்வது காதில் விழவில்லை? ஒரு புரவி கொண்டுவா" என்று கூறி அவன் கையை மறுபடியும் திருகி அவனைச் சுழல விட்டான் ஒருமுறை.

இதற்குப் பின் அங்கிருந்தவர்கள் யாரும் செயலற்று இருக்கவில்லை. இரு வீரர்கள் வாட்களை எடுத்துக் கொண்டார்கள். மதுவைக் குடித்திருந்த அவர்கள் தள்ளாட்டத்திலிருந்ததால் அந்த வாட்களால் ஏதும் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்ட குமாரன், "வீணாக மடியாதீர்கள். வாட்களைக் கீழே போடுங்கள்" என்று இரைந்து கூவினான்.

zeevaa

அவர்கள் வாட்களைக் கீழே போடவில்லை. மற்றும் சிலரும் அவர்களுடன் சேர்ந்து கூட்டமாக குமாரனை நெருங்க முற்படவே, தனது புரவியில் தாமரைச்செல்வியைத் தூக்கி உட்கார வைத்துவிட்டு, ''செல்வி! நீ உன் இல்லத்துக்குச் செல். நான் சிறிது நேரத்தில் உன்னைச் சந்திக்கிறேன்'' என்றான். பிறகு வாளை உருவிக் கொண்டு தன்னை நோக்கி வந்த கூட்டத்தை எதிர்க்கச் சித்தமானான். சில விநாடிகள் சென்றிருந்தால் மது மண்டபத்தின் முன் வாசல் ரணகளமாகியிருக்கும். ஆனால் மண்டபத்திற்குகுள்ளிருந்து வந்த ஆஜானுபாகுவான ஒரு வீரன், ''யார் சண்டை துவங்கினாலும் சிறைக்குப் போவீர்கள். வாட்களைக் கீழே போடுங்கள்'' என்று அதிகாரக் குரலில் கூறியதும் குமாரனை நோக்கி முன்னேறிய கூட்டம் சட்டென்று நின்றது. வாளை வைத்திருந்தவர்கள் அதைக் கீழே போட்டார்கள்.

வந்த மனிதன் தோரணையிலிருந்தும், அவன் அணிந்திருந்த பகட்டான ஆடையிலிருந்தும், அவன் சொல்லுக்கு மதுமண்டபக் கூட்டமே பணிந்ததிலிருந்தும் அவன் தான் காஞ்சியின் பிரதான படைத் தலைவனாயிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்த பப்பகுமாரன் அவனை நோக்கித் தலைவணங்கி, ''காஞ்சியின் படைத்தலைவருக்கு நன்றி'' என்றும் சொன்னான்.

காஞ்சியை, மன்னனுக்குப் பதிலாக ஆண்டு வந்த அந்த தலைவன் உயரத்துக்குத் தகுந்த பருமனையும் கொண்டு ராட்சஸன் போலக் காட்சியளித்தான். அவன் ஒரு காதில் இருந்த தங்க வளையம் அவனைக் கொள்ளைக் காரத் தலைவனைப் போல் காட்டியது. அவன் கழுத்தில் விலை உயர்ந்த மாணிக்கமொன்று பதித்த சங்கிலியொன்றை அணிந்திருந்தான். அவன் இடைக் கச்சையில் நீண்ட வாள் எதுவும் இல்லாவிட்டாலும் அரைவாளுக்கு இணையான நீண்ட குறுவாளொன்று காட்சியளித்தது. உலக்கைகள்

zeevaa

போலிருந்த கைகளும் கால்களும் அவன் மிதமிஞ்சிய பலத்துக்கு அத்தாட்சியாக விளங்கின. அவன் கன்னங்களின் புடைப்பு அவன் கண்களைச் சிறியவைகளாகத் தோற்றுவித்தாலும் அந்தக் கண்களில் குரூரம் நன்றாக ஒளிவிட்டது. தடித்த உதடுகள் அவன் காமுக னென்பதைச் சந்தேகமற விளக்கின.

காஞ்சியின் படைத்தலைவன், குமாரன் செலுத்திய நன்றிக்கு பதில் சொல்லவில்லை. தலைவணங்கியதற்கு திரும்ப வணக்கமும் தெரிவிக்கவில்லை. குமாரனை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான். கடைசியாக அவன் பேச முற்பட்டபோது சொற்கள் கரகரத்த குரலில் வெளிவந்தன. "நீ யார்? எந்த ஊர்?" என்று வினவினான்.

குமாரனும் அவனை உற்று நோக்கினான். அவன் கண்களுடன் தன் கண்களையும் கலக்கவிட்டான் சில விநாடிகள். "நான் தற்சமயம் இந்த ஊர்தான்" என்று பதில் சொன்னான்.

அதைக்கேட்ட காஞ்சி படைத்தலைவன் புருவங்கள் மேலே உயர்ந்தன. ஒரு விநாடி சிந்தனை செய்யும் முறையில், பிறகு கேட்டான், "உன் இருப்பிடம் எது?" என்று.

"பெரியதனக்காரர், இந்த ஊர் நீதிபதி. அவர் வீட்டில்தான் நான் இருக்கிறேன்" என்றான் குமாரன்.

இதைக்கேட்டதும் சற்றுத் தயங்கிய படைத்தலைவன் "எத்தனை நாளாக அவருடன் இருக்கிறாய்? என்று வினவினான்.

"நேற்று வேலைக்கு அமர்ந்தேன்." -இதை சர்வசாதாரணமாகச் சொன்னான் குமாரன்.

"என்ன வேலை உனக்குக் கொடுத்தார் நீதிபதி?" -படைத்தலைவன் கேள்வி சற்று அதிகாரத்துடன் வந்தது.

zeevaa

''அவர் வீரர்களின் தலைவன்.'' -குமாரன் இதை மிகுந்த பணிவுடன் சொன்னான்.

சிறிது சிந்தனை செய்த படைத்தலைவன், ''நேற்று வேலைக் கமர்ந்தாய் நீதிபதியிடம். இன்று இங்கு வந்து குழப்பம் விளைவிக் கிறாய். இது விசாரணைக்கு வந்தால் என்ன ஆகும்?'' என்று கேட்டான்.

''அபலையான ஒரு பெண்ணை மானபங்கப்படுத்துவதும், சேலையைக் கிழிப்பதும், தலைமயிரைப் பிடித்து இழுப்பதும் சரியான பணி? அதை நான் தடுப்பது குழப்பத்தை விளைவிப்ப தாகும்? உங்கள் கண்ணோட்டம் மிக அழகு!'' என்று வலிப்புடன் பேசிய குமாரன், ''இந்தக் காஞ்சியில் எங்கு தர்ம விரோதமான செயல்கள் நடந்தாலும்'' அது பசு திருடுவதானாலும், பெண்களை இம்சைப்படுத்துவதானாலும் அடக்க எனக்கு உத்தரவிட்டிருக் கிறார் நீதிபதி. அதை நான் செய்து முடிக்காமல் விடமாட்டேன். அப்படிக் குற்றம் செய்யும் யாரையும் தண்டிக்க நீதிபதி எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்'' என்றான்.

குமாரன் சொற்களைக் கேட்டதும் படைத்தலைவன் அடியோடு மாறிவிட்டான். ''நீதிபதியின் கட்டளை அதுவானால் அதை நிறைவேற்றுவது தவறில்லை'' என்று சொன்ன படைத்தலைவன், ''வீரனே! நீதிபதியிடமிருக்கும் வேலையை நீ விடுவதானால் என்னை வந்து அரண்மனையில் பார்'' என்று கூறினான்.

''நீதிபதி அனுப்புவதானால் நான் வரலாம். ஆனால் அவர் என்னை விடமாட்டார்'' என்று கூறிய குமாரன் ''எதற்கும் தங்களை நாளை அரண்மனையில் சந்திக்கிறேன். வருகிறேன்'' என்று கூறி தனது புரவியின் கடிவாளத்தைப் பிடித்து அதை நடத்தி அழைத்துக் கொண்டு மதுமண்டப எல்லையிலிருந்து அகன்றான்.

zeevaa

புரவியிலிருந்து கீழே இறங்க முற்பட்ட தாமரைச்செல்வியிடம் கடிவாளக் கயிறுகளைக் கொடுத்த குமாரன் ''இறங்காதே, அப்படியே வா'' என்று கட்டளை யிட அவள் புரவியை நடக்கவிட்டாள், தனது காலால் புரவியின் வயிற்றில் லேசாக உதைத்து.

புரவியைப் பிடித்த வண்ணம் காஞ்சியின் வீதிகளைத் தாண்டிக் காட்டுக்குள் புகுந்த குமாரன் ஏதும் பேசாமலே நடந்தான். தாமரைச்செல்வியும் ஏதும் பேசாமலும் அவமானத்தால் குனிந்த தலை நிமிராமலும் புரவிமீது உட்கார்ந்திருந்தாள். காடு அடர்த்தியானதும், ''செல்வி! நீ வேண்டுமானால் சற்று ஆடையைச் சரிப்படுத்திக்கொள். அதோ அந்த இரண்டு மரங்களுக்கப்பால் சிறுகுளம் ஒன்று இருக்கிறது. அங்கு உன் முகக் கீறலில் இருந்து வரும் குருதியையும் துடைத்துக் கொள்ளலாம்'' என்று கூறினான் குமாரன்.

அவள் இசைந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள். குமாரன் புரவியின் கடிவாளத்தைப்பிடித்து இழுத்துக்கொண்டு மெல்ல தூர இருந்த இரட்டை மரங்களை நோக்கி நடந்தான். அந்த மரங்களுக்கிடையில் புரவியை நிறுத்தி தாமரைச்செல்வியைக் கீழே இறக்கக் கைகளை நீட்டினான். அந்தக் கைகளுக்குள் இறங்கிய தாமரைச்செல்வியைத் தழுவி இறக்கிவிட்டு மெல்ல அவளை அழைத்துக்கொண்டு, ''வா! உன் முகக் குருதியைக் குளத்தில் கழுவி விடுகிறேன்'' என்று கூறினான்.

அவள் நகரவில்லை. புயலில் ஆடும் கிளைபோல் ஒரு முறை ஆடினாள். அவளைத் தழுவி இறுகப் பிடித்தான் குமாரன். அவன் தோளில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்ட தாமரைச்செல்வி திடீரெனக் குலுங்கிக்குலுங்கி அழுதாள்.

zeevaa

''ஏன் அழுகிறாய் செல்வி?'' என்று அனுதாபத்துடன் கேட்டான் குமாரன்.

பதிலுக்கு அவள் கைகள் அவன் கழுத்தைச் சுற்றின. ''என்னைக் கொன்று விடுங்கள். நான் உயிர் வாழவிரும்பவில்லை'' என்று விக்கல்களுக்கிடையில் சொற்களை உதிர்த்தாள்.

அவன் கைகள் அவளை இறுகத் தழுவின. அவள் முகத்தை லேசாகத் தூக்கினான். அவன் இதழ்கள் அவள் இதழ்களுடன் இணைந்தன. பிணைந்த இரு உடல்களும் நீண்ட நேரம் பிரியவில்லை. அவள் இதழ்களைச் சுவைத்த குமாரன் மெதுவாக உதடுகளிலிருந்து நீங்கி, ''தாமரைச் செல்வி! உன் தாமரை உதடுகள் மதுவைச் சிந்துகின்றன. நீதான் மது மண்டபம்'' என்றான்.



zeevaa

## 10. முறையும் இயற்கையும்

அடர்த்தியான அடவியின் அருகில் தெரிந்த குளத்தின் ஆகாயமளாவிய இருபெரும் மரங்களுக்கு இடையில் தாமரைச் செல்வியின் செங்கமல இதழ்களிலிருந்து மீண்ட பப்பகுமாரன் செல்வியை மது மண்டபம் என்று அழைத்ததும் அவள் குனிந்த தலை நிமிராமல் மெல்ல நகைத்தாள். ஜலதரங்கம் போல் உதிர்ந்த அந்த நகைப்பொலியைக் காதில் வாங்கிய குமாரன் செல்வியை அணைத்திருந்த கைகளை நீக்காமலே ''ஏன் நகைக்கிறாய் செல்வி?'' என்று வினவினான் அவள் காதுக்கருகில் ரகசியமாக. கேள்வி கேட்பதை சாக்காக வைத்துக்கொண்டு அதனருகே இருந்த மாம்பழக் கன்னத்திலும் உதடுகளைப் புதைத்தான்.

அவன் கேள்விக்கு அவள் உடனே பதிலேதும் சொல்லவில்லை. அவன் தனது குடிசை மேட்டிலேயே தன்னைத் தொட்டிருந்ததாலும், மது மண்டபத்தின் விபரீதவிளைவுகளுக்குப் பின் அவன் தன்னை வலியத் தழுவியதாலும், சொந்தமுடன் இதழ்களைக் கவ்விச் சுவைத்ததாலும் உணர்ச்சிகளுள் சுழன்றதால் அவள் பேசவும் சக்தியற்றவளானாள். ஆகையால் மீண்டும் அவன் கைகளுக்குள் ளேயே திரும்பி அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அவன் இதயத்துக்குச் செய்தி சொல்வதுபோல, ''என்னை மதுமண்டபம் என்று சொன்னீர்களே, அதற்குத் தான் நகைத்தேன்'' என்றாள்.

மார்பில் புதைத்த முகத்தை அவன் தனது கையொன்றால் நிமிர்த்தி, ''ஏன்? உவமை சரியில்லையா?'' என்று வினவினான்.

zeevaa

''இல்லை'' என்றாள் தாமரைச்செல்வி,

''என்ன தவறு அதில்?'' என்று கேட்டான் குமாரன்.

''மது மண்டபத்தில் நடப்பதெல்லாம் கள்வெறி, மானபங்கம், பூசல், களவு இவைதான். அந்த மாதிரியா நான்?'' என்று அவள் முணுமுணுத்தாள்.

அப்படி முணுமுணுத்தபோது அவள் செவ்விய அதரங்கள் லேசாக மூடி மூடித் திறந்த அழகைப் பருகினான் குமாரன் தன் கண்களால். அடுத்து அவன் உடனடியாக ஏதும்பேசாமல் அவள் முதுகை லேசாக வருடினான். வருடிய கை முதுகின் அடியில் இருந்த ஏழுச்சியிலும் அலையவே சிறிது நெளிந்த செல்வியின் உடல் அவன் மார்பையும் அசைந்து தீண்டவே உணர்ச்சியில் ஆழ்ந்த குமாரன் மெதுவாகப் பேசினான். ''செல்வி! மது மண்டபத்தில் நடப்பதெல்லாம், நீ விவரித்தவை, உன்னிடமும் இருக்கின்றன. உன் கவர்ச்சிப் பிரதேசங்கள் எனக்குள் வெறியூட்டுகின்றன. உணர்ச்சி வேகத்தில் உன்னை நான் அத்துமீறித் தொட்டதால் உன் மானபங்கமும் விளைந்திருக்கிறது. என் மனதைக் காமப்பூசல் தாக்குகிறது. அடுத்தது என்ன சொன்னாய்? களவா? அதை நீயும் தானே செய்துவிட்டாய்! என் மனத்தை நீ களவாடியது மட்டும் களவில்லையா?'' என்று சொன்ன குமாரன், ''என் மார்பில் நீ முகம் புதைத்து என் இதயத்துடன் பேசினாய். நானும் அப்படிப் பேசட்டுமா?'' எனக் கேட்டான்.

''நல்ல கேள்வி'' என்று புன்சிரிப்பு கொண்டாள் செல்வி.

''கேட்கக் கூடாதா?''

''எல்லாவற்றையும் கேட்டுச் செய்வது நடக்குமா?''

''ஏன் நடக்காது?''

zeevaa

''ஒப்புதல் தராவிட்டால் கேள்வி பயனற்றுவிடுமே.''

''புரியவில்லை செல்வி.''

''பெண்கள் சம்மதத்தை சிலவற்றுக்குத்தான் கேட்கலாம்.''

''ஓகோ!''

''என்ன ஓகோ?''

''புரிந்து கொண்டேன்'' என்ற குமாரன் தனது தலையை இறக்கி அவள் மார்பில் புதைத்துக்கொண்டான். அங்கிருந்தே பேசினான். ''செல்வியின் இதயமே, செல்விக்குத்தான் புரியவில்லை. உனக்குப் புரிகிறதல்லவா எனது மனம்? காஞ்சி ஆட்சியில் சிக்கலை அவிழ்க்க வந்த நான் இந்தக் காஞ்சன அழகியின் கூந்தலைச் சிக்கெடுத்தேனே அதிலிருந்தே என் மயக்கம் புரிகிறதல்லவா? காதலில் முறைப்பிள்ளை, முறையில்லாத பிள்ளை என்பது உண்டா? எங்கு நீ இணங்குகிறாயோ அவன்தானே முறைப் பிள்ளை? விரிந்துகிடக்கும் மலர், வண்டை வராதே, அண்டாதே, மதுவைக் குடிக்காதே என்றால் வண்டு சும்மா இருக்குமா? இயற்கையின் தர்மத்தை யாராவது தடுக்க முடியுமா?'' என்ற கேள்விகளை அவள் மார்பில் தலையை இணைத்தபடியே கேட்டான்.

அவன் கேளவிகளைக் காதில் வாங்கிக்கொண்ட அந்தப் பருவ மங்கை, ''கேட்டது போதும். எழுந்திருங்கள்'' என்று தனது தலையைக் குனிந்து அவன் காதில் சொன்னாள். அப்படி அவள் குனிந்து அவன் காதுக்கருகில் வந்ததன் விளைவாகவும் அவள் அவன் தலையை அழுத்தியதன் விளைவாகவும் மார்பின் எழுச்சி யொன்றின் மீது அதிகமாக அழுந்திய அவன் முகத்தால் உந்தப்பட்ட உணர்ச்சிகளால் அவள் ஏக்கப் பெருமூச்சு விடவே செய்தாள்.

zeevaa

அவன் உணர்ச்சிகளும் அவள் உணர்ச்சிகளுக்குக் குறைவா யில்லா ததால் அவன் தனது இதழ்களை அவள் இடதுபுற மார்பின் மீது படிய வைத்துப் பிறகு நீங்கி அவளை ஏறெடுத்துப் பார்த்தான். அதே சமயத்தில் அவன் வலது கை அவள் உடலில் கழுத்து முதலிய முன்னழகுகளில் உலாவ அவள் காற்றில் வளையும் மூங்கிலைப் போல் வளைந்தாள். அப்படி வளைந்தபோது அவளது முகத்திலிருந்த நகக்கீறல் அவனது கன்னத்தில் படவே அவன் சட்டென்று அவளிடமிருந்து லேசாகப் பிரிந்து நின்றான்.

அதனால் வியப்புக்குள்ளான தாமரைச்செல்வி "ஏன்? என்ன?" என்று வினவினாள்.

அவள் கேள்வியால் சற்றே குழப்பமடைந்த குமாரன். "உன் முகக்கீறலை மறந்துவிட்டேன். அதற்கு மருத்துவம் பார்க்கவில்லை நான்" என்றான்.

அவள் அவனைப் பார்க்கவும் மறுத்தாள். "அதனாலென்ன? மருத்துவம் மற்ற இடங்களில் பார்த்தீர்களே, அது போதாதா?" என்று சொல்லி வெட்க நகை கொட்டினாள்.

"அங்கெல்லாம் கீறல் இல்லையே. காயம் எதுவும் இல்லையே" என்றான் குமாரன்.

"ஏனில்லை?" -மெதுவாகக் கேட்டாள் தாமரைச் செல்வி.

"எங்கிருக்கிறது? கண்ணுக்குத் தெரியவில்லையே." -குமாரனும் மெதுவாகப் பேசினான்.

தாமரைச்செல்வி அவனை மீண்டும் நெருங்கி -"வீரரே!" என்று அழைத்தாள்.

"என்ன செல்வி?"

zeevaa

''உள் காயங்கள் கண்ணுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''தெரியாவிட்டால் இல்லையென்று பொருளா?'' என்று கேட்டாள் செல்வி.

இதற்குப் பதில் சொல்லவில்லை குமாரன். அவள் சேலை கிழிந்து கிடந்த இடங்களைப் பார்த்தான். மார்புக்கச்சையும் கிழிந்து விரிந்து கிடந்தது. அந்தக் கிழிசல்கள், விரிசல்கள் புலப்படுத்திய அழகிடங்கள் அவன் கண்களை ஈர்த்தன. மனத்தை அலைக் கழித்தன. அதனால் உந்தப்பட்ட உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அவள் இடையைப் பிடித்து இழுத்து, ''செல்வி! வா முதலில் புறக்காயங்களை பார்க்கிறேன்'' என்று அவளைப் பலவந்தமாக அழைத்துக் கொண்டு அருகில் தெரிந்த குளத்துக்குச் சென்றான்.

அந்தக் காட்டுக்குள் குளம் மிக அழகாயிருந்தது. சுற்றிலும் மரங்கள் இருக்க அது மட்டும் தனித்திருந்ததால் வெண்ணிலவு அதன்மீது பூர்ணமாகக் காய்ந்து அதன் தெள்ளிய நீரை வெள்ளித் திரவமாக அடித்திருந்தது. லேசான காற்றில் கிளம்பிய சிற்றலைகள் அந்தக் காதலர்களுக்குக் கண்ணாடி காட்டின. காட்டிலிருந்த நறுமலர்ச் செடிகளிலிருந்து சுகந்தம் வந்து கொண்டிருந்ததால் பெருமயக் கத்தை ஏற்படுத்திய அந்தச் சூழ்நிலையைச் சிறிது அனுபவித்த குமாரன் அங்கிருந்த பாறாங்கல் ஒன்றில் அவளை உட்கார வைத்தான். அந்த நீளப் பாறாங்கல்லும் கரையில் பாதியும் நீரில் பாதியுமாக இருந்ததால் அவள் கணுக்கால்கள் நீரில் மறைந்தன. நியாயமாக மறைக்கப்பட வேண்டிய மேற்பகுதிகளில் சேலை கிழிந்திருந்த கிழிசல் அவள் வழ வழத்த மேற்காலின் திண்ணிய பகுதியை வெளேரெனத் தெரிய வைத்தது. வயிற்றுப் புறத்தின் கிழிசல் ஆலிலை வயிற்றின் அழகைப் புலப்படுத்தியது.

zeevaa

இவற்றையெல்லாம் பார்த்த குமாரன், ''செல்வி! முதலில் உன் காலைக் கவனிக்கிறேன்'' என்று சொல்லிக் குனிந்து அவள் கால்களை நீரில் கழுவினான். பிறகு தொடையில் கிழிந்த இடத்தை லேசாக இழுத்து மறைத்தான். மார்புக் கச்சையையும் வயிற்றின் மீதிருந்த சேலைக் கிழிசல்களையும் மடித்து மறைத்தான். பிறகு முகத்தை நோக்கினான். அவள் வதனத்தின் வலது புறத்திலிருந்த நீண்ட அந்த நகக்கீறல், அதிலிருந்து புள்ளி புள்ளியாய் கிளம்பி உறைந்துவிட்ட குருதித் துளிகள் தங்கத் தகட்டில் சின்னஞ்சிறு மாணிக்கங்களைப் புதைத்த பிரமையை ஏற்படுத்தின.

அவள் வதனத்தைத் தடவிக் கீறலின் தன்மையைக் கவனித்த குமாரன், ''செல்வி! சிறு கீறல்தான். வடுகூட இருக்காது மறைந்துவிடும்'' என்று அவளுக்குத் தைரியம் சொல்லிக்கொண்டே தனது அங்கியின் முனையை நீரில் நனைத்து குருதிப் புள்ளிகளை மெதுவாகத் துடைத்தான். கீறலிலிருந்து மேற்கொண்டு ரத்தம் வராது போகவே, ''செல்வி! மிகவும் லேசான கீறல். இரண்டு நாட்களில் வடுவும் மறைந்து விடும். அதற்கும் வைத்தியம் செய்கிறேன். இன்று இதற்கு வைத்தியம் தேவையில்லை'' என்று சொல்லிக் கொண்டு எழுந்தான்.

அவள் உதடுகளில் மந்தகாசம் விரிந்தது. ''நீங்கள் என்ன மருத்துவரா?'' என்று வினவினாள்.

''அதுவும் லேசாகத் தெரியும்'' என்றான் குமாரன் மெல்ல நகைத்து.

''எல்லாம் லேசாகத்தான் தெரியுமா?''

''ஆம்.''

''சண்டை மாத்திரம் கனமாகத் தெரியும் போலிருக்கிறது''

zeevaa

''எப்படித் தெரியும் உனக்கு?''

''இன்று காஞ்சியில் படைத்தலைவன் முன்பாக அத்தனை மறவர்களையும் அலட்சியம் செய்து என்னை மீட்டீர்களே!''

''உன் காயத்தைக் கண்டு, உன் நிலையைக் கண்டு உணர்ச்சி வேகத்தில் நடந்து கொண்டு விட்டேன். அவ்வளவுதான்'' என்று அவளை மீட்ட கதையைச் சாதாரணமாக எடுத்துரைத்தான்.

தனது வீரத்தைக் குறைத்துப் பேசும் அந்த மகா வீரனின் அடக்கம் அவளுக்கு மேலும் வியப்பை விளைவித்தது. ''உணர்ச்சி வேகத்தில் எதையும் செய்வீர்கள் போலிருக்கிறது?'' என்றாள் செல்வி வியப்பு, குரலிலும் தெரிய.

''உணர்ச்சி அச்சத்தை அறுத்து விடுகிறது. அப்பொழுது விளைவதைப் பற்றி மனம் கவலைப்படுவதில்லை'' என்றான் குமாரன்.

''இப்பொழுது மனம் எப்படி இருக்கிறது? உணர்ச்சி எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள் தாமரைச்செல்வி.

''எனக்கு சொல்லத் தெரியவில்லை. மயக்கத்தில் இருக்கிறேன்'' என்றான் குமாரன். ''செல்வி! இப்படியே நாம் பேசிக் கொண்டிருந்தால் பொழுது விடிந்துவிடும் வா. உன் குடிசைக்குப் போவோம்'' என்று அவள் கைகளைப் பிடித்துத் தூக்கினான். அவள் எழுந்து அவன் பிடியிலிருந்து விலகி மரங்களை நோக்கி நடந்தாள்.

அவள் போவதைப் பார்த்துக் கொண்டு பாறைக்கருகிலேயே நின்ற குமாரன் அவள் பின்னழகுகள் இயங்கும் முறையைக் கண்டான். ஒவ்வொரு அசைவிலும் மோதலிலும் அழைப்பு இருப்பதையும் கண்டான். இருந்தாலும் அவள் தனிமையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பாததாலும், கண்ணியம் உடலில்

zeevaa

ஊறியிருந்த காரணத்தாலும் அவனும் அவளைத் தொடர்ந்து மெதுவாக நடந்தான்.

குளக்கரையிலிருந்து நடந்து சென்ற தாமரைச்செல்வி முதலில் நின்றிருந்த இரண்டு மரங்கள் சிருஷ்டித்த இயற்கை வாயிலுக்கு வந்து ஒரு மரத்தின் மீது சாய்ந்து நின்றாள். தலையை ஒரு புறமாகச் சாய்த்து குமாரனைத் தனது விழிகளால் பார்க்கவும் செய்தாள். அந்தப் பார்வையிலும் அழைப்பு இருந்ததைக் கண்ட குமாரன் மனம் திக்திக்கென்று அடித்துக்கொள்ள அவன் சாய்ந்து நின்று, ''செல்வி! நேரம் ஓடிவிட்டது'' என்று சொன்னான்.

''ஆம்'' என்றாள் அவள்.

''போவோம்'' என்று சொல்லி அவளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அடவிக்குள் சென்றான். அவள் பேசாமல் நடந்தாள் அவனுடன். ''நேரம் அதிகமாகி விட்டது'' என்றாள் புரவிக்கருகில் சென்றதும்.

அவள் குரலில் இருந்த ஏதோ ஒரு கேலி அவனைச் சரேலெனத் திரும்பச் செய்தது. அடுத்து அவள் அவன் பிணைப்பிலிருந்தாள். ''தலைக்கு மேல் ஓடியவெள்ளம்'' என்றாள் செல்வி.

அதிர்ச்சியடைந்த குமாரன். ''முறை என்று ஒன்று உண்டு'' என்று குறிப்பிட்டான். ஆனால் அவன் கைகள் முறைக்கு உட்படவில்லை. முறையை மீறிக் கொண்டிருந்தன. இயற்கையும் முறையும் போரிடும்போது வெற்றி பெறுவது இயற்கைதான் என்பதை இருவருமே புரிந்து கொண்டார்கள்.

zeevaa

# 11. அவள் வேண்டிய சிறை

**ம**னிதனால் இயற்றப்பட்ட விதிமுறைகளும் இயற்கையும் மோதும்போது வெற்றிபெறுவது இயற்கைதான் என்பதை குமாரனும் தாமரைச்செல்வியும் உணர்ந்திருந்தாலும், உடலின் ரத்தத்தோடு பிறக்கும் பண்பாடு இயற்கையைக் கூடக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் அந்த இரவில் அறிந்து கொண்டார்கள். பப்பகுமாரனான அந்த வாலிபன் தாமரைச்செல்வியைக் காம மிகுதியால் முதலில் இறுகவே அணைத்தான். அவள் இதழ்களையும் தனது இதழ்களால் இழைத்தான். அவள் உடலிலும் கைகளைத் தவழவிட்டான். தாமரைச்செல்வியின் உணர்ச்சிகளும் எல்லை மீறிவிட்டதால், அவள் அவன் சரசம் எதையுமே தடை செய்யவில்லை. அவன் கைகளில் தனது உடலைப் பூர்ணமாக அர்ப்பணித்துச் செயலற்று நின்றாள். அவள் அழகு உடலில் படக்கூடாத இடங்களிலெல்லாம் பாய்ந்த அவன் கைகள் என்ன காரணத்தினாலோ திடீரென நின்றன இரண்டு விநாடிகள். பிறகு அவள் உடலுக்கு விடுதலை அளித்தன.

திடீரென அவன் பிணைப்பு நீங்கியதால் வியப்படைந்த தாமரைச்செல்வி, "என்ன?" என்று ஒரு ஒற்றைச் சொல் வினாவை வீசினாள்.

பப்பகுமாரன் பதில் சொல்லத் தயங்கி, "எதற்கு என்ன?" என்று கேட்டுவிட்டுச் சற்று விலகி நின்று "செல்வி! நேரம் அதிகமாகி விட்டது" என்றும் சொன்னான்.

zeevaa



zeevaa

தாமரைச்செல்வி அவனை அனுகி அவன் மார்பு மீது தனது முகத்தைப் புதைத்துக் கொண்டாள். ''நேரம் அதிகமானால் என்ன?'' என்று மிக ரகசியமாகக் கேட்டாள்.

மார்பில் புதைத்திருந்த அவள் முகத்தை அவன் நிமிர்த்திப் பார்க்கவில்லை. தலைக்குழலை மட்டும் கோதிவிட்டு, ''செல்வி! அதிக நேரமாகி நாம் உன் குடிசைக்குச் சென்றால் உன் தந்தை சந்தேகப்படுவார்'' என்று கூறி, ''வா, போவோம் உன்னிருப் பிடத்திற்கு'' என்றும் சொல்லி அவளைப் புரவியை நோக்கி இழுத்துச் சென்றான்.

அவன் இழுத்த இழுப்புக்கு உடன்படச் சித்தமாயிருந்த செல்வி, தன்னை திடீரென உதறிவிட்டுப் புரவியிடம் அழைத்துச் செல்லும் காரணமென்னவென்று சிந்திக்கலானாள். தனது தனிமையையும், சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் உபயோகப் படுத்திக்கொள்ள அவன் பண்பாடு இடம் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டதால் அவனுக்கும், தன்னை அடைய முயன்ற மதுமண்டபக் காவலனுக்கும் எத்தனை மாறுபாடு இருக்கிறது என்று எண்ணிப்பார்த்து அவன் தன்னிடம் மையல் கொண்டது தனது பாக்கியம் என்றும் எண்ணமிட்டாள். இத்தகைய எண்ணங்கள் அவளைப் பிடித்துக் கொண்டிருக்கையில் அவளை அழைத்துச் சென்ற பப்பகுமாரன் அவளைத் தூக்கித் தனது புரவி மீது உட்கார வைத்து, தானும் புரவியில் ஏறிக்கொண்டு அதை நடத்தினான் காட்டு வழியில்

அப்படி அவளுக்குப் பின்னால் உட்கார்ந்து ஒரு கையால் சேணத்தைப் பற்றி இன்னொரு கையால் செல்வி விழாதிருக்க அவள் உடலை அணைத்துப் புரவியை நடத்திய பப்பகுமாரன் அந்த நிலையால் தனது உணர்ச்சிகள் முன்னைவிட அதிகப்பட்டதையே உணர்ந்தான். புரவியின் நடையின் விளைவாக

zeevaa

அசைந்த அவள் பின்னெழில்கள் தன்னுடன் இணைந்ததால் அதிகமான உணர்ச்சி வேகத்துக்கு ஆட்பட்ட அந்த வாலிபன், 'குமாரா! நீ இத்தனை பலவீனனா?' என்று விசாரித்துக் கொண்டான். இருப்பினும் அவன் குடும்ப பலமும் இரும்பு மனமும் அவனை எந்தச் செயலுக்கும் தூண்டாததால் அவன் நெட்டுக்குத்தாகப் புரவியில் உட்கார்ந்தவண்ணம் பயணம் செய்தான்.

ஆனால் தாமரைச்செல்வியின் நிலை அவன் நிலைக்கு முற்றும் மாறாக இருந்தது. அந்த வாலிபன்மீது தனது எழில்கள் பட்டும், வேண்டுமென்றே தான் அவன்மீது சாந்துங்கூட அவன் இரும்புபோல் உட்கார்ந்திருந்ததைக் கவனித்த தாமரைச்செல்வி அவன் பண்பாட்டையும், கௌரவத்தையும் நினைத்துப் பெருமையும் கொண்டாள். இருப்பினும் அந்தப் பெருமை அவளுக்குத் திருப்தியளிக்காததால் மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். "நீங்கள் எனது குடிசைக்கே வருகிறீர்களா?" என்று.

"வேறெங்கு போவது?" -முரட்டுத்தனமாகக் கேட்டான் குமாரன்.

"குடிசையில் தந்தை இல்லை." -இதை மெதுவாகச் சொன்னாள் தாமரைச்செல்வி.

இதைக் கேட்ட குமாரன் திகைத்தான். "வேறெங்கு இருக்கிறார்?" என்று கேட்டான் அச்சம் லேசாகக் குரலிலும் ஒலிக்க.

"மது மண்டபத்தில்" என்றாள் செல்வி.

"அதை ஏன் அப்பொழுதே சொல்லவில்லை?" என்று குமாரன் கேட்டான்.

"அங்கிருந்த நிலை நான் பேசும்படியாகவா இருந்தது?" என்று வினவினாள் செல்வி.

zeevaa

அவளிருந்த நிலையில், அங்கு நடந்த குழப்பத்தில் அவள் ஏதும் சொல்ல முடியாதென்பதைப் புரிந்து கொண்ட குமாரன், "ஆம். அப்பொழுது முடியாதுதான். ஆனால் இங்கு வந்தபின்பு சொல்லி யிருக்கலாமே?" என்று கேட்டான்.

தாமரைச்செல்வியின் முகம் சட்டென்று சிவந்தாலும் அதைப் பார்க்க முடியவில்லை குமாரனால், அவள் முகம் முன்புறத்தை நோக்கிக் கொண்டிருந்ததால் சிறிது நேரம் அந்தக் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. பிறகு பதில் சொன்னபோது குரலில் வெட்கத்தின் ஒலி பூர்ணமாக இருந்தது "இங்கிருந்த நிலை மட்டும் எப்படி இருந்தது?" என்று கேட்டாள் அவள்.

"இங்கிருந்த நிலைக்கென்ன? நாமிருவரும் தனிமை யாகத்தானே இருந்தோம்?"

"ஆம்!"

"தனிமையில் சொல்லத் தடை என்ன?" -குமாரன் குரல் திடமாக இருந்தது.

'இந்த ஆண்கள் சில சமயங்களில் எத்தனை அறிவற்றவர்களாகி விடுகிறார்கள்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டே செல்வி மெதுவாக, "நீங்கள் எங்கு என்னைப் பேசவீட்டீர்கள்?" என்று வெளிப்படையாகக் கேட்டாள்.

"உன்னை நான் என்ன, பேசாமலிருக்கத் தடையா விதித்தேன்?" என்று மேலும் கேட்டான் குமாரன்.

"தடை என்று தனியாகச் சொற்களால் விதிக்க வேண்டுமா?"

"வேறு வழி இருக்கிறதா?"

"ஏனில்லை?"

zeevaa

''எந்த வழி அது?''

''வாயை மூடிவிட்டால்?''

''நான் எங்கே மூடினேன்?'' என்று கேட்ட குமாரன் அவள் இதழ்களைத் தனது இதழ்கள் அடைத்துவிட்டதை எண்ணித் திருதிரு என்று விழித்தான். அந்த எண்ணத்தின் விளைவாக, ''ஓகோ!'' என்று சொன்னவன் அதற்கு மேல் ஏதும் பேசாமல் புரவியை நடத்தினான். சுமார் இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் தாமரைச்செல்வியின் குடிசை மேட்டை அடைந்த குமாரன் புரவியிலிருந்து தான் முதலில் இறங்கி, அவளையும் இரு கைகளால் தூக்கி இறக்கி விட்டான்.

அப்படி அவளை இறக்கிவிட்ட பிறகும் செல்வி உடனடியாக மேட்டின் மீதிருந்த குடிசையை நோக்கிச் செல்லவில்லை. அவனை விட்டுப்பிரிய மனமில்லாமல் நின்றிருந்த செல்வியை நோக்கிய குமாரன், ''செல்வி! குடிசைக்குப் போ. நேரமாகிறது'' என்றான்.

அவள் அப்பொழுதும் நகரவில்லை. ''குடிசையில் யாருமில்லை. தனியாக இருக்க அச்சமாக இருக்கிறது'' என்றாள் தலைகுனிந்த வண்ணம்.

''உன் தந்தை வந்துவிட மாட்டாரா?'' என்று குமாரன் வினவினான்.

''அதுவரை?'' -மெதுவாகக் கேட்டாள் செல்வி.

''நான் முதல் நாள் வந்தபோது தனியாகத்தானே இருந்தாய்?'' என்று வினவினான் குமாரன்.

''அப்பொழுது தைரியமிருந்தது...'' என்று இழுத்தாள் தாமரைச்செல்வி.

''இப்பொழுது?''

zeevaa

''இல்லை.''

''அதற்குள் எப்படி மாறிவிட்டாய்?''

''அப்பொழுது காப்பாற்றுவார் யாருமில்லை.''

''இப்பொழுது?''

''ஒருவர் ஏற்பட்டு விட்டார்.''

அவள் நோக்கம் நன்றாகப் புரிந்தாலும் குமாரனுக்கு அவளோடு தனியாக இருக்கும் துணிவு இல்லாததால், ''செல்வி! இப்பொழுது எனக்குப் புதிய பொறுப்பு ஒன்றிருக்கிறது...'' என்று சொன்னான்.

''என்ன பொறுப்போ? என்னைக் காப்பதைவிடப் பெரிய பொறுப்போ?'' என்று சிணுங்கினாள் செல்வி.

குமாரன் முகத்தில் முறுவலின் சாயை விரிந்தது. ''நான் காஞ்சி நீதிபதியின் காவலர் தலைவன். அவர் இல்லத்தையும் சொத்தையும் காப்பது எனது கடமை'' என்றான் குமாரன்.

''அப்படியானால் என்னைக் காப்பாற்றும் கடமை கிடையாதா?''

''உண்டு.''

''அப்படியானால் வாருங்கள்'' என்று கூறி குடிசை மேட்டில் ஏறிச் சென்றாள் செல்வி. அவளைத் தொடர்ந்து குமாரன் செல்ல, புரவி இருவரையும் தொடர்ந்தது.

மேடு ஏறிக் குடிசையை அடைந்ததும் செல்வி குடிசைக்குள் சென்றாள். குமாரன் குடிசை வாயிலிலிருந்து சிறிது தள்ளியே உட்கார்ந்தான். குடிசைக்குள் சென்று கிழிசல் ஆடையைக் களைந்து வேறு ஆடை புனைந்து வெளியே வந்து செல்வி குடிசை வாயிலிலேயே உட்கார்ந்து எட்ட உட்கார்ந்திருந்த குமாரனை

zeevaa

நோக்கி, ''ஏன் அத்தனை தூரத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''உன் தந்தை வந்தால் முன் தடவையைப்போல் என்னைச் சந்தேகிக்காதிருக்க'' என்று சொன்ன குமாரன் ஆகாயத்தைக் கவனித்தான். ''செல்வி! இரண்டாம் ஜாமம் தாண்டி விட்டது. எதற்கும் நீ படுத்துக் கொள். நான் காவலிருக்கிறேன் உன் தந்தை வரும் வரையில்'' என்று சொன்னான்.

''எனக்குத் தூக்கம் வரவில்லை'' என்றாள் செல்வி

''கண்ணை மூடிப்படு. தூக்கம் வரும்'' என்றான் குமாரன்.

''கண்ணை மூடினால் தூக்கம் வராது.''

''வேறென்ன வரும்?''

''சொப்பனம் வரும்?''

''வந்தாலென்ன?''

''அதில் நீங்கள் வருவீர்கள்.'' -இதைச்சற்று இழுத்தே சொன்னாள் தாமரைச்செல்வி.

குமாரன் விழிகள் அவளை உற்று நோக்கின. குடிசைக்கு வெளியே காய்ந்த நிலவில் அவள் முகம் மோகனகரமாகத் தெரிந்தது. அவள் லேசாக மந்தகாசம் செய்தாள். முத்துப் பற்கள் இரண்டு முகத்தின் வெண்மையைவிட அதிகமான வெண்மையைக் காட்டின.

மீண்டும் குமாரனின் உணர்ச்சிகள் வேகமாகச் சுழன்றன. அவள் எழுந்து அவனை நோக்கி நடந்துவந்து அவன் பக்கத்தில் அமர்ந்தாள். அவள் கையொன்று அவன் கையைப் பற்றியது. பற்றிய மலர்க் கையுடன் அவன் கையும் இணைந்து அவள்

zeevaa

விரல்களை நெரித்தது. என்ன செய்வதென்று புரியாமல் குழம்பி நின்றபோது அந்தக் குழப்பத்தை உடைக்க நான்கு புரவிகள் விரைந்து வந்தன. அதன் தலைவனாக வந்தவன் புரவியிலிருந்து குதித்து, ''தாமரைச்செல்வி!'' என்று அழைத்தான்.

தாமரைச்செல்வி சட்டென எழுந்து நின்றாள். ''என்ன விசேஷம்? இந்த இரவு நேரத்தில் எங்கு வந்தீர்கள்?'' என்று விசாரிக்கவும் செய்தாள்.

''எங்களுடன் உடனடியாக வரவேண்டும்'' என்றான் தலைவன்.

''எதற்கு?'' என்று கேட்டாள் தாமரைச்செல்வி.

''உன் தந்தை சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்'' என்றான் காவலன்.

தூக்கிவாரிப்போட்டது செல்விக்கு. ''யார் சிறைப்படுத்தியது? என்ன குற்றத்திற்காக?'' என்று சீற்றமும் அச்சமும் கலந்த குரலில் வினவினாள் செல்வி.

''ராஜத்துரோகக் குற்றம். அரசாங்கத்து மாடுகளைத் திருடியிருக்கிறார்'' -காவலன் திட்டமாகச் சொன்னான்.

செல்வி இணையிலா திகிலின் வசப்பட்டாள். ''குற்றம்சாட்டியது யார்?'' என்று கேட்டாள் திகிலுடன்.

''உங்களை மணக்க இருப்பவர். முறைப்பிள்ளை'' என்று காவலன் திட்டமாக அறிவித்தான்.

தாமரைச்செல்வியின் இதயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. அவள் ஏதோ சொல்ல முயன்றாள். வாயில் வார்த்தைகள் வராதிருக்கவே அதுவரை அந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த குமாரன், ''இதற்கு விசாரணை உண்டா?'' என்று வினவினான்.

zeevaa

காவலன் அவனை உற்று நோக்கிவிட்டு ''நீங்கள் யார்?'' என்று விசாரித்தான்.

''நீதிபதி நிருபவர்மரின் காவலர் தலைவன்'' என்று அறிவித்த குமாரன் ''விசாரணை எப்பொழுது என்று சொன்னால் அந்தச் சமயத்துக்கு பெரிய மறவர் மகளை நான் அழைத்து வருகிறேன்'' என்றான்.

இதைக்கேட்டு மலைத்தான் காவலன். ''இவளை அழைத்து வர உனக்கு உரிமை இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது.''

''என்ன உரிமை?''

''இப்பொழுது இவள் என்னிடம் சிறையிருக்கிறாள். அவளைக் காக்கத்தான் நான் இங்கு உட்கார்ந்திருக்கிறேன்.''

''சிறைசெய்ய யார் உத்தரவிட்டது?''

''யார் உத்தரவும் தேவையில்லை. நீதிபதியின் காவலர் தலைவனுக்கு யாரைச் சிறை செய்யவும் உரிமை உண்டு'' என்ற குமாரன் எழுந்து நின்று, ''நீ போய் வா. நாளை விசாரணை சமயத்துக்கு இவள் வருவாள்'' என்று அதிகாரம் ஒலித்த குரலில் கூறினான்.

சிறிது சிந்தித்தான் காவலர் தலைவன். ''நான் போக மறுத்தால்?'' என்று கேட்டான்.

''உன்னையும் சிறை செய்வேன்'' என்றான் குமாரன்.

''என்னுடன் இன்னும் மூவர் இருக்கிறார்கள்...'' என்று சுட்டிக்காட்டினான் காவலர் தலைவன்.

zeevaa

குமாரன் நகைத்தான் பெரிதாக. ''முட்டாள்! சென்று விடு, இல்லையேல்...?'' என்று எச்சரிக்கைக் குரல் கொடுத்தான்.

அடுத்து அந்த வீரன் நிற்கவில்லை. ''நாளை விசாரணையில் சந்திக்கிறேன்'' என்று சினத்துடன் சொற்களைக் கூறிவிட்டுத் தனது காவலர்களுடன் சென்று விட்டான்.

அவர்கள் சென்ற பிறகு தாமரைச்செல்வி குமாரன் அருகில் வந்தாள். அவனிடம் நெருங்கி நின்ற வண்ணம் சொன்னாள். ''இவர்கள் அரசாங்க வீரர்கள் அல்ல'' என்று.

''இந்த நாட்டைச் சேர்ந்தவர்களும் அல்ல'' என்றான் குமாரன்.

''வேறு யார்?'' -சந்தேகத்துடன் கேட்டாள்.

''அதைக் கண்டுபிடிக்கத்தான் நான் வந்திருக்கிறேன்'' என்ற குமாரன், ''எனக்கு மெல்ல மெல்ல நிலைமை புரிகிறது'' என்றான். அவன் குரலில் ஆழ்ந்த சந்தேகம் ஒலித்தது.

அதற்குக் காரணம் செல்விக்குப் புரியவில்லை. ''நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள்'' என்றாள் செல்வி.

''எல்லாம் காலத்தில் தெரியும்'' என்ற குமாரன். ''சரி! நீ போய்ப்படு'' என்று கூறி அவளைக் குடிசைக்குள் இழுத்துப் போனான். குடிசை வாயிலைத் தாண்டியதும் அவள் அவன் மீது சாய்ந்து, ''என்னைச் சிறைப்படுத்துங்கள்'' என்றாள். அவன் கைகள் அவள் பூவுடலைச் சுற்றின. ஆனால் எண்ணம் மட்டும் எங்கோ ஓடிக்கொண்டிருந்தது.

zeevaa

# 12. நீதி மண்டபம்

குமாரனின் வலிய கைகளுக்குள் தாமரை மலர் போன்ற மென்மையான தாமரைச்செல்வியின் உடல் சிறைப்பட்டிருந்தாலும் அவன் இரும்புக் கைகள் அவள் உடலை அளவுக்குமீறி இறுக்கினாலும், அந்த இறுக்கலின் விளைவாக அவள் உடலில் வலி எடுத்தாலும், அதனால் அவள் சிறிது இன்ப 'உம்' காரம் ஒன்றை வெளிப்படுத்தினாலும், குமாரன் மனம் மட்டும் அவளைவிட்டு எங்கோ பறந்து கொண்டிருந்ததால், அவன் அவளை அணைத்த தைத் தவிர வேறு சரசங்களில் இறங்கவில்லை. அவன் கைகள் தன்னை இறுக்கினாலும் அவன் உள்ளம் எங்கோ ஓடிவிட்டதைப் புரிந்து கொண்ட செல்வி, "எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசிக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

"காஞ்சியின் கோட்டையை." -இதை மெதுவாகச்சொன்னான் குமாரன். அவன் சொற்களும், சொற்கள் ஒலித்த முறையாலும் அவன் எண்ணம் வேறிடத்துக்குப் பறந்து விட்டதை உணர்ந்த செல்வி தன்னை அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ள சொன்னாள்.

அவனும் அவளைத் தனது பிடியிலிருந்து விடுவித்து, "நேரமாகிறது செல்வி! படுத்துக்கொள். காலையில் பேசுவோம்" என்று சொன்னான்.

"நீங்கள்...?" என்று ஒரு கேள்வி வீசினாள். சிறிது சந்தேகத்துடன்.

"உனக்குக் காவலிருக்கப் போகிறேன்."

zeevaa

# பல்லவ பீடம்



zeevaa

''இத்தனை நாள் எனக்குக் காவல் யார் இருந்தார்கள்?''

''இத்தனை நாள் உன் தந்தை தனிமையில் விட்டுப் போனதே தவறு. இனிமேலும் அந்தத் தவறு நடக்கக் கூடாது. தவிர, முன்புபோல உன் நிலையும் இல்லை.''

''என்ன எனது நிலைக்கு?''

''இப்படி அடிக்கடி உன்னிடம் வம்பு இழுக்க ஆட்கள் வந்ததில்லை. இப்பொழுது வந்தவர்களும் அரசாங்க வீரர்கள் அல்ல என்று நீயே சொன்னாய். ஆகையால் எச்சரிக்கை தேவையாயிருக்கிறது.'' -இதை வெகு திட்டமாகச் சொன்ன குமாரன் அவளை மீண்டும் அணைத்து இழுத்துக்கொண்டு குடிசைக்குள் சென்றான். அங்கு மூலையில் இருந்த பாயொன்றை எடுத்து விரித்து அவளைத் தனது கைகளாலேயே படுக்க வைத்தான்.

அவள் மல்லாந்த நிலையில் கிடந்ததைக் கவனித்த குமாரன் தனது பலவீனத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற திடமனத்துடன் இருந்தாலும் படுத்துக்கிடந்த அவளை ஒருமுறை தழுவி அவள் தோள்களையும் மெல்லத் தனது உதடுகளால் தொட்டுவிட்டு எழுந்திருக்க முயன்றான்.

இம்முறை அவள் கைகள் அவனை இறுகப் பிணைத்துத் தன்மீது சார்த்திக்கொள்ள முயன்றன. அதற்கு இடம் கொடுக்காத குமாரன், ''இதற்குச் சந்தர்ப்பம் வரும் செல்வி. அப்பொழுது நீ தடுத்தாலும் கேட்க மாட்டேன். நீ எனக்குச் சொந்தமானதும் நீயே புரிந்து கொள்வாய்'' என்று கூறினான்.

''சொந்தமாவது எப்பொழுது?'' என்று கேட்டாள்.

''வெகு சீக்கிரம். காஞ்சியின் பிரச்சினை முடிந்ததும்'' என்று அவன் சொன்னான்.

zeevaa

''காஞ்சிதான் முக்கியமா?''

''ஆம் செல்வி.''

''நான்?''

''நீயும் முக்கியம்.''

''காஞ்சி என்னைவிட முக்கியமா?''

''செல்வி!''

''உம்...''

''காஞ்சி எனது தாய். ஒரு மனிதனிடம் தாய்க்கும் உரிமை உண்டு. மனைவிக்கும் உரிமை உண்டு. ஒன்றின் உரிமையை இன்னொன்று பறிக்க முடியாது'' இதை மிகுந்த உறுதியுடன் சொன்ன குமாரன் எழுந்து வெளியே செல்ல முயன்றவனின் கால்களை செல்வி பிடித்தாள்.

''செல்வி! நீ என் காலைப் பிடிக்கலாமா?''

''கணவன் காலைப் பிடிப்பது தவறா?''

''தவறில்லை. உண்மையில் நான்தான் உன் காலை இப்பொழுது பிடிக்க வேண்டும்.''

''பிடியுங்களேன்.''

''பிடிக்கலாம். விவகாரம் அத்துடன் நிற்பதாயிருந்தால்...'' என்று இழுத்துப் பேசிவிட்டுக் கால்களை விடுவித்துக் கொண்டு வெளியே சென்றான்.

குடிசையை விட்டு வெளியே வந்த குமாரன் குடிசையைச் சுற்றிலுமிருந்த காட்டை நோக்கித் தனது பார்வையைச்

zeevaa

செலுத்தினான். பிறகு திருப்தியுடன் தலையை அசைத்துவிட்டுத் தனது புரவியை அருகில் வரும்படி சைகை செய்ய அது அவனை நோக்கி வந்து நிற்கவே, அதனிடம் பேசலானான். ''நான் இங்கேயே படுத்திருக்கிறேன். நீ மேட்டின் அடிவாரத்தில் படுத்துக்கொள். யார் வந்தாலும் குரல் கொடு'' என்று சொல்ல, புரவி அவன் கூறியபடி மேட்டின் அடிக்குச் சென்று கீழேபடுத்து மல்லாந்து முதுகை ஒருமுறை தேய்த்துக் கொண்டது. பிறகு படுத்து தலையை ஒருமுறை ஆட்டிக்கொண்டது.

இந்த விநோதங்களை உள்ளிருந்தே கவனித்த செல்வி மிகவும் வியப்புற்றாள். 'இந்தப் புரவி உண்மையில் மனிதனுக்குப் பிறந்திருக்க வேண்டும்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அத்துடன் வெளியே கண்களை ஓட்டி, வாளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்து உறங்கிவிட்ட குமாரனைக் கவனித்தாள். ''இத்தனை அபாயத்திலும் இவரால் எப்படி உறங்க முடிகிறது? கவலை சிறிதும் இல்லாத மனிதர். கொடுத்து வைத்தவர்'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். 'எனக்கு உறக்கம் வராதிருக்க இவர் மட்டும் எப்படி உறங்குகிறார்?' என்று தனக்குள்ளே வினா எழுப்பி, 'இரும்பு மனம் படைத்தவர்' என்று அவனைத் தூற்றவும் செய்தாள்.

அவள் கண்களுக்கு நன்றாகத் தெரிந்த அவன் படுத்த நிலையிலேயே ஒரு தீரமும் எச்சரிக்கையுமிருந்ததைக் கவனித்தாள் தாமரைச்செல்வி. மல்லாந்து படுத்த நிலையிலும் அவன் வலது கை பக்கத்திலிருந்த வாளைத் தொட்டுக் கொண்டிருந்தது. இடைக் கச்சையிலிருந்த குறுவாளின் பிடிமீது இடது கை லேசாகக் கிடந்தது. எந்த விநாடியிலும் அந்தக் கைகள் இயங்குமென்பதையும் புரிந்து கொண்டதால் அவனை காதலனாக அடைந்ததைப் பற்றிப் பெருமையே கொண்டாள். இத்தனைக்கும் அவன் தன்னைப்

zeevaa

பற்றிய முழு விவரத்தையும் சொல்லவில்லையென்பதை எண்ணிப் பார்த்து, 'இவர் என்னையும் சந்தேகித்திருக்கிறாரே?' என்றும் எண்ணமிட்டாள். அவனைப்பற்றிய எண்ணங்கள் சிந்தையிலோட மெதுவாகக்கண்களை மூடினாள். மூடிய கண்கள் பயனளிக்க வில்லை. புறக்கண் மூடியதும் அகக்கண்கள் திறந்ததால் அதிலும் குமாரனே வந்து அவளை இம்சைப்படுத்தலானான்.

**ம**றுநாள் காலை நீண்ட நேரம் குமாரன் எழுந்திருக்கா விட்டாலும் செல்வி மட்டும் எழுந்து பசுக்களின் பாலைக் கறந்து சுடவைத்து அவனை எழுப்பினாள். மலர்ந்த முகத்துடன் குமாரன் ''இத்தனை நேரமா தூங்கிவிட்டேன். எஜமான் இல்லத்துக்குப் போகவேண்டுமே!'' என்று சொல்லிப் பல்துலக்கி முகம் கழுவி செல்வி காய்ச்சிக் கொடுத்த பாலை அருந்தினான்.

''பால்தான் எத்தனை சுவை?'' என்று சிலாகிக்கவும் செய்தான்.

''சர்க்கரை கூடப் போடவில்லை'' என்றாள் தாமரைச்செல்வி.

''சர்க்கரை எதற்கு?'' என்றான் குமாரன்.

''இல்லாவிட்டால் பால் இனிக்குமா?'' என்று அவள் கேட்டாள்.

''கொடுக்கும் கையைப் பொறுத்தது'' என்று சொன்ன குமாரன், ''சரி சரி சீக்கிரம் கிளம்பு'' என்று உத்தரவிட்டான்.

''எங்கு?'' என்று அவள் விசாரித்தாள்.

''விசாரணைக்கு'' என்றான் குமாரன்.

''நான் குளிக்கவில்லை'' என்று ஏதோ சொல்ல முயன்றவளை, ''நானிருக்கும் விடுதியின் பின்னால் குளமிருக்கிறது. உலர்ந்த ஆடையை மட்டும் எடுத்து வா'' என்று துரிதப்படுத்த, அவள் புறப்பட்டாள்.

zeevaa

தனது புரவியிலேயே அவளை ஏற்றித் தானும் ஏறிக்கொண்டு குமாரன் காஞ்சி எல்லை வரையில் பயணம் செய்து, எல்லை வந்ததும் தான் புரவியிலிருந்து இறங்கி புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு முன் நடந்தான். நிருபவர்மர் இல்லத்தருகில் வந்ததும் அவளை இறக்கிவிட்டு, காவலர் இல்லத்துக்கு அழைத்துச் சென்று அங்கு தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையைக் காட்டினான். நீதிபதி மாளிகையின் பின்புறக் குளத்தையும் காட்டி, ''அங்கு நீராடி இந்த அறையில் புத்தாடை புனைந்து இரு. நான் நீதிபதியைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு நிருபவர்மர் மாளிகைக்குள் சென்றான்.

நிருபவர்மர் கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்தார். குமாரன் வந்ததும் கேள்வி ஏதும் கேட்கவில்லை. அவர் புருவங்களை மட்டும் கேள்வி கேட்கும் பாவனையில் உயர்த்தினார்.

குமாரன் முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துரைத்து ''காஞ்சியின் காவலன் பெயரால் வேறு சிலரும் செயல்படுகிறார்கள்'' என்றும் கூறினான்.

புரிந்ததற்கு அறிகுறியாக நீதிபதி தலையசைத்து ''அந்தப் பெண் எங்கே?'' என்று கேட்டார்.

''எனக்கு நீங்கள் அளித்த பின்வீட்டில் இருக்கிறாள்.''

இதைக் கேட்டதும் நீதிபதி அஞ்சுவாரென்றோ, அதிர்ச்சி அடைவாரென்றோ குமாரன் நினைத்ததால் ஏமாந்தே போனான். அவன் சொன்ன செய்தியை சர்வ சாதாரணமாக ஏற்றுக்கொண்ட நீதிபதி பெரியதனக்காரர், ''அவளை அழைத்துக்கொண்டு பத்து நாழிகைக்கு மேல் நீதி மண்டபத்துக்கு வந்து சேர்'' என்று கூறி விட்டார்.

zeevaa

அவர் சொற்படியே குமாரன் செல்வியை அழைத்துக் கொண்டு காஞ்சி அரண்மனையின் ஒரு பகுதியிலிருந்த நீதி மண்டபத்தை அடைந்தான். அங்கு காஞ்சியின் தலைவன் நீதிபதிக்குக் கீழே இருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தான். சற்று உயர்ந்த மேடையில் அமர்ந்திருந்த நீதிபதி அவர்களைப் பார்த்தும் பார்க்காதது போலவே நடந்து கொண்டார். முதலில் சில வழக்குகளை விசாரித்துவிட்டு தாமரைச்செல்வியைப் பற்றிய வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள, தாமரைச்செல்வி அவர் முன்பு நிறுத்தப்பட்டாள்.

அந்த சமயத்தில் திடீரென்று எழுந்த காஞ்சியின் தலைவன், ''நீதிபதியவர்களே! மன்னிக்க வேண்டும்'' என்றான்.

''என்ன தலைவரே?'' என்று கேட்டார் நீதிபதி.

''இந்த விசாரணையைத் தாங்கள் நடத்த முடியாது'' என்றான் காஞ்சியின் தலைவன்.

''ஏன்?'' -நீதிபதி சிறிதும் கலங்காமல் சர்வசாதாரணமாகக் கேட்டார்.

''இந்த வழக்கில் தங்கள் காவலர் தலைவன் தலையீடு இருக்கிறது. இவளைச் சிறை செய்ய நான் அனுப்பிய வீரர்களை இவன் திருப்பி அனுப்பி விட்டான்'' என்றான் தலைவன்.

''அவர்கள் ஏன் கடமையைச் செய்யாமல் திரும்பினார்கள்?''

''தங்கள் காவலர் தலைவன், தானே அவளைச் சிறை செய்வதாகக் கூறினானாம்.''

''அதை அவர்கள் கேட்பானேன்?''

zeevaa

"தங்கள் பெயரைக் கூறியதால். தங்கள் பெயரால் அவளைத் தானே சிறை செய்திருப்பதாக இவன் அறிவித்ததால்?"

நீதிபதி சிறிதும் சிந்திக்கவில்லை. "என் காவலர் தலைவனுக்குச் சிறைசெய்ய உரிமையில்லையா?" என்று வினவினார் நீதிபதி.

"உண்டு. ஆனால் அவன் அவளைச் சிறை செய்திருந்தால் சிறைக்கோட்டத்திற்கு அவளை அழைத்து வந்திருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. உங்கள் இல்லத்திலிருக்கும் தனது விடுதிக்கு அழைத்து வந்திருக்கிறான். அதற்குத் தாங்களும் சம்மதித்திருக்கிறீர்கள். இங்கு இந்த வழக்கில் தங்களிடம் நீதி கிடைக்காது" என்று சற்று உரத்த குரலில் கூறினான். அத்துடன் நிறுத்த வில்லை அவன். "குற்றவாளிக்கும் இவனுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது" என்றும் சொன்னான்.

"அதற்கு சாட்சி உண்டா?" என்று கேட்டார் நீதிபதி.

"உண்டு" என்ற தலைவன், "சாட்சி இங்கு வா" என்று அழைக்க, நீதிமண்டபத்தின் ஒரு மூலையிலிருந்து ஒருவன் நடந்து வந்தான். அவன் செல்வியின் முறைப்பிள்ளை.



zeevaa

## 13. விசாரணை

தாமரைச்செல்விக்கும் தனக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் காஞ்சியின் தலைவன் நீதிமண்டபத்தில் அறிவித்ததும் அங்கு கூடியிருந்த மக்கள் கசமுசாவென்று பேசிக்கொண்டாலும் அதைப்பற்றிச் சட்டை செய்யவில்லை பப்பகுமாரன். ஆனால் நீதிபதி மட்டும் முகத்தைச் சுளித்துத் தலைவனை நோக்கி, "இது நீதி மண்டபமா அல்லது சந்தைக் கடையா?" என்று எரிந்து விழவே, காவலன் நீதிமண்டபக் கட்டியங்காரனுக்குச் சைகை செய்ய, கட்டியங்காரன் எழுந்திருந்து, "அமைதி! அமைதி!" என்று கூவினான்.

அமைதி ஏற்பட்டதும் எதிரே நின்ற முறைப்பிள்ளையை நோக்கி நீதிபதி, "இந்த வழக்கைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?" என்று வினவினார்.

முறைப்பிள்ளை மௌனமாக இருந்தான்.

"சரி சொல்" என்று நீதிபதி உத்தரவிட, முறைப்பிள்ளை ஒருமுறை தாமரைச்செல்வியையும் நோக்கி, குமாரனையும் நோக்கிவிட்டுச் சிறிது நடுங்கினான், ஆனால் பேச்சு வராததால் மென்று விழுங்கவே, நீதிபதி: "உம்... சொல் உனக்குத் தெரிந்ததை" என்று இரண்டாம் முறை அதட்டினார்.

அதற்குப் பிறகு தாமதித்தால் தன்னையும் பிடித்துச் சிறையில் போட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தால், "இவளை மணக்க வேண்டியவன் நான். ஆகையால் இவளுக்கு முறைப்பிள்ளை" என்று தடுமாறித் தடுமாறி வார்த்தைகளை உதிர்த்தான்.

zeevaa

''சரி. வேறு என்ன தெரியும் உனக்கு?'' -நீதிபதி சற்றுக் கடுமையாகக் கேட்டார்.

''இவன் யாரையும் மதிப்பதில்லை'' என்றான் முறைப்பிள்ளை அடுத்தபடியாக.

நீதிபதி மேற்கொண்டு கேள்வி எதுவும் கேட்கவில்லை. காஞ்சியின் தலைவனை நோக்கினார். முறைப்பிள்ளைக்கு அருகில் நின்றிருந்த தலைவன், ''இந்த வழக்கைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? அதைச் சொல்'' என்று அதட்டியதுடன் அவன் தோளையும் இறுக்கிப் பிடித்தான்.

அதற்குப் பிறகு முறைப்பிள்ளை உளற ஆரம்பித்தான். ''வழக்கு என்னவென்று நீங்கள் சொல்லிக் கொடுக்கவில்லையே'' என்றான் எல்லோர் காதிலும் விழும்படியாக. கூட்டத்தில் பெரும் நகைப்பு ஏற்பட்டதால் தலைவன் ஒரு முறை கூட்டத்தை உற்று நோக்கினான், சீற்றம் மிகுந்த கண்களால். அதன் விளைவாகக் கூட்டத்தில் அமைதி ஏற்பட்டதும் தலைவன் விசாரித்தான். ''இவளுக்கும் நீதிபதியின் காவலர் தலைவனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகச் சொன்னாயல்லவா?'' என்று கேட்டான் தலைவன்.

''ஆம் சொன்னேன். ஆனால் இந்த வழக்குக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று முறைப்பிள்ளை கேட்டான்.

''கேள்வி கேட்கவேண்டியவன் நான்'' -தலைவன் அச்சுறுத்தும் வகையில் பேசினான்.

''நான் பதில் மட்டும் சொல்ல வேண்டுமா?'' என்று கேட்டான் முறைப்பிள்ளை.

''ஆம்'' என்ற தலைவன், இவர்கள் இருவருக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பது உனக்கெப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

zeevaa

முறைப்பிள்ளைக்கு அதுவரை இருந்த அச்சம் நீங்கி தைரியம் வந்துவிட்டதால், ''நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன்'' என்றான். சபையில் லேசாக நகைப்பொலி ஏற்பட்டது. நீதிபதிகூடத் தமக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொள்ளத் தமக்கு முன்னிருந்த பலகையில் முகத்தைக் குனிந்து கொண்டார்.

தலைவன் மேலும் விசாரிக்கத்துவங்கி, ''எப்பொழுது பார்த்தாய்? எந்த இடத்தில் பார்த்தாய்?'' என்று கேட்டான்.

''நான் மட்டும் பார்க்கவில்லை? தாங்களும் பார்த்தீர்கள். இன்னும் பலரும் பார்த்தார்கள்'' -முறைப்பிள்ளை திட்டவட்டமாகச் சொன்னான்.

''நானா?'' தயக்கத்துடன் கேட்டான் தலைவன்.

''ஆம் தாங்கள்தான் மதுமண்டபத்தில் தங்களைச் சேர்ந்த வீரனொருவன் இவளைக் கையாள முயன்ற சமயத்தில் இவள் திமிறி, சேலையில் சில இடங்கள் கிழிய வெளியே ஓட முயன்றபோது, இவன்தான் அங்கு தோன்றி அவளைத் தனது கைகளால் தொட்டுத்தனது புரவியில் ஏற்றினான். பிறகு அவளைப் பிடித்தவனையும் கைகளில் குத்தி அவனைக் காயப்படுத்தினான். அவனைச் சூழ முயன்ற வீரர்களையும் கொன்றிருப்பான். தாங்கள் தலையிடாதிருந்தால், அவர்களையும் கொன்றிருப்பான்'' என்று மேலும் ஏதோ சொல்லப்போன முறைப்பிள்ளையை ஒரு பார்வையால் அடக்கிய தலைவன், ''இதை யார் கேட்டது உன்னை? இவளுக்கும் இவனுக்கும் உள்ள தொடர்பைப்பற்றிச் சொல்'' என்று வினவினான்.

''உங்கள் முன்னாலே என் முறைப்பெண்ணை இவன் தொட்டுத் தூக்கித் தனது புரவி மேல் ஏற்றினான். பிறகு அவளைத் தனியாக

zeevaa

அழைத்துக்கொண்டு மதுமண்டபத்திலிருந்து சென்றான். இது உங்கள் கண் முன்பே நடந்தது'' என்றான் முறைப்பிள்ளை.

முறைப்பிள்ளை அடிக்கடி தன்னையும் விசாரணையில் சேர்த்து இழுப்பதைப் பார்த்து இவனை மேற்கொண்டு விசாரித்தால் காஞ்சி மக்கள் நகைப்பார்களென்ற அச்சத்தால், ''அது கிடக்கட்டும். இவர்களிருவருக்கும் நெருங்கிய உறவு உண்டு என்பதற்கு என்ன அத்தாட்சி?'' என்று தலைவன் கேட்டான்.

ஆனால் முறைப்பிள்ளை விடவில்லை.

''இவன் மது மண்டபத்திலிருந்து என் முறைப் பெண்ணை தனியாக அழைத்துச் சென்றிருக்கிறான். தவிர அன்று இரவு முழுவதும் இவள் குடிசையிலேயே தனியாக இருந்திருக்கிறான். இது போதாதா?'' என்று கேட்டான்.

அதுவரை வாளாவிருந்த குமாரன் எழுந்திருந்து ''நீதிபதி அவர்களே! இவனை நான் ஒரு கேள்வி கேட்கலாமா?'' என்று வேண்டினான்.

''கேள்'' -ஒற்றைச் சொல்லில் வந்தது நீதிபதியின் பதில்.

''முறைப்பிள்ளை!'' என்று இன்பமான குரலில் துவங்கினான் குமாரன்.

''என்ன?'' -முறைப்பிள்ளை பதில் சொன்னான்.

''நானும் இவளும் தனியாகப் பெரிய மறவர் குடிசையில் இருந்தது உமக்கு எப்படித் தெரியும்'' என்று வினவினான் குமாரன்.

''வேறு எப்படி இருக்க முடியும்?'' என்று முறைப்பிள்ளை கேட்டான்.

''இவள் தனியாக இருந்திருக்கக் கூடாதா?''

zeevaa

''இருந்திருக்க முடியாது!''

''எப்படித் தெரியும் உமக்கு?''

''பெரிய மறவரைத்தான் சிறையிலடைத்திருக்கிறார்களே!''

''யார் சொன்னது?''

''காஞ்சியின் தலைவர்தான் சொன்னார்.''

''வேறென்ன சொல்லிக் கொடுத்தார்?''

''இங்கு என்ன சொல்ல வேண்டுமென்பதை எல்லாமே சொல்லிக் கொடுத்தார்'' என்று சற்றே இரைந்தே சொன்ன முறைப்பிள்ளை, காவலனை நோக்கி, ''நான் சொன்னது சரிதானே?'' என்றும் வினவினான்.

இதைக் கேட்டதும் நீதிமண்டபத்தில் 'கொல்' என்ற சிரிப்பு பெரியதாக ஒலிக்கவே, கட்டியங்காரன் தனது பெரிய பூண் போட்ட கருங்காலி மரத்தடியைத் தரையில் மும்முறை தட்டி, ''அடுத்து சிரித்து நீதிக்கு இடைஞ்சல் செய்பவர்கள் சிறை செய்யப் படுவார்கள். இவர் சாட்சியைத் தடை செய்பவர் யாருக்கும் தண்டனை கிடைக்கும்'' என்று அதட்டவே சத்தம் அடங்கியது.

முறைப்பிள்ளைக்கு அசட்டுத் துணிவு அதிகமாகிவிட்டதால் அவன் மேலும் சொன்னான்: ''இதற்கு வேறு சாட்சிகளும் இருக்கிறார்கள்'' என்று.

நீதிபதி தமது கண்களை முறைப்பிள்ளைமீது ஓட்டி, ''யார் அவர்கள்?'' என்று கேட்டார்.

''என் முறைப்பெண்ணைச் சிறை செய்யச் சென்ற காவலர்'' என்றான் முறைப்பிள்ளை.

zeevaa

''அவர்கள் என்ன கண்டனர்?'' என்று விசாரித்தார் நீதிபதி.

''இந்தக் குமாரன் படுத்திருந்தான். குடிசைக்கு வெளியே...''

''உம், சொல் மேலே.''

''அவன் பக்கத்தில் இவள் நின்றிருந்தாள்.''

''நின்றிருந்தால் தவறென்ன?''

நீதிபதியின் கேள்வியால் குழப்பமடைந்த முறைப்பிள்ளை, ''இரவில் இவனுடன் இவள் தனித்திருக்கலாமா?'' என்று கேட்டான்.

''இவன் அவளைக் காத்து அழைத்துச் சென்றதாக நீயே சொன்னாயல்லவா?'' -நீதிபதி கனிவுடன் கேட்டார்.

''ஆம்'' என்றான் முறைப்பிள்ளை.

''இவள் குடிசையை அடைந்தபோது இவள் தந்தை அங்கில்லை?''

''ஆம், அவரைத்தான் நாங்கள் பிடித்து வைத்து விட்டோமே.''

''அப்படியிருக்க அவளைத் தனித்துக் குடிசையில் விட்டு வர முடியுமா? அதுவும் மீண்டும் அவளை யாராவது உபத்திரவம் செய்தால் அவளைக் காப்பதற்கு யாராவது வேண்டாமா?''

''கண்டிப்பாக வேண்டும்.''

''அப்படியிருக்க, முதலில் காத்தவன் அவளைக் காக்க குடிசையருகில் காவலிருந்தால் அது முறைகெட்ட செய்கை யாகுமா?''

இதைக் கேட்டதும் பதில் சொல்லத் தெரியாமல் விழித்த முறைப்பிள்ளை காவலனை நோக்கி, ''இதற்கு என்ன பதில்

zeevaa

சொல்லட்டும்?'' என்று வினவ, நீதிமண்டபத்தில் அனைவருக்கும் மறுபடியும் நகைப்பை நிறுத்த முடியவில்லை. நீதிபதி தமது முன்பிருந்த பலகையைத் தட்டி எச்சரிக்கை செய்த பின்பே சிரிப்பு அடங்கியது.

''உன் சாட்சி போதும், இப்படி வந்துவிடு'' என்றான் தலைவன்.

அந்த சாட்சி அப்புறம் சென்றதும் அத்துடன் வழக்கு முடிந்துவிடும் என்று நீதிபதி எதிர்பார்த்தார். ஆனால் அங்கு வேறொரு பூதம் கிளம்பியது. குமாரன் எழுந்து வந்து, ''நீதிபதியவர்களே! நீதியை முன்னிட்டு நானும் சில கேள்விகளை கேட்க விரும்புகிறேன்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

''கேள்'' என்றார் நீதிபதி.

''இவளைச் சிறை செய்யக் காவலர் தலைவன் வீரர்களை அனுப்பினார்'' என்று மெதுவாக விளக்கினான். ''அவர்களைத் தடுத்துத் திருப்பியனுப்பியது நான்தான்'' என்றான்.

''அது குற்றம்'' என்றார் நீதிபதி.

''இவளை விசாரணைக்கு அழைத்து வருவதாக நான் ஒப்புக் கொண்டேன். அழைத்து வந்தேன். யாரையும் சிறை செய்வதற்கு நீதிபதியின் காவலர் தலைவனுக்கு அதிகாரமுண்டு'' என்றான் குமாரன்.

ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் நீதிபதி. ''அவர்களையும் தாங்கள் விசாரிக்க வேண்டும்'' என்று குமாரன் கூறினான்.

இதைக் கேட்டதும் காஞ்சியின் காவலன் எழுந்து நின்றான். ''அவர்களை எதற்கு விசாரிக்க வேண்டும்?'' என்று கேட்டான் காவலன்.

zeevaa

''இவளைச் சிறை செய்ய வந்தவர்களுடன் இவளை அனுப்ப மறுத்தவன் நான். ஆகையால் காஞ்சித் தலைவன் உத்தரவை மீறியிருக்கிறேன். அது குற்றம். ஆகவே அவர்கள் என்னைப்பற்றி சாட்சி சொன்னால் உண்மை விளங்கும்'' என்றான் குமாரன்.

''அவசியமில்லை'' என்றான் காவலன்.

''அவசியமா? அவசியமல்லவா? என்பது நிதிபதி தீர்ப்பளிக்க வேண்டிய விஷயம். இது நீதி மண்டபம். நீதிபதியைத் தவிர வேறு யாரும் எந்த முடிவையும் செய்ய முடியாது'' என்று திட்டமாக உரைத்த குமாரன், ''அந்த வீரர்களில் யாராவது ஒருவன் வரட்டும்'' என்றான்.

காஞ்சியின் காவலன் பெரும் சங்கடத்திலிருந்தான். அப்பொழுது நீதிபதி கேட்டார்: ''அவர்களை விசாரிக்க வேண்டிய அவசியம்?'' என்று.

''அவர்கள் காஞ்சி மண்டலத்தின் வீரர்கள் அல்ல!'' என்று பெரிய அதிர்வெடியை எடுத்துவீசினான் குமாரன்.

நீதிபதி காவலர் தலைவனை நோக்கித் தமது கண்களை ஓடவிட்டார். காவலர் தலைவன் பேயறைந்தது போல் உட்கார்ந்திருந்தான்.

zeevaa

# 14. சிறையிருந்த காட்சி

**தா**மரைச்செல்வியைச் சிறை செய்ய வந்தவர்கள் காஞ்சியின் வீரர்கள் அல்ல என்ற பெரிய அதிர்வெடியை குமாரன் போட்டதால் நீதிமண்டபத்தில் முதன் முதலாக 'ஹா' என்ற பிரமிப்பு ஒலியும், அதை அடுத்துப் பூரண அமைதியும் நிலவியது. அந்த அமைதி ஏற்படும்வரை பேயறைந்தது போல் உட்கார்ந்துவிட்ட காஞ்சி காவலர் தலைவன், அமைதி ஏற்பட்டதும் தனது அடக்கத்தை உதறி எழுந்து, ''நீதிபதி அவர்களே! இது சுத்த அபாண்டம். காஞ்சியின் காவலர்களைத் தவிர வேறு யாரை நான் அனுப்ப முடியும்? குற்றவாளியைச் சிறைப் பிடிக்க?'' என்ற கேள்வியொன்றை வீசினான் சபைமுன்பு.

அந்தக் கேள்விக்கு குமாரன் என்ன பதில் சொல்லப் போகிறானோ என்பதை வழக்கைக் காண வந்தவர்கள் சிந்தித்திருக்கையில் குமாரன் நீதிபதியை நோக்கி, ''அவர்கள் காஞ்சி மண்டல வீரர்களானால் அவர்களை சாட்சி சொல்ல அழைப்பதில் காவலர் தலைவருக்கு என்ன கஷ்டமிருக்க முடியும்?'' என்று பதில் கேள்வியை வீசினான்.

நீதிபதி காவலர் தலைவனை நோக்கி, ''ஆம்! சிறை செய்யச் சென்றவர்களில் யாராவது ஒருவன் வரட்டும் சாட்சி சொல்ல'' என்றார்.

அப்பொழுதும் காவலர் தலைவன் மசியவில்லை. ''அவர்களை வேறு வேலையாக வெளியூருக்கு அனுப்பியிருக்கிறேன்'' என்றான்.

zeevaa





zeevaa

குமாரன் விடவில்லை. ''நேற்றிரவுக்குள் அத்தனை அவசரமான வேலை என்ன இருக்கும்? அதுவும் இன்று விசாரணை இருக்கும் போது? இவளைச் சிறை செய்ய வந்தவர்களை வேறு ஊருக்கு அனுப்புவது எப்படி முறையாகும்? அது நீதிக்குக் களங்கம் செய்வதல்லவா?'' என்று கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாக வீசினான்.

''உனக்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை'' என்றான் தலைவன்.

''ஆனால் நீதிக்கு பதில் சொல்ல வேண்டும். நீதியை நிறைவேற்றவும், விசாரணைக்கு உதவவுந்தானே நாம் இங்கு கூடியிருக்கிறோம்?'' என்று வினவினான் குமாரன்.

''தலைவரே! குமாரன் சொல்வதில் நியாயமிருக்கிறது. சிறை செய்ய முயன்றவர்களின் சாட்சி இதற்கு அவசியம். அவர்களை வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறினார் நீதிபதி.

''அதுவரை குற்றவாளி...?'' என்று இழுத்தான் காவலர் தலைவன்.

''குற்றவாளியென்று நிரூபிக்கப்படும்வரை இந்தப் பெண் குற்றவாளியல்ல'' என்றார் நீதிபதி.

''இவளை விசாரணை முடியும் வரை சிறையில் வைத்தால் என்ன?'' என்று வினவினான் தலைவன்.

''அத்தகைய முடிவு நிரபராதியைச் சிறையில் வைப்பதாகும். காஞ்சி மன்னன் நீதி அதற்கு இடந்தராது'' என்று சுட்டிக்காட்டினான் குமாரன்.

அது நியாயம் என்று குறிப்பிட நீதிபதி தலை அசைத்தார்.

zeevaa

நீதிபதியின் மனப்போக்கைப் புரிந்துகொண்ட காவலர் தலைவன். ''அதுவரை இவள் எங்கிருப்பாள்?'' என்று வினவினான்.

''அவள் குடிசையில். என் பாதுகாப்பில்'' என்றான் குமாரன்.

''ஐயோ, அது கூடாது'' என்று கூவினான் முறைப்பிள்ளை.

''என்னுடன் இந்தமுறைப்பிள்ளையும் இருக்கலாம்.'' -இதைச் சொன்ன குமாரன் முறைப்பிள்ளையை உற்று நோக்கினான்.

''நான் மாட்டேன். இவர்களிருவரும் என்னைக் கொன்றுவிடுவார்கள்.'' என்று முறைப்பிள்ளை அலறினான்.

நீதிபதி காவலர் தலைவனை நோக்கி ''நீங்கள் வெளியூருக்கு அனுப்பியிருக்கும் காவலர் வர எத்தனை நாளாகும்?'' என்று வினவினார்.

''என்னால் திட்டமாகச் சொல்ல முடியாது.'' -காவலன் தலைவன் சங்கடத்துடன் பேசினான்.

இந்தச் சமயத்தில் நீதிபதியை நோக்கிய குமாரன், ''எனக்கு உத்தரவு கொடுத்தால் சிறை செய்ய வந்த காவலரின் தலைவனை இரண்டே நாட்களில் நான் கொண்டு வருகிறேன்'' என்றான்.

''உன்னால் மட்டும் எப்படி முடியும்?'' என்று நீதிபதி கேட்டார்.

''அவர்களில் ஒருவன் மதுமண்டபத்தில் தாமரைச் செல்வியை தூக்கிக்கொண்டு ஓடி வந்தவன். அவனுக்கு ஒரு அடையாளம் இருக்கிறது'' என்று குமாரன் சொன்னான்.

''என்ன அடையாளம்?'' என்று தலைவன் கேட்டான்.

''அதை இப்பொழுது சொல்ல அவசியமில்லை.'' -குமாரன் பதில் திட்டமாயிருந்தது.

zeevaa

''ஏன்?''

''தெரிந்தால் அவன் எச்சரிக்கையடைந்து விடலாம்.''

''எப்படி எச்சரிக்கை அடைவான்? அவன்தான் ஊரிலில்லையே?''

''ஊரில் இல்லை என்பதற்கு உங்கள் சொல்தான் சாட்சி.''

''நான் பொய் சொல்கிறேனென்கிறாயா?''

''அப்படி எதுவும் நான் சொல்லவில்லை.''

''நீ சொன்னதற்கு வேறு என்ன பொருள்?''

''உங்கள் உத்தரவை ஏற்று அவன் வெளியூர் போக முடியாது. போகும் நிலையில் அவன் இல்லை.''

அடுத்து காவலர் தலைவன் குமாரனுடன் பேச்சுக் கொடுக்காமல் நீதிபதியை நோக்கி, ''இவன் ஊகத்தை வைத்து நீதியைத் தள்ளிப்போட முடியுமா?'' என்று கேட்டான்.

''இவன் ஊகம் பொய்யென்று தெரியும் வரை நாம் தீர்ப்புக் கூற முடியாது'' என்ற நீதிபதி தாமரைச் செல்வியை நோக்கி, ''தாமரைச் செல்வி! உன்மீது திட்டமான குற்றம் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. அதுவரை நீ உன் குடிசையைவிட்டு எங்கும் போக முடியாது. சிறையிலிருக்கும் உன் தந்தையையும் விடுதலை செய்கிறேன். உன்னுடன் அவரும் இருக்கலாம். அவர் மீதுள்ள வழக்கு இன்னும் விசாரணைக்கு வரவில்லை. வழக்கு முடியும் வரை அவரும் நீயும் காஞ்சியைவிட்டு வெளியே செல்ல முடியாது. சென்றால் உடனடியாக நீதியை மீறிய குற்றத்திற்குத் தண்டிக்கப்படுவீர்கள்'' என்று கூறி நீதிபதி தமது ஆசனத்திலிருந்து எழுந்து நீதி மண்டபத்தின் உட்புற அறைக்குச் சென்று விட்டார்.

zeevaa

அவர் சென்றதும் காவலர் தலைவனை அணுகிய குமாரன், ''தலைவரே! இவள் தந்தையைச் சிறையிலிருந்து அனுப்பினால் நான் இருவரையும் அழைத்துச் சென்று அவர்களைக் குடிசையில் விட்டு விடுகிறேன்'' என்றான் மிகவும் பணிவான குரலில்.

குமாரனை, தலைவன் கொலைப் பார்வையாய்ப் பார்த்தான். பிறகு தனது காவலன் ஒருவனை விளித்து ''இவருடன் பெரிய மறவனை அனுப்பி வை'' என்று உத்தரவிட, குமாரன், தாமரைச் செல்வி பின்தொடர சிறைச்சாலையை நோக்கிச் சென்றான்.

அவர்கள் சென்றதும் முறைப்பிள்ளை காவலர் தலைவனிடம் ஓடிவந்து ''மறுபடியும் அவள் அவனுடன் போகிறாளே!'' என்று முறையிட்டான்.

காவலர் தலைவன் அவனை மிக இகழ்ச்சியாக நோக்கி, ''இல்லாவிட்டால் உன்னைப் போன்ற முட்டாளுடனா வருவாள்?'' என்று கூறிவிட்டுச் சென்றான் மண்டபத்துக்கு வெளியே.

தாமரைச்செல்வியுடன் காவலனைத் தொடர்ந்த குமாரன் அன்றுதான் முதன் முதலாகக் காஞ்சியின் சிறைச் சாலையைப் பார்த்தான். சிறைச்சாலையின் சுவர்கள் மிகக் கெட்டியாயிருந்தன. நுழைவு வாயில் கதவும் நல்ல மரத்தால் செய்யப்பட்டுப் பின்புறத்தில் இரும்புக் கம்பிகளுடன் அடிக்கப்பட்டிருந்ததால் கதவை உடைப்பது குதிரைக் கொம்புதான் என்று தீர்மானித்தான் குமாரன். அதற்கும் இரண்டாவது வாயிலுக்கும் இருந்த இடைவெளியில் ஆயுதந்தரித்த வீரர்கள் சுற்றிக்கொண்டே இருந்தார்கள். இரண்டாவது வாயிலைத் தாண்டியதும் இருந்த சிறை அறைகள் நல்ல கெட்டிக் கம்பிகளால் பாதுகாக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒரு வீரனை விளித்த குமாரன், ''அந்தப் பெரிய மறவனை அழைத்து வா'' என்று கூற, இரண்டு மூன்று அறைகளுக்

zeevaa

கப்பாலிருந்த ஒரு அறையைத் திறந்து பெரிய மறவனை அழைத்து வந்தான் காவலன்.

பெரிய மறவன் நிலை பார்ப்பதற்குப் பரிதாபமாயிருந்தது. அவனால் நடக்க முடியாமல் திணறினான். அவனை செல்வி ஒருபுறமும் குமாரன் ஒரு புறமும் தாங்கி அழைத்துச் சென்றார்கள். அப்படிச் சென்றபோது ஒரு அறையின் முன்னே சிறிது நின்ற குமாரன் சட்டென்று மேலே நடக்கலானான். சிறைச்சாலைக்கு வெளியில் வந்ததும் தனது புரவியிலும், தாமரைச்செல்வியின் புரவியிலும் இருவரையும் ஏற்றி, ''நீங்கள் செல்லுங்கள் குடிசைக்கு, பின்னால் நான் வருகிறேன்'' என்று கூறினான்.

தாமரைச்செல்வி தலைகுனிந்த வண்ணம் புரவியில் ஏறினாள். பெரிய மறவன் சிறிது நிதானித்து குமாரனை நோக்கி, ''தம்பி! உனக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று குழைந்த குரலில் கூறிவிட்டு, குமாரனால் புரவியில் ஏற்றப்பட்டு, மெதுவாகப் புரவியை நடத்தினான்.

சிறைச்சாலையை மீண்டும் உற்றுநோக்கி, அவர்கள் சென்றதும் கால்நடையாகவே நீதிபதி இல்லத்திற்குச் சென்ற குமாரன், வழிநெடுக சிந்தனையில் இறங்கிய வண்ணம் நடந்தான். நீதபதி இல்லத்தை அடைந்ததும் கொட்டடியிலிருந்து ஒரு புரவியை அவிழ்த்துக் கொண்டு செல்வியின் குடிசையை அடைந்தான். அப்பொழுதுதான் புரவியிலிருந்து தந்தையை இறக்க முயன்று கொண்டிருந்தாள் செல்வி. அதைக் கண்ட குமாரன், ''செல்வி! நீ அப்புறம் போ'' என்று கூறித் தனது புரவியை நோக்கிக் கையைக் காட்ட அது மெதுவாக முழங்கால்களை மடித்துப் படுத்தது. அதனால் சங்கடமின்றிப் புரவியிலிருந்து இறங்கியும் பெரிய மறவனால் நடக்க முடியாததால் அவரைப் பிடித்துக் குடிசை மேட்டில்

zeevaa

அழைத்துப் போய் குடிசைக்குள் படுக்க வைத்தான். பிறகு செல்வியை அழைத்து, ''உன் தந்தைக்கு உள் காயம் நிரம்ப இருக்கிறது. இன்று ஒத்தடம் கொடு. பிறகு உன்னைச் சந்திக்கிறேன்'' என்று கூறி நீதிபதி புரவியை அங்கேயே விட்டு விட்டு, தனது புரவிமீது ஏறி நீதிபதி இல்லத்திற்குச் சென்றான்.

அவன் அந்தப் பெரு மாளிகைக்கு வருமுன்பாகவே அங்கு வந்துவிட்ட நீதிபதி நிருபவர்மர், குமாரனைக் கூடத்திலேயே சந்தித்தார். ''குமாரா! உண்மையாக உனக்குக் குற்றவாளியைத் தெரியுமா?'' என்று வினவினார்.

''எசமான்! குற்றவாளியை உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். ஆனால் சாட்சியை எனக்கு மட்டுந்தான் தெரியும், மதுமண்டபத்தில் அவன் வயிற்றிலும் மார்பிலும் குத்தியிருக் கிறோன். என் குத்து படும் எவனுக்கும் உள்காயம் பலமாக இருக்கும். அவனால் சாதாரணமாக நடக்கவோ, வேகமாகப் புரவியேறவோ நாலைந்து நாட்களுக்கு முடியாது'' என்றான். ''அவனைப் பெரிய மறவன் குடிசையில் பார்த்தபோதே அவனுக்கிருந்த சங்கடத்தைக் கவனித்தேன்.''

''அவனை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறாய்?'' என்று கேட்டார் நீதிபதி.

''கண்டுபிடித்து விட்டேன்'' என்ற குமாரனை விசித்திரமாகப் பார்த்தார் நீதிபதி.

''எங்கிருக்கிறான் இப்பொழுது?'' என்று கேட்டார் வியப்பு நிரம்பிய குரலில்.

''சிறைச்சாலையில் ஓர் அறையில் இருக்கிறான். பெரிய மறவனை விடுவிக்கச் சென்றபோது பார்த்தேன். நான் பார்த்தது

zeevaa

என்னுடன் வந்த காவலாளிக்குத் தெரியாது. என்னால் குத்துண்டவன் சிறை அறையில் சுருண்டு கிடந்தான். முனகிக்கொண்டு இருந்தான்'' என்ற குமாரன், ''காஞ்சியின் சரித்திரம் என்னையும் மீறிப் போகிறது'' என்றான்.

''இப்பொழுது நீ போய் அவனை விடுவித்து அழைத்து வா, இங்கேயே விசாரிப்போம்'' என்றார்.

''இப்பொழுது உடனடியாகப் போனால் சந்தேகம் ஏற்படும். இரவில் போவோம்'' என்றான் குமாரன்.

''போவோம் என்றால்?'' -நீதிபதி கேட்டார்.

''நாம் இருவரும்'' என்ற குமாரன் அதற்குமேல் ஏதும் பேசவில்லை.

அன்று இரவு முதிர்ந்ததும் நீதிபதியும் குமாரனும் சிறைச் சாலையை அடைந்து கதவுகளைத் திறக்கச் சொல்லி அந்த அறையை அடைந்தனர். அறையைக் காவலன் திறந்ததும் இருவருமே பிரமித்தனர்.

அந்த மனிதன் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவன் மார்பில் ஒரு குறுவாள் செருகப்பட்டிருந்தது.

zeevaa

# 15. பல்லவ பீட மர்மக் கதை

குறுவாளொன்றால் மார்பில் குத்தப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்த சாட்சியைக் கண்டதும் நீதிபதி, குமாரன் இருவருமே அதிர்ச்சியடைந்து நின்றுவிட்டாலும், அந்த அதிர்ச்சியிலிருந்து முதலில் விடுதலையடைந்த குமாரன் சட்டென்று சாட்சியின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து அவன் கை நாடியைப் பரிசோதித்தான். நாடி மிக மெதுவாகவும் விட்டு விட்டும் துடித்துக் கொண்டிருந்ததால் சாட்சியின் வாழ்வு அடுத்த சில நிமிடங்களில் முடிந்து விடும் என்ற தீர்மானத்துக்கு வந்த குமாரன், அவன் அங்கியைத் தனது குறுவாளால் கிழித்து உட்புறத்தில் எதோ தடவிப் பார்த்தான். பிறகு கச்சையைத் தடவி அதிலிருந்து ஏதோ ஒரு பொருளை எடுத்து நீதிபதியிடம் கொடுத்து, ''இது பத்திரமாக இருக்கட்டும்'' என்றான் மிக மெதுவான குரலில். நீதிபதி அதைத் தனது கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டார். குமாரன், நீதிபதி இருவருமே சிறைக்கதவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்த தாலும், அவர்கள் அலுவல்களும் பேச்சும் மிக ரகசியமாக இருந்ததாலும், வெளியே நின்ற சிறைக் காவலனுக்கு உள்ளே நடக்கும் விஷயம் எதுவுமே தெரியவில்லையென்றாலும் அவன் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. நீதிபதிக்கு முன்பு நடக்கும் எதுவும் சட்ட சம்மதமென்பதாலும், அவரைத் தடுக்கத் தனக்கு உரிமையில்லை என்ற காரணத்தாலும் அவன் பேசாமல் சிறையைக் கவனிக்காமல் வேறு புறம் பார்த்து நின்று கொண்டிருந்தான்.

zeevaa



zeevaa

குமாரன் அந்த சாட்சியின் கச்சை முதலியவற்றை சோதித்து முடிந்ததும் அந்த மனிதன் உடல் ஒரு முறை உதறி நின்றது. அவன் காலம் முடிந்து விட்டதைப் புரிந்து கொண்ட நீதிபதி, குமாரன் பின்தொடர அந்த அறையிலிருந்து வெளியே வந்து காவலனை விளித்து, ''இந்தச் சிறையிலிருந்தவனைக் கொன்றது யார்?'' என்று விசாரித்தார்.

''எனக்குத் தெரியாது!'' என்றான் காவலன்.

''எங்களுக்கு முன்பு இங்கு யாராவது வந்தார்களா?'' என்று நீதிபதி இரண்டாவது கேள்வியை வீசினார்.

''இல்லை'' என்றான் காவலன் திட்டமாக.

''அப்படியானால் இந்தக் குறுவாளால் யார் இவனை குத்தியிருக்க முடியும்?'' என்று நீதிபதி கேட்டார்.

''யாரும் குத்தியிருக்க முடியாது'' என்றான் காவலன்.

''இவனே தன்னைக் குத்தி மாய்த்துக் கொண்டிருக்கிறான் என்று நினைக்கிறாயா?'' என்று வினவினான்.

''அப்படித்தானிருக்க வேண்டும்'' என்றான் காவலன்.

அதுவரை வாளாவிருந்த குமாரன், ''நீதான் இன்று இரவின் ஆரம்பத்திலிருந்து காவலிருக்கிறாயா?'' என்று வினவினான்.

''இல்லை'' -காவலன் தாமதித்துப் பதில் சொன்னான். ''இரவில் இரண்டு காவலர் உண்டு. முதல் ஜாமக்காவலன் போனபிறகு நான் வந்தேன். இனி விடியும் வரை நான்தான் காவலன்.

''அந்தக் காவலன் வீடு செல்வதற்கும் நீ வருவதற்கும் இடையில் நேரம் உண்டா?'' -குமாரன் வினவினான்.

zeevaa

''உண்டு. சில நாழிகைகள் இடைவேளை இருக்கும்.''

''அந்த இடைவேளையில் ஏதாவது நேர்ந்தால் அதற்கு யார் பொறுப்பாளி?''

''எதுவும் நேர முடியாது. சிறைச்சாலையைச் சுற்றிலும் பலமான காவல் இருக்கிறது. யாரும் நுழைய முடியாது.''

அதற்குமேல் குமாரன் எதுவும் கேள்வி கேட்கவில்லை. நீதிபதி சைகை காட்ட குமாரன் அவருடன் வெளியே சென்றான். நீதிபதி குமாரனுடன் நேராகத் தமது இல்லத்தை அடைந்து மாளிகைக் கூடத்தில் அமர்ந்து கொண்டு குமாரனை உற்று நோக்கினார் சில விநாடிகள். பிறகு கேட்டார்: ''தாமரைச்செல்வியைத் துரத்தி வந்தவனை அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்று சொன்னாயே?'' என்று.

''ஆம் சொன்னனேன். அவன் கன்னத்தில் பெரிய வெட்டுக் காயம் இருந்ததைப் பார்த்தீர்களல்லவா?'' என்று குமாரன் கேட்டான்.

''ஆம் பார்த்தேன்.''

''அதுதான் அடையாளம்.''

''எவ்வளவோ வீரர்களுக்கு அம்மாதிரி வெட்டுக்காயம் இருக்கலாம்.''

''ஆனால் இவனுக்கு ஏற்பட்டிருப்பது வெட்டுக்காயம் போல் தோன்றினாலும் அது வெட்டுக் காயமல்ல.''

''வேறென்ன?''

''வெட்டுக்காயம் போல் ஆழமாகப் போடப்பட்ட சூடு. மாடு திருடும் குற்றவாளிகளுக்கு மாட்டுக்குப் போடும் சூட்டைப்

zeevaa

போலவே போடப்படும் சூடு. இந்தப் பழக்கம் நீண்ட நாட்களாகச் சில இனத்தவரிடம் உண்டு.''

குமாரனின் சொல்லைக் கேட்ட நீதிபதி நிருபவர்மர் திகைத்தார். அந்த மாதிரி தண்டனை கொடுக்கும் இனம் அவருக்கும் தெரியும். அந்த இனத்தவரில் ஒருவன் காவலர்க்குள் புகுந்திருப்பதும் அவன் காஞ்சியின் காவலர் தலைவன் கையாளாக இருப்பதும் பெரும் விந்தையென நினைக்கவும் செய்தார். ''நீ சொல்வது சரியாயிருக்கும் பட்சத்தில் காஞ்சியில் ஒற்றர்கள் உலாவுகிறார்கள். பயங்கரமான ஒற்றர்கள்'' என்று அச்சம் துளிர்த்த குரலில் சொன்னார்.

''அப்படித்தானிருக்க வேண்டும்'' என்ற குமாரன் ''எசமான்'' என்று நீதிபதியை அழைத்தான்.

''நான் எசமானல்ல'' என்றார் நீதிபதி வெறுப்புடன்.

''நான் தங்கள் காவலர் தலைவனல்லவா?'' என்று வினவினான் குமாரன்.

''தற்சமயம் அப்படித்தான்'' என்று பொறுப்பற்ற முறையில் பதில் சொன்னார் நீதிபதி.

அந்த விவாதத்தைத் தொடரவில்லை குமாரன். சற்று சிந்தித்துவிட்டு ''நீதிபதியவர்களே! சிறையில் மாண்டவனிட மிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொடுத்தேனே, அதைச் சற்று எடுத்துப் பாருங்கள்'' என்று வேண்டினான்.

அந்தப் பொருளைக் கச்சையிலிருந்து எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்த நீதிபதி கல்லாய்ச் சமைந்து விட்டார். ''இப்பொழுது புரிகிறது, தாமரைச்செல்வியை சிறை செய்ய வந்தவர்கள் காஞ்சியின் காவலர் படையைச் சேர்ந்தவர்களல்ல'' என்று கூறினார்.

zeevaa

ஒப்புக்கொள்வதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த குமாரன், ''இது தங்களிடமே இருக்கட்டும். பின்னால் சாட்சியம் தேவையாயிருந்தால் உபயோகப்படும்'' என்றான். ''இந்த கனமான செப்புக்காசு காஞ்சி மண்டல நாணயமல்ல. அதில் நடுவில் லேசாக இருக்கும் கீறலும் நம்முடைய செலாவணியைச் சேர்ந்ததல்ல. அது ஒரு அடையாளக் காசு'' என்று கூறிவிட்டு, ''நான் எதற்கும் போய் தாமரைச்செல்வியைப் பார்த்துவிட்டு வருகிறேன், தாங்கள் அனுமதியளித்தால்'' என்றான் குமாரன்.

நீதிபதி சிந்தனை வசப்பட்டார். சிறிது சிந்தித்த பிறகு ''காஞ்சி இப்பொழுதுள்ள நிலைமையில் நீ மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டும், உனக்கும் ஏதாவது நேர்ந்தால் உன் தந்தைக்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கும்'' என்று கூறினார்.

''என் தந்தையா?'' -வியப்புடன் கேட்டான் குமாரன்.

''ஆம்''

''அவரைத் தெரியுமா உங்களுக்கு?''

''நீ இறந்தால் அவர் வந்து என்னைக் காரணம் கேட்க மாட்டாரா? அப்பொழுது தெரியுமல்லவா?''

''அதற்குச் சந்தர்ப்பமிருக்காது'' என்று திட்டமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்ட குமாரன், 'நீதிபதி ஏதோ சந்தேகிக்கிறார்?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு வெளியே சென்று தனது புரவியைக் கொட்டடியிலிருந்து அவிழ்த்து சேணம் பூட்டிப் புறப்பட்டான், தாமரைச் செல்வியின் குடிசையை நோக்கி. அன்று அங்கு எதுவும் நிகழ காவலர் தலைவன் விடமாட்டா ரென்பது குமாரனுக்குத் திட்டமாகத் தெரிந்தாலும் கவலை யுடனேயே பயணம் செய்தான்.

zeevaa

அவன் தாமரைச்செல்வியின் குடிசையை அடைந்த போது மூன்றாம் ஜாமம் முடிந்து கொண்டிருந்தது. குடிசையில் விளக்கு ஏதுமில்லை. புரவியை மேட்டின் அடிவாரத்திலேயே விட்டு, குடிசை மேட்டில் ஏறிச் சென்று, குடிசை வாயிலில் நின்று, ''செல்வி! செல்வி!'' என்று இருமுறை குரல் கொடுத்தான்.

செல்வி மெதுவாக எழுந்து குடிசைக் கதவைத் திறந்தாள். ''நீங்களா!'' என்று ஆச்சரியமும் ஆவலும் கலந்த குரலில் வினவினாள்.

''ஆம்'' என்றான் குமாரன்.

''இந்த வேளை கெட்ட வேளையில் இங்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று வினவினாள்.

''உன்னைக் காண வேளையுண்டா செல்வி?'' என்று விசாரித்த குமாரன் அவளைத் தனது கைகளால் வளைத்துத் தன்னிடம் இழுத்துக்கொண்டான்.

அவள் எந்தவித எதிர்ப்பையும் காட்டாதது மட்டுமல்லாமல், ''தந்தை ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறார். காலையில்தான் எழுந்திருப்பார்'' என்று தனது ஆவலையும் மறைமுகமாகக் குறிப்பிட்டாள்.

ஆனால் அவன் மனம் காதலில் திளைக்கும் நிலையில் இல்லாததால் ''செல்வி! தந்தையின் காயங்களை என்ன செய்தாய்?'' என்று வினவினான்.

''மருந்து போட்டிருக்கிறேன். உள்ளுக்குள் மதுவைச் சற்று அதிகமாகப் புகட்டியிருக்கிறேன். அவர் நன்றாக உறங்க'' என்றாள் செல்வி.

''அப்படி உறங்க வைக்கக் காரணம்?''

zeevaa

''உங்களுக்கே தெரியும்.''

''எனக்குத் தெரியாது.''

''பொய் சொல்லாதீர்கள்.''

''பொய்யில்லை. நான் இங்கு வந்ததற்குக் காரணம் நீ இல்லை.''

''வேறு யார்?''

''அதை நீதான் சொல்ல வேண்டும்'' என்ற குமாரன், ''கெட்டியான செப்புக் காசு, நடுவில் கோடு இழுத்தது, யாரிடம் கிடைக்கும்?'' என்று வினவினான்.

''எனக்குத் தெரியாது. எனது தந்தைக்குத் தெரியும்'' என்ற செல்வி அச்சம் நிரம்பிய விழிகளால் குமாரனை நோக்கினாள். ''அவர் அந்த ரகசியத்தைத் வெளியிட்டால் அவரை நீங்களே கொன்று விடுவீர்கள்'' என்றும் சொன்னாள் துயரத்துடன்.

''எய்தவனிருக்க நான் அம்பை நோவதில்லை. உன் தந்தைக்கு என்னால் எந்தவித தீமையும் ஏற்படாது. ஆனால் அவர் விழித்த பின்பு அவரிடம் பேசுகிறேன்'' என்றான் குமாரன்.

உள்ளிருந்து ஒலித்தது பெரிய மறவன் குரல்: ''விழித்துக் கொண்டு தானிருக்கிறேன்'' என்று. அந்தக் குரலை அடுத்து மெல்ல நகர்ந்து வெளியே வந்த பெரிய மறவன், ''குமாரா! இனிமேல் உன்னிடம் மறைத்துப் பயனில்லை. நீ நாடி வந்த காஞ்சியின் பயங்கரமான உண்மையைச் சொல்கிறேன் கேள். அது பல்லவ பீடத்தின் கதை. பெரும் மர்மம் சூழ்ந்தது'' என்று அந்த கதையை மெதுவாக அவிழ்க்கலானான்.

zeevaa

# 16. நானும் வருகிறேன்!

**தூ**ங்குவதாக தான் நினைத்த தந்தை, தான் விழித்துக் கொண்டிருப்பதாக அறிவித்தவுடனே குமாரன் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட தாமரைச்செல்வி சற்று விலகி நின்றதும் பெரிய மறவன் நகர்ந்து நகர்ந்து வெளியே வந்து, 'பல்லவ பீடத்தின் பயங்கரமான கதையைச் சொல்கிறேன்' என்று துவங்கியதும் அதிர்ந்தே போனான் பப்பகுமாரன். ''நான் காஞ்சி வந்த காரணம் உங்களுக்குத் தெரியுமென்றா சொல்கிறீர்கள்?'' என்று வியப்புடன் பெரிய மறவனைக் கேட்கவும் செய்தான்.

''ஆம். தெரியும்'' என்றான் பெரிய மறவன். ''நீங்கள் இங்கு வந்த முதல் நாளே மாடுகளில் போட்டிருந்த சூடுகளைப் பார்த்து சந்தேகப்பட்டதையும், மாடுகளில் பாதி களவாடப்பட்டதை உணர்ந்து கொண்டீர்களென்பதையும் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் பெண் கொலை செய்தவனை அவன் புரவியிலேயே வைத்துக் கட்டியனுப்பியதைப் பார்த்த பிறகே நீங்கள் காஞ்சியைப் பார்க்க வந்திருக்கும் சாதாரண மனிதரல்லவென்பதையும், ஏதோ காரியத்தை முன்னிட்டு பல்லவ மன்னரால் அனுப்பப்பட்ட ஒற்றனென்றும் தீர்மானித்தேன்.

பின்பு ஏற்பட்ட நிகழ்ச்சிகள் நீங்கள் பெரிய வீரனென்பதையும் தெளிவுபடுத்தியது. ஆகையால் எச்சரிக்கையாக இருக்கும்படி காஞ்சி நகர் காவலர் தலைவனையும் எச்சரித்தேன். அவன் உங்களைவிட்டு என் மீது சந்தேகப்பட்டான். போதாக்குறைக்கு மாப்பிள்ளை முட்டாளும் அடிக்கடி குறுக்கே புகுந்து நிகழ்ச்சிகளை

zeevaa

குழப்பிக் கொண்டிருந்தான். எதற்கும் அஞ்சாத காவலர் தலைவன் காஞ்சியின் கள்ளுக்கடை விவகாரத்துக்குப் பிறகு உங்களைத் தீர்த்துவிடத் தீர்மானித்தான்.

நீங்கள் நீதிபதியிடம் வேலைக்கமர்ந்து விட்டதால் எதையும் செய்யத் தயங்கினான். அது மட்டுமல்ல, இந்த காஞ்சியை விழுங்கவே திட்டமிட்டான். அந்தத் திட்டத்துக்கு நீங்கள் பேரிடைஞ்சலாக வந்து சேர்ந்தீர்கள். உங்கள் ஒவ்வொரு நடிவடிக்கையும் அவன் திட்டத்துக்குப் பெரிய இடைஞ்சலாக வந்து சேர்ந்தது. உங்களை எப்படியாவது நீதி மூலமோ நீதிக்குப் புறம்பான வழிகளிலோ தீர்த்துவிட முடிவு செய்தான். நீங்கள் அடிக்கடி மாடுகள் திருட்டுப் போவது பற்றியும், கள்ளுக் கடையில் நடக்கும் விபரீதங்களைப் பற்றியும் சொல்லி வந்ததால் முழு விவகாரம் உங்களுக்குத் தெரியுமென்ற முடிவுக்கு வந்தான். ஆகவே என் மகளைச் சிறை செய்ய முயன்றான். அங்கு உங்கள் தலையீடு ஏற்பட்டது. இன்று விசாரணை விவரங்களை செல்வி சொன்னாள். ஆகையால் நீங்கள் மிகுந்த எச்சரிக்கையுடனிருந்தாலொழிய உங்கள் உயிர் அரைக்காசுபெறாது. உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன். இங்கு என் மகளைச் சிறை செய்ய வந்தவர்களில் ஒருவனை அவன் பிடித்து வைத்திருக்கிறான். அவன் விசாரணைக்கும் கொண்டு வரப்படமாட்டான்.''

இந்த இடத்தில் குமாரன் குறுக்கிட்டு, ''கொண்டு வர முடியாது'' என்று தெரிவித்தான்.

''ஏன்?'' -பெரிய மறவன் குரல் அச்சத்துடன் ஒலித்தது.

''அவன் சிறையிலேயே கொல்லப்பட்டான்'' என்று குமாரன் சொன்னான்.

zeevaa

அதிர்ச்சியடைந்த பெரிய மறவன், ''கொல்லப்பட்டானா? தற்கொலை செய்து கொண்டானா?'' என்று வினவினான்.

''தற்கொலை செய்து கொண்டதாக சிறைக்காவலன் சொல்கிறான். ஆனால் அது தற்கொலையாகத் தெரியவில்லை. அவன் வாயைக்கட்ட அவன் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது'' என்று குமாரன் திட்டவட்டமாக அறிவித்தான்.

பெரிய மறவன் சிறிதுநேரம் சிந்தனைவயப்பட்டான். பிறகு மீண்டும் துவங்கி, ''உங்களுக்கு காஞ்சியைப் பற்றிய பழைய கதை தெரியுமா?'' என்று வினவினான்.

''தெரியாது.''

''காஞ்சி மாநகரை முதலில் ஆண்டவன் இளந்திரையன் என்பவன். அவன் சமுத்திரத்தின் மூலம் வந்து திரைகளால் ஒதுக்கப் பட்டதால் அவனை திரையன் என்று முதலில் இங்கிருந்த காட்டுவாசிகள் அழைத்தார்கள். அவன் வயதை முன்னிட்டு இளந்திரையன் என்று அழைத்தார்கள். அவன் வளர வளர, பெரும் வீரத்தைக் காட்டினான். இங்கிருந்த காடுகளை அழித்துப் பெரிய பட்டணமாகக் காஞ்சியை மாற்றினான். மல்லை என்ற கடல் இதன் துறைமுகமாயிற்று. பெரும் வளர்ச்சியுற்ற இந்தக் காஞ்சி மண்டலத்தில் இருந்த திரையன் படை வடக்கிலும் விரிந்தது. ஆந்திர நாடு கூட இதன் வசமாயிற்று. அங்கும் பல்லவர் என்ற இனம் வலுத்தது. ஒரு உன்னத நிலையை அடைந்த பல்லவநாடு இளந்திரையனுக்குப் பிறகு வலுகுன்றியது. அடுத்து ஆண்ட அரசர்கள் வலுவில்லாததால் இதன் பெருமையும் குறைந்தது. ஆனால் இந்த நகரைச் சிறப்பு நகரமாக்கிய இளந்திரையன் முதுமை எய்தியதும், தனது மக்களிடத்தில் திருப்தியில்லாததால், தான் நிர்மாணித்த அரசபீடத்தை எங்கோ மறைத்து விட்டான். அதில்

zeevaa

திரையன் எத்தனையோ மாணிக்கங்களையும் வைர வைடூரியங் களையும் புதைத்திருந்ததாகச் சொல்கிறார்கள். அதைக் கண்டுபிடிப்பவன் இந்த நாட்டை அரசாளுவான். அதற்குப் பிறகு பல்லவ ராஜ்யம் சாம்ராஜ்யமாகும் என்று இளந்திரையன் சொன்னதாகவும் ஒரு வதந்தி உலாவுகிறது'' என்று சொன்னான் பெரிய மறவன்.

மேலும் சொன்னான்: ''ஆகவே, அதைக் கண்டு பிடிக்க பல நாட்டு வீரர்களும் இங்குள்ளவர்களும் முயன்றார்கள். காஞ்சியின் காவலனும் அதைக் கண்டுபிடிக்க முயலுகிறான். முயன்று அதன்மீது அரசாளவும் திட்டமிட்டிருக்கிறான். ஆனால் பல்லவபுரியில் (பல்லாரியில்) இருக்கும் மன்னர்கள் அதை அனுமதிக்கிறார்கள். அவ்வப்பொழுது யாராவது ஒருவர் இங்கு வந்து அதைக் கண்டுபிடிக்க முயன்று உயிரை இழந்திருக்கிறார்கள். அவர்களைக் கொன்றவன் இங்குள்ள காவலர் தலைவன்தான். ஆனால் யாரும் அதைக் கண்டுபிடிக்க முடியாததால் வேறொரு யுக்தியைக் கையாள முயன்றான். சேர சோழ பாண்டியர்களை அடக்கிய கள்வர் (களப்பிரர்) கூட்டத்தை இங்கு படையெடுக்கச் செய்தால் அவர்களோடு தான் சேர்ந்து இந்தக் காஞ்சியைக் கைப் பற்றலாம் என்று முடிவு செய்து அவர்களுடன் நட்பு கொண்டான். அவர்கள் மாடுகளைத் திருட ஏற்பாடு செய்தான். அவற்றுக்கு அடையாள மாகச் சூடு போட ஏற்பாடு செய்தவனும் இவனே. மாடுகள் திருட்டுப் போனதை சாக்காக வைத்துக் கொண்டு கள்வர்கள் அடிக்கடி காஞ்சி நகர்ப்புறங்களில் படையெடுக் கிறார்கள். அதற்கு இந்தக் காவலன் தகுந்த நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை. எடுத்த ஓரிரண்டு சமயங்களில் தோல்வியடைந்து திரும்பியதாக அறிவித்தான். நீதிபதி அதை ஒப்புக்கொள்ளாமல் பல்லவ புரியிலுள்ள மன்னருக்கு ஓலை அனுப்பினார். அதற்குப் பதிலில்லை. ஆனால் நீங்கள்

zeevaa

வந்தீர்கள். அதனால் மன்னர் உங்கள் இங்கு அனுப்பியிருக்க வேண்டும் என்று நாங்கள் நம்பினோம். காவலர் தலைவன் என்னிடம் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தான். அவன் கூட்டத்தில் என்னையும் சேர்த்துக் கொண்டான். அவன் உத்தரவால் பலமுறை நான் கள்வர்கள் பசுக்களைத் திருடிவந்தேன். அதையும் நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள். இதனாலும், தாமரைச் செல்வியை நீங்கள் நீதிமண்டபத்தில் வாதாடி அழைத்து வந்ததாலும் நானும் உங்களுடன் சேர்ந்தவனென்று என்னைத் தீர்த்துக்கட்ட முயலுகிறான். ஆனால் அது முடியாது. முடிந்தாலலும் அதில் இறங்க மாட்டான். காரணம், பல்லவபீடம் இருக்கும் இடம் ஓரளவு எனக்குத் தெரியும். அதன் மீது உட்காரத் தகுதியுள்ளவர் வரும்வரை நான் அந்த இடத்தைக் காட்ட மாட்டடேன். அதனால் தான் என்னை விட்டு வைத்திருக்கிறான்'' என்று கதையை முடித்தான்.

''அதை எனக்குக் காட்டினாலென்ன?'' என்று வினவினான் குமாரன்.

''அதிருக்குமிடம் திட்டமாக எனக்குத் தெரியாது. ஊகந்தான். அந்த ஊகம் தவறில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதில் உட்காரத் தகுந்தவருக்குத் தான் காட்டமுடியும்'' என்று திட்டமாக அறிவித்தான் பெரிய மறவன்.

''நான் தகுந்தவனல்லவென்று உமக்கு எப்படித் தெரியும்?'' என்று குமாரன் கேட்டான்.

''களப்பிரர்களை முறியடித்துக் காஞ்சியை காப்பாற்றுபவர்தான் அதில் உட்காரமுடியும். களப்பிரர் எழுச்சி வெகுசீக்கிரம் ஏற்படும். அதை நீங்கள் சமாளித்துவிட்டால் அந்த பீடத்தின் மீது நீங்கள் அமரலாம்'' என்று கூறிய பெரிய மறவன் சிந்தனை வயப்பட்டான்

zeevaa

நீண்ட நேரம். ''எதற்கும் நாளை நீதிபதியைக் கேட்டுவிட்டு உங்களுக்குப் பதில் சொல்கிறேன். நாளை இரவு இரே நேரத்துக்கு இங்கு வாருங்கள்'' என்று சொன்னான் சிந்தனைக்குப் பிறகு.

இதைக் கேட்டு பெருவியப்படைந்தான் குமாரன்.

''நீதிபதியை ஏன் கேட்க வேண்டும்? அவருக்கும் இந்த ரகசியம் தெரியுமா?'' என்று வினவினான், வியப்பு குரலிலும் விரிய.

''இந்தக் காஞ்சியில் இப்பொழுது நேர்மையானவர் நீதிபதி ஒருவர்தான். அவர் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் எது சொன்னாலும் சரியாயிருக்கும்'' என்ற பெரிய மறவன் குடிசைக்குள் சென்று ஒரு செப்புக் காசை எடுத்து வந்து, ''உங்களைக் கள்வர் யாராவது எதிர்த்தால் இதைக் காட்டுங்கள்'' என்றான்.

அந்தச் செப்புக் காசு சிறையில் இறந்தவன் மடியிலிருந்த காசு போலிருந்ததைக் கண்டு ஒரு கணம் பிரமித்த குமாரன், அதை மடியில் மறைத்துக் கொண்டான். ''நாளை இரவு வருகிறேன்'' என்று கூறியதும் பெரிய மறவன் மீண்டும் நகர்ந்து உள்ளே சென்று படுத்துக் கொண்டான். ''நான் வருகிறேன் தாமரைச்செல்வி'' என்று கூறிய குமாரனின் கையொன்றைத் தனது கையால் பிடித்தாள் தாமரைச்செல்வி. அடுத்து அவள் குமாரன் அரவணைப்பில் இருந்தாள். அவள் இதழ்கள் அவன் இதழ்களை சிறைப்படுத்திக் கொண்டன. சிறிது நேரம் கழித்து அவளிடம் பிரியா விடை பெற்றுச் சென்ற குமாரன் நீதிபதியின் மாளிகையை அடைந்து தனது இருப்பிடத்திற்குச் சென்று உறங்கினான்.

முதல் நாள் இரவு நீண்ட நேரம் விழித்துக் கொண்டிருந்ததால் மறுநாள் காலையில் கதிரவன் உதித்து நான்கு நாழிகைக்குப் பிறகு விழித்துக்கொண்ட குமாரன் காலைக் கடன்களை முடித்துக்

zeevaa

கொண்டு நீராடி, புத்துடை புனைந்து, நீதிபதியை அவரது கூடத்தில் சந்தித்தான்.

நீதிபதி அவனைக் கூர்ந்து நோக்கினார். பிறகு அவனை அருகில் வரச் சொல்லி, ''குமாரா, இன்றிரவு உன்னுடன் நானும் வருகிறேன்'' என்றார்.

''எங்கு?'' என்று பிரமித்துக் கேட்டான் குமாரன்.

''பல்லவ பீடத்தைத் தரிசிக்க'' என்று சகஜமாகச் சொன்னார் நிருபவர்மர்.



zeevaa




## 17. பீடத்தை நோக்கி

**ப**ப்பகுமாரன் மறுநாள் காலையில் நீராடி, புத்துடை புனைந்து நிருபவர்மரை அவரது கூடத்தில் சந்தித்தபோது, நீதிபதி அரச உடை ஏதும் தரிக்காமல் சாதாரண வேட்டியணிந்து, தோளில் ஒரு துண்டுடனும் நெற்றியில் இடப்பட்ட சந்தனத்திலகத்துடனும் மிக வைதீகமாகக் காட்சியளித்தன்றி, கூடத்து நடுவே இருந்த ஊஞ்சலில் அமர்ந்து காலைத் தரையில் உதைத்து லேசாக அதை ஆட்டிக் கொண்டும் மிகுந்த உற்சாகத்துடனும் காட்சியளித்தார்.

அவர் உற்சாகத்தின் காரணத்தை அறியாத குமாரன் அவருக்குத் தலைவணங்கியதும், அவனை அருகில் அழைத்து அவன் காதில் மிக ரகசியமாக, ‘நானும் வருகிறேன்’ என்று சொன்னதும் குமாரன் பேரதிர்ச்சியடைந்தாலும் அதை வெளிக்கு காட்டிக்கொள்ள வில்லை. ஆனால் அவன் ‘எங்கு?’ என்று ஒரு கேள்வியை எழுப்ப அதற்கு நீதபதி ‘பல்லவ பீடத்தைத் தரிசிக்க’ என்று விடையிறுத்ததும் அவன் அதிர்ச்சி ஆயிரம் மடங்கு அதிகமாயிற்று. அதன் விளைவாக நீண்ட நேரம் மௌனமாக நின்று விட்டதைக் கண்ட நீதிபதி லேசாகப் புன்முறுவல் செய்து, “பெரிய மறவன் உன்னிடம் சொன்னது எனக்கு எப்படித் தெரியும் என்று உனக்குப் பிரமிப்பாயிருக்கிறதா?” என்று வினாவொன்றையும் கிளப்பினார்.

“ஆம் நீதிபதி. என்னை வேவு பார்க்க நீங்கள் யாரையாவது நியமித்திருக்கிறீர்களா?” என்று வினவினான் குரலில் சிறிது கோபத்தைக் காட்டி.

“ஆம்” -இதை நீதிபதி சகஜமாகச் சொன்னார்.

zeevaa



zeevaa

''அது யாரென்பதை நான் அறியலாமா?'' என்று மீண்டும் கேட்டான் குமாரன்.

''ஆகா! தாராளமாய் அறியலாம்'' -நீதிபதி இதையும் சகஜமாகவே சொன்னார்.

''யார்?''

''வேறு யார்? நான்தான்!''

''தாங்களா?''

''ஆம்.''

''தாங்கள் என்னைத் தொடர்ந்து வந்ததாகத் தெரிய வில்லையே?''

''தொடர்ந்ததாக யார் சொன்னது?''

''தொடராமல் எப்படி வேவு பார்க்க முடியும்?''

''அதற்கு வேறு ஒரு கருவி இருக்கிறது. சிந்தனைக் கருவி'' என்று தமது தலையைத் தமது ஆள்காட்டி விரலால் தட்டிக்காட்டினார் நீதிபதி.

மேலும் பிரமை பிடித்து நின்றான் குமாரன். ''பெரிய மறவன் குடிசையில் நடந்தது அனைத்தையும் ஊகித்து விட்டீர்களா?'' என்று வினவினான், பிரமை குரலிலும் ஒலிக்க.

''இதில் கஷ்டமேதும் இல்லை'' என்ற நீதிபதி, ''என்னை உன் நிலையில் இருத்திக் கொள்கிறேன், குமாரன் நான்தான் என்றால் என்ன செய்திருப்பேன்? காஞ்சியை விழுங்க முயலும் காவலர் தலைவனை எதிர்த்த பிறகு, நீதிமண்டபத்தில் அவனைக் கண்டு ஊரார் நகைத்த பிறகு, அவன் என்ன செய்வான்? தனது விரோதிகளையும் சாட்சிகளையும் அழிக்க முயல்வான். ஒரு சாட்சியைக் கொன்று விட்டான். இன்னொரு சாட்சியான பெரிய

zeevaa

மறவனைக் கொல்லாவிட்டாலும் சித்திரவதை செய்து பல்லவ பீடத்தின் ரகசியத்தை அறிய முயற்சி செய்வான். பெரியமறவன் குடிகாரனே தவிர நல்ல சூஷ்மமான புத்தியை உடையவன். ஆகவே தனக்கு சமீபத்தில் ஏற்பட்ட விபத்துக்களை உத்தேசித்து ரகசியத்தை யாருடனாவது பகிர்ந்து கொள்ள முயலுவான். அவன் நம்பக்கூடியவன் நீ ஒருவன்தான். அவன் மகள் காதலிக்கும் ஒரு வீரனை விட்டு முறைப்பிள்ளையைக் கட்டிக்கொண்டு திண்டாட அவன் இஷ்டப்பட மாட்டான். ஆகையால் பல்லவ பீடத்தின் ரகசியத்தை உனக்குச் சொல்ல விரும்புவான் என்பதை ஊகித்தேன். நீ நேற்றிரவு உனது விடுதியில் இல்லை. எங்கு போயிருப்பாய்? பெரிய மறவன் குடிசைக்கு. அப்பொழுது பெரிய மறவன் எப்படியும் பல்லவ பீடத்தை உனக்குக் காட்ட முயலுவான்.'' என்று பேச்சை சற்று நிறுத்தினார் நீதிபதி.

''நேரில் பார்த்தது போல் சொல்கிறீர்களே?'' என்று கேட்டான் குமாரன்.

''அத்தனையும் சொல்லவில்லை'' என்று நீதிபதி புன்முறுவல் செய்தார்!

''இன்னும் இருக்கிறதா சொல்ல?'' என்று கேட்டான் குமாரன்.

''நீயும் செல்வியும் சந்தித்தது, திருட்டுத்தனமாகக் கையைப் பிடித்துக் கொண்டது, மற்றும்... சொல்வது உசிதமில்லை'' என்ற நீதிபதி, நகைத்தார்.

இப்படிப் பேசிக் கொண்டிருந்த நீதிபதி, சட்டென்று முகத்தில் கவலையைப் படரவிட்டுக் கொண்டார்.

''குமாரா! நீ வந்தபிறகுதான் எனக்கு காஞ்சியைப் பற்றிச் சிறிது தைரியம் வந்தது. பகிரங்கமாக காஞ்சிக் காவலர் தலைவனை எதிர்க்கக்கூடியவன் வந்தானென்று கேள்விப்பட்ட உடனேயே உன்னை என் காவலர் தலைவனாக நியமித்ததற்குக் காரணமுண்டு.

zeevaa

உன்னைப் போன்ற, ஒரு வீரனால்தான் அடிக்கடி எல்லைகளில் நிகழும் களப்பிரர் பூசல்களை ஒழிக்க முடியும் என்று தீர்மானித்தேன். அவர்களிடமிருந்து எந்த நிமிடமும் சரியான எதிர்ப்பு வரலாம். அவர்கட்கு உதவ காஞ்சிக்காவலர் தலைவன் சித்தமாயிருக்கிறான். ஆகையால் நாம் செய்யவேண்டிய அலுவல்கள் இரண்டு, ஒன்று களப்பிரர்களை எதிர்ப்பது. இன்னொன்று காவலர் தலைவன் துரோகத்தைத் தடுப்பது'' என்றார்.

''யாரிந்த களப்பிரர்? மாடுகளைத் திருடுபவர்களா?''

''இல்லை. திருடி நமக்குத் தருபவர்கள்.''

''எதற்காக அதைச் செய்கிறார்கள்?''

''அதைச் சாக்காக வைத்துக் கொண்டு காஞ்சியைத் தாக்குவார்கள்.''

''பெரிய வீரர்களா?''

''ஆம். இவர்கள் திருத்தணிகை பக்கக் காடுகளில் வசிக்கிறார்கள். இவர்கள் கள்வர், களவர் என்றும் அழைப்பார்கள். களவர்* என்பது கன்னடத்தில் களபரு என்று ஆயிற்று. வடமொழியில் களப்ரா என்று திரிந்தது. அதைத் தமிழில் களர்ப்பிரர் என்று கொண்டு வந்திருக்கிறோம்'' என்று விளக்கினார் நீதிபதி.

பெரும் சிந்தனையில் இறங்கினான் குமாரன். பிறகு கேட்டான், ''களப்பிரர் நம்மீது படையெடுத்தால் அதைச் சமாளிக்க காஞ்சியில் படை இருக்கிறதா?'' என்று.

''இருக்கிறது, சரியான தலைவன் கீழ் இயங்கினால். ஆனால், இப்பொழுதுள்ள தலைவனை நம்பமுடியாது'' என்றார் நீதிபதி.

---

* Refer chapter 4, page 37 of Dr. M. Rajamanickanar's "History of Pallavas."

zeevaa

குமாரன் தலையை ஆட்டிவிட்டு, ''இன்றிரவு சந்திப்போம்'' என்று கூறி அங்கிருந்து புறப்பட்டான். தனது தலைமையிலிருக்கும் காவலரில் நாலைந்து பேர்களை அழைத்துக்கொண்டு காவலர் தலைவன் இல்லத்துக்குச் சென்றான். அவன் வந்திருப்பதை அறிந்தவுடன் அலறிப் புடைத்துக்கொண்டு வாயிலுக்கு வந்து அவனை வரவேற்ற காவலர் தலைவன், ''நீதிபதியின் காவலர் தலைவர் இங்கு வந்தது வியப்பாயிருக்கிறது'' என்று முகமன் கூறி வரவேற்றான்.

அவன் வரவேற்பைத் தலையை லேசாகத் தாழ்த்தி ஏற்றுக்கொண்ட குமாரன், ''இதில் வியப்பு ஏதுமில்லை. தங்கள் உதவி சிறிது வேண்டியிருக்கிறது'' என்றான்.

''என்ன உதவி?'' -சந்தேகத்துடன் கேட்டான் காவலர் தலைவன்.

''நாம் தனியாகப் பேசவேண்டும்'' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டான் குமாரன்.

அதற்குப் பிறகு அவனை உள்ளே அழைத்துச் சென்று தனது அந்தரங்க அறையில் உட்கார வைத்துக் கொண்ட காவலர் தலைவன், ''இப்பொழுது நீங்கள் தைரியமாகப் பேசலாம்'' என்றான்.

''சில நாட்களில் களப்பிரர் காஞ்சியைத் தாக்கலாமென்று எதிர்பார்க்கிறேன்'' என்றான் குமாரன்.

இதைக் கேட்டதும் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியை விநாடி நேரத்தில் மறைத்துக்கொண்ட காவலர் தலைவன், ''உங்களுக்கு எப்படி அது தெரியும்? வதந்தியை நம்பி நாம் எதுவும் செய்யமுடியாது'' என்றான்.

''வதந்தியல்ல, உண்மை'' - திட்டமாகச் சொன்னான் குமாரன்.

''உண்மை என்பதற்கு சாட்சி உண்டா?'' என்று வினவினான் காவலர் தலைவன்.

zeevaa

உடனடியாகப் பதில் சொல்லவில்லை குமாரன்.

எழுந்து சென்று அறைக்கதவைச் சாத்திவிட்டு வந்த குமாரன் தனது கச்சையிலிருந்து செப்புக்காசை எடுத்துத் தலைவனிடம் கொடுத்தான்.

அதைக் கண்டதும் பெட்டியில் அடைக்கப்பட்ட பாம்பு போல் ஆனான் காவலர் தலைவன். ''இதை ஏன் முன்னமே காட்டவில்லை நீங்கள்?'' என்று வினவவும் செய்தான் பணிவு நிரம்பிய குரலில்.

''சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நாம் முதலில் சந்தித்த போதே விரோதிகளாகச் சந்தித்தோம். பின்னால் தொடர்ந்த நிகழ்ச்சிகள் என்னை உங்கள் விரோதியாகக் காட்டின. இப்பொழுது களப்பிரர் தாக்குதல் நிச்சயமாகி விட்டதால் நான் யாரென்பதை மறைத்துப் பயனில்லை என்று தீர்மானித்துத் தங்களிடம் வந்தேன். சரி, களப்பிரரை எதிர்ப்பதானால், எதிர்ப்பதாகப் பாசாங்கு செய்வதானால், தங்களிடம் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்?''

''இப்பொழுது இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் இல்லை. வேண்டுமானால் மேலும் இரண்டாயிரம் பேர் திரட்டலாம்.''

''வேண்டாம். இந்த வீரர்களே போதும். அவர்கள் நான் சொல்கிறபடி இயங்க வேண்டும்.''

''அது கஷ்டமில்லை.''

''அப்படியானால் இரண்டு நாட்களுக்குள் சகல வீரர்களும் நமது திட்டப்படி நடக்க உத்திரவிடுங்கள்.''

''இரண்டு நாட்கள் எதற்கு?''

''நான் இரண்டு நாட்கள் இங்கு இருக்கமாட்டேன்.'' -இதைச் சொல்லிப் புன்முறுவல் செய்தான் பப்பகுமாரன்.

zeevaa

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் காவலர் தலைவன். அங்கிருந்து புறப்பட்ட குமாரன் நேராக நீதிபதியின் இல்லம் வந்து நீதிபதியிடம் நடந்ததைச் சொன்னான்: ''இன்னும் இரண்டு நாட்கள் தாங்களும் ஊரிலிருக்க வேண்டாம். யார் வந்தாலும் உங்கள் உடல்நிலை சரியில்லையென்று சொல்லிவிட ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறினான்.

அன்றிரவு புறப்பட்டான் குமாரன் தாமரைச்செல்வியின் இல்லத்திற்கு. அங்கு தாமரைச்செல்வியும் பெரிய மறவனும் சித்தமாயிருந்தார்கள் பயணத்திற்கு. மூவரும் புரவிகளில் ஏறிக்கொண்டதும் பெரிய மறவன் சொன்னான்: ''மிகவும் அபாயமான பயணத்தைத் துவங்குகிறோம். இதில் மூவரும் திரும்பி வருவோமா என்பது சந்தேகம்? இறப்பதானால் நான்தான் இறப்பேன். நீங்களிருவரும் தப்பிவிட வழி செல்விக்குத் தெரியும்'' என்று.

அப்புறம் யாரும் பேசவில்லை. பயணம் மூன்று நாழிகை கடந்தும் நீதிபதயைக் காணவில்லை. காஞ்சியைத் தாண்டி, காடுகளைத் தாண்டி, கடல்மல்லையை அடைந்ததும் பெரிய மறவன் அங்கிருந்த பாறைகளின் மீது ஏறி இருமலைகளுக்கிடையே இருந்த சரிவில் இறங்கினான். அடுத்த அடர்த்தியான மரங்கள் அடர்ந்த தோப்பு இருந்தது. அதற்கு முன்பு புரவியிலிருந்து இறங்கிய பெரிய மறவன், அங்கிருந்த ஒரு பெரிய பாறையின் மறைவுக்குள் சென்றான். அடுத்து அந்தப் பாறை நகர்ந்தது. ''வாருங்கள்'' என்று பெரிய மறவன் குரல் கொடுக்க, அவனிருந்த இடம் சென்ற குமாரனும் தாமரைச்செல்வியும் கீழே பாறைக்கு அடியில் படிகள் ஓடுவதைக் கண்டனர். பெரிய மறவன் முதலில் படிகளில் இறங்கினான். மற்ற இருவரையும் தொடரும்படி சைகை காட்டினான். இருவரும் தொடர்ந்தனர். எங்கிருந்தோ ஒரு ஜோதி கிளம்பியது. பாதாளத்திலிருந்து புறப்பட்ட அந்த ஜோதி படிகளில் ஊர்ந்து அவர்களை நோக்கி வந்தது.

zeevaa

## 18. தரிசனம்

ஏதோ பாதாளத்திலிருந்து வருவது போல் படிகளில் ஊர்ந்து வந்த அந்த ஜோதி திடீரெனக் கம்பி அளவுக்குச் சிறுத்து ஒரு நிலையில் நின்றுவிட்டாலும் ஐந்தாவது படிக்குமேல் ஏறாமல் அதைத் தொட்டுத் தடைப்பட்டு விட்டதாகப் பார்வைக்குத் தோன்றினாலும், அது அடியோடு மறையாமல் அந்த இடத்திலேயே தேங்கி நின்றது. அதில் காலை வைக்கவும் அஞ்சி மேற்படியிலேயே நின்று விட்ட குமாரனை, "அதற்காக அஞ்சாதீர்கள். வாருங்கள் இறங்கி" என்ற பெரியமறவனின் குரல் அடிப் படியிலிருந்து ஒலிக்கவே, குமாரன் செல்வியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு படிகளில் இறங்கிச் சென்றான்.

இப்படி சுமார் இருபது படிகள் இறங்கிச் சென்றதும் அந்த ஒளி திடீரென மறைந்து விடவே. அரைகுறையான வெளிச்சமே அந்தக் குகையில் தெரிந்ததன் விளைவாக, ஒருவரையொருவர் திட்டமாகப் பார்க்க முடியாவிட்டாலும் அக்கம் பக்கம் பாறைகளைத் தொடமுடிந்தது. அந்தப் பாறைகளைத் தடவிப் பார்த்த குமாரன் அது மிகவும் வழ வழப்பாக இருந்ததைப் பார்த்து அந்த இடத்தில் சற்று மனிதப் புழக்கம் அடிக்கடி இருப்பதைப் புரிந்து கொண்டான். அந்தச் சுவர்களின் இன்னொரு பகுதியின் அடியில் உட்கார்ந்த பெரிய மறவன், இரண்டு கருங்கல்களைத் தட்டி ஏதோ ஒரு தேங்காய் நாரில் சிறு தீப்பொறிகளைச் சேர்த்து பக்கத்திலிருந்த காட்டுச் சுள்ளி யொன்றைக் கொளுத்தினான்.

zeevaa

அப்பொழுது சுற்றுமுற்றும் அந்தக் குகையைப் பார்த்த குமாரன் வியப்பின் எல்லையை எய்தினான். அதில் பலவித சிற்பங்கள் தீட்டப்பட்டிருந்தன. தேர்களில் செல்லும் சில வீரர்களும், கடலில் குளிக்கும் காரிகைகளும் பெரும் பசுக்கூட்டங்களும் கோடு கோடாக வரையப்பட்டிருந்தன. அந்தக் கோடுகளிலேயே உயிர் இருப்பதைக் கண்ட குமாரன் அவற்றைத் தீட்டியவன் யாராயிருந்தாலும் அவன் கைதேர்ந்த சிற்பியாயிருக்க வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான். அந்தக் கோட்டுச் சிற்பங்களின் அடியில் ஏதோ சில வரிகள் எழுதப்பட்டிருந்தன. மொழி என்ன என்பது மட்டும் புரியவில்லை.

''இது என்ன மொழி?'' என்று பெரியமறவனைக் கேட்டான் குமாரன்.

''பிராகிருதம் என்று சொல்கிறார்கள்?'' என்றான் பெரிய மறவன்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த குமாரன், ''இதில் என்ன எழுதியிருக்கிறது?'' என்று வினவினான்.

''இங்கு வருகிறவர்களில் ஒருவன் ஒரு காலத்தில் காஞ்சியை ஆள்வான்'' என்று எழுதியிருக்கிறது.

''அதன்மேல் குதிரையொன்று வரையப்பட்டு அதன் மீது ஒரு வேலை பக்கவாட்டில் நீட்டிப் பிடித்து ஒருவன் உட்கார்ந்திருக் கிறானே?'' என்று வினவினான் குமாரன்.

''அந்த வீரனுடைய வேல் சுட்டிக்காட்டும் இடத்திற்கு நாம் செல்ல வேண்டும்'' என்று கூறிய பெரிய மறவன், அது குறிப்பிட்ட திசையில் நடக்கலானான்.

zeevaa

''எதிரில் பாறைச் சுவர்தானே இருக்கிறது'' என்று வினவினான் குமாரன்.

பெரிய மறவன் பதிலேதும் சொல்லவில்லை. புரவி வீரன் வேலின் நுனியிலிருந்து 'மாக்கல்' சில் ஒன்றால் நேராகக் கோடு இழுத்துக்கொண்டு சென்றான். அது முடிந்த இடத்தில் சக்கரமாக ஒரு வளையம் இழுத்தான். அதன் நடுவைப் பிடித்து மூச்சுத் திணற அழுத்தினான். பாறைச் சுவரின் ஒரு பகுதி நகர்ந்து வழிவிட, தன்னைத் தொடரும்படி மற்றவர்களுக்கு சைகை செய்து முன்னேறினான். மற்றவர்கள் தொடர்ந்ததும் அந்தப் பாறையை இழுத்து மூடும்படி பெரிய மறவன் சைகை காட்ட அதைச் சிரமப்பட்டுத் தள்ளினான் குமாரன். தாமரைச் செல்வியைத் தனது இடது கையால் இடையில் இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

''இனிமேல் அடுத்த குகைக்குப் போகிறோம். எச்சரிக்கையுடன் வாருங்கள். என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் வைக்கும் அடியிலிருந்து ஒரு அடி அப்புறம் இப்புறம் மாறி நடந்தாலும் உங்கள் உயிர் அரைக்காசு பெறாது'' என்று எச்சரித்துக் கொண்டே நடந்து சென்றான் பெரிய மறவன். அவன் சொன்னபடி தாமரைச்செல்வி அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, குமாரன் கடைசியில் நடக்க அந்தப் பயணம் சில நிமிடங்களே நடந்தாலும் தரைகரடு முரடாக இருந்தது. அக்கம் பக்கத்துச் சுவர்களின் வெடிப்புகளில் சில செடிகளும் முளைத்து அவர்களைத் தடவின. அப்பொழுது கேட்டான் குமாரன்: ''சூரிய வெளிச்சம் இல்லாத இடத்தில் எப்படிச் செடி முளைக்கிறது?'' என்று.

''சீக்கிரம் தெரியும்'' என்ற பெரிய மறவன் சில அடி தூரம் சென்றதும் மெல்ல மேலிருந்து துவாரத்தின் வழியாகப் பக்கவாட்டில் ஒரு சிறு கீறலாக இருந்த வெளிச்சத்தில் நின்று சுற்று

zeevaa

முற்றும் நோக்கினான். மேலே இருந்த பாறை கை எட்டும்படியாக இருக்கவே, அதைக் கையால் பொத்தி அவன் மறைக்க, மீண்டும் இருள் சூழ்ந்தது.

அந்த இருளில் வெகுதூரத்தே ஒரு சிவப்புக்கல் மினுக்மினுக் கென்று ஒளி வீசியது. அதை நோக்கிச் சென்ற பெரியமறவன் அதன் முன்பு மண்டியிட்டு உட்கார்ந்து எதையோ முணு முணுத்தான். பிறகு தன்னையொட்டி நின்ற மற்ற இருவரையும் நோக்கி, ''கடவுளை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினான். அவன் குரலில் பெரும் உணர்ச்சி இருந்தது.

அவன் அப்படி உணர்ச்சி வசப்பட்டுவிட்டதைக் கண்ட தாமரைச் செல்வி, ''அப்பா! ஏன் இப்படி உணர்ச்சி வசப்படுகிறீர்கள்? உங்களை என்றுமே நான் இப்படிப் பார்த்ததில்லையே?'' என்றாள்.

இதனால் உணர்ச்சி அதிகமாகியதால் நா தழுதழுக்க முழுக் குடியில் பேசுவது போல் பேசினான் பெரியமறவன்.

''மகளே! குருவியின் தலையில் பனங்காயை வைப்பது போல் என்மீது பெரிய பாரம் சுமத்தப்பட்டிருக்கிறது. அதை நான் நிறைவேற்றும் வரையில் என் மனச்சிதறல் மாறாது'' என்று கூறிய பெரிய மறவன்: ''குமாரா! நீ குற்றம் செய்யாதவன், நீதிமான் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் உன் கையால் எதிரிலிருக்கும் பாறையை அழுத்து. அது திறந்ததும் கண்களை மூடிக்கொள். பத்து நிமிடங்கள் கழித்துக் கண்ணைத்திற'' என்றான்.

பெரிய மறவன் இப்படி திடீரென் மர்ம மனிதனாகி விட்டதைப் பார்த்த குமாரன் வியப்பின் எல்லையை எய்தினாலும் அவன் சொன்னபடியே அந்த எதிர்பாறைக்குச் சென்று கையால் பலமாக அதை அழுத்தினான். உடனே கண்களையும் மூடிக் கொண்டான்.

zeevaa

''மகளே! நீயும் கண்களை மூடிக்கொள்'' என்று பெரிய மறவன் பெரிதாக அலறினான். அடுத்த விநாடி ஏதோ கரகரவென்ற சத்தமும் சின்னஞ்சிறு கற்கள் மேலிருந்து விழுவதுபோன்ற பிரமையும் ஏற்படவே, மூடிய கண்களை மெதுவாகத் திறந்தான் குமாரன்.

திறந்தவன் விழித்த கண் விழித்தபடியே நின்றான். எதிரிலோ ஒரு பெரிய மரகதக்கல் அந்தக் குகையையே பசுமையாக அடித்தது. அதை அடுத்து பளிச்சென்று நக்ஷத்திரங்கள் மின்னின. அவை நக்ஷத்திரங்களல்ல, நான்கைந்து வைரங்கள் என்று உணர்ந்து கொண்ட குமாரன் அந்தக் காட்சியைக் கண்டு பிரமித்தான், இத்தனை கற்களும் பதிக்கப்பெற்ற சிம்மாசனம் ஒன்று கம்பீரமாகக் காட்சியளித்தது.

''பல்லவ பீடத்தைத் தரிசிக்கிறீர்கள். இளந்திரையன் அமர்ந்து அரசு செலுத்திய ராஜபீடம் இது. இதில் உட்காரக் கூடியவன் பெரிய ராஜ்யத்தை சமைக்கக் கூடியவனாகவும், வீரனாகவும், தர்மம் தவறாதவனாகவும் இருக்கவேண்டும். இல்லையேல் இந்த பல்லவ பீடமே அவனை அழித்துவிடும்'' என்று பெரியமறவன் மெதுவாகவும் அச்சத்துடனும் சொற்களை உதிர்த்தான்.

பல்லவபீடத்தில் நிலைக்கவிட்ட கண்களை அகற்றவே இல்லை குமாரன். இப்படியொரு அற்புதக் கலை சிருஷ்டி உலகில் இருக்குமென்பதை அவன் அடியோடு எதிர்பார்க்கவில்லை. பல்லவ பீடம் இளந்திரையனுக்குப் பிறகு மறைந்துவிட்டது என்று கேட்டிருக்கிறான். அது வெறும் கதையென்றே நினைத்தான். அது இப்படி தனது கண் முன்னால் தோன்றுமென்று அவன் நினைக்கவில்லை. அந்த பீடத்தின் அமைப்பு தங்கமும், வைர வைடூரியங்களும் பதித்ததாயிருந்ததைக் கண்ட குமாரன், இந்த

zeevaa

வைர வைடூரியங்கள் இளந்திரையன் ஆட்சியில் மணிபல்லவத்திலிருந்து வந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். இது இருக்கு மிடத்தைப் பெரிய மறவன் எப்படி அறிந்தான் என்பதை எண்ணி அதைப் பற்றிக் கேட்கவும் செய்தான்: "பெரியவரே! இதன் இருப்பிடம் உமக்கு எப்படித் தெரியும்?" என்று.

"அது ஒரு விநோதக் கதை, அதையும் கேள்" என்று அந்தக் கதையை விவரிக்கத் துவங்கினான் பெரிய மறவன். அதைக் கேட்கக் கேட்கப் பிரமித்தான் குமாரன். தாமரைச்செல்விக்கு பிரமிப்பை விட அச்சம் அதிகமாகியது.



zeevaa

## 19. இருண்டுவிட்ட குகை

"அது ஒரு விசித்திரக் கனவு. இன்று அதை நினைத்துப் பார்த்தால் கூட அது உண்மையாயிருக்க முடியுமா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது" என்ற பெரிய மறவன், "குமாரா! நீ எப்படியும் எனது மகளை மணக்கப் போகிறாய், ஆகையால் எனக்கு மருமகன். உன்னிடம் எனது ரகசியத்தைப் பகிர்ந்து கொள்வதில் தவறு இல்லை" என்று அந்த ரகசியத்தைச் சொல்வதற்கு ஒரு காரணத்தையும் சிருஷ்டித்துக் கொண்டான். அவன் கண்களில் கனவுச் சாயை பரவியது. அவன் கண்களிலிருந்தும் அவற்றின் மங்கிய பார்வையிலிருந்தும் பெரிய மறவன் நீண்ட காலத்திற்கு முன்பு சென்றுவிட்டான் என்பது குமாரனுக்கு சந்தேகமறத் தெரிந்து விட்டதால் அவன் வாயைத் திறக்கவில்லை.

பெரியமறவன் சிறிது நேரம் கனவு காண்பதுபோல் தோன்றினான். பிறகு ஆயாசப் பெருமூச்சுவிட்டு, "உம், எனது பாரம் என் மனத்தை விட்டு இறங்கும் காலம் வந்துவிட்டது" என்று வாய்விட்டு மெதுவாகப் பேசினான். "குமாரா! கேள். அந்த நிகழ்ச்சி ஏற்பட்டபோது உன் வயதுதானிருக்கும் எனக்கும். யாருக்கும் அடங்காமல் தறிகெட்ட காளை மாதிரித் திரிந்து கொண்டிருந்தேன். அடிக்கடி கடல்மல்லைக்கு வருவதில் எனக்கு மிகவும் ஆசை. எனது நண்பர்களுடன் அடிக்கடி இங்கு வந்து கடலாடுவேன். இந்தப் பாறைகளில் படுத்துக் கிடப்பேன். சில நாட்கள் இங்கேயே தங்கிவிடுவேன், அதற்குச் சில நண்பர்கள் இணங்காததாலும் சிலரை அவர்கள் பெற்றோர்கள் கண்டித்து நிறுத்தி விட்டதாலும்

zeevaa

நான் மட்டும் தன்னந்தனியே வர முற்பட்டேன். இந்தக் கடலும் இதன் சூழ்நிலையும் என்னை முற்றும் கவர்ந்து விட்டன. முடிந்தால் இங்கேயே வாழ்ந்திருப்பேன். என் பெற்றோர்களுக்கு வயதாகி இருந்ததாலும் அவர்கள் நலிவுற்றிருந்த தாலும் அவர்களை இங்கு அழைத்து வர முடியவில்லை. நானும் அடியோடு அவர்களைப் பிரிந்தும் இருக்க முடியவில்லை.

"ஆனால் நான் தொடர்ச்சியாகக் கடலோரத்திலுள்ள பாறையில் தூங்க முற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கனவு கண்டேன். 'அதோ கூப்பிடு தூரத்தில் பெரிய அரச பீடம் இருக்கிறது. அந்தப் பெரிய மலைப் பாறையில் படு' என்று யாரோ சொன்னது போல் கனவில் தெரிந்தது. அதனால் சட்டென்று கண்விழித்துப் பார்த்தேன். பிறகு எனது மடமையை நினைத்து நானே சிரித்துக் கொண்டேன். ஆனால் அடுத்த நாள் முதற்கொண்டு சற்று தூரத்திலிருந்த இந்த மலைப்பாறை மீது படுக்கத் துவங்கினேன். இங்கும் சொப்பனங்கள் வந்த வண்ணமிருந்தன. அப்புறம் நான் பெரியவனானதும் இங்கு வருவதை நிறுத்திக் கொண்டேன். இதற்கிடையில் எனது தாய் தந்தையர் காலமானார்கள். காஞ்சியின் பெரிய கள்ளுக் கடை எங்கள் குடும்பச் சொத்து. அதை என் அண்ணன்மார்கள் எடுத்துக் கொண்டு இப்பொழுது எனது குடிசை இருக்கும் மேட்டைக் கொடுத்தார்கள்.

"எனக்கு வயதான பிறகு திருமணம் நடந்து தாமரைச்செல்வியும் பிறந்தாள். அதற்குப் பிறகும் நான் இந்த மலையின் மீது படுக்க ஆரம்பித்தேன். ஒரு நாள் நள்ளிரவில் ஏதோ மனித அரவம் மலைப்பாறைக்கு அடியில் கேட்டது. முதலில் அதைப் பிரமை என்று நினைத்தேன். அன்று அமாவாசை இரவு. சற்று நேரத்திற்கெல்லாம் தலையிலிருந்து கால்வரை மூடிய ஒரு உருவம் கீழிருந்து மேலே

zeevaa

வந்து மலைப்பாறைகளைத் தாண்டித் தாண்டிச் சென்றது. அதன் கால்கள் கீழே படவில்லை. எனக்குத் திகில் பிடித்துக் கொண்டது. ஏதோ பிசாசு என்று முதலில் நினைத்தேன். ஆனால் அந்த உருவத்தை மறுநாளும் பார்த்தேன். அது வந்து வந்து இந்தப் பாறைகளில் மறைந்து விடும். நீண்ட நேரம் கழித்து வெளியே வரும்.

''இது இப்படி நடந்து கொண்டிருக்கும் ஒரு அமாவாசையில் நான் விழித்துப் படுத்திருந்தேன். அந்த உருவம் பாறைக்கடியில் மறைந்ததும் நான் மெல்ல எழுந்து அதைத் தொடர்ந்தேன். அது முதல் பாறையை நகர்த்தியதையும் அடுத்து பல்லவ பீடத்தை நோக்கிச் சென்றதையும் கவனித்தேன். அந்த உருவம் அப்பொழுதும் தனது போர்வையை நீக்கவில்லை. முழு உடம்பையும் மறைத்தவண்ணம் பல்லவபீடத்தில் அமர்ந்தது. அதன் கண்களுக்கு மட்டும் அதன் உடையில், முகத்தில் துவாரங்கள் விட்டிருந்த படியால் நான் ஒதுங்கி நின்று கொண்டேன், அதன் கண்களில் படாதிருக்க. அதிக நேரம் அங்கு நிற்கவில்லை நான் மெதுவாகப் படிகளில் ஏறி மேலே வந்து பழைய இடத்தில் படுத்து உறங்குவது போல் பாசாங்கு செய்தேன். அன்றிலிருந்து சில நாட்கள் அதைக் காணவில்லை.

''அது உருவமல்லவென்பதையும், கறுப்பு உடையால் தன்னை மூடிக்கொண்டு பிசாசு வேஷம் போட்ட மனிதனேயென்பதையும் புரிந்து கொண்டதால் அங்கு படுக்கும்போதெல்லாம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டேன். பிறகு அந்த மலையில் படுக்காமல் கடலோர மலைப்பாறையில் படுத்தேன். அதற்குப் பிறகு அந்தப் பிசாசை நான் பார்க்கவில்லை. அந்த மனித பிசாசும் நான் பயந்து விட்டதாக நினைத்ததால் நான் நிர்ப்பயமாக உறங்கினேன்.

zeevaa

சில நாட்களில் அது வந்து போனபிறகு, நானும் அந்தப் பாறைகளை நகர்த்தி விட்டு அடிக்கடி பல்லவபீடத்தைத் தரிசித்து வந்தேன்."

"இப்படி இரண்டு ஆண்டுகள் கழிந்தபிறகு தாமரைச்செல்வியின் தாய் காலமானாள். அது எனக்குப் பேரதிர்ச்சியாக இருக்கவே நான் கள்ளுக் கடைக்குச் செல்லத் துவங்கினேன். அந்தக் குடிப்பழக்கத்தி லிருக்கையில் ஒரு நாள் கடல்மல்லையில் சில புரவி வீரர்கள் வந்து என்னை மாடு பிடிக்கும் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்கள். அவர்களுடன் சேர்ந்து மாடுகளைத் திருடினேன். அவற்றில் சிலவற்றை எனக்கு ஊதியத்திற்குப் பதில் அளித்தார்கள். அந்தக் கள்வர்கள்தான் களப்பிரர் என்பதை உணர்ந்தேன். இருப்பினும் களவையோ கள்ளையோ நிறுத்த என்னால் முடியவில்லை. திருடிய பசுக்களுக்கு நல்ல விலை கிடைத்தது. கொஞ்சம் பணமும் சேர்த்து வைத்தேன் செல்வியின் திருமணத்திற்கு. அந்தப் பணம் கூடக் குடியில் கரைந்து விட்டது. பிறகு அந்தக் கடையை காஞ்சியின் காவலர் தலைவன் தனது ஆட்களை விட்டுக் குத்தகை எடுத்தான். எனக்குக் குடியை அதிகமாகவும் அடிக்கடி கொடுத்தான். இருப்பினும் சில நாட்கள் நான் மறைந்து விடுவேன். யாருமறியாமல் சென்று பல்லவ பீடத்தை தரிசித்துவிட்டு வருவேன்.

"அப்படி ஒருமுறை சென்றபோது அந்த பீடத்தின் மீது சிறு பட்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பிசாசு வேஷக்காரன்தான் அதை வைத்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். ஆகையால் அதைத் தொடவில்லை. அதைத் தொட்டாலோ, அகற்றினாலோ பல்லவ பீட சூட்சுமத்தை அறிந்தவன் இன்னொருவன் இருக்கிறானென்று அவன் தெரிந்து கொள்வான். தெரிந்து கொண்டால் என்னை அழிக்கத் தவறமாட்டான் என்று உணர்ந்து

zeevaa

அதைத் தொடாமலிருந்து விட்டேன். பிறகு நான் இங்கு அடிக்கடி வருவதையும் நிறுத்திக் கொண்டேன்.

''பல்லவ பீடத்தின் இரகசியம் எங்கள் இருவருடனும் இருந்தது. இப்பொழுது உங்களிருவரையும் சேர்த்து நால்வரிடம் இருக்கிறது. இருப்பினும் இந்தக் குகையில் நுழையும் மர்மம் எனக்கும் அந்த இன்னொருவனுக்கும் தான் தெரியும். அவன் யாரென்பதை அறிய நான் செய்த முயற்சிகள் வீணாயின. இதற்கிடையில் களப்பிரர் மாட்டுக் களவு அதிகரித்தது. எங்கும் போர் விளைவுக்கான குறிகள் தென்பட்டன. இடையில் ஆந்திரத்திலிருக்கும் பல்லவ மன்னரும் ஒரு ஒற்றனை அனுப்பியதாகத் தெரிகிறது. அது நீயாகத் தானிருக்கும் என்ற சந்தேகங் கூட ஒரு சமயத்தில் தோன்றியது. ஆனால் அது மாறி விட்டது. பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அந்த சந்தேகத்தைப் போக்கடித்து விட்டன. இன்னும் ஒரு சந்தேகம் இருக்கிறது எனக்கு.'' -இப்படிப் பேசிய பெரிய மறவன் சிறிது மௌனம் சாதித்தான்.

''என்ன சந்தேகம்?'' என்று ஆத்திரத்துடன் வினவினான் குமாரன்.

''இங்கு வந்து பல்லவ பீடத்தின் ரகசியத்தை அறிய முயன்றது நீயில்லா விட்டால் வேறொருவனாயிருக்கலாமோ? என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதைப்பற்றிச் சிந்தித்தேன்'' என்று பெரிய மறவன் சொன்னான்.

''ஏன் அப்பா?'' என்று செல்வி வினவினாள்.

''அவன் கொடியவன். ஆனால் இத்தகைய பெரிய ரகசியத்தை மறைக்கும் திறன் அவனுக்கு இல்லை. அவன் இது இருப்பதை அறிந்திருந்தால் இத்தனை நாள் இது காஞ்சி அரண்மனை

zeevaa

யிலிருக்கும். அல்லது இந்தப் பீடத்திலுள்ள கற்களைச் சிறுகச் சிறுகப் பெயர்த்துவிற்றிருப்பான்'' என்று விளக்கினான் பெரிய மறவன்.

''வேறு யாரைத்தான் சந்தேகிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் குமாரன்.

ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான் பெரிய மறவன். அவன் வாயில் பேச்சு வரவில்லை. கண்கள் பாறைக் கூரையை நோக்கின. திடீரென்று இரண்டு பாறைகள் நகரும் சத்தம் கரகரவென்று கேட்டது. குகையெங்கும் மை இருட்டு சூழ்ந்தது. யாரோ வெளியே நடந்து செல்லும் காலரவம் மட்டும் கேட்டது. அப்படி நடந்தபோது அணிந்திருந்த பாதக்குறடு டக்டக்கென்று ஒலி கிளப்பியது. பெரிய மறவன் மார்பு டக்டக்கென்று ஒலிகிளப்பிப் பாதக்குறட்டின் ஒலியுடன் கலந்து கொண்டது.



zeevaa

# 20. கடல் கிரீடை

இரண்டு பாறைகள் நகர்ந்து குகையில் மையிருட்டு சூழ்ந்ததும், வெளியில் யாரோ படிகளில் ஏறிச்செல்லும் பாதக்குறடுகளின் ஒலிகள் கேட்டதும், அச்சமென்பதை அறவே அறியாத பெரிய மறவன் இதயத்திலும் அச்சம் புகுந்து அது படபட்வென அடித்துக் கொள்ளவே, சில விநாடிகள் அவன் சொல், செயல் இரண்டையுமே இழந்து நின்றான், அதன் விளைவாக, 'வேறு யாரைச் சந்தேகிக்கிறீர்கள்?' என்று குமாரன் கேட்ட கேள்விக்குப் பெரிய மறவன் பதில் இயம்ப இயலாமல் மௌனத்தின் வசப்பட்டான். ஆனாலும் சில நிமிடங்களில் சுயநிலையை அடைந்து "குமாரா! முதலில் நாம் இந்த இடத்தைவிட்டு வெளியேறுவோம்" என்று சொன்னான்.

பெரிய மறவன் திகிலுக்கும் மௌனத்துக்கும் காரணத்தை குமாரன் புரிந்து கொண்டாலும் அதைப் பற்றியோ, தாங்கள் குகைக்குள் சிறைப்பட்டு விட்டதையோ அணுவளவும் லட்சியம் செய்யாமல் தனது அருகில் நின்ற தாமரைச்செல்வியின் இடையைத் தனது இடதுகையால் இழுத்து அவள் உடலைத் தனது உடலுடன் இணைத்துக் கொண்டான். பிறகு வலது கையால் அவள் மார்பில் கையை வைத்து அவள் இதயத் துடிப்பைக் கவனித்தான். இதயம் படபடவென அடித்துக் கொண்டதால் அதை நிதானப்படுத்தும் பொருட்டுத் தனது கையால் அவள் இடது மார்பைத் தடவிக் கொடுத்து, "செல்வி! இப்பொழுது அச்சத்துக்கு அவசியமில்லை. இந்தக் குகையிலிருந்து வெளியேறுவது அப்படியொன்றும் பிரமாத

zeevaa



zeevaa

காரியமல்ல'' என்றான். அவன் அப்படிப் பேசியது தனது கையின் சேஷ்டையை மறைக்கவும் தனது தந்தை கண்ணில் மண்ணைத் தூவவுமே என்பதையும் உணர்ந்த தாமரைச்செல்வி தனது கையொன்றால் அவன் கையைப் பிடித்துத் தள்ள முயன்றாள். அது முடியாது போகவே இடது மார்பிலிருந்த அவனது வலது கையைத் தனது வலது கையால் இறுகப் பிடித்தாள். அப்படி கையைப் பிடித்ததும் அதன் பிடியிலேயே சென்ற குமாரனின் வலது கை அவள் வலது மார்பகத்தை அடைந்தது. அவள் அவன் காதை நெருங்கி, ''இதயம் வலது புறத்தில் இல்லை'' என்று மிக ரகசியமாக ஓதினாள். அந்த அறையில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த நிசப்தத்தில் அந்த ரகசியச் சொற்களும் பெரிதாக ஒலிக்கவே, ''என்ன செல்வி?'' என்று பெரியமறவன் கேட்டான்.

''எனக்கென்னவோ பயமாக இருக்கிறது'' என்று பொய் சொன்னாள் தாமரைச்செல்வி, உண்மையை மறைக்க.

வயதின் காரணமாகப் பெரிய மறவன் காது அதிக தீட்சண்யமில்லாததால், ''நானும் குமாரனுமிருக்க உனக்கு எதற்குப் பயம்?'' என்று கேட்டான்.

''முதலில் இங்கிருந்து போகவேண்டுமல்லவா?'' என்ற தாமரைச் செல்வி, குமாரன் வலது கையைத் தனது வலது எழுச்சியிலிருந்து அகற்ற முயன்றாள். ஆனால் அந்தக் கொடிய கை இருந்த இடத்திலிருந்து அகல மறுத்தது. இடது கையும் அவள் இடையிலிருந்து நீங்கி அலையத் துவங்கியது.

தாமரைச்செல்வி உணர்ச்சி அலைகளில் தூக்கி எறியப்பட்டு இன்ப வேதனையின் வசப்பட்டுத் துவண்டாள். மெல்ல குமாரன் மீது சாயவும் முற்பட்டாள். அப்பொழுது பெரிய மறவன்

zeevaa

மெதுவாகப்பேச முற்பட்டு, ''குமாரா! செல்வியைக் கவனித்துக் கொள். அவள் உலக அனுபவமில்லாத குழந்தை, வீணாகப் பயப்படுவாள். முதலில் நான் சற்று வெளியே போய்த் திரும்புகிறேன்'' என்று கூறினான்.

''கவலைப் படாமல் சென்று வாருங்கள். செல்வியை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்ற குமாரன், ''எதற்கும் நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். இந்தக் குகையை மூடியவன் உங்களுக்காக வெளியில் காத்திருப்பான். உங்களை அழிக்கத் தயங்கமாட்டான்'' என்று எச்சரிக்கையும் செய்தான்.

''என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். அவன் என்னை எது செய்தாலும் அவனை அழித்துவிட என்னால் முடியும் என்பதை அவன் உணர்ந்திருக்கிறான். தவிர, தான் யார் என்று இந்தச் சமயத்தில் காட்டிக்கொள்ள அவன் இஷ்டப்படவும் மாட்டான்'' என்று சொன்ன பெரிய மறவன், சொன்னதும் சொல்லாததுமாக வெளியே ஒரு புரவி மிக வேகமாக ஓடும் குளம்பொலி காதில் விழவே நகைத்தான் பெரிதாக. ''பார்த்தாயா குமாரா! அவன் என்ன ஓட்டம் ஓடுகிறான்!'' என்றும் கூறினான் நகைப்பின் ஊடே.

குமாரன் பெரிய மறவன் சொன்னதை ஒப்புக்கொள்ள மறுத்து, ''அவன் ஓடவில்லை. உங்களுக்காகக் காத்திருக்கிறான்'' என்று திட்டமாகச் சொன்னான்.

''எப்படித் தெரியும் உனக்கு?'' என்று வினவினான் பெரிய மறவன் சிறிது சினத்தைக் குரலில் காட்டி.

''தெரியும்'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்ன குமாரன், ''நீங்கள் படிகளில் ஏறிச் சென்றதும் முதலில் உடலை வெளியில்

zeevaa

காட்ட வேண்டாம். ஒரு கையை மட்டும் உயர்த்தி இழுத்துக் கொள்ளுங்கள்'' என்று யோசனையும் சொன்னான்.

குமாரன் அளவுக்கு அதிகமாகப் பயப்படுவதாகத் தோன்றியது பெரிய மறவனுக்கு. ஆகையால் பதிலேதும் சொல்லாமல் மெல்லக் குகையில் முதல் பாறையை நகர்த்தினான். சுக்கான் கற்களை எடுத்து அடிக்க முயன்றான் தீ மூட்ட. ''சுள்ளியை ஏற்றவேண்டாம். பாறைகளை நகர்த்த உங்கள் அனுபவமும் அனுமானமும் போதும்'' என்று, பெரிய மறவன் முயற்சியை அப்பொழுதும் தடுத்தான் குமாரன்.

அத்துடன் கற்களைக் கீழே போட்ட பெரிய மறவன் தனது கையால் பாறையைத் தடவி ஏதோ ஒரு இடத்தில் தோளைக் கொடுத்து நகர்த்த, பாறையும் நகர்ந்தது சத்த மேதுமின்றி, பாறையை மீண்டும் மூடாமலே வெளியே சென்று நாலைந்து அடிகள் நகர்ந்து இன்னொரு பாறையையும் நகர்த்திவிட்டுப் படிகளில் மெதுவாக ஏறிச் சென்றான். அவன் காலடிகள் படிகளில் கேட்டதும் தாமரைச் செல்வியை இரு கைகளாலும் இறுகத் தழுவி அவள் கன்னமொன்றில் இதழ்களை ஆழப் புதைத்தான் குமாரன். ''தந்தை போகட்டுமென்று காத்திருந்தீர்களா?'' என்று கேட்ட செல்வி புன்முறுவல் செய்தாள். ஆனாலும் இருட்டில் அது தெரியவில்லை.

''தந்தை இருந்தால்தானென்ன? இந்த இருட்டில் என்ன தெரிந்துவிடும்?'' என்று குமாரன் கேட்டான்.

''நல்ல அழகு.''

''எது?''

''உங்கள் நடத்தை.''

zeevaa

''எனது நடத்தைக்கு என்ன?''

''மாமனார் இருக்கையிலேயே உங்கள் சுபாவத்தைக் காட்டுகிறீர்களே! உங்களுக்கு என்ன துணிவு இருக்க வேண்டும்?''

''நான் வீரனல்லவா?''

''அதனால்?''

''துணிவு இருக்கத்தானே செய்யும்!''

''நீங்கள் வீரனோ, காமனோ தெரியாது. இரண்டிலும் வல்லமை இருக்கிறது.'' -இம்முறை சிறிது நகைத்தாள் தாமரைச்செல்வி.

சிரித்த அவள் இதழ்களைத் தனது இதழ்களால் மூடினான் குமாரன். பல விநாடிகள் கழித்து அவள் -இதழ்களுக்கு விடுதலையளித்து; ''இன்று புரிந்து கொண்டேன்'' என்றான்.

''என்ன புரிந்து கொண்டீர்கள்?'' என்று அவள் கேட்டாள் நாணம் மிகுந்த குரலில்.

''துணிவில் வீரத்துணிவு, காமத்துணிவு என்று இருவகை உண்டு என்பதை இன்றுதான் உணர்ந்தேன்'' என்ற குமாரன், ''ஆனால் செல்வி, காமத் துணிவுக்கு வீரத்துணிவைவிட அதிக் சாமர்த்தியம் வேண்டும்'' என்றும் சொன்னான்.

''ஆம் ஆம்'' என்றாள் தாமரைச்செல்வி.

''என்ன ஆம் ஆம்?'' என்று கேட்ட குமாரன் அவள் கழுத்தில் இதழ்களைப் புதைத்தான்.

''காமத் துணிவுக்குத் தியாகம் வேண்டும்'' என்றாள் செல்வி.

''தியாகமா?'' வியப்புடன் வினவினான் குமாரன்.

zeevaa

''ஆம்''

''என்ன தியாகமோ?''

''வெட்கத்தைத் தியாகம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தந்தை பக்கத்திலிருந்தாலும்...'' வாசகத்தை முடிக்கவில்லை அவள்.

''தந்தை பக்கத்திலிருந்தாலும், சொல் செல்வி?'' என்று வற்புறுத்தினான் குமாரன்.

''உங்கள் கை சும்மா இருக்காது.''

''கை மட்டுமா?''

''உதடுகளுந்தான்.''

''உதடுகள் மட்டுந்தானா?''

''சே சே! உங்களுக்கு வெட்கமில்லை'' என்று சீறினாள் அவள்.

அவள் ஊகத்தை நினைத்து நகைத்த குமாரன், ''இதயம் மட்டும் சும்மா இருக்குமா?'' என்று கேட்டான்.

அவள் நிம்மதிப் பெருமுச்சு விட்டாள். தான் அத்துமீறிப் போய்விட்டதை நினைத்து வெட்கமும் கொண்டாள். மேலும் ஏதோ சொல்லப் போனவள் சட்டென்று அதிர்ச்சியுற்று நின்றாள். படிகளில் யாரோ உருளும் சத்தம் கேட்டது. குமாரன் வேகமாகப் படிகளை நோக்கி ஓடினான். நான்காவது படியில் உருண்டு கிடந்தான் பெரிய மறவன். அவன் இருந்த படியை அடைந்ததும் அவன் உடலைப் பரிசோதிக்க முயன்ற குமாரனைப் பெரிய மறவன் தடுத்து, ''எனக்குக் காயமொன்றுமில்லை. வேண்டுமென்றுதான் உருண்டேன், சற்று நிதானித்திரு. இந்தக் குகைக்கு மேலே யாராவது

தோன்றினால் உன் குறுவாளை எறிந்து அவனைக் கொன்றுவிடு'' என்று கூறினான்.

குறுவாளை இடைக் கச்சையிலிருந்து எடுத்துக்கொண்டு மெதுவாகப் படிகளில் ஏற முயன்றான் குமாரன். அந்தச் சமயத்தில் மேல்பாறையும் உருண்டு வாயிலை அடைத்துக் கொண்டது. ''சரி, அவன் போய் விட்டான்'' என்ற பெரிய மறவன் படிகளில் உட்கார்ந்தான். ''உங்களுக்குக் காயம் ஏதுமில்லையே?'' என்று குமாரன் கேட்க, ''ஏதுமில்லை. அவன் குறுவாளை வீசியதும் அதை நான் கையால் பிடித்து உருண்டு விட்டேன். அதற்கு நான் பலியாகி விட்டதாக நினைத்துப் பாறையால் இந்தக் குகையை மூடிவிட்டான். இனி வர மாட்டான். நீ போய் செல்வியை அழைத்து வா'' என்றான்.

குமாரன் பெரிய மறவன் உத்தரவுப்படி கீழே சென்று செல்வியை அழைத்துக்கொண்டு இருபாறைகளையும் மூடி, பெரிய மறவன் உட்கார்ந்திருந்த படிக்கு வந்து, ''வாருங்கள் போகலாம்'' என்று கூறிக்கொண்டு தான் முன்னால் படிகளில் ஏறிச்சென்று குகையை மூடியிருந்த பாறையை அகற்றினான். மற்றவர்களும் வந்தபிறகு குகையைப் பாறையால் மூடிவிடவே இயற்கையின் சுத்தமான காற்றை மூவரும் முகர்ந்தார்கள். பகலவனும் கீழ்த்திசையில் எழுந்தான்.

கடல்மல்லையில் மலைகளின் அழகைத் தனது செவ்விய கிரணங்களால் அழகுபடுத்தினான் காலைக் கதிரவன். கறுப்பான பாறைகளில் தாக்கிய கிரணங்களால் சிவப்பும், கறுப்பும் கலந்து ஒரு புதுவிதக் கல்லையும் மலை மர இலைகளின் பசுமையில் பாய்ந்து பச்சையும் சிவப்பும் கலந்த புதியதொரு வண்ணத்தையும் சிருஷ்டித்து புதுப்புது ரசாயன வித்தைகளைச் செய்து கொண்டிருந்த

zeevaa

கதிரவனுக்கு, தூரத்தே தெரிந்த கடலலைகள் கண்ணாடிகளைக் காட்டின. இந்த அற்புதங்களை ரசித்த வண்ணம் மலையிலிருந்து இறங்கிய மூவரும் கடலோரம் சென்றதும், ''இங்கே நீராடினா லென்ன?'' என்று குமாரன் பெரிய மறவனைக் கேட்க, ''நீங்களிருவரும் நீராடுங்கள். நான் சிறிது நேரம் கழித்து நீராடுகிறேன்'' என்று குறிப்பறிந்து பதில் சொன்னான்.

''ஏன்? நீங்களும் எங்களுடன் நீராடலாமே?'' என்று குமாரன் மரியாதைக்குக் கேட்டான்.

''வேண்டாம். எனக்குச் சிறிது வேலையிருக்கிறது'' என்று சொல்லிப் போய்விட்டான் பெரிய மறவன்.

''உன் தந்தை எவ்வளவு நல்லவர்!'' என்று குமாரன் சிலாகித்தான்.

''உங்களுக்கு அனுகூலமானவர்'' என்றாள் செல்வி.

''சரி சரி! நீராட உடை உடுத்திக்கொள்'' என்ற குமாரன் எட்ட நின்ற தனது புரவிக்குக் குரல் கொடுக்க அது அருகில் வந்தது. அதில் தொங்கிய பையிலிருந்து மாற்றுடை எடுத்து அணிந்துகொண்டான். தனது உடைகளைக் களைந்து அதே பையில் திணித்துவிட்டுக் கடலை நோக்கி நடந்தான்.

அவன் நடக்க முற்பட்டதுமே நீராட்ட உடை அணிந்து உடலைப் போர்த்திய வண்ணம் ஒரு பாறையின் மறைவிலிருந்து வெளிப்போந்து அன்ன நடை நடந்து வந்த தாமரைச்செல்வியும் அவன் நீரில் இறங்கிய அதே சமயத்தில் நீரில் இறங்கினாள். மல்லைக் கடல் ஆரம்பம் மணல் படிந்திருந்ததால், அதிக ஆழமில்லாமல் முழந்தாளளவுக்கே நீர் இருந்ததால், ஆழத்தை நோக்கி நடந்தான் குமாரன். செல்வியும் அவனுடன் நடந்தாள். நல்ல

zeevaa

ஆழத்துக்கு வந்ததும் கழுத்தளவு புதைந்த உடலுடன் பக்கத்தில் வந்த செல்வியையும் இழுத்துக்கொண்டான் தனது உடலுடன். அடுத்தடுத்து எழுந்து வீசிய அலைகளைத் தாண்டித் தாண்டிச் செல்வியை அணைத்த வண்ணம் நீந்தினான் குமாரன், ''நீங்கள் என்ன அனாயாசமாக நீந்துகிறீர்கள்! நீங்கள் போன ஜன்மத்தில் மீனாக இருந்திருக்க வேண்டும்'' என்று கூறிய தாமரைச்செல்வி வாயில் கடல்நீரை உறிஞ்சி வாணம்போல் மேலே, ஊதினாள். ''நீயும் மீன்தான் செல்வி. வாளை மீன். உன் உடம்பு எத்தனை வழவழப்பாக இருக்கிறது!'' என்று அவளைக் கைகளால் தழுவித் தடவினான்.

''உங்களுக்குச் சௌகரியமாகப் போய்விட்டது'' என்று நகைத்தாள் செல்வி.

''நீலத்திரை போடுகிறான் கடலரசன்'' என்ற குமாரன், ''வித்தியாசம் இனத்தில்தான் இருக்கிறது'' என்றும் சொன்னான்.

''என்ன?'' -சீறினாள் செல்வி.

''மெல்லினத்துக்கும் வல்லினத்துக்கும் உள்ள வித்தியாசத்தைச் சொன்னேன். திரைக்குச் சின்ன 'ர' போட்டால் ஒரு பொருள், பெரிய 'ற' போட்டால் இன்னொரு பொருள், இரு பொருளும் இருக்கிறது இவன் போட்ட மறைவில்'' என்றான் குமாரன்.

''ஓகோ! திரை இலக்கணம் படிக்கிறீர்களோ?'' என்றாள் தாமரைச்செல்வி.

''ஆம் செல்வி. நான் இலக்கணம் படித்தவன்'' என்றான் குமாரன்.

''செயலிலிருந்தே தெரிகிறது'' என்றாள் செல்வி.

zeevaa

அடுத்து அவளுடன் நீருக்குள் மூழ்கிவிட்டான் குமாரன். நீருக்குள்ளேயே அவளை அணைத்த வண்ணம் நீந்தினான். கடைசியாக இருவரும் எழுந்தபோது அவள் பெருமூச்சு விட்டாள் சில விநாடிகள். அப்பொழுது அவர்கள் ஆழம் குறைவான இடத்துக்கு வந்திருந்ததால் பெருமூச்சில் அவள் மார்புகளிரண்டும் எழுந்து தாழ்வதை நோக்கிய குமாரனும் பெருமூச்சு விட்டான். அவள் அதற்குமேல் நிற்காமல் கரையை நோக்கி நடந்தாள். ஆழம் அவள் இடைக்குக் கீழே இறங்கியது. அவள் பின்னெழில்கள் அசையும் அழகைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் குமாரன். அவன் உணர்ச்சிகள் மல்லைக் கடலில் அலைகளைப் போலவே எழுந்து கொண்டிருந்தன. இருப்பினும் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அவனும் கரைக்கு வந்தான்.

இருவரும் புத்தாடைகளை அணிவதற்கும், வேறுவாவி யொன்றில் நீராடிய பெரிய மறவன் வருவதற்கும் வேளை சரியாயிருக்கவே மூவரும் பயணத்தைத் துவங்கினர் காஞ்சி நோக்கி.

புரவியில் ஏறி உட்கார்ந்த சமயத்திலிருந்து குமாரன் ஏதும் பேசவில்லை. ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். பெரிய மறவன் சிந்தனை எங்கோ ஓடிக்கொண்டிருந்தது. ''இன்னும் நான்கே நாட்களில் களப்பிரர் படைகள் காஞ்சிக்குள் நுழையும்'' என்று சற்று இரைந்தே சொன்னான் பெரிய மறவன்.

zeevaa

# 21. விசித்திரச் செயல்கள்

காஞ்சி நோக்கிப் புறப்பட்ட தங்கள் மூவரில் குமாரனே அதிக சிந்தனையில் ஆழ்ந்து விட்டதையும், அடுத்த நான்கு நாட்களில் களப்பிரர் காஞ்சியைத் தாக்கக்கூடும் என்று தான் சொல்லியும் அதைப்பற்றி அவன் பொருட்படுத்தாததையும் கண்ட பெரிய மறவன், 'குமாரன் அப்படி என்னதான் யோசிப்பான்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். ஒருவேளை பல்லவ பீடத்தைப் பார்த்த அதிர்ச்சியும் ஆச்சரியமும் அவனை ஊமையாகச் செய்திருக்குமோ என்றும் சிந்தித்தான். தன்மீது குறுவாளை வீசியவன் ஓடிவிட்டதாகத் தான் நினைத்திருக்க, 'அவன் ஓடவில்லை, உங்களுக்காகக் காத்திருக்கிறான்' என்று சொன்னானே குமாரன், அதெப்படி அவனுக்குத் தெரிந்தது? புரவி ஓடிய குளம்பொலி நன்றாக எங்கள் காதில் விழுந்ததே' என்றும் கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்ற பெரிய மறவன் பல விஷயங்களுக்கு விடை காணாமல் தவித்தான். ஆகவே நடந்த விவரங்களை அறிய குமாரனை நேராகவே வினவ முற்பட்டு, ''குமாரா!'' என்று அழைத்தான்.

பெரிய மறவன் புரவிக்கும் தாமரைச்செல்வியின் புரவிக்கும் இடையே தனது புரவியை நடத்திச் சென்ற குமாரன் சட்டென்று தனது சிந்தனையைக் கலைத்துக் கொண்டு, ''என்ன மாமா?'' என்று கேட்டான்.

அவன் தன்னை மாமாவென்று அழைத்தது பேரின்பமாயிருந்தது பெரிய மறவனுக்கு. எத்தனை நெருக்கடியையும் சமாளிக்கவல்ல

zeevaa



zeevaa

குமாரனைப் போன்ற மாவீரன் தனக்கு மருமகனாகக் கிடைத்துவிட்டான் என்ற நினைப்பு அவனுக்குப் பெரும் ஆறுதலை அளித்தது. அத்துடன் தான் கண்ணை மூடினாலும் தாமரைச் செல்விக்கு ஒரு காவலன் ஏற்பட்டு விட்டான் என்ற எண்ணம் அவனுக்குப் பெரும்மனச்சாந்தியை அளித்ததால், ''குமாரா! மருமகனே!'' என்று வாயார மிக அன்புடன் அழைத்தான் பெரிய மறவன். அந்த இருவரும் புது உறவைப் பரிமாறிக் கொண்டதைக் கேட்ட தாமரைச்செல்வி தலைகுனிந்து வெட்கப் புன்முறுவல் செய்தாள்.

அந்தப் புன்முறுவலைத் தனது கடைக்கண்ணால் கவனிக்கவே செய்த குமாரன் அவள் புரவியுடன் தனது புரவியை நெருங்கவிட்டு, அவள் இடையைத் தனது வலது கையால் கிள்ளினான். இடது கை சேணத்தைப் பிடித்திருந்த காரணத்தால், அவன் இடையைக் கிள்ளியதும் தனது புரவியைச் சற்று நகர்த்திய தாமரைச்செல்வி, ''உம்'' என்று ஒரு எச்சரிக்கை ஒலியையும் கிளப்பினாள்.

பெரிய மறவன் திரும்பி, ''என்னம்மா?'' என்று வினவியதும் குமாரன் தனது கையை அகற்றிக்கொள்ள, ''ஒன்றுமில்லை அப்பா!'' என்று கூறினாள் தாமரைச்செல்வி.

மருமகன் ஏதோ விஷமம் செய்கிறானென்பதைப் புரிந்து கொண்டாலும் அதைப்பற்றி உற்சாகமேகொண்ட பெரிய மறவன், ''குமாரா! உன்னை சற்று முன்பு அழைத்தேன்'' என்று சொன்னான்.

''அழைத்தீர்களா?'' என்று வினவினான் குமாரன்.

''ஆமாம். உன்னிடம் சில விஷயங்களைக் கேட்க இஷ்டப் பட்டேன்'' என்றான் பெரிய மறவன்.

zeevaa

''இப்பொழுதுதான் கேளுங்களேன்'' என்ற குமாரன் சிந்தனையிலிருந்து சிறிது மீண்டான்.

''நாம் குகையிலிருந்தபோது...?''

''உம்.''

''வெளியே புரவியின் குளம்பொலி வேகமாகக் கேட்டது.''

''ஆம்.''

''எதிரி ஓடிவிட்டானென்று நான் சொன்னேன்.''

''சொன்னீர்கள்.''

''நீ அதை மறுத்து, எதிரி ஓடவில்லையென்றும் எனக்காகக் காத்திருக்கிறானென்றும் சொன்னாய்.''

''ஆம்.''

''நீ சொன்னதுதான் சரியாயிற்று.''

''அது ஒன்றும் வியக்கத்தக்க விஷயமல்லவே'' என்றான் குமாரன்.

''விரைந்த புரவி மீண்டும் திரும்புமென்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று பெரிய மறவன் கேட்டான்.

''உங்களைத் தீர்க்காமல் அவன் போகமாட்டானென்பதை ஊகிக்க அதிக அறிவு தேவையில்லை. அவனைத் தவிர பல்லவ பீடத்தின் இருப்பிடத்தை நீங்கள் ஒருவர் தான் அறிந்திருக்கிறீர்கள் என்பது அவனுக்குத் தெரிந்த பிறகு உங்களை எப்படியும் தீர்த்து விடத் தீர்மானிப்பானென்பதை ஊகித்துக் கொண்டேன். அதுவும் உங்களைத் தீர்க்க நேற்று இரவை விடச் சிறந்த சமயம் கிடையாது.

zeevaa

ஆகவே புரவியை நமது காது கேட்க வேகமாகச் சுற்றிப் பாறைக்குப்பின்னால் நின்றிருக்கிறான். புரவியின் குளம்பொலி கேட்டதும் அவன் ஓடி விட்டதாக நினைத்து நீங்கள் தலையை வெளியே காட்டியதும் உங்கள் மீது குறுவாளெறியச் சித்தமாக நின்றான். குறுவாளையும் எறிந்தான். அவன் எதிர் பார்க்காதது இரண்டு. குளம்பொலியைக் கேட்டு நீங்கள் ஏமாறமாட்டீர் களென்பது ஒன்று. குறுவாளெறிந்த பின் நீங்கள் தப்பமாட்டீர் களென்பது இரண்டு. நீங்கள் முன்னெச்சரிக்கையுடனிருந்து வேகமாக வரும்குறுவாளின் பிடியைப் பக்கவாட்டில் பற்ற உருண்டு விட்ட ஒலி கேட்ட பின்பு அவன் புறப்பட்டுப் போய்விட்டான். இது தான் நடந்தது'' என்று விளக்கினான் குமாரன்.

இந்த விளக்கத்துக்குப் பிறகும் ஒரு கேள்வி கேட்டான் பெரிய மறவன்: ''நான் உருண்டதும் நான் செத்துவிட்டேனா இல்லையா என்பதை ஏன் வந்து பார்க்கவில்லை அவன்?'' என்று.

''இம்முறை நீங்கள் தனியாக வரவில்லை. நாங்களிருவரும் வந்திருக்கிறோம். ஆகையால் தனது செயலின் முடிவை அறிய முயலவில்லை அவன்'' என்றான் குமாரன்.

''நான் உயிருடனிருப்பது அவனுக்குத் தெரியுமா?'' -இன்னொரு கேள்வியைத் தொடுத்தான் பெரியமறவன்.

''தெரியும்.''

''அதை எப்படி ஊகிக்கிறாய்?''

''உங்கள் உயிர் போயிருந்தால் தாமரைச்செல்வி கதறியிருப்பா ளென்பதை யாரும் ஊகிக்கலாம். அப்படி எந்த அலறலும் இல்லாததால் உங்களுக்குக் காயம் பட்டிருக்கலாம் என்றுதான் நினைத்திருப்பான்.''

zeevaa

இப்படித் திட்டமாகக் குமாரன் சொல்வதைக்கேட்ட பெரிய மறவனின் வியப்பு உச்ச நிலையை அடைந்தது. எதிரியின் நினைப்புகளையெல்லாம் தானே எதிரிபோல் சொல்வதைக் கேட்ட பெரிய மறவன், ''குமாரா! நான் உயிரோடு இருப்பது தெரிந்தால் எதிரி என்னை சும்மா விடுவானா?'' என்று விசாரித்தான்.

''மாட்டான். ஆனால் அதற்கும் மாற்று இருக்கிறது'' என்று குமாரன் சொன்னாலும் என்ன மாற்று என்பதை அவன் சொல்ல வில்லை.

அன்று முழுவதும் மௌனமாகவே பயணம் செய்த குமாரன் காஞ்சியின் முகப்புக்காடு வந்ததும் பெரியமறவனையும் செல்வியையும் இறங்கச் சொல்லி, அங்கிருந்த ஒரு புதருக்கருகில் அழைத்துச் சென்றான். அங்கு பெரிய மறவனை எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லிவிட்டு எங்கோ சென்று ஒரு முயலை அடிததுக் கொண்டு வந்தான். பெரிய மறவனைப் படுக்கச் சொல்லி முயல் ரத்தத்தை அவன் மார்பின் வலது பக்கத்தில் கொட்டி தாமரைச் செல்வியின் உடையிலிருந்து துணியைக் கிழித்து மார்பில் பெரிய கட்டுப் போட்டான். இரவு இரண்டாம் ஜாமத்தை எட்டியதும் பெரிய மறவனை அவனது புரவியின் மீது குனிந்து படுக்கச் செய்து சேணத்தால் அவன் உடலைக் கட்டினான். பிறகு தாமரைச் செல்வியை புரவியிலேறச் சொல்லி தங்கள் இருபுரவிகளுக்கும் இடையில் பெரிய மறவன் புரவியை விட்டு அதைத் தங்கள் இருவர் புரவிகளுடன் நடக்கச் செய்தான். இந்த நிலையில் காஞ்சி மாநகருக்குள் இரவின் மூன்றாம் ஜாமத்தில் புகுந்தான். மூன்று புரவிகளும் மிக மெதுவாக நடந்தன. இந்த ஊர்வலத்தை காஞ்சியின் புறநகர்க்காவலர் கண்டு என்னவென்று விசாரிக்க, ''பெரிய மறவன் மீது யாரோ குறுவாளெறிந்து மரணக்காயப்படுத்தி

zeevaa

விட்டார்கள்!''என்று வதந்தியைப் பரப்பிய வண்ணம் மேட்டுக் குடிசையை அடைந்தான் குமாரன்.

அதுவரை புரவி மீது பிணம்போல் படுத்துக் கிடந்த பெரிய மறவன் சட்டென்று எழுந்திருக்க முயன்றதும் அவனைப்பிடித்து மறுபடியும் புரவியில் அழுத்திய குமாரன், தனது புரவியிலிருந்து குதித்துப் பெரிய மறவனைத் தனது தோள்மீது போட்டுக்கொண்டு மேட்டின் மீது ஏறி குடிசைக்குள் சென்று அவனைப் படுக்க வைத்தான். பெரிய மறவனுக்கு அந்த நாடகத்துக்குக் காரணம் புரிந்திருந்தாலும் இயற்கையாக இருந்த உணர்வின் காரணமாக, ''இப்படிப் பிணம் போல் கிடக்க என்னால் முடியாது'' என்று சீறினான், சற்று எழுந்திருக்கவும் முயன்றான். அவனைப் பிடித்து அழுத்தி மீண்டும் படுக்க வைத்த குமாரன், ''மாமா! நீங்கள் பிணம் போல் நடிக்காவிட்டால் நிஜமாகவே பிணமாக்க உங்கள் எதிரி முயல்வான். ஆகையால் சொல்கிறபடி செய்யுங்கள்'' என்று அதட்டினான். செல்வியையும் நோக்கி, ''நீ குடிசை வாயிலை விட்டு நகராதே. யார் வந்தாலும் உன் தந்தைக்கு சுய உணர்வு இல்லையென்று சொல்லிவிடு. உணவு மாத்திரம் கொடுத்துக் கொண்டிரு. இவரை வெளியே தலைகாட்ட விடாதே. நான் நகரத்துக்குள் போய் வருகிறேன்'' என்றான்.

''நான் நீராடுவது எப்படி?'' என்று கேட்டான் பெரிய மறவன்.

''இரண்டு நாட்களுக்கு நீராட்டம் கிடையாது'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் குமாரன்.

**கா**ஞ்சி மாநகர் விடியற்காலையிலேயே உயிர் பெற்றெழுந்தது. பறவையினங்கள் திருவெஃகாவின் கோபுரப் பொந்துகளிலிருந்து தலையை நீட்டிக் கூவின. பெரிய மணியும் உஷத் காலத்தை

zeevaa

வலியுறுத்தப் பெரிதாக அடிக்கப்பட்டது. எங்கும் மக்கள் நடமாட்டம் அதிகரித்தது. நகருக்குள் புகுந்ததும் குமாரன் நீதிபதியின் மாளிகைக்கு பின்புறமிருந்த வாவியில் நீராடிப் புத்துடை அணிந்து நிருபவர்மரைப் பார்க்கச் சென்றான். நிருப வர்மரும் முன்னதாகவே நீராடி நெற்றியில் கோபி சந்தனம் தீட்டிப் புத்துடை அணிந்து ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார். குமாரன் வந்து வணங்கியதும். ''குமாரா! எப்படியிருந்தது பயணம்?'' என்று விசாரித்தார்.

''பாதகமில்லை. நீங்களும் வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். நீங்கள்தான் ஏமாற்றி விட்டீர்கள்'' என்று கூறினான் வருத்தத்துடன்.

''நான் வரமுடியாததற்குக் காரணமிருந்தது'' என்றார் நிருபவர்மர்.

''என்ன காரணம் எசமான்?'' என்று வினவினான் குமாரன்.

''இன்னும் சில தினங்களுக்குள் களப்பிரர் காஞ்சியைத் தாக்குவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்றார் நீதிபதி.

''எப்படித் தெரியும் தங்களுக்கு?''

''காவலர் தலைவன் சொன்னான்'' என்றார் நீதிபதி.

''அப்படியானால் அதற்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டாமா?'' -குமாரன் கேட்டான் கவலையுடன்.

''அது காவலர் தலைவன் பொறுப்பல்லவா?''

''நகரப் பாதுகாப்பு என்றால் பல்லவ குலத்தைச் சேர்ந்தவர் என்பதால் உங்களுக்குப் பொறுப்பு உண்டல்லவா?'' என்று குமாரன் வினவினான்.

zeevaa

''உண்டு.''

''பாதுகாப்பு விவரங்களை நீங்கள் அறிய வேண்டாமா?''

''எப்பொழுது அறிவது? என்ன செய்வது? என்பது எனக்குத் தெரியும்'' என்றார் நீதிபதி.

''இந்த விஷயத்தை மன்னருக்குத் தெரியப்படுத்தி உதவி கேட்டால் என்ன?''

''கூடாது. இந்தச் சிறு விஷயத்துக்கு மன்னரைத் தொந்தரவு செய்வது தவறு. நம்மால் முடியாவிட்டால் அல்லவா மன்னரிடம் உதவி கேட்க வேண்டும்?'' என்ற நீதிபதி, ''குமாரா! எதற்கும் கவலைப்படாதே. எதையும் சமாளிக்க நான் இருக்கிறேன்'' என்றார்.

அவருக்குத் தலைவணங்கிவிட்டுக் காவலர் தலைவனை சந்திக்க குமாரன் சென்றான். காவலர் தலைவன் பெரும் குழப்பத்தில் இருந்தான். குமாரனைக் கண்டதும், ''உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''என்னையா?''

''ஆமாம்.''

''எதற்கு?''

''சீக்கிரம் இங்கு களப்பிரர் தாக்குதல் இருக்குமாம்.''

''யார் சொன்னது?''

''நீதிபதி.''

இதைக்கேட்ட குமாரன் சிறிது அதிர்ச்சியடைந்தான். ''அப்படியானால் காஞ்சியைப் பாதுகாக்க ஏற்பாடு ஏதாவது நடந்திருக்கிறதா?'' என்று வினவினான்.

zeevaa

''பாதுகாப்பை நீதிபதி ஏற்றுக்கொண்டு விட்டார். நாம் அவர் சொற்படி நடந்தால் போதும்'' என்றான் காவலர் தலைவன்.

''சரி! உங்களிடமிருக்கும் இரண்டாயிரம் வீரர்களை திரட்டுங்கள்'' என்றான் குமாரன்.

''படை திரட்ட உத்தரவில்லை நீதிபதியிடமிருந்து'' என்றான் காவலர் தலைவன்.

''படை திரட்ட உத்திரவிடும்படி என்னிடம் சொல்லியனுப்பி யிருக்கிறார் நீதிபதி'' என்றான் குமாரன்.

காவலர் தலைவன் முகத்தில் பெரும் குழப்பம் தெரிந்தது. ''எனக்கு எதுவும் விளங்கவில்லை. விநாடிக்கு ஒரு உத்தரவிட்டால் எதை நிறைவேற்றுவது?'' என்று அலுத்துக்கொண்டான்.

''இதுதான் அவர் பிறப்பித்த கடைசி உத்தரவு, இதை நிறைவேற்றுங்கள். இன்று மாலை நான் படைகளைப் பார்வையிடுகிறேன்'' என்று திட்டவட்டமாகவும் அதிகாரத் தோரணையிலும் கூறினான் குமாரன்.

zeevaa

## 22. நீதிபதியின் நிலை

களப்பிரர் படையெடுப்பு நான்கு நாட்களில் ஏற்படும் என்று காஞ்சியின் காவலன் அறிந்திருந்தும், அவன் காஞ்சியின் பாதுகாப்பை ஏன் பலப்படுத்தவில்லை? என்பதைப்பற்றிச் சிந்தித்தான் குமாரன். தற்காப்பு ஏற்பாடுகள் தேவையில்லை என்று நீதிபதி கூறிவிட்டதாகக் காஞ்சியின் காவலன் சொன்னதை எண்ணிச் சிறிது வியப்பும் அடைந்தான். ஆனால் அந்த வியப்பு அவனுக்கு பிற்பகல் வரையிலுமே இருந்தது. பிற்பகலில் அவனைத் தேடித் தானாகவே வந்த காஞ்சியின் காவலன், நீதிபதி தமது உத்தரவை மாற்றிவிட்டாரென்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லிவிட்டாரென்றும் கூறினான்.

அவன் சொன்னதைக் கேட்ட குமாரன் முகத்தில் சிறிதும் வியப்பைக் காட்டாமல், ''அப்படியா?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்டான்.

''ஆம்'' -காஞ்சியின் காவலன் முகத்தில் பெரும் குழப்பம் இருந்தது. குரலிலும் சந்தேகம் ஒலித்தது.

குமாரன் முகத்தில் மட்டும் எந்தவித மாறுதலுமில்லை. ''இந்த உத்தரவை எப்பொழுது பிறப்பித்தார் நீதிபதி?'' என்று வினவினான் குமாரன், உணர்ச்சி ஏதுமற்ற குரலில்

''இன்று காலையில் நீங்கள் என்னைச் சந்தித்தீர்களல்லவா?''

''ஆம்.''

''அதைப்போய் அவரிடம் கேட்டேன்.''

zeevaa



# பல்லவ பீடம்

## 22. நீதிபதியின் நிலை



zeevaa

''என்ன கேட்டீர்?''

''காலையில்தானே பாதுகாப்பு ஏற்பாடுகள் வேண்டாமென்று சொன்னீர்கள்! அதை ஏன் பகலுக்குள் மாற்றி வீட்டீர்கள்? என்று விசாரித்தேன் அவர் இல்லம் சென்று'' -இதைச் சொல்லிவிட்டு சிறிது தயங்கினான் காவலர் தலைவன்.

''அதற்கு அவர் என்ன பதில் சொன்னார்?'' என்று குமாரன் கேட்டான்.

''மாற்றியதாக யார் சொன்னது? என்று விசாரித்தார்'' என்று காவலர் தலைவன் பதில் சொன்னான்.

''நான் சொன்னதாகச் சொன்னீர்களா?''

''இல்லை.''

''வேறு என்ன சொன்னீர்கள்?''

''இதுவரை எனக்கு நேரடியாக உத்தரவுகளைப் பிறப்பித்து வந்த நீங்கள், இன்று மட்டும் புது உத்தரவை உங்கள் காவலர் தலைவரிடம் ஏன் சொல்லியனுப்பினீர்கள்? என்று காரணம் கேட்டேன.''

''அவர் விநாடிகூட யோசிக்கவில்லை. 'ஆம் ஆம், சொல்லியனுப்பினேன்'' என்றார். 'நம்மைவிடக் காஞ்சியைப் பாதுகாப்பதில் குமாரனுக்கு அக்கறை இருக்கிறது. ஆகவே அவன் எதைச்சொன்னாலும் அவன் சொல்கிறபடி செய்துவிடு. ஆனால் என்ன சொல்கிறான் என்பதை மட்டும் அவ்வப்பொழுது எனக்குத் தெரியப்படுத்து என்றார்'' என்ற காஞ்சியின் காவலர் தலைவன், ''உங்கள் உத்தரவைத் தனது உத்தரவாக பாவிக்கும்படியும் வலியுறுத்தினார். இது எனக்குப் புதுமையாயிருக்கிறது. யாரையும் நம்பாத நீதிபதி தங்களை இத்தனை தூரத்துக்கு ஏன் நம்புகிறார்? என்பது எனக்கு விசித்திரமாயிருக்கிறது'' என்றும் கூறினான்.

zeevaa

''அதில் ஒன்றும் வியப்பில்லை. இத்தனை நாள் அவர் பணிகளை நிறைவேற்ற நம்பிக்கையான மனிதன் யாரும் கிடைக்கவில்லை. இப்பொழுது நான் கிடைத்துவிட்டதால் அவர் இனி என் மூலமாக உத்தரவிட்டுத் தமது பதவிப் பளுவைக் குறைத்துக்கொள்ளப் பார்க்கிறார்'' என்றான் குமாரன்.

காஞ்சியின் காவலர் தலைவன் மலைத்தான். ''உங்களைச் சில நாட்களாகத்தான் நீதிபதிக்குத் தெரியும்? அப்படியிருக்க இத்தனை நம்பிக்கை ஏற்பட என்ன காரணம்?'' என்று வினவினான்.

''அதை அவரைத்தான் கேட்க வேண்டும்'' என்ற குமாரன், ''நீங்கள் ஏற்பாடுகளை கவனியுங்கள். நான் மீண்டும் உங்களை மாலையில் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அங்கிருந்து கிளம்பியவன் நீதிபதியிடம் வந்து அன்று மட்டும் தனக்குச் சிறிது ஓய்வு வேண்டுமென்று கேட்டான். ''ஓய்வா? எதற்கு?'' என்று கேட்டார் நீதிபதி.

''காஞ்சியிலிருக்கும் மருத்துவர் யாரையாவது அழைத்துச் சென்று பெரியமறவனைக் கவனிக்கச் செய்ய வேண்டும்'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான் குமாரன்.

நீதிபதியின் கண்களில் ஏதோ ஒளி ஒரு விநாடி பளிச்சிட்டு மறைந்தது. ''பெரியமறவனுக்கு என்ன வியாதி? நன்றாகத்தானே இருந்தான்?'' என்று நீதிபதி கேட்டார் அக்கறையுடன்.

''நேற்றைய நிகழ்ச்சிகளை நான் உங்களுக்குச் சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும்'' என்றான் குமாரன்.

''இப்பொழுதுதான் சொல்லேன்.''

''பல்லவ பீடத்தைப் பார்வையிட நாங்கள் போயிருந் தோமல்லவா?''

zeevaa

''ஆம்.''

''அதன் ரகசியம், அது இருக்குமிடம் பெரிய மறவனைத் தவிர வேறு ஒருவனுக்கும் தெரிந்திருக்கிறது.''

''என்ன?'' அதிர்ச்சியடைந்து தமது ஆசனத்திலிருந்து எழுந்திருந்தார் நீதிபதி. ''உண்மையாகவா?'' என்று கவலையுடன் விசாரிக்கவும் செய்தார்.

''ஆம் நீதிபதியவர்களே! அவன் அறிந்திருந்தது மட்டுமல்ல, பெரியமறவனைக் கொல்லவும் முயன்றான்...'' என்று நிதானித்துப் பேசினான் குமாரன்.

நீதிபதி முகத்தில் கவலையைக் காட்டினார். ''இதை நீ காலையில் சொல்லவில்லையே?'' என்று கேட்டார் குரலிலும் கவலையைக் காட்டி.

குமாரனும் துக்கச் சாயையை முகத்தில் படரவிட்டுக் கொண்டான், ''தெரிந்தால் நீங்கள் கவலைப்படுவீர்கள் என்று சொல்லவில்லை. பல்லவ பீடத்தின் ரகசியம் அவனுக்குத் தெரிந்திருந்தது மட்டுமல்ல; பெரியமறவனுக்கு அது தெரியுமென்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது'' என்று குமாரன் துன்பத்தை முகத்திலும் படரவிட்டுக் கொண்டான்.

''அப்படியானால் ஆபத்து காஞ்சியை நெருங்கும்'' என்றார் நீதிபதி.

''களப்பிரர் படையெடுப்புக்குப் பல்லவ பீடமும் காரணமாயிருக்குமோ?'' -குமாரன் குரலில் கவலை ஒலித்தது.

''அதுதான் காரணமாயிருக்கும்'' என்று வலியுறுத்திச் சொன்னார் நீதிபதி.

zeevaa

''அப்படியானால் அவர்கள் கையாள் யாராவது இங்கிருக்க வேண்டும்.''

''இருக்கிறான் என்பதுதான் நமக்குத் தெரியுமே.''

''யார் அது?''

''காஞ்சியின் காவலர் தலைவன்தான். அவன்தான் மாடு திருடுகிறான், விற்கிறான், கள்ளுக்கடை நடந்துகிறான், வேறு யாராயிருக்க முடியும்?''

''வேறு யாரும் இருக்க முடியாது. அவனைச் சிறைசெய்தால் என்ன?'' -இந்தக் கேள்வியை நேரடியாகவே கேட்டான் குமாரன்.

''அதைவிடக் காஞ்சியை இப்பொழுதே நேரிடையாகக் களப்பிரரிடம் ஒப்படைத்து விடலாம். காஞ்சியின் படைகள் அவன் சொற்படிதான் நடக்கும். தவிர, அவன் மன்னரால் நியமிக்கப் பட்டவன். நாம் மன்னர் உத்தரவின்றி அவனை அகற்ற முடியாது'' என்று கடுமையான குரலில் பேசிய நீதிபதி திடீரென்று கடுமையைக் குரலிலிருந்து மாற்றிக் கொண்டு, ''அது கிடக்கட்டும், பல்லவ பீடத்தை அறிந்த இன்னொருவனால் உங்கள் யாருக்கும் எந்தத் தீங்குமில்லையே?'' என்று கேட்டார்.

''அதைத்தான் சொல்ல வந்தேன். பேச்சு வேறுதிசையில் போய்விட்டது. அந்த இன்னொருவன் குறுவாளொன்றை எறிந்து பெரிய மறவனைக் கொல்ல முயன்றான்'' என்று வாசகத்தை குமாரன் முடிக்குமுன்பு, ''அப்படியானால் பெரிய மறவன்...?'' என்று அவரும் இழுத்தார்.

''இறக்கவில்லை. ஆனால் குறுவாள் மார்பில் பாய்ந்துவிட்டது. படுகாயத்திலிருக்கிறார். அவருக்குத் தான் மருத்துவரை அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறினான்.

zeevaa

''சரி சரி. அதை முதலில் பார். இன்றென்ன? நாளைக்கு வேண்டுமானாலும் ஓய்வு எடுத்துக் கொள். ஆயிரமிருந்தாலும் பெரியமறவன் இந்த ஊரின் பெரிய தனக்காரன்...''

''தாங்கள்?''

''நானுந்தான். மறவர் வகுப்பில் அவன் தலைவன். அவனில்லாமல் காஞ்சியில் எதையும் சாதிப்பதும் கஷ்டம். அவனைப் பத்திரமாகப் பார்.

இதைக் கேட்டபின்பு தலைவணங்கி வெளியே சென்ற குமாரன் கொட்டடியிலிருந்து தனது புரவியை அழைத்துக்கொண்டு காஞ்சியின் மருத்துவர் இல்லம் சென்றான். அங்கு மருத்துவரைக் கண்டு பெரிய மறவன் மார்பில் குறுவாள் பாய்ந்துவிட்டதைச் சொல்லி அவசரமாக சிகிச்சைக்கு அழைத்தான்.

மருத்துவர் அப்பொழுது கலுவத்தில் மருந்து அரைத்துக் கொண்டிருந்தார். ''மார்பிலா கத்தி பாய்ந்து விட்டது?'' என்று வியப்புடன் வினவினார்.

''ஆம்.''

''அப்படியும் உயிர் போகவில்லை?''

''இல்லை.''

''உம்!'' என்று உயிர் போகாதது தவறு போல் பெருமூச்சுவிட்டு எழுந்து தமது பெரிய முண்டாசைத் தலையில் அணிந்து மார்பில் ருத்திராட்ச மாலையாட, வேட்டியை இழுத்துச் செருகிக்கொண்டு இரண்டு பெரிய கத்திகளையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

''கத்திகள் எதற்கு?'' என்று வினவினான் குமாரன்.

''உஷ்ணத்தை உஷ்ணத்தால் எடுக்க வேண்டும். கத்திக் காயத்தைக் கத்தியால் எடுக்க வேண்டும்'' என்று வைத்திய

zeevaa

முறையைச் சொன்னார் மருத்துவர். அத்துடன் பேச்சை நிறுத்திச் சில பச்சிலைகளையும் மெழுகு ஒன்றையும் கையில் எடுத்துக்கொண்டு கிளம்பினார். இருவரும் குடிசை மேட்டை அணுகியதும் மருத்துவரை வாயிலில் நிறுத்தி, தான் மட்டும் உள்ளே சென்றான் குமாரன். அவன் உட்புகுந்த சிறிது நேரத்திற்கெல்லாம் தாமரைச் செல்வி பெரிதாகக் கத்தினாள். குமாரன் வெளியே துயரங்கலந்த முகத்துடன் வந்து, ''மருத்துவரே! உமக்கு இனி இங்கு வேலை யில்லை. பெரிய மறவர் கத்திக் காயத்துக்குப் பலியாகி விட்டார்'' என்று கூறினான்.

''எதற்கும் நான் பார்க்கிறேனே?'' என்றார் மருத்துவர்.

''பிணத்துக்கு வைத்தியம் செய்ய முடியுமா மருத்துவரே? அந்தப் பெண்ணின் துயரத்தை மேலும் கிளற வேண்டாம்'' என்று திட்டமாகச் சொன்னான் குமாரன்.

''ஒருவன் இறந்து விட்டான் அல்லது இல்லை என்று சொல்ல மருத்துவருக்குத்தான் உரிமை உண்டு. எதற்கும் நாடியைப் பார்க்கிறேன்'' என்று கேட்டார் மருத்துவர்.

''நாடித்துடிப்பு இல்லை. நான் பார்த்து விட்டேன்'' என்று குமாரன் அவரைக் கையைப் பிடித்து மேட்டிலிருந்து இறக்கி அவரது புரவியில் ஏற்றிவிட்டு ''நீங்கள் இந்த விஷயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம்'' என்றும் உத்தரவிட்டான்.

மருத்துவர் முனகிக் கொண்டு புரவியை நடத்தியவர், நேராக இல்லம் செல்லாமல் நீதிபதியிடமும் காஞ்சிக் காவலர் தலைவனிடமும் சொல்லிவிட்டுப் பிறகே தமது இல்லத்தை அடைந்தார். அவர்சொன்னதை நிதானமாகக் கேட்டுக் கொண்டார், நீதிபதி. பிறகு காஞ்சிக் காவலர் தலைவனை அழைத்து ஏதோ உத்தரவுகளை இட்டார். அவன் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். இருப்பினும் அவனது மனம்

zeevaa

பெரிதும் குழம்பி நின்றது. ''படைகளை காஞ்சிக்குத் தென்புறத்தில் நிறுத்தும்படி ஏன் நீதிபதி உத்தரவிட்டார்?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். பெரியமறவன் குடிசைக்கு ஏன் தீ வைக்க வேண்டும்? என்பதும் அவனுக்குப் புரியவில்லை. இருப்பினும் எவன் அழிந்தால் நமக்கென்ன என்று தீர்மானித்தான். துரிதமாக நீதிபதியின் கட்டளைகளை நிறைவேற்றவும் முனைந்தான்.

அன்று நள்ளிரவில் பெரிய மறவன் குடிசை தீப்பற்றி எரிந்தது. காட்டில் அது பெரிய ஜ்வாலையாக எரியவே அதன் புகை நீண்ட தூரம் தெரிந்தது. அதைக் கண்ட அக்கம்பக்கத்துக் குடிசைவாழ் மக்கள் அங்கு விரைந்தார்கள். ஆனால் தீயை அணைக்க முடியவில்லை. உள்ளிருந்த பெரிய மறவனும் அவன் மகளும் தீக்கிரையாகி விட்டார்களென்று மக்கள் தீர்மானித்தார்கள்.

ஆனால் மறுநாள் காலைக்குள் தீயை அணைத்ததில் அங்கு மார்பில் கட்டுப்போட்ட பெரிய மறவன் உடல் மட்டும் கிடைத்தது. அதுவும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் முகம் கருகியிருந்தது. மார்புக் கட்டு எரிந்திருந்தும் உள்ளேயிருந்த ரத்தம் தோய்ந்த கத்தி கறுத்திருந்ததால் அந்தச் சடலம் பெரிய மறவனுடையதாகத்தான் இருக்கவேண்டும் என்று காவலர்கள் தீர்மானித்தார்கள். தாமரைச்செல்வியின் சடலம் அகப்படவில்லை. அவள் எங்கோ மறைந்து விட்டாள் என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். ''எங்கு மறைந்திருப்பாள்? குமாரனுடன் ஓடியிருப்பாள்'' என்று வதந்தியையும் கிளப்பி விட்டார்கள். ஒருவனுக்குக் கெடுதல் விளையும்போது சமுதாயத்தின் கருணை எந்த நிலையில் இருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக அன்று காஞ்சி மக்கள் விளங்கினார்கள்.

மறுநாள் முழுவதும் காஞ்சியில் இதே பேச்சாக இருந்தது. ''உங்கள் காவலர் தலைவன் எங்கே?'' என்று நீதிபதியைப் பலர் நேரிடையாகவே கேட்டார்கள்.

zeevaa

''எனக்கெப்படித் தெரியும்?'' என்றார் நீதிபதி.

''உங்களுக்குத் தெரியாவிட்டால் காவலரை விட்டுத் தேடச் சொல்லுங்கள்'' என்றார்கள், ஊரின் நாட்டாண்மைக்காரர்கள் நால்வர்.

நீதிபதியின் வீட்டின் முன்பக்கத்தில் கூட்டம் அதிகமாயிருந்தது. அவர்களை அடக்க நீதிபதி சொன்னார். ''அவன் எங்கும் ஓட மாட்டான். ஓடுவது அவன் சுபாவமல்ல'' என்று.

அவர் சொன்னதை ஆமோதிப்பவன்போல் நீதிபதி மாளிகைக் குள்ளிருந்து குமாரன் வந்ததைக் கண்ட மக்கள் பெரும் கொதிப்படைந்தனர். ''நீ ஒரு நீதிபதியா?'' என்று பலரிடமிருந்தும் கூக்குரல் எழும்பியது. நீதிபதி திரும்பி நோக்கினார். அவர் பின்னால் குமாரன் நின்று கொண்டிருந்தான், ஏதும் அறியாதவன்போல்.

காஞ்சி மக்களுக்கு ஒரு சுபாவம் உண்டு. கட்டுக்கு அடங்கியவர்கள்தான். இருப்பினும் அநீதி என்று வந்துவிட்டால், கட்டுத்தறிவிட்டு பிரளயத்தை நிகழ்த்தும் திறனுடையவர்கள். ஆகவே நீதிபதியை நோக்கிக் கும்பலாக முன்னேறினார்கள். அவர்கள் முகத்தில் கொலைக்குறி இருந்தது. ''ஒரு ஏழையின் இல்லம் இன்று எரிந்திருக்கிறது'' என்று கூவினார்கள். திடீரென்று எங்கிருந்தோ பந்தங்கள் தோன்றின. தமது கதை முடிந்து விட்டதை நீதிபதி உணர்ந்து கொண்டார். குமாரன் அவரை நோக்கிப் புன்முறுவல் கொண்டான். ''நீதிபதியின் செல்வாக்கு காஞ்சியில் இவ்வளவுதான் போலிருக்கிறது'' என்றும் இகழ்ந்தான். நீதிபதி பெரும்தடுமாற்றத்தில் இருந்தார்.

zeevaa

# 23. பிராகிருத மொழி எச்சரிக்கை

**மா**ளிகை முகப்பில் உட்கார்ந்திருந்த தன்னை நோக்கி மக்கள் தாறுமாறாகக் கேள்விகளை எழுப்பியதும், அதைத் தொடர்ந்து பந்தங்கள் பல வந்ததையும் கண்ட நீதிபதி நிருபவர்மர் காஞ்சியில் தனது ஆதிக்கமும் ஆயுளும் இன்றே முடிந்து விட்டதென்று தீர்மானித்தார். சுமார் நூறு பேர்கள் பந்தங்களுடன் வந்ததும் அவரது காவலர்கள் மாளிகையின் பக்கவாட்டிலிருந்து புரவிகள் மீது தோன்றி ஈட்டிகளால் மக்கள் முன்னேறுவதைத் தடை செய்தனர். ''எங்களை யார் தடை செய்தாலும் பந்தங்களால் சுட்டுக் கொன்றுவிடுவோம்'' என்று கூட்டத்தில் ஒருவன் கூவினான். ''எங்களிடம் குறுவாள்களும் இருக்கின்றன'' என்று மற்றொருவன் கூச்சலிட்டான். அந்தக் கூச்சலைத் தொடர்ந்து காவலர்களின் தடையை உடைத்த மக்கள் பிரவாகம் முன்னேறினாலும் காவலர் அரணைக் கூட்டத்தால் பிளக்க முடியவில்லை.

அந்தச் சமயத்தில் நீதிபதியின் பின்னால் நின்றிருந்த குமாரன், ''காஞ்சிப் பெருமக்களே! சற்றுப் பொறுங்கள். உங்களுக்குத் திருப்தியான நியாயம் கிடைக்காவிட்டால் பிறகு எது வேண்டுமானாலும் செய்யுங்கள்'' என்று கூறினான்.

''பெரியமறவனைக் கொன்றது யார்? அவனை ஏன் கண்டுபிடித்துச் சிறை செய்யவில்லை?'' என்று கூட்டத்தில் ஒருவன் கேட்டான்.

''இரவில் தீ வைத்துவிட்டு ஓடும் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது அத்தனை சுலபமல்லவென்று உங்களுக்கே

zeevaa



zeevaa

தெரியும். இரண்டு மூன்று நாட்களில் அவனை எப்படியும் கண்டுபிடித்து விடுவோம். பிறகு அவனை நாங்கள் தண்டிக்க மாட்டோம்!'' என்று சிறிது நிதானித்தான் குமாரன்.

''ஏன்?'' -கூட்டத்தில் மற்றொருவன் கேட்டான்.

''இத்தகைய ஒரு தீயச்செயலைப் புரிந்தவனுக்கு சாதாரண வெட்டுப் பாறையோ, தூக்குக் கயிறோ சரியான தண்டனையாக மாட்டாது. அவன் கிடைத்ததும் உங்கள் கையில் ஒப்படைத்து விடுகிறேன். அவனைச் சின்னாபின்னமாகச் சித்திரவதை செய்து கிழித்துப் போடுங்கள்.'' -இதை சர்வ சாதாரணமாகச் சொன்னான் குமாரன்.

சித்திரவதையைப் பற்றி சர்வ சாதாரணமாக குமாரன் பேசியதைக் கேட்ட நீதிபதி பெரும் வியப்பில் மூழ்கினார். ''மிகவும் கோரமான தண்டனை'' என்றார் ஆட்சேபணைக் குரலில்.

''தூங்கும் ஏழையைத் தீ வைத்துக் கொல்வது நல்ல செயலா?'' என்று கேட்ட குமாரன், ''நீதிபதி! குற்றத்துக்கேற்ற தண்டனை, கொடிய செயலுக்கேற்ற கொடிய செயல்'' என்றும் கூறினான். பிறகு பந்தங்களைப் பிடித்து நின்றவர்களை நோக்கி, ''காஞ்சிப் பெரு மக்களே! இந்தக் கொலையைச் செய்தவன் யாராயிருந்தாலும் நானே அவனைப் பிடித்து உங்களிடம் ஒப்படைக்கிறேன். இது உறுதி'' என்றான்.

அடுத்து இன்னொரு குரல் கிளம்பியது. ''தாமரைச்செல்வி எங்கே?'' என்று.

''கேட்டவர் முன்னால் வரட்டும்'' என்றான் குமாரன்.

zeevaa

முறைப்பிள்ளை கூட்டத்தை விலக்கிக்கொண்டு முன்னால் வந்தான். ''நான்தான் கேட்டேன். கேட்க எனக்கு உரிமையுண்டு'' என்றான் முரட்டுத்தனமாக.

அவனை நோக்கிப் போலித் துன்பத்தை முகத்தில் படரவிட்டுக் கொண்ட குமாரன், ''அவளிடம் உனக்கு என்ன அக்கறை?'' என்று வினவினான்.

''அவள் எனக்கு முறைப்பெண்'' என்றான் முறைப்பிள்ளை.

''அவளைக் காணோமென்பது எப்பொழுது தெரியும் உனக்கு?''

''இன்று காலை.''

''அவளைத் தேட முயற்சி ஏதாவது செய்தாயா?''

''இல்லை.''

''ஏன்?''

''நீதான் அவளை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக ஊரில் பேசிக்கொள்கிறார்கள்.''

''அதனால் தேடவில்லை?''

''ஆம்''

''உன் மனைவியாகப் போகிறவளை இன்னொருவன் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டால் நீ செய்ய வேண்டியது என்ன?''

''அவனைப் பிடித்துக் கொல்ல வேண்டும்.''

''அதை ஏன் செய்யவில்லை?''

சிறிது சிந்தித்த முறைப்பிள்ளை, ''நீ என்னைக் கொன்று விட்டால் என்ன செய்வது?'' என்று கேட்டான்.

zeevaa

குமாரன் இதழ்களில் இளநகை படர்ந்தது. ''உன் மனைவியைக் காக்க நீ உயிரை விடுவதில் என்ன தவறு?'' என்று கேட்டான் குமாரன்.

''எனக்கு உயிர் போய்விட்டால் நான் எப்படிக் கல்யாணம் செய்து கொள்வது?'' என்று முறைப்பிள்ளை வினவியதும் கூட்டத்தில் பெரும் சிரிப்பு ஏற்பட்டது.

கூட்டத்தினர் வெறி மறைந்து விட்டதை அவர்கள் சிரிப்பால் உணர்ந்து கொண்ட குமாரன் நீதிபதியைப் பின்னால் இழுத்துவிட்டு அவருக்கு முன்பாக நின்று கொண்டு, ''காஞ்சிப் பெருமக்களே! தாமரைச்செல்வியை நான் எங்கும் மறைக்கவில்லை. பெரிய மறவன் குடிசைக்குத் தீ வைத்த விஷயமும் இப்பொழுதுதான் எனக்குத் தெரியும். நான் இரண்டு நாட்களாக ஊரில் இல்லை. அது நமது நீதிபதிக்கே தெரியும்'' என்று பேசிய குமாரன் சற்று நகர்ந்து, ''நீதிபதி அவர்களே! நான் போன இடத்தை மக்களுக்குச் சொல்லுங்கள்'' என்றான்.

நீதிபதி சங்கீத வித்வான் போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''நான்தான் குமாரனை கடல்மல்லை வரை அனுப்பியிருந்தேன்'' என்று கூறினார்.

''எதற்காக?''

''சொல்.''

''மழுப்பாதே.''

இப்படிப் பல குரல்கள் எழும்பியதும் நீதிபதி அச்சத்தின் வசப்பட்டு ''அது அரசாங்க ரகசியம். சொல்வதற்கில்லை'' என்றார் தீனமான குரலில்

zeevaa

''அரசாங்கம் மக்களைத் தனது பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எங்களுக்குத் தெரியக்கூடாத ரகசியம் என்ன இருக்க முடியும்?'' என்று கூட்டத்தின் முன்னணியிலிருந்து ஒருவன் கேட்டான்.

இந்தச் சமயத்தில் மீண்டும் கூச்சலும் குழப்பமும் கிளம்பியதும் குமாரன் மாளிகைப் படியில் இறங்கி மேல்படியில் நின்று கூட்டத்தைத் தனது கூரிய கண்களால் நோக்கினான். அந்த விழிகளைக் கண்டு கூட்டம் அச்சமுற்று நின்றது. ''காஞ்சிப் பெருமக்களே! நான் சமீபத்தில் தான் காஞ்சி வந்திருக்கிறேன். ஆனால் நான் சென்ற காரியத்தைச் சொன்னால், அது காஞ்சியைவிட்டு வெளியே சென்றால், இந்த காஞ்சி மாநகருக்கே ஆபத்து'' என்று கூறினான் திடமான குரலில்.

''எதுவாயிருந்தாலும் சொல்'' என்று முறைப்பிள்ளை கூவினான்.

''இந்த முட்டாளை முதலில் பின்னால் இழுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் குமாரன்.

பலவந்தமாக மற்றவர்களால் பின்னால் இழுக்கப்பட்ட முறைப்பிள்ளை, ''நான் முட்டாளல்ல. அவன் உங்களை ஏமாற்றப் பார்க்கிறான்'' என்று கூவிக் கொண்டே கூட்டத்தில் மறைந்தான்.

குமாரன் மக்களை நோக்கி, ''காஞ்சிப் பெருமக்களே! இந்த மாநகர்மீது களப்பிரர் படையெடுப்பு எந்தச் சமயத்திலும் ஏற்படலாம்'' என்று கூறிச் சற்று நிதானித்தான்.

அதற்குப் பதில் ஏதும் வராமற் போகவே, ''தென்புறத்தில் நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்க்க நீதிபதி என்னை அனுப்பினார்? அங்கு நிலைமை ஒழுங்காக இல்லை. இதை நான்

zeevaa

தெரிவித்ததும் அங்கு தமது படைகளை நிறுத்துமாறு காஞ்சியின் காவலர் தலைவனுக்கு நீதிபதி உத்திரவிட்டிருக்கிறார். வேண்டுமானால் நீங்கள் காஞ்சியின் காவலர் தலைவனை விசாரித்துப் பாருங்கள்'' என்று விளக்கினான் குமாரன்.

இந்தக் கோட்டைப் புளுகைக் கேட்ட நீதிபதி அசந்து போனார். பல்லவ பீடத்தைப் பற்றிய விஷயத்தை அவன் அடியோடு மறைத்து விட்டதை எண்ணிப் பெரிதும் வியந்தார். இருப்பினும் ஏதும் பேசாமல் கூட்டத்தை அவனே சமாளிக்கட்டுமென்று பேசாம லிருந்தார்.

மேலும் குமாரன் பேசினான்: ''மக்களே! உங்கள் இல்லம் செல்லுங்கள். பெரிய மறவனைக் கொன்றவனையும் தாமரைச் செல்வியை மறைத்தவனையும் நானே கண்டுபிடித்து விசாரணைக்குக் கொண்டு வருகிறேன். என்வாளின் மீது ஆணையாகச் சொல்கிறேன். இந்த இரண்டு குற்றங்களுக்கும் நீதிபதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. படையெடுப்பு காஞ்சியை நோக்கி இருக்கும் சமயத்தில் நாம் நீதிபதியின் கரங்களை வலுப்படுத்த வேண்டுமே தவிர அவர் வீட்டை எரிப்பதில் எந்தப் பயனும் கிடையாது.'' -இதைச்சொன்ன குமாரன் அவர்களை நோக்கித் தலைவணங்கி, ''நீங்கள்தான் காஞ்சியின் காவலர்கள். நீங்களில்லாமல் எதுவும் செய்ய முடியாது. உங்கள் அனைவரை யும் நான் பாதுகாப்புப் படையில் சேர்த்துவிட்டேன். நாளைக் காலை முதல் உங்களுக்குப் பயிற்சியளிக்கிறேன்'' என்று கூறக் கூட்டம் மெதுவாகக் கலைந்தது.

கூட்டம் சென்றதும் குமாரனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்ற நீதிபதி கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து குமாரனை நோக்கி, ''குமாரா! உனக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றார்.

zeevaa

''எதற்கு?'' -சாதாரணமாக வினவினான் குமாரன்.

''அந்த வெறியர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றியதற்கு'' என்றார் நீதிபதி.

''நான் பொய் சொன்னது என்னைக் காப்பாற்றிக் கொள்ள. உங்களைக் காக்க அல்ல'' என்றான் குமாரன்.

''எப்படியோ நானும் பிழைத்துக் கொண்டேன்'' என்ற நீதிபதி, ''குமாரா! எனக்காக நீ ஏன் பொய் சொன்னாய்?'' என்று கேட்டார்.

''உண்மையைச் சொன்னால் பல்லவ பீடத்தின் ரகசியம் வெளிவரும். அந்த இடத்தைக் காட்டு என்று சொன்னால் நான் மறுக்க முடியாது. பல்லவ பீடத்தின் இடத்தைக் காட்டினால் அதன் மகத்துவமும் கெட்டுவிடும்'' என்ற குமாரன் நீதிபதியை நோக்கினான்.

''மகத்துவமா! அது என்ன?'' என்று வினவினார் நீதிபதி.

''பல்லவ பீடம் இருக்கும் பாதாள அறைக்கு முன்னால் ஒரு பாறைமீது பிராகிருதத்தில் விவரம் எழுதியிருக்கிறார்கள்.''

''என்ன விவரம்?''

''பல்லவ பீடத்தின் மீது அதற்கு உரிமையில்லாத யார் அமர்ந்தாலும் அவர் மரணம் பத்து நாட்களுக்குள் நிகழும் என்று எழுதியிருக்கிறது.''

''யாரோ பயமுறுத்த எழுதியிருக்கிறான்'' என்று சர்வ அலட்சிய மாகச் சொன்ன நிருபவர்மர் சற்று சிந்தனை வயப்பட்டார்.

''பயமுறுத்த எழுதினானோ? உண்மையாக எழுதினானோ நமக்குத் தெரியாது. ஒருவேளை உண்மையாயிருந்தால்

zeevaa

உங்களையும் என்னையும் போன்றவர்கள் உட்காருவது அபாயம். எதற்காக வீணில் நாம் நமது உயிரை ஆபத்தில் சிக்க வைக்க வேண்டும்? அது தவிர...''

''அது தவிர?''

''வேறொன்றும் கவனிக்கத் தக்கது.''

''என்ன அது?''

''அதன் இருப்பிடத்தைச் சொன்னதும் அதை எடுக்க மக்கள் கூட்டமாகச் சென்றால் நாம் தடுக்க முடியாது. அதைத் தூக்கிக் கொண்டு வந்தால் நாம் பிராகிருத லிபிமொழியின் விதிகளை மீறியவர்களாவோம். அதை வலுக்கட்டாயமாக யாராவது தூக்கினால் குகை இடிந்து அதன்மீது விழுந்துவிடும். பிறகு அதை எடுக்கவும் முடியாதபடி புதைந்து போகும் என்றும் எழுதி யிருக்கிறது.''

நீதிபதி சிந்தனை வசப்பட்டார் நீண்டநேரம். ''நீ சென்று வா. எதற்கும் பெரிய மறவன் குடிசைக்குத் தீ வைத்தவனைக் கண்டுபிடி'' என்றார் முடிவாக.

''அதைவிட முக்கியமான பணி இருக்கிறது'' என்றான் குமாரன்.

''அது என்ன பணி?'' -நீதிபதி கேட்டார் புருவங்களை உயரத் தூக்கி.

''காஞ்சியைக் காக்கும் பணி. களப்பிரர்களை சந்திக்க நாம் சரியான ஏற்பாடு செய்யாவிட்டால் இந்தக் காஞ்சி எரியும், களப்பிரர் பந்தங்களால்'' என்றான் குமாரன் மிகுந்த கவலையுடன்.

''அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?''

zeevaa

குமாரன் அவரை உற்று நோக்கினான். முடிவில் அவன் பேசியபோது குரலில் உறுதியிருந்தது. ''காஞ்சியின் பாதுகாப்பை என்னிடம் ஒப்படையுங்கள்'' என்று மிகவும் பணிவுடனும் உறுதியுடனும் கேட்டான்.

பிரமிப்பு நிறைந்த விழிகளை குமாரன்மீது நாட்டினார். ''அதற்கு காஞ்சிக் காவலன் போதாது?'' என்றும் கேட்டார்.

''போதாது.''

''ஏன்?''

''நாம் போராட வேண்டியது களப்பிரர்களுடன் மட்டுமல்ல.''

''வேறு யாருடன் போராட வேண்டும்?'' -கவலையுடன் கேட்டார் நிருபவர்மர்.

குமாரன் பதில் சொன்னான். பதிலைக் கேட்ட நிருபவர்மர் திகைத்தார். குமாரனைக் கொன்று விடுவது போல் பார்த்தார்.




zeevaa

# 24. வடக்குத் திடல்

**கா**ஞ்சியைக் காப்பாற்ற களப்பிரர்களைத் தவிரவேறு யாருடன் போராட வேண்டும் என்று நீதிபதி எழுப்பிய கேள்விக்கு குமாரன் சொன்ன பதிலைக் கேட்டு நீதிபதி நிருபவர்மர் திகைத்துவிட்டா ரென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. ''களப்பிரர் களுக்கு உதவ அவ்வப்பொழுது செய்தி அனுப்பி அவர்களை எச்சரிக்க உள்ளூரிலேயே ஒருவன் இருக்கிறான்'' என்று குமாரன் கூறிய பதிலைக் கேட்டதும் அதிர்ச்சியுற்ற நிருபவர்மர், ''அப்படியா! யார் அந்தத் துரோகி?'' என்று அச்சமும் வியப்பும் கலந்த தொனியில் விசாரித்தார்.

அவர் விசாரணையைக் காதில் வாங்கிய குமாரன் தனது முகத்தில் கவலையைக் காட்டினான். ''அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று சொன்ன அவன் குரலிலும் கவலை ஒலித்தது.

அந்தக் கவலையை கவனிக்கவே செய்த நீதிபதி, ''அவன் யாரென்பதை ஊகிக்க முடியாதா?'' என்று வினவினார்.

''முடியாது.''

''ஏன் முடியாது?''

''நாம் ஊகிப்பவன் நிரபராதியாயிருந்துவிட்டால் அதர்மம் செய்தவர்களாவோம்.''

zeevaa



zeevaa

இதைக்கேட்ட நிருபவர்மர் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினார். "ஆம் ஆம். அது தவறுதான். இருந்தாலும் காஞ்சிக்கு ஆபத்து நேரும்போது அத்தாட்சியை நாம் தேடிக்கொண்டிருந்தால் நிலைமை தலைக்குமேல் போய்விட்டால் என்ன செய்வது?" என்று வினவினார் சிந்தனைக்குப் பிறகு.

குமாரனும் நீதிபதி சொன்னதை ஆமோதிக்கும் வகையில் தலையை அசைத்தான். "இருப்பினும் அடியோடு அத்தாட்சி ஏதுமின்றித் தவறாக ஒருவனைச் சிறை செய்தால் உண்மைக் குற்றவாளி எச்சரிக்கை அடைந்து விடுவான். அதன் விளைவு விபரீதமாயிருக்கும்" என்று கூறினான்.

"உண்மைதான். இருப்பினும் நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்துத்தானே ஆகவேண்டும்!" என்று நீதிபதி கேட்டார்.

"ஆம்" என்றான் சுரணை அற்ற குரலில்.

நீதிபதி மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டு உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து கூடத்தில் உலாவவும் முற்பட்டார். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு சட்டென்று நின்று, "காஞ்சியின் காவலனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று வினவினார்.

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று பதில் கேள்வி கேட்டான் குமாரன்.

"களப்பிரர் ஒற்றன் ஒருவனைச் சிறையில் அடைத்தோ மல்லவா?"

"ஆம்."

"அவனைக் காஞ்சியின் காவலனைத் தவிர வேறு யார் கொன்றிருக்க முடியும்?"

zeevaa

''அவன் காவலில் ஒற்றனிருந்ததும் உண்மை. ஒற்றன் கொல்லப்பட்டதும் உண்மை. ஆனால் கொன்றவன் யாரென்பதைப் பற்றி திட்டமான சாட்சி எதுவும் நமக்குக் கிடைக்கவில்லையே'' என்றான் குமாரன்.

நீதிபதி தலையை அசைத்தார். கடைசியாகச் சொன்னார். ''குமாரா! உன்னைப்பற்றி எனக்கு அதிகமாக எதுவும் தெரியாது. இருந்தாலும் நீ காஞ்சியின் பாதுகாப்பில் அக்கறையுடனிருக் கிறாய். அதைக்காக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்'' என்று கூறியது மட்டுமின்றி உள்ளே சென்று ஒரு ஓலையில் அதிகாரப் பத்திரமொன்றையும் எழுதி குமாரனிடம் கொடுத்தார்.

அதைப் படித்த குமாரன், ''நீதிபதியவர்களே! பெரும் சுமையை என் தலையில் சுமத்தி விட்டீர்கள். அதற்குப் பாத்திரமாக நான் நடந்து கொள்வேன். சந்தேகம் வேண்டாம்'' என்று சொல்லித் தலைவணங்கி வெளியே சென்றான்.

அவன் வெளியே சென்றதும் நீதிபதி பெருமூச்சுவிட்டுச் சில ஓலைகளை எழுத்தாணி கொண்டு தீட்டினார். ஒவ்வொன்றையும் தனித்தனி குழல்களில் போட்டு முத்திரையும் வைத்தார். சற்று நேரத்திற்கெல்லாம் நாலைந்து வீரர்களை அழைத்து ஓலைகளைக் கொடுத்து அந்தந்த விலாசங்களில் சேர்த்து விடுமாறு உத்தரவும் இட்டார். அதை வாங்கிக் கொண்ட வீரர்கள் நாலா பக்கங்களிலும் பறந்தார்கள். அதற்குப் பிறகு நிம்மதியுடன் உறங்கினார் நீதிபதி. மறுநாள் காலை எழுந்தபோது முற்றிலும் புதிதான காஞ்சியைக் கண்டார் நீதிபதி.

காஞ்சியின் தேரோடும் வீதிகளில் சாதாரண மக்கள் வாட்களையும் வேல்களையும் ஏந்திக் கும்பல் கும்பலாகச் சென்று

zeevaa

கொண்டிருந்தார்கள். அந்தக் கும்பல்களில் இடையிடையே பயிற்சி பெற்ற வீரர்கள் நின்று அவர்களைச் சீர்படுத்திச் சென்றார்கள். பல நாட்களாக காஞ்சியில் ஓடாத ரதங்கள் இரண்டாவது நாள் ஓடத் தொடங்கின. ஒவ்வொரு ரதத்திலும் ஒரு வில்லவர்கள் விற்களுடனும் அம்புகளுடனும் சென்று கொண்டிருந்தார்கள். தொண்டைமான் இளந்திரையன் காலத்து காஞ்சி மீண்டும் உருவெடுத்து விட்டதாக மக்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். இரவில் கூடப் புரவிப்படையினர் சிலர் காஞ்சியின் வீதிகளில் காவல் செய்யவே, புரவிகளின் குளம்பொலிகளின் சீரான சப்தம் எங்கும் கேட்டுக்கொண்டிருந்தது.

சின்னஞ்சிறு கள்ளுக்கடைகள் திறந்திருந்தாலும் காஞ்சியின் பெரிய கள்ளுக்கடை மூடப்பட்டது. சுற்றுப் புறங்களில் காவல் பலப்படுத்தப்பட்டது. குமாரன் அடிக்கடி காஞ்சிக் காவலனுடன் காஞ்சி நகர் வீதிகளிலும் சுற்றுப் புறங்களிலும் சுற்றி வந்தான். மக்கள் இந்தப் புதுவிதப் பாதுகாப்பில் பெரிதும் ஈடுபட்டுத் தங்கள் பணிகளை மும்முரத்துடன் செய்தார்கள். நகர்ப்புறத்திலுள்ள பெரிய பட்டறைகளில் ஆயுதங்கள் வார்ப்படம் செய்யப்பட்டு அடிக்கப்பட்ட ஒலிகள் இரவும் பகலும் தொடர்ச்சியாகக் கேட்டன. அம்பின் நுனிக் கூர்ப்புகள் எஃகில் ஆயிரக்கணக்கில் அடிக்கப்பட்டு ஆயுத சாலைகளில் குவிக்கப்பட்டன. மழுங்கிய வேல்கள் தட்டிக் கூர்படுத்தப்பட்டன.

காஞ்சியின் சுற்றுப்புற மதில்கள் பழுது பார்க்கப்பட்டன. குமாரன் காஞ்சிக் காவலனை அரண்மனையிலிருந்து படைகளைக் கவனிக்குமாறு உத்தரவிட்டான். தான் மட்டும் பெரியமறவன் குடிசையில் தங்கிப் போர் ஏற்பாடுகளுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தான். அப்படி அவன் படைகளின் சிறு பிரிவொன்றைக் குடிசைக்கு முன்பாக உள்ள காட்டில் இருத்திக்கொண்டு நகருக்குள்

zeevaa

வராமலே இரண்டு நாட்கள் இருந்துவிட்டபடியால் காஞ்சியின் காவலர் தலைவன் அங்கு சென்று அவனிடம் கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு வந்தான்.

நீதிபதி இல்லத்தின் முன்பு நடந்த மக்கள் எழுச்சியைக் கண்ட இரண்டு நாட்களுக்குள் காஞ்சியைப் புதுக் காஞ்சியாக குமாரன் மாற்றி விட்டதால் புதிய தளபதி லேசுப்பட்டவனல்லவென்பதைப் புரிந்து கொண்ட காஞ்சியின் காவலர் தலைவன், அவன் சொற்படியெல்லாம் கேட்பதே தனக்குப் பாதுகாப்பு என்ற எண்ணத்தில் சகல விஷயங்களிலும் அவன் யோசனையை நாடினான்.

காஞ்சி புதுக்கோலம் பூண்ட நான்காவது நாள் மாலை காஞ்சியின் காவலர் தலைவன் குமாரனை நாடி பெரியமறவன் குடிசைக்கு வந்தான். குடிசை நன்றாகப் புதுப்பிக்கப்பட்டு பெரிதாகவும் கட்டப்பட்டிருந்தது. குடிசை மேட்டில் காவலர்கள் ஆங்காங்கு உட்கார்ந்திருந்தார்கள். மேட்டு பகுதிக்குக் கீழே புரவி வீரர்கள் காவல் பலமாயிருந்தது. அந்தக் காவலைக் கண்ட காஞ்சிக் காவலர் தலைவன் பிரமித்தவனாய் குடிசைக்குள் சென்று குமாரனைச் சந்தித்தான். குடிசைக்கு மேலே ஓலையால் மூடப்பட்டி ருந்ததைத் தவிர உட்புறத்தில் குடிசைக்கு வேண்டிய எளிமை சிறிதும் இல்லை. சின்னஞ்சிறு பிரம்பு மஞ்சங்கள் சிலவும், ஒரு மூலையில் படுக்கப் பிரம்பினாலேயே நிர்மாணிக்கப்பட்ட தொங்கு மஞ்சமொன்றும் காணப்பட்டன. குடிசையின் உட்புற மூலைகளில் வேல், வால், குறுவாள் முதலிய ஆயுதங்கள் பலவும் குவிக்கப்பட்டி ருந்தன.

காஞ்சியின் காவலர் தலைவன் உள்ளே நுழைந்த போது, கூரையின் வாரையிலிருந்து தொங்கிய பிரம்புப் பஞ்சணையில்

zeevaa

மல்லாந்து கிடந்த குமாரன், பெரும் சிந்தனையிலிருந்தான். ஆதலால் காவலர் தலைவன் வந்ததைக் கவனிக்கவில்லை. காவலர் தலைவன் தான் வந்திருப்பதை உணர்த்த தொண்டையைச் சிறிது கனைத்ததும் சிந்தனை கலைந்து எழுந்து பஞ்சணையிலிருந்து இறங்கி, ''வாருங்கள் காவலரே! உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஒரு ஓலையும் எழுதி வைத்தேன். நாளைக் காலையில் அனுப்பலாமென்று. நீங்களே வந்து விட்டீர்கள்'' என்று கூறித் தனது கையிலிருந்த ஓலையை அவனிடம் நீட்டினான்.

அதைக் கையில் வாங்கிக்கொண்டு கோடியிலிருந்த விளக்கிடம் சென்று அதன் ஒளியில் அதைப் படித்த காஞ்சியின் காவலர் தலைவன் பிரமையும் அச்சமும் கலந்த பார்வையை குமாரன்மீது திருப்பி, ''இது நீதிபதியின் உத்தரவுக்கு மாறுபட்டிருக்கிறதே?'' என்றான்.

''நான் மாற்றவில்லை'' என்றான் குமாரன்.

''வேறு யார் மாற்றியது?'' என்று காவலர் தலைவன் வினவினான்.

''நீதிபதியேதான். என்னிடம் மாற்றும்படி உத்தரவிட்டார்.''

''அப்படியானால் தென்புறத்திலிருக்கும் ஒரு பாதிப்படையை வடபுறத்துக்கு மாற்றச் சொல்கிறீர்கள்?''

''ஆம்.''

''ஏன் இந்த மாற்றம்?''

''களப்பிரர் படையெடுப்பு தென்புறத்திலிருந்து ஏற்படாது.''

''வடபுறத்திலிருந்துதான் ஏற்படுமா?''

''ஆம்.''

zeevaa

''களப்பிரர்களின் பெருவாரியான படைப்பிரிவுகள் தென் திசையில்தானே இருக்கின்றன?''

''ஆம்.''

''அப்பொழுது அங்கிருந்துதானே எதிர்ப்பு வரும்?''

''வராது. வடபுறத்திலிருந்துதான் வரும்.''

''எப்படித் தெரியும்?''

''திருத்தணியில்தான் களப்பிரர் தலைமைப் படை இருக்கிறது.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை குமாரன். சற்று சிந்தித்து விட்டு, ''காவலரே! உம்மால் ரகசியத்தைக் காப்பாற்ற முடியுமா?'' என்று வினவினான். அவன் குரலில் அதிகாரத்தின் ஒலி இருந்தது.

''கண்டிப்பாய் முடியும்'' என்று காவலன் கூறியதும், ''இப்படி வாரும்'' என்று குமாரன் காவலனை அருகில் அழைத்து அவனிடம் தனது மடியிலிருந்த ஒரு ஓலையைக் கொடுத்தான்.

அதைப் பிரித்துப் படித்த காவலன் முகத்தில் கிலி பிறந்தது. ''மிகவும் அக்கிரமம். காஞ்சியை எதிரியிடம் காட்டிக் கொடுக்க இதைவிட வேறு சிறந்த வழி இல்லை'' என்று கூறினான் நடுங்கிய குரலில்.

''ஆம்'' என்று ஆமோதித்த குமாரன், ''நான் கூறியபடி படைகளைப் பிரித்து விடுங்கள். இப்பொழுது நாமிருக்கும் இந்தக் காட்டுக்கு அடுத்தபடி இருக்கும் பெரிய இடைவெளியில் நாம் எதிரிகளை சந்திப்போம்'' என்று கூறினான்.

''போருக்கு அதுதான் தகுந்த இடம்'' என்று ஒப்புக்கொண்டான் காஞ்சியின் காவலர் தலைவன்.

zeevaa

"இன்னும் நான்கு நாட்களுக்குள் நான் போரை எதிர்பார்க்கி றேன்" என்ற குமாரன், "காவலரே! நீர்தான் இனி எனக்கு உபதளபதி. ரதங்கள் நமக்கு அதிகம் தேவையில்லை. நாலைந்து ரதங்களை மட்டும் இங்கு அனுப்பும். மற்ற ரதங்கள் நகரிலேயே உலா வரட்டும். கடல் மல்லைப் பக்கம் யாரையும் விடவேண்டாம். யாராயி ருந்தாலும் நமது படைகள் தடுத்துச் சிறை செய்யட்டும்" என்றும் திட்டமான உத்தரவிட்டான்.

காவலன் அத்துடன் தளபதியிடமிருந்து விடைபெற்று கொண்டான். அவன் போகுமுன்பு, "யாரிடமும் நாம் பேசியதைச் சொல்ல வேண்டாம்" என்று எச்சரித்து அனுப்பினான் குமாரன்.

வியப்பும் பிரமையும் கலந்த சிந்தையுடன் காஞ்சியை நோக்கிப் புரவியை நடத்தினான் காவலர் தலைவன். குமாரன் எண்ணியபடியே சகலமும் நடந்தது. அன்றிலிருந்து ஐந்தாவது நாள் இரவு களப்பிரர் படை வெகு வேகத்துடன் வந்தது. காஞ்சியின் வடக்கிலிருந்த பெரும் திடலை நோக்கி. அதை எதிர்க்க குமாரன் சித்தமாக நின்றான், தனது படை வீரர்களுடன்.



## 24. வடக்குத் திடல்

zeevaa

# 25. யுவ மகாராஜா

இரவின் ஆரம்பத்தில், சந்திர ஒளி லேசாகப் பரவியிருந்த மந்தமான வெளிச்சத்தில், பெரும் பந்தங்களை இடது கையில் பற்றியும், வாளை வலது கையில் உயர ஏந்தியும், பயங்கரமான, பலவிதக் கூச்சல்களைப் போட்டுக்கொண்டும் சூறாவளி போல் வந்து கொண்டிருந்த களப்பிரர் கூட்டத்தைக் கண்டதும், அதை எதிர்க்க காஞ்சியின் காலாட்படையையும் புரவிப் படையையும் சுவர் போல இணைந்து நிற்க வைத்தான் குமாரன்.

முதலில் காலாட்படைத் தலைவனை அழைத்து, ''இது நகரமக்கள் சமீபத்தில் ஏற்படுத்திய படை. அதிக போர் அனுபவமில்லாதது. எதிரி வந்ததும் இவர்கள் தங்கள் வேல்களை எதிரிப்படையின் புரவியின் மீதும், புரவி வீரர்கள் மீதும் குறிபார்த்து ஒரேசமயத்தில் எறிந்துவிட்டுப் பின்வாங்கி விடட்டும். அவர்கள் காட்டுப் பகுதியை நோக்கிப் பின்வாங்கும் சமயத்தில் புரவிப்படையுடன் முதலில் நான் மோதுவேன். பிறகு அதற்குள் ஊடுருவி முன்னேறுவேன். அதே சமயத்தில் பின்வாங்கிய உனது காலாட்படை முன்னேறி, பக்கவாட்டில் எதிரிகள் சிதறி ஓடுவதைத் தடுக்கட்டும். மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று எச்சரித்து அனுப்பினான்.

அடுத்து காஞ்சிக் காவலர் தலைவனை அழைத்து, ''நான் எதிரியை ஊடுருவியதும் உனது புரவிப்படை சுற்றிச் சென்று எதிரிக்குப் பின்னால் வரட்டும். நான் முன்புறத்திலும் நீ பின்புறத்திலும் ஊடுருவி எதிரிப்படை இரண்டாகப் பிளக்கப்படும். அதற்குள் காலாட்படையும் எதிரியைச் சுற்றிக் கொண்டால்

zeevaa

அப்படியே எதிரி நொறுக்கப்படுவான்'' என்று கூறினான். ''காஞ்சிக்குத் தென்புறத்தில் படைப்பிரிவு நிற்கிறதா?'' என்று கேட்டு அங்கு படை நிறுத்தப்பட்டிருப்பதை அறிந்ததும் திருப்தியுடன் எதிரியின் வரவை நோக்கி நின்றான் குமாரன் தனது புரவியில்.

களப்பிரர் சூறாவளி போல வந்தவர்கள், பத்தடிதூரத்துக்கு வந்ததும் எதிரிலே சுவர் போல் நின்ற காஞ்சி படையுடன் மோத வேண்டியதாயிற்று. அவர்கள் வாளைச் சுழற்றுவதற்கு முன்பாகவே அவர்களை நோக்கி காலாட் படையின் வேல்கள் பறந்தன. அவற்றால் தாக்குண்ட புரவிகள் அலறின. வேல்களுக்கு வீரர்கள் சிலரும் இலக்காகிப் புரவிகளிலிருந்து சரிந்தனர். இத்தகைய போர் முறையில் களப்பிரர் வேகம் சிறிது மட்டுப்பட்டாலும், மறுபடியும் முன்னைவிட அதிக உக்கிரத்துடன் போரில் இறங்கினார்கள். அப்படிப் போரிட்டு வந்த களப்பிரர் படைக்குள்ளே குமாரன் புரவிப் படை புகுந்தது. எதிரில் வந்தவர்களை நாலா பக்கமும் வெட்டிக் கொண்டே ருத்திரன் போல் முன்னேறித் தனது புரவி வீரர்களுக்குப் பாதை செய்து கொடுத்த குமாரன் தன்னைத் தொடரும்படி சைகை செய்ய, அவன் வீரர்கள் எதிரி வரிசைகளை நடுமையத்தில் தாக்கிப் பிளந்தனர்.

அப்படி குமாரன், படையைப் பிளந்துவிட்டதைக் கண்ட களப்பிரர் தாங்களே பிரிந்து வழிவிட்டு குமாரன் பாதி முன்னேறியதும் அவனையும் அவன் படைப்பிரிவையும் இரண்டு பிரிவாக நின்று இருபுறத்திலும் தாக்கினர். அதே சமயத்தில் திட்டப்படி காலாட்படை பிளவுபட்ட எதிரிகளின் படையைச் சூழ முற்பட்டது. வேல்கள் சரமாரியாகப் பறந்து வந்தன. களப்பிரர்களைத் தவிர வேறு யாராவது எதிரியாக இருந்திருக்கும் பட்சத்தில் கலகலத்து அந்தப் படை ஓடியிருக்கும். ஆனால், களப்பிரர் இத்தனைக்கும் சளைக்காது வெறிக் கூச்சலைப் போட்டுக்

zeevaa

கொண்டும், கையிலிருந்த பந்தங்களை எதிரிகள் மீது வீசியும் பயங்கரமாகப் போரிட்டதால் அரை ஜாம காலத்துக்கு வெற்றி யார் பக்கம் என்று தெரியவில்லை. இரு பக்கத்திலும் நாசமும், மும்முரமான போரும் நடந்தது.

களப்பிரரைப் பின்னாலிருந்து ஊடுருவ முயன்ற காஞ்சியின் காவலர் தலைவன் பெரும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவன் பின்னால் தாக்கியதும் பிளவுண்ட பாதிப்படை அவனைத் திரும்பிப் போரிடவே காஞ்சியின் காவலர் தலைவனுக்கு ஊடுருவுவது சற்று சிரமமாகவே இருந்தது. அப்படி ஜெய அபய ஜெயம் சந்தேகமாயிருந்த சமயத்தில், ''பல்லவமன்னர். வாழ்க!'' என்று வெறிக் கூச்சலிட்டான் குமாரன். சட்டென்று எரிவாளியொன்றையும் ஆகாயத்தில் எய்ய உத்தரவிட்டுப் போருக்குள் மீண்டும் புகுந்தான். மெல்ல மெல்ல களப்பிரர் படை லேசாகத் தடுமாறியது. பிறகு பின்வாங்க முயன்றது. பின்வாங்கும் முயற்சியைக் காஞ்சியின் காவலர் தலைவன் தடுத்து விட்டான்.

முன்புறம் குமாரனாலும் பின்புறத்தில் காஞ்சிக் காவலர் தலைவனாலும், பக்கவாட்டுகளில் தரைப்படைகளாலும் தாக்கப்பட்டும், நாடோடிகளும் அசுரத் தன்மை வாய்ந்த வீரர்களுமான களப்பிரர் லட்சியமின்றிப் போரிட்டனர். பத்து பேர் மாண்டு விழுந்த இடத்தை இருபது பேர் நிரப்பிக் கொண்டனர். ரணகளம் பயங்கர மாயிருந்தது. வேல்களால் தாக்கப்பட்ட புரவிகள் அலறின. மாண்டு விழுந்து ஆகாயத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த சடலங்கள் மீது புரவிகள் துவைத்து ஓடிக் கொண்டிருந்தன. இந்தக் குழப்பத்தில் அவ்வப்பொழுது தனது படைகளை அணிவகுத்து எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருந்த குமாரன் காதில் பெரும் ஓசையொன்று கேட்கவே அவன் திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான், அடுத்த சில

zeevaa

நிமிடங்களுக்கெல்லாம் தொலைவில் பெரும் படையொன்று வருவதற்கான தூள் பறந்தது.

மிக வேகமாக வந்த அந்தப் படையை நோக்கிய களப்பிரர் பின்வாங்க முயன்றும் முடியாமல் திணறிய சமயத்தில் அந்தப் புதிய புரவிப்படை வடக்கிலிருந்து குமாரன் படையை நோக்கி வந்தது. அதன் முன்னிலையில் வந்த புரவி வீரனைக் கண்டதும் காஞ்சியின் காவலர் தலைவன் திகைத்தான். எற்கெனவே இறந்து விட்டதாக எல்லோரும் நம்பிக்கொண்டிருந்த பெரியமறவன் பெரும் வேகத்துடன் வந்ததும் களப்பிரர் எதிர்ப்பை மும்முரமாகவே நடத்தினாலும் களப்பிரர் தலைவன் சிறைப்பட்டதும் அவர்கள் போரை நிறுத்தி விட்டார்கள்.

களப்பிரர் தலைவன் மார்பில் பெரும் காயமிருந்தும் அவன் முகத்தில் சிறிதும் வருத்தமோ, பிராண பயமோ இல்லை. பிரமிப்பே இருந்தது. அவனைத் தூக்கி வரச்சொல்லி இரு வீரர்களுக்கு உத்தரவிட்ட குமாரன் போர் முடிந்து விட்டதற்கான சங்கை எடுத்துப் பலமாக ஊத உத்தரவிட்டான். எதிரிகளில் காயமடைந்தோருக்கு சிகிச்சை செய்யவும், மற்றவர்களைச் சிறை செய்து காஞ்சி சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லவும், மாண்டவர் களை புதைக்கவும் உத்தரவிட்ட குமாரன். தான் கொண்டு வந்து காட்டில் ஒதுக்குப்புறமாக வைத்திருந்த நான்கு ரதங்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு குடிசை மேட்டை நோக்கிச் சென்றான். குடிசை வாயிலில் தாமரைச்செல்வி அவனுக்காகக் காத்திருந்தாள்.

அப்பொழுது களப்பிரர் தலைவனைத் தூக்கி வந்த இரு வீரர்களை நோக்கி, ''தலைவனை உள்ளே படுக்க வையுங்கள். மருத்துவரை அழைத்து வாருங்கள்'' என்றான். உள்ளே சிறு கட்டிலொன்றில் படுத்திருந்த களப்பிரர் தலைவன், ''இதற்கு என்ன அர்த்தம்?'' என்று வினவினான்.

zeevaa

''அர்த்தமா? போருக்கு வந்தீர்கள். சந்தித்தோம். இதில் சந்தேகத்துக்கு என்ன இடமிருக்கிறது?'' என்று குமாரன் கேட்டான்.

''மருத்துவர் வரட்டும். பிறகு பேசுவோம்'' என்று மேலும் சொன்ன குமாரன், மருத்துவர் வந்ததும் அவன் மார்புக்காயத்தைப் பார்க்கச் சொன்னான். காயம் மேல் காயம் தானென்றும் பயமேதுமில்லையென்றும் கூறி மருத்துவர் மருந்து வைத்துக் கட்டினார்.

மருத்துவத்தால் சிறிது சுரணை வந்ததும் களப்பிரர் தலைவன் கேட்டான்: ''யாரும் போரிடமாட்டார்கள். அப்படியே போர் இருந்தாலும் பெயருக்குத்தான் இருக்கும் என்று எழுதிவிட்டு வலுவான சண்டையை விளைவிப்பது எப்படி நியாயம்?'' என்று.

''அந்த ஓலை இருக்கிறதா?'' என்று குமாரன் கேட்டான்.

''இருக்கிறது. இதோ'' என்று காட்டினான் களப்பிரர் தலைவன். அதை வாங்கி தாமரைச்செல்வியிடம் கொடுத்த குமாரன், ''இவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்'' என்று கூறிவிட்டுப் புரவி ஏறி வேகமாக காஞ்சி நகரை நோக்கிச் சென்றான். அங்கு நீதிபதி வீட்டுக்குச் சென்று ''நீதிபதியைப் பார்க்க வேண்டும்'' என்று கேட்டான்.

''நீதிபதி இல்லை'' என்று பதில் வந்தது.

''எங்கே?'' என்று பதில் சொன்ன பணிமகளைக் கேட்டான் குமாரன்,

''உங்களுக்கு முன்பு இங்கே வந்த பெரிய மறவரும் இதையே கேட்டார். இல்லையென்று சொன்னதும் அவர் புரவியில் பறந்தார் வெறிபிடித்தவரைப் போல'' என்று கூறினாள் அந்தப் பணிமகள்.

zeevaa

அதைக்கேட்டுக் கொண்டு வெளியே வந்த குமாரன் குடிசை மேட்டுக்கு வந்து சேர்ந்தான். அங்கு தனக்காகக் காத்திருந்த காவலர் தலைவனிடம், ''இங்கு நமது வீரர்கள் சிலர் இருக்கட்டும்'' என்று கூறினான். ''தாமரைச்செல்வி! நீ களப்பிரர் தலைவனைப் பார்த்துக் கொள் நான் திரும்பும் வரை அவனிடம் யாரும் பேச வேண்டாம்'' என்று உத்தரவிட்டு வெளியே சென்று தென்புலம் நோக்கிப் புரவியைப் பறக்க விட்டான்.

அன்றைய இரவில் சுரணை பூரணமாக வந்து விழிகளை அகல விழித்த களப்பிரர் தலைவன், பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து, ''நீதான் என்னை காஞ்சியைத் தாக்கும்படி கூறினாய். பிறகு ஏன் உன் படைகளை என்னை நோக்கிப் போரிட விட்டாய்?'' என்று வினவினான்.

''உன்னை வரவழைத்தவன் நானல்ல,'' என்றார். அவன் பஞ்சணைப் பக்கத்தில் அமர்ந்திருந்தவர்.

''பொய் பொய். நீதான். உன் முகம் எனக்கு இன்னும் மறக்கவில்லை'' என்றான் களப்பிரர் தலைவன்.

''நீ என் ஒன்றுவிட்ட தம்பியைப் பார்த்திருக்க வேண்டும். அவனும் கிட்டதட்ட என் மாதிரி இருப்பான்'' என்றார் பக்கத்தில் அமர்ந்திருந்தவர்.

மேலும் கேட்டான் களப்பிரர் தலைவன். ''இன்று என்னை எதிர்த்துப் படைகளை நடத்தியவனுக்கு உன்சாயல் இருக்கிறது. அவன் யார்?'' என்று.

''என் மகன். இந்த காஞ்சியின் மன்னனாகப் போகிறவன்'' என்று சொற்களை மெதுவாக உதிர்த்தார் பக்கத்திலிருந்தவர்.

zeevaa

''அவன்...'' களப்பிரர் தலைவன் இழுத்தான் பிரமிப்பின் விளைவாக.

''சிவஸ்கந்த வர்மன். பப்பதேவர் குமாரன். காஞ்சி மண்டலத்தின் யுவமகாராஜா'' என்று சொல்லிக் கொண்டே பல்லவ புரியிலிருந்து வந்த அமைச்சர் உள்ளே நுழைந்தார். ''மன்னவா!'' என்று மன்னருக்குத் தலைவணங்கினார். பிறகு மன்னரைக் கேட்டார், ''யுவமகாராஜா எங்கே?'' என்று.

''குற்றவாளியை அழைத்துவரப் போயிருக்கிறான்'' என்றார் பல்லவ மன்னர் பப்பதேவர்.

இந்த உரையாடலைக் கேட்ட தாமரைச்செல்வி திகைத்து நின்றாள். அவள் திகைப்பைப் பார்த்த பப்பதேவர், ''காஞ்சியின் வருங்கால ராணி கொஞ்சம் தைரியத்துடன் இருப்பது நல்லது'' என்று சொல்லிப் புன் முறுவல் செய்தார்.



## 26. குலத்தைக் கெடுக்க ஒரு...

**நீ**திபதி நிருபவர்மர் அவர் மாளிகையிலிருந்து மறைந்து விட்டதாகக் கேள்விப்பட்டதும், குடிசை மேட்டுக்கு வந்து சில வீரர்களைக் காவலுக்கு நிறுத்திவிட்டு களப்பிரர் தலைவனைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி எச்சரித்துவிட்டு மீண்டும் புரவியேறி குமாரன் தென்புறம் நோக்கிப் பறந்தான். பிறகு கிழக்கே கடல் மல்லையை நோக்கித் திரும்பி பழைய மலைப்பாறையும் குகையுமிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்து புரவியிலிருந்து குதித்து நாற்புறமும் நோக்கினான். எங்கும் யாரையும் காணோம் பெரிய மறவன் புரவியோ, நிருபவர்மர் புரவியோ ஏதுமே காணாததால் தான் நிருபவர்மரைப் பற்றிப் போட்ட கணக்கு தப்பாயிருக்குமோ என சந்தேகித்தான் குமாரன். அத்தகைய தவறுக்குக் காரணமில்லை யாகையால் தனது புரவியை ஒரு மரத்தில் பிணைத்து விட்டு அந்தப் பெரிய பாறையைச் சுற்றிப் பார்த்தான். இரண்டு பாறைகளின் மறைவில் இரண்டு புரவிகள் நின்றிருந்ததைப் பார்த்து குமாரன் எனும் சிவஸ்கந்தவர்மன் ஒரு நிச்சயத்துக்கு வந்தவனாய்த் தலையை அசைத்துக்கொண்டு கீழே பல்லவ பீடமிருந்த பாதாள அறைக்குச் செல்லும் பெரிய பாறையை அகற்றிவிட்டு, பழைய வழியே இறங்கினான். மெதுவாக, பிராகிருதச் செய்திகள் பொறித்த பாறையருகே வந்ததும் அதையும் நகர்த்தி பல்லவ பீடமிருந்த குகையருகே வந்து நின்றான் சில விநாடிகள்.

அங்கு யாரும் வந்ததற்கான அறிகுறிகள் ஏதும் காணாததால் காதைத் தீட்டிக்கொண்டு நின்றான் சில விநாடிகள். எந்த அரவமும் இல்லாதுபோகவே மெல்ல, முன்பு பெரிய மறவன் காட்டிய

zeevaa

## 26. குலத்தைக் கெடுக்க ஒரு...




zeevaa

முறைப்படி அந்தப் பாறையையும் நீக்கவே, பல்லவ பீடம் ஜகஜ் ஜோதியாகப் பளபளத்தது அறைக்குள். மேற்பாறையின் விரிசலிலிருந்து லேசாக உள்ளே நேராகக் கோடு போல விழுந்த சிறு ஒளி பல்லவர்களின் அந்தப் புராதன அரியணையின் சாய்வுப் பகுதியிலிருந்த பெரும் மாணிக்கக் கல்லொன்றின் மீது விழுந்த அந்த ரகசிய பாதாள அறையை ரத்தச் சிவப்பாக அடித்திருந்தது. இத்தனைக்கும் அங்கு நிருபவர்மனையோ, பெரிய மறவனையோ காணாததால் மெல்ல அறைக்குள் நுழைந்த குமாரன் அறையில் ஏதோ சிறு அரவம் கேட்டதைக் காதில் வாங்கியதும் அசைவற்று நின்றான் சில விநாடிகள். அவன் கை இடையிலிருந்த குறுவாளைத் தொட்டுக் கொண்டிருந்தது. கண்கள் நாலாபக்கமும் சுழன்று கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் லேசான சிரிப்பொலி ஒன்று கேட்டது. அது நாலா பக்கச் சுவர்களில் தாக்கி எதிரொலி செய்தது பயங்கரமாக.

குமாரனின் உணர்ச்சிகள் ஊசி முனையில் நின்றன. அந்தச் சிறு குகையில் மறைவுக்கு வேறு இடமேதும் இல்லாதிருக்க, நகைத்தவன் எங்குதான் ஒளிந்திருப்பான் என்று சிந்தித்தான் குமாரன். அவன் முகத்தில் படர்ந்த சிந்தனை ஒளிந்திருந்தவன் கண்களிலும் பட்டிருக்க வேண்டும். ஒளிந்த இடத்திலிருந்தவன் மெல்லிய குரலில் பேசினான்: ''சிவஸ்கந்தவர்மா! உன் குறுவாளையும் கச்சையில் கட்டியிருக்கும் நீண்ட வாளையும் கீழே போட்டு விடு. இல்லையேல் பப்பதேவன் மகனை இழப்பான். காஞ்சியும் தனது யுவ மகாராஜாவை இழக்கும். எனது குறுவாள் நேராக உனது இதயத்தை நோக்கிக் குறி வைக்கப்பட்டிருக்கிறது'' என்று.

''நிருபவர்மா! நீ வேடம் பல போடலாம், குரலையும் மாற்றலாம். ஆனால் உனது முடிவுகாலம் நெருங்கி விட்டது. ராஜத் துரோகிகள்

சில காலம் தப்பலாம், பயனும் அடையலாம். ஆனால் நிரந்தரப் பலனோ, எண்ணிய லட்சியமோ அவர்களுக்குக் கிட்டுவதில்லை'' என்று கூறினான் குமாரன்.

அடுத்துப் பேசியபோது நிருபவர்மர் தனது சொந்தக் குரலில் பேசினார். ''உன்னைப் பார்த்த முதல் நாளே நீ யார் என்பதை அறிந்து கொண்டேன். நீ புதுப்பெயர் வைத்துக் கொள்ளலாம். பப்பதேவன் குமாரன் என்பதில் பப்பதேவனை நீக்கிவிட்டு வெறும் குமாரனாகலாம். ஆனால் உன் முகஜாடையை மாற்ற முடியாது. நீ காஞ்சியில் பெரிய கள்ளுக்கடையில் செய்த சாகசச் செயல்கள் உன் சொரூபத்தை வெளிக்காட்டி விட்டன. பல்லவபுரியிலிருந்த இளம் மகாராஜா எதற்கும் துணிந்தவர் என்ற பிரசித்தி உனக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறது. நீ காஞ்சி வந்து மாட்டுத் திருட்டையும் மற்ற காஞ்சிக் காவல் விவரங்களையும் ஆராய முற்பட்டபோது நீ வந்த காரணத்தையும் ஊகித்துக் கொண்டேன். உன்னைத் தீர்த்துக் கட்ட முயன்றேன். என்னுடைய கண்களின் பார்வையிலிருந்து நீ விலகக் கூடாதென்பதற்காகவே உன்னை என் காவலர்களுக்குத் தலைவனாக்கினேன். நீயும் என் வலையில் வந்து விழுந்தாய்'' என்று கூறி சிறிது நிறுத்தினார்.

குமாரன் மெல்லப் புன்முறுவல் கொண்டான். ''நிருபவர்மா! முன்பின் தெரியாதவனை உனது காவலர் தலைவனாக்கியபோதே உன் சூழ்ச்சியை அறிந்தேன். ஆனால் என் கண்ணை மறைக்கவும், காஞ்சித் தலைவன் மீது சந்தேகத்தைத் திருப்பவும் நீ செய்த சகல முயற்சிகளையும் நான் அறிந்தேன். நீ என்னை அழிக்கப் பார்த்தாய். முடியவில்லை. தாமரைச்செல்வியை முறைப்பிள்ளைக்கு மணம் முடிக்க முயன்றாய், நடக்கவில்லை. அப்படி மணம் முடித்திருந்தால் அந்த முட்டாளை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருப்பாய். அதுவும் முடியாததால் காஞ்சியையே விற்றுவிடத்த துணிந்தாய்.

zeevaa

தவிர எல்லாப் பழியையும் காஞ்சியின் காவலர் தலைவன்மீது திருப்பினாய். என்னைத் தவிர வேற யாராயிருந்தாலும் உன் தந்திரத்துக்கு இலக்காகி இருப்பார்கள். காஞ்சியின் நிலவரங்களைப் பற்றி முன்னமேயே பல்லவபுரிக்குச் செய்தி வந்ததால் மன்னர் என்னை அனுப்பினார், இங்கு நடப்பதை அறிய'' என்று கூறிய குமாரன் சிறிது நிறுத்திவிட்டு, ''இந்தச் சமயத்திலாவது ஆண் மகனாக மறைவிலிருந்து வெளியே வா'' என்று அதிகாரத் தோரணையில் அறிவித்தான்.

''உன் குறுவாளையும் வாளையும் கீழே போடு. இல்லாவிட்டால் என் குறுவாளுக்கு இப்பொழுதே நீ இரையாவாய்'' என்று கூறியதும் கூறாததுமாகக் குறுவாளை வேகமாக எறிந்து விட்டார் நிருபவர்மர்.

எந்த விநாடியும் அந்தக் குறுவாளை எதிர்பார்த்திருந்த குமாரன் சற்று பக்கவாட்டில் ஒதுங்கியதால் குறுவாள் எதிரிலே பாறையில் தாக்கிப் பேரொலி கிளப்பியதன் விளைவாக நிருபவர்மர் இருந்த இடத்தை ஊகித்துவிட்ட குமாரன், ''நிருபவர்மா! பல்லவ பீடத்தின் பின்னால் பதுங்கிப் பயனில்லை. நீ வராவிட்டால் உன்னை நாடி நான் வருவேன்'' என்று கூறித்தனது நீண்ட வாளை உருவிக்கொண்டு பீடத்தைச் சுற்றி நடக்கக் காலடி எடுத்து வைத்த சமயத்தில், பீடத்துக்குப் பின்னால் இன்னொரு பாறை நகர, அதன் நடுவில் தோன்றிய நிருபவர்மர், ''இந்த ரகசிய அறை என்னைத் தவிர வேறு ஒருவனுக்குத்தான் தெரியும். அவனும் இறந்து விட்டான்'' என்று கூறிக்கொண்டே இன்னொரு குறுவாளை எடுத்து குமாரன்மீது வீசிவிட்டு பல்லவ பீடத்துக்குப் பின்னால் வந்து அதைப் பிடித்தவர் அடுத்த விநாடி அலறினார். அவர் மார்பில் புதைந்து கிடந்த குறுவாளொன்று இதயக்குருதியை வெளியே அனுப்பிக் கொண்டிருந்தது. அவன் கண்களில் அச்சத்துக்குப் பதில்

zeevaa

வியப்பு விரிந்து, ''நீ... நீ... இறந்துவிட்டாய். பிசாசாக வந்திருக்கிறாய்'' என்று உளறிக்கொண்டே பல்லவ பீடத்தின் மீது சாய்ந்தார். அவர் இதய ரத்ததம் பல்லவ பீடத்தின் முன் பகுதியைச் சிறிது நனைத்தது.

குமாரன் வியப்புடன் திரும்பி நோக்கியபோது குகை வாயிற்படியில் நின்று கொண்டிருந்தான் பெரியமறவன். ''ஒழிந்தான் ஒரு துரோகி'' என்று மிகுந்த எரிச்சலுடன் கூறிய பெரிய மறவன், ''யுவமகாராஜா! தாங்கள் மட்டும் என்னைக் கொல்ல வந்தவனைக் கொன்று என்னையும் தாமரைச்செல்வியையும் பல்லவபுரிக்கு அனுப்பியிருக்காவிட்டால் எங்களை நிருபவர்மர் ஒழித்திருப்பார். ஆனால் அவர் கண்களில் மண்ணைத் தூவ நீங்கள் எங்களையும் அனுப்பிவிட்டு, நீங்கள் கொன்றவனைக் குடிசையிலும் வைத்துக் குடிசைக்குத் தீ வைத்துவிட்டதால் நான் தொலைந்ததாக மனப்பால் குடித்தார் நிருபவர்மர். உங்களுக்குப் பிறகு நிருபவர்மர்தான் அரசுக் கட்டில் ஏறக்கூடிய நெருங்கிய உறவினர். ஆகவே காஞ்சியில் இவர் ஆடிய நாடகமும் சூழ்ச்சியும் இப்பொழுது உங்களுக்குப் புரிகிறது என்று நினைக்கிறேன். அந்தக் கையாலாகாத காஞ்சிக் காவலர் தலைவனை இயக்கி, கெட்டபெயரை அவனுக்கு வாங்கிக் கொடுத்தது இவர்தான். இவர் பாவ ரத்தம் புனிதமான இளந்திரையனின் இந்த பல்லவ பீடத்தை நனைக்கிறது. இவரை முதலில் அகற்றுவோம்'' என்று கூறி பல்லவ பீடத்தைப் பின்புறமாக அணுகி நிருபவர்மரை இழுத்துப் பின்னாலிருந்த ரகசிய அறையில் தள்ளினான். அந்த அறையின் வழிப்பாறையை அழுத்திய பெரிய மறவன், ''யுவமகாராஜா! வெளியே ஓடிவிடுங்கள்'' என்று கூறிக்கொண்டே குமாரனையும் இழுத்துக்கொண்டு வெளியே ஓடினான். அடுத்த விநாடி ஏதோ பெரியதாக வெடிக்கும் சத்தம் கேட்டது. அந்தப் பாதாள அறையில்

zeevaa

மேற்புறப் பாறைகளும் பக்கப் பாறைகளும் சடசடவென்று இடிந்து விழுந்தன. ''எந்தப் பல்லவ பீடத்தில் அமர பல பாவச் செயல்களை நிருபவர்மர் செய்தாரோ அந்தப் பாவங்களே அவரை பல்லவ பீடத்துடன் சமாதி கட்டிவிட்டன. வாருங்கள் போவோம்'' என்றான் பெரிய மறவன். எதிரே இடிந்து கிடந்த மலைப்பாறைகளையும் சுவடு சிறிதுமின்றி அடியோடு மறைந்துவிட்ட குகை வழியையும் பார்த்துக் கொண்டே பல விநாடிகள் நின்றான் குமாரன்.

''யுவ மகாராஜா! வருந்தாதீர்கள். இதன் முடிவு இப்படித் தானிருக்கும் என்பது ஏற்கனவே தெரியும் எனக்கு. இந்த இடிந்த பாறைகளை நீக்குவதற்கு நம் இருவரால் முடியாது. அதுவும் பல்லவ பீடத்தை நனைத்திருந்த பாவ ரத்தத்தைக் கழுவாமல் அதைப் புனிதப் படுத்தாமல் எடுத்து வரமுடியாது'' என்று கூறி யுவமகா ராஜாவை அழைத்துக் கொண்டு காஞ்சி நோக்கிப் புறப்பட்டான் பெரிய மறவன்.

குடிசையிலிருந்த களப்பிரர் படைத்தலைவன் தனக்கு நிருபவர்மர் அளித்த ஓலைகளைப் பற்றியும் காஞ்சியைக் கைப்பற்ற அவர் செய்த சதியைப் பற்றியும் பப்பதேவனுக்கு விளக்கிக் கொண்டிருந்தான். அந்தப் பயங்கர சதியைக் கேட்ட பப்பதேவன், ''எனது குலத்தைக் கெடுக்க ஒரு கோடாலிக் காம்பும் பிறந்திருக்கிறது'' என்று அலுத்து துன்பப் பெருமூச்சு விட்டான்.

zeevaa

# 27. சுமை தாங்கி

மனிதனுக்கு ஆசையிருப்பது தவறல்ல. ஆசை அத்துமீறிப் போகும்போது அது சுய நாசத்தில் கொண்டுபோய் விடுகிறது. இந்த நியதிக்குச் சான்றாக விளங்கிய நீதிபதி நிருபவர்மர் பல்லவ பீடத்துடன் சமாதியானதும் யுவமகாராஜா சிவஸ்கந்தவர்மனுடன் காஞ்சி நோக்கிப் புறப்பட்ட பெரியமறவன் வழியில் சில சந்தேகங்களைக் கேட்டுக் கொண்டே பயணம் செய்தான். ''யுவமகாராஜா! ஒன்று புரியவில்லை எனக்கு? முதலில் உங்களை எனக்குப் புரியவில்லை. நீங்கள் யுவமகாராஜா என்று அழைக்கப்படுகிறீர்களென்று நீங்கள் காஞ்சி வருமுன்பே மக்கள் பேசிக்கொண்டார்கள். மகாராஜா ஒருவர் இருக்கும் போது யுவராஜா ஒருவர் உண்டென்பது பரம்பரை நியாயம். யுவராஜாவாகவுமில்லாமல் மகாராஜாவாகவுமில்லாமல் இரண்டை யும் சேர்ந்த யுவமகாராஜா பட்டம் ஒன்று உண்டென்று நான் கேள்விப்பட்டதில்லை. இது புது முறையாயிருக்கிறது. இதற்கு ஏதாவது காரணம் உண்டா?'' என்று முதலில் சந்தேகம் கேட்டான்.

சிவஸ்கந்தவர்மன் சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னான். ''பெரிய மறவரே! பல்லவபுரியில் அரசு ஏற்ற என் தந்தை நீண்ட காலமாகவே அரசு பீடத்தை, தொன்மையும் வரலாறும் கொண்ட காஞ்சி மாநகருக்கு மாற்ற வேண்டுமென்று சிந்தித்து வந்தார். தவிர காஞ்சி மாநகர் பலவீனப்பட்டால் அரசாட்சியின் வலு குறையு மென்று அபிப்பிராயப்பட்டார். எந்த நேரத்திலும் கடல் வழியாக மாற்றார் பல்லவ ராஜ்யத்தில் உட்புகக் காரணமிருந்ததால்

zeevaa

சாண்டில்யன்

# பல்லவ பீடம்

## 27. சுமை தாங்கி



zeevaa

காஞ்சியைப் பலமான தனி ராஜ்யமாக்கினாலொழிய பல்லவர் ஆட்சி அதிகநாள் நீடிப்பது கஷ்டம் என்று கருதி வந்தார். ஆகையால் காஞ்சியைப் பிரதான பீடமாக்கி அங்கிருந்தே பல்லவ மகாராஜாக்கள் ஆளவேண்டுமென்று எண்ணினார்.

''இப்படி அவர் அடிக்கடி எண்ணிக்கொண்டும் அமைச்சர் களுடன் விவாதித்துக் கொண்டும் இருந்த சமயத்தில் காஞ்சியைப் பற்றிப் பயங்கரச் செய்திகள் வந்தன. பிற நிலங்களிலிருந்து மாடுகள் பிடிக்கப்படுவதாகவும், காஞ்சியின் பாதுகாப்பும் குலையும் தருவாயிலிருப்பதாகவும் காஞ்சியிலிருந்து செய்தி கிடைத்தது. தவிர காஞ்சியின் எல்லைகளில் களப்பிரர் தலையீடு அதிகமாக இருப்பதாகவும் வதந்திகள் உலாவின. இங்குள்ள நிலையை ஆராயவும், நிலை சீர்கேடாயிருந்தால் திருத்தவும் மகாராஜா என்னை இங்கு அனுப்பினார். அமைச்சர் கூட என் பயணத்தை ஆட்சேபித்தார். யுவராஜாவைத் தனியாக அனுப்புவது தவறென்றும், எனக்கு ஏதாவது தீங்கு நேரிட்டால் பல்லவகுலத்து க்கு வேறு வாரிசு இல்லையென்றும் அமைச்சர் கூறினார்.

அதை என் தந்தை ஒப்புக்கொள்ளவில்லை. ''காஞ்சியைத் தனி ராஜ்யமாக்கி, அதைத் தலைநகராக்கி அதற்கு ஒரு மகாராஜாவையும் நியமிக்க முடிவு செய்திருக்கிறேன். காஞ்சிக்குள்ள இலக்கிய, வரலாற்று மகத்துவம் பல்லவபுரி (பல்லாரி)க்குக் கிடையாது. பிற்காலத்தில் பல்லவர்கள் தரணியாள்வார்கள்'' என்று தந்தை திட்டமாகச் சொன்னார். காஞ்சிக்கு என்னை யுவ மகாராஜாவாக நியமித்தார். ஆனால் காஞ்சியின் நிலைமை சீர்படும் வரையில் நான் வெறும் வீரனாகவே செல்ல வேண்டுமென்றும் கூறி என்னை இங்கு அனுப்பினார். அப்பொழுதும் அமைச்சர், 'யுவ மகாராஜாவுடன் இன்னும் பத்து வீரர்களைத் துணைக்கு அனுப்பினாலென்ன?' என்று கேட்டார்.

zeevaa

'யுவ மகாராஜாவே பத்து வீரர்களுக்குச் சமம். தனியாகப் போகட்டும்' என்று திட்டமாகச் சொல்லிவிட்டார், என் தந்தை பப்பதேவர். ஆகவே நான் தனித்து வந்தேன். காஞ்சி நகருக்குள் புகுமுன்பே பசுக் கூட்டங்களையும் அவற்றுக்குப் பலவிதமாக சூட்டுக் குறிகள் போடப்பட்டிருப்பதையும் கவனித்தேன். பிறகு உங்கள் புதல்வியையும் சந்தித்தேன். மெல்ல மெல்ல ஊர் நிலை எனக்குப் புரிந்தது. மாட்டை விற்றுக் கள்ளைக் குடிப்பதென்பது மறவர்களின் பழைய பழக்கம். அதைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. இப்படி மாடுகளைத் திருடத் தூண்டுபவர் யாராக இருக்குமென்று ஆராய முற்பட்டேன். முதலில் காஞ்சிக் காவலர் தலைவன் மீதுதான் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. பெரிய கள்ளுக்கடையில் குடிவெறியில் ஒருவன் தாமரைச் செல்வியிடம் தாறு மாறாக நடந்ததை காஞ்சியின் காவலர் தலைவன் பார்த்துக் கொண்டிருந்தது எனது சந்தேகத்தைக் கிளறிவிட்டது. என் ஆராய்ச்சிகளுக்கு வெகு சுலபமாகப் பதிலும் கிடைத்தது. அத்தனை சுலபமாக அறியக் கூடியதல்ல காஞ்சியின் நிலைமை என்பதை ஊகித்தேன். அப்பொழுதுதான் நிருபவர்மர் என்னைத் தன்னிடம் வேலைக்கு அமர்த்திக்கொண்டார்'' என்று விளக்கிய சிவஸ்கந்தவர்மன் பெரிய மறவனை நோக்கினான்.

பெரிய மறவன் கேட்டான், ''உங்களை நாங்கள் மன்னரின் ஒற்றனென்று நினைத்தோம். நீங்கள் ஏன் அதை மறுக்கவில்லை?'' என்று.

''மறுக்க அவசியமில்லை. என்னை ஒற்றனென்று நீங்கள் நினைக்கும் வரையில் நான் தங்கு தடையின்றி எதையும் ஆராய முடியும். நான் யாரென்று தெரிந்து விட்டால் அத்தாட்சிகள் அனைத்தும் மறைந்துவிடும்'' என்றான் சிவஸ்கந்த வர்மன்.

zeevaa

''அது மறையாதிருக்க என்ன செய்தீர்கள்?'' என்று வினவினான் பெரிய மறவன்.

''நான் செய்யவில்லை. நிருபவர்மரே அந்தப் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார். முன்பின் தெரியாத என்னைத் தனது காவலர்களுக்குத் தலைவனாக்கினார் என் மீது கண்ணை வைத்திருக்க. அது எனக்கும் உதவியாயிற்று, அவர் மீது கண்ணை வைக்க என்னால் முடிந்தது. காஞ்சியின் காவலர் தலைவனுக்கு சிந்திக்கும் சக்தியில்லாததால் அவன்மீது எல்லாப் பழிகளையும் நிருபவர்மர் திருப்பினார். ஆனால் நான் ஏமாறவில்லை. சிறையில் கைதி கொல்லப்பட்டதை நாங்களிருவரும் சென்று பார்த்தபோது கூட நிருபவர்மர் ஏதுமறியாத பூனைபோல நடித்தார். இறந்த சாட்சியின் கச்சையிலிருந்து நான் களப்பிரர் அடையாள நாணயத்தை எடுத்துக் காட்டிய போது கூடத் தனக்கு ஏதும் தெரியாதது போலவே நடித்தார். ஆனால், அதற்குப் பிறகு துரிதமாகச் செயல்பட்டார். களப்பிரர்களை காஞ்சியைதாக்கச் சொல்லிவிட்டு அவர்கள் வராத தென்புறத்தில் படைகளை நிறுத்தினார். நான் அதை மாற்றி வடபுறத்துக்குப் படைகளைக் கொண்டு செல்ல காஞ்சியின் காவலர் தலைவனிடம் உத்தர விட்டேன். களப்பிரர் முறியடிக்கப்பட்ட பிறகு உண்மைவெளியாகு மென்ற அச்சத்தாலும், அதற்கு மரண தண்டனையைப் பல்லவ மன்னர் விதிக்கத் தவற மாட்டாரென்று தெரிந்ததும் அவர் பல்லவபீட குகைக்குப் பறந்தார். நாமிருவரும் தொடர்ந்தோம். மீதி உங்களுக்குத் தெரியும்'' என்று விளக்கினான்.

இப்படிப் பேசிக் கொண்டே காஞ்சியை அன்று நள்ளிரவில் அடைந்த பெரிய மறவனும் சிவஸ்கந்தவர்மனும் காஞ்சியில் நுழைந்தபோது காஞ்சி நான்றாகத் துப்புரவு செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்கும் பல்லவ வீரர்கள் நடமாடிக்

zeevaa

கொண்டிருந்தார்கள். காஞ்சியின் தெருக்களில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. அந்த நடுநிசியையும் மக்கள் உற்சாகம் பகலாக ஆக்கியிருந்தது.

அலங்கார வீதிகளைப் பார்த்துக் கொண்டே காஞ்சிக்குப் புறம்பேயிருந்த காட்டுப் பகுதிக்குச் செல்ல முயன்ற பெரியமறவன் யுவமகாராஜாவும் தன்னைத் தொடர முற்பட்டதைக்கண்டு. ''யுவமகாராஜா! நீங்கள் செல்ல வேண்டியது அரண்மனைக்கு'' என்றான்.

''மகாராணியில்லாமல் மகாராஜா அரண்மனைக்குப் போக மாட்டார்'' என்ற சிவஸ்கந்தவர்மன் பெரிய மறவனுடன் குடிசை மேட்டை நோக்கிச் சென்றான்.

மேட்டிலிருந்த அந்தப் பழைய் குடிசை அதன் பழைமையை இழந்து இருந்தது. அது ஏதோ அரண்மனை போலவே சிங்காரிக்கப் பட்டிருந்தது. சுற்றிலும் புரவி மீது காவல் வீரர் கத்திகளை உருவிப்பிடித்து நின்றார்கள். மேட்டின் மீது ஏறிக் குடிசையை அடைந்ததும், ''யுவ மகாராஜா! அப்படியே நிற்கட்டும்'' என்று இரண்டு பெண்களின் ஒலி கேட்கவே பெரியமறவன் சற்று பக்கவாட்டில் நகர்ந்தான். இரு பெண்கள் யுவ மகாராஜாவுக்கு மங்கல ஆரத்தி எடுத்தார்கள். சிவஸ்கந்தவர்மன் குடிசைக்குள்ளே சென்றான். அங்கு யாரையும் காணோம். ''தாமரைச்செல்வி எங்கே?'' என்று சீறினான் யுவமகாராஜா!

''மகாராணி அரண்மனையிலிருக்கிறார்கள்'' என்றாள் ஒரு பணிப்பெண்.

''சரி அங்கு போகிறேன்'' என்று திரும்பினான் சிவஸ்கந்த வர்மன்.

''போய்ப் பயனில்லை'' என்றாள் இன்னொரு பணிப்பெண்.

zeevaa

''ஏன்?''

''நாளைக்கு மறுநாள் உங்களுக்குப் பட்டாபிஷேகமும் திருமணமும். அன்றுதான் மகாராணியைப் பார்க்கலாம். இது பப்பதேவர் கட்டளை'' என்றாள் இன்னொருத்தி.

சிவஸ்கந்தவர்மன் முகத்தில் சங்கடமும் ஏமாற்றமும் காணப்பட்டன. அதைக்கண்ட இரு பெண்களும் நகைத்தார்கள். ''யுவமகாராஜா! அவசரப்படாதீர்கள். கிணற்றுநீரை வெள்ளம் கொண்டு போய்விடாது'' என்று ஒருத்தி சொன்னாள்.

''நீங்கள் அருந்த உணவு இருக்கிறது. படுக்க பஞ்சணையும் இருக்கிறது'' என்றாள் இன்னொருத்தி.

யுவமகாராஜா அறுசுவை உண்டியையும் பஞ்சணையையும் வெறுப்புடன் பார்த்தான். பிறகு தனது அங்கியைக் களைந்து வாளுடன் வெளியே சென்று மேட்டின் புல்தரையில் படுத்தான்.

**நா**லைந்து நாட்கள் கழித்து காஞ்சியின் அரண்மனை அந்தப்புரத்தில் அவனை வரவேற்க தாமரைச் செல்வி சகல ஆபரணங்களையும் அணிந்து நின்றிருந்தாள். மணவறைக்குள் நுழைந்த சிவஸ்கந்தவர்மன் அவளையும் நோக்கி மணவறையின் அலங்காரத்தையும் நோக்கினான். பிறகு தாமரைச்செல்வியை நோக்கி நடந்து, ''செல்வி! இந்த ஆபரணங்கள் உன் அழகை மறைக்கின்றன'' என்று கூறிக்கொண்டு அவள் தலையிலிருந்து வைரவைடூரிய சுற்றுச் சங்கிலிகளையும், கழுத்தில் அணிந்திருந்த இடியெனக் கனத்த மாணிக்க மாலைகளையும் எடுத்து வைக்க இடம் தேடியவன் அத்தனை நகைகளையும் பஞ்சணையில் வைத்தான். ''மகாராணி! உன்னைப் பிணைத்திருந்த சுமை நீங்கிவிட்டது'' என்று சொல்லி அவளைப் பஞ்சணைக்கருகில் அழைத்துப் போய் அதில் உட்காரவைத்தான்.

zeevaa

அவள் மெல்லக் கேட்டாள், ''ஏன் பல்லவ பீடம் அரண்மனைக்கு வரவில்லை?'' என்று.

''அதைப்பற்றி ஒரு சாபமிருப்பதாகத் தந்தை சொன்னார். இளந்திரையனுக்குப் பிறகு அதில் உட்கார முயன்ற எவரும் விருத்திக்கு வரவில்லையாம். அதைக் குகையிலிருந்து எடுக்க வேண்டாமென்று தந்தை உத்தரவிட்டிருக்கிறார். இனிமேல் ஏதோ ஒரு காலத்தில் அது வெளியே வரலாம். கால வெள்ளத்தின் கதையை யார் சொல்ல முடியும்?'' என்றான் சிவஸ்கந்தவர்மன்.

பிறகு அவன் கைகள் அவளைப் பஞ்சணையிலிருந்து தூக்கித் தரையில் படுக்க வைத்தன. அவன் கைகள் மெல்ல அவள் மேலாடையையும் நீக்க முற்பட்டன. அவள் தடை செய்யவில்லை. ''பஞ்சணை'' என்று ஏதோ மெதுவாகச் சொன்னாள்.

''அன்னை பூமிக்கு இணையாகாது செல்வி. குடிசைத் தரையைவிட இந்தப் பஞ்சணை எப்படி உயர்வு?'' என்று கேட்டு அவள் உடலின் மீது கைகளை ஓடவிட்டான். அவள் மீது சாயவும் செய்தான்.

''குமாரா!'' என்று பழைய பெயரைச் சொல்லி மெதுவாக அழைத்தாள் செல்வி.

அவள் மார்புக்கிடையிலிருந்து தலை நிமிர்ந்த குமாரன், ''சொல் செல்வி'' என்றான்.

''உங்கள் தந்தை உங்கள் மீது பெரும்சுமையைச் சுமத்தி விட்டார்'' என்று கூறினாள்.

அப்பொழுது அவள் உடை மெல்ல அகன்று கொண்டிருந்தது. ''அரசு சுமைதானே?'' என்று வாய் கேட்டது. கைகள் தங்கள் செயலைத் தொடர்ந்தன.

zeevaa

''ஆம். அது சுமையல்லவா?''

''ஆம் செல்வி, அது சுமைதான். அந்தச் சுமையையும் சேர்த்து நீதானே தாங்கப் போகிறாய்?''

''வேறு சுமை ஏது?''

''நான்தான். என்னையும் சேர்த்து இரு சுமைகளை நீ தாங்க வேண்டுமே?''

தாங்கினாள் அவள். சுமக்க வேண்டியது பெண்ணின் கடமைதானே என்று அவள் சிந்தித்துப் புன்முறுவல் செய்தாள். அவள்மீது இன்பச்சுமை புரண்டது. இருமுறை 'உம்' கொட்டினாள் செல்வி. துவக்கத்திலிருந்த கஷ்டத்தால் கஷ்டம் இஷ்டமாக, துன்பம் இன்பமானதும் அவள் அவனை இரு கைகளாலும் சுற்றினாள்.

''செல்வி'' என்றான் சிவஸ்கந்தவர்மன்.

''என்ன?'' -அவள் முணுமுணுத்தாள்.

''பல்லவபீடம் போகவில்லை.'' என்றான் அவன்.

''என்ன?''

''நீதான் பல்லவபீடம். இதுதான் பின்வரும் பல்லவ பெருமகனைச் சுமக்கும் அரியணை. நீ ஒரு இணையற்ற சுமைதாங்கி'' என்று கூறி அவள் வயிற்றையும் கையால் தடவிக் கொடுத்தான். பிறகு இருவரும் பேசவில்லை. சிந்தனைக்கு இடமில்லாததால் செயல் ஆட்கொண்டது அவ்விருவரையும்.

[முற்றும்]

zeevaa